# தொழிற்சங்கம்



## காரல் மார்க்ஸ்

# தொழிற்சங்கங்களைப்பற்றி

## கார்ல் மார்க்ஸ்

# தொழிற்சங்கங்களைப்பற்றி
# கார்ல் மார்க்ஸ்

*தொகுத்தவர்:*

**ஏ. லாஸோவஸ்கி**

*மொழிபெயர்ப்பு:*

**எஸ். ராமகிருஷ்ணன்**

**ஜனசக்தி பிரசுராலயம்,**

**6, டேவிட்ஸன் தெரு,**

**ஜி. டி., சென்னை.**

முதற் பதிப்பு 1947

[விலை ரூ 2-8-0]

Published by Janasakthi Publishing House, Q. H. M S. 402,
Printed at the Janasakthi Press, Madras. Q.H.M.S. 374
Date of Printing 30th June, 1947.

# பொருளடக்கம்

பக்கம்

முகவுரை ... 1

முன்னுரை ... 5

முதலாவது அத்தியாயம்

புராலிடேரியட்டின் வர்க்கப் போராட்டத்தில் தொழிற்சங்கங்களின் பங்கு ... 15

இரண்டாவது அத்தியாயம்

பிரௌதனிஸத்தையும் பாக்குனிஸத்தையும் எதிர்த்து ... 29

மூன்ருவது அத்தியாயம்

லஸ்ஸாலியனஸையும் ஜெர்மன் சந்தர்ப்பவாதத்தின் இதர ரூபங்களையும் எதிர்த்து ... 42

நான்காவது அத்தியாயம்

பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கமும் மார்க்ஸீயம். 56

ஐந்தாவது அத்தியாயம்

பிரஞ்சுத் தொழிலாளர் இயக்கமும் மார்க்ஸீயம்... 77

ஆருவது அத்தியாயம்

அமெரிக்க ஐக்ய நாடுகளும் மார்க்ஸீயம் ... 109

பக்கம்

ஏழாவது அத்தியாயம்

தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார கோரிக்கைப் போராட்டங்களும் மார்க்ஸும் ... 131

எட்டாவது அத்தியாயம்

மார்க்ஸும் ஸ்ட்ரைக் இயக்கமும் ... 152

ஒன்பதாவது அத்தியாயம்

மார்க்ஸின் தொழிற்சங்க விமர்சகர்களும் போலி மார்க்ஸிஸ்டுகளும் ... 178

பத்தாவது அத்தியாயம்

மார்க்ஸ், தொழிலாளி வர்க்கத்தின் அமைப்பாளர். 196

பதினோராவது அத்தியாயம்

தொழிற்சங்க இயக்கத்தில் மார்க்ஸிஸம்—லெனினிஸம் ... 207

பிழை—திருத்தம் ... 213

# முகவுரை

புத்தகத்தின் தலைப்பு பிரதிபலிப்பதைவிட பொருளடக்கம் விரிவானது.

முதலாவதாக, தொழிற் சங்கங்களைப்பற்றி கார்ல் மார்க்ஸின் கொள்கையை மாத்திரம் புத்தகம் விவரிக்கவில்லை. புரட்சிகரமான மார்க்ஸிஸத்தின் சித்தாந்தத்தை, அதன் போர்த் திட்டத்தை*, போர்த் தந்திரங்களை** வகுத்த சிருஷ்டி கர்த்தா என்ற முறையில், மார்க்ஸுக்கு அடுத்த ஸ்தானத்தை வகிக்கும் எங்கல்ஸின் கருத்துகளும் புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன.

இரண்டாவதாக, தொழிலாளி வர்க்கத்தின் பொதுவான வர்க்க கடமைகளின் அடிப்படையில்தான், தொழிற் சங்கங்களின் கடமைகளை வரையறுக்க முடியுமாதலால், தொழிற் சங்க பிரச்சினைகளை எல்லையாகக் கொண்ட குறுகிய கூட்டைத் தாண்டி, தொழிலாளர் இயக்க பிரச்னைகளைப்பற்றி மார்க்ஸும், எங்கல்ஸும் வகுத்த அரசியல் கொள்கையையும் புத்தகம் ஆராய்கிறது.

மூன்றாவதாக, எல்லா விஞ்ஞானங்களையும்விட சிறந்த அரசியல் விஞ்ஞானம் சரித்திரம்; இதர விஞ்ஞானங்களைவிட அதிகமாக, வர்க்க கண்ணோட்டத்தைப் பெற்றது சரித்திரம். எந்தவிதமான கட்சிப் பொறுப்போ, அரசியல் பொறுப்போ இல்லாதவர்

---

* **போர்த்திட்டம் (Strategy) :** தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தில், அதன் தலைமையின் விஞ்ஞான அறிவை அது பிரதிபலிக்கும். புரட்சியின் சக்திகளை ஸ்தாபனரீதியாக திரட்டுவது, அதன் நண்பர்களுடைய சக்திகளை திரட்டுவது, புரட்சியின் குறிப்பிட்ட கட்டத்தில், தொழிலாளி வர்க்கம் எந்த பாதையில் தாக்க வேண்டுமென்று நிர்ணயிப்பது-இதையே போர்த்திட்டம் குறிக்கிறது.

** **போர்த்தந்திரங்கள் :** போர்த்திட்டத்தின் தேவைகளுக்கும் கடமைகளுக்கும் தகுந்த முறையில் வகுக்கப்படும் தந்திரங்கள். தொழிலாளி வர்க்கத்தின் போராட்டமும் ஸ்தாபனமும் உருவெடுக்கும் முறைகள் அனைத்தையும் கற்றறிந்து, குறிப்பிட்ட சூழ்நிலையில், போர்த்திட்ட வெற்றிக்கு ஆயத்தமாகும் பொருட்டு, அதிகப்பட்ச பலன்களை அளிக்கக்கூடிய வகையில், தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபன, போராட்ட சக்திகளை பயன்படுத்துதல்.

-(மொழிப்பெயர்பாளர்.)

கள்தான், அல்லது இந்த பொறுப் புணர்ச்சியை இழந்தவர்கள் தான், நிகழ்காலத்துடன் ஒட்டுதல் இல்லாமல், இறந்த காலத்தை, சரித்திரத்தை, தனிமைப்படுத்தி ஆராய முடியும்.

தஸ்தாவேஜுகளை சேகரித்து வைத்திருப்பவனுக்கும், சரித்திராசிரியனுக்கும் வித்தியாசமில்லை என்று நம்புகின்ற ஜனங்கள் இருக்கிறார்கள்; முதல்வன் கடந்தகால தஸ்தாவேஜுகளை சேகரித்து வைக்கிறான்; சரித்திராசிரியன் அந்த தஸ்தாவேஜுகளைப் பற்றி, இறந்தகாலக் கூட்டிற்குள்ளேயே இருந்து விமர்சனம் செய்கிறான்—இதுதான் வித்தியாசம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இது தவறு. கடந்த காலத்தின் தஸ்தாவேஜுகளை சரித்திராசிரியன் பயன்படுத்திக்கொள்கிறான்; ஆனால், அந்த தஸ்தாவேஜுகளின் எல்லைக்கு அப்பாலுள்ள விஷயங்களை அவன் கிரஹிக்காவிட்டால், கடந்தகாலக் கூட்டைவிட்டு வெளிவராவிட்டால், பழைய சரித்திர சம்பந்தமான தேதிகள் எழுப்பும் வேலிகளுக்கு மேலே அவன் கண்கள் பார்க்காவிட்டால், அவன் தன் உழைப்பின் மதிப்பை வெகுவாக குறைத்துக் கொள்கிறான். கடந்த காலம் நம்முடைய தற்காலப் போராட்டத்துக்கு உதவவேண்டும். இல்லாவிட்டால், அதைப் படித்தறிவதில் நேரம் செலவழிப்பதில் பிரயோசனமில்லை. உயர்ந்த எதிர்காலத்துக்காக நாம் நடத்தும் போராட்டத்தில், கடந்த காலத்தின் வெற்றி தோல்விகளின் அனுபவங்கள் நமக்கு ஆயுதங்களாகும். உலகத்தை படித்தறிவது மாத்திரமல்ல, அதை மாற்றி யமைப்பது நம் கடமை.

மார்க்ஸும், எங்கல்ஸும் அளித்துள்ள பிதுரார்ஜித சம்பத்தை எடுத்துக்கூற முற்பட்டபோது, ஆசிரியர் இந்த கருத்தில் தான் முனைந்தார். தொழிற்சங்க இயக்கத் துறையிலும், பொருளாதாரப் போராட்டத் துறையிலும், மார்க்ஸும் எங்கல்ஸும் கூறியுள்ள அபிப்ராயங்களை தீர்க்கமாக பரிசீலனை செய்த பின், நாம் காலம் தாழ்ந்து இந்த வேலையைச் செய்கிறோமென்று நான் உணர்ந்தேன். மார்க்ஸ் மறைந்த ஐம்பதாவது ஆண்டு விழாவுக்கு நாம் காத்திருந்திருக்கக் கூடாது. தொழிலாளி வர்க்கத்தின் தொழிற்சங்க இயக்கத்தைப் பற்றியும், பொருளாதாரப் போராட்டத்தைப் பற்றியும், மார்க்ஸ், எங்கல்ஸ் கொண்டிருந்த சகல அபிப்ராயங்களையும் நீண்டகாலத்துக்கு முன்னரே தொகுத்திருக்க வேண்டும். ஆம், நாம் காலம் கடத்திவிட்டோம். எனினும், ஒருபொழுதும் செய்யாமல் இருப்பதைவிட, காலம் தாழ்ந்து செய்வதுமேல்.

மார்க்ஸூம், எங்கல்ஸூம் நவீன சகாப்தத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்களே எழுதியவற்ருல் மாத்திரமல்ல, அவர்கள் போர்க்களத்திலிருந்து பிரிந்த பின், அவர்களுடைய சிறந்த சிஷ்யர்கள், அவர்களை பின்பற்றி வந்தவர்கள், ஆற்றிவரும் பணியும் அவர்களை நவீன சகாப்தத்தை சேர்ந்தவர்களாக்குகிறது. அதாவது, நம்முன் நிற்குமிந்த பிரச்னைபற்றிய லெனின், ஸ்டாலின் கருத்துகளையும் நாம் கவனமாக ஆராய்ந்தறிய வேண்டும்..........

புரட்சிகரமான சர்வதேச தொழிற்சங்க இயக்கத்தின் கொள்கைகளையும், போர்த் தந்திரங்களையும் மார்க்ஸீய ரீதியில் பரிசீலனை செய்யும் மகத்தான, சிக்கலான கடமைக்கு உதவும் ஆரம்ப முயற்சியாக, ஊக்குவிக்கும் முயற்சியாக இப்புத்தகம் பயன்பட்டால், இந்த பிரசுரத்தின் நோக்கம் பூர்த்தியாகிவிடும்.

*மாஸ்கோ,*<br>
1933, *மார்ச்* 14

ஏ. லாஸோவஸ்கி

# முன்னுரை

காரல்மார்க்ஸின் தேக உருவம் சரித்திரத்தில் மங்க மங்க, சிந்தனையிலும் புரட்சிகரமான செயலாற்றுவதிலும் பிமனுகை விளங்கிய அவருடைய தார்மீக உருவம் மேலும் மேலும் தெளிவாக, முன்னணி ஸ்தானத்தில் திகழ்கிறது. ஒரு முழு உலகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார் மார்க்ஸ். வர்க்கப் போராட்டத்தின் தத்துவஞானி என்ற முறையில், ராஜதந்திரி என்ற முறையில், தளபதி என்ற முறையில், போர்த்தந்திரி என்ற முறையில், அவரை மிஞ்சியவர் யாருமில்லை. அவர் மூளை ஒரு பெரிய விஞ்ஞான ஆராய்ச்சிசாலையை ஒத்திருந்தது. சகல உண்மைகளையும் சம்பவங்களையும், புரட்சிகள், யுத்தங்கள், காலனி மக்களின் போராட்டங்கள், பிரகடனங்கள், விவசாயி கலகங்கள், சட்ட சபை விவாதங்கள் முதல், ஸ்ட்ரைக்குகள், ஆர்ப்பாட்டங்கள்வரை தானுகத் தோன்றிய சின்னஞ்சிறு அரசியல், பொருளாதார நடவடிக்கைவரை—எல்லாவற்றையும் பாகுபடுத்தியும் ஐக்கியப் படுத்தியும் (பகுத்தும் தொகுத்தும்) ஆராய்ந்தது அவர் மூளை.

மார்க்ஸ் ஒரு கல்வியறிவின் களஞ்சியம் மாத்திரமல்ல, அவர் ஒரு சுதந்திரமான சிந்தனையாளர், தர்க்க ரீதியாக சிந்திப்பவர். அவர் ஒரு விஞ்ஞானி—கல்லூரி ஆசிரியர்களை குறிக்கும் குறுகிய அர்த்தத்தில் அல்ல; எந்த அளவுக்கும் செல்வதற்கு தீரம் படைத்த விஞ்ஞானி, புதிய உண்மைகளை கண்டுபிடிப்பதில் பின் வாங்கமாட்டார்; தன் சிந்தனைகளை பயமில்லாமல் அவற்றின் தர்க்கரீதியான முடிவுக்கு கொண்டுபோவார். மேதையின் மூளையுடன் எதிர்காலத்தை உற்றுநோக்கி உணர முற்பட்ட மனித வர்க்கத்தின் ஒருசில சிந்தனையாளர்களில் அவர் ஒருவர். புரட்சி வீரர்களின், கலைஞர்களின் துணிவுடன் ("என் உழைப்பு பூர்ணத்துவம் பெற்ற கலைப்பணி" என்று 1865ல் அவர் எங்கல்ஸுக்கு எழுதுகிறார்) முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்தை நோக்கி வளர்ச்சியடையும் பாதையைக் காட்டினார்.

மார்க்ஸ் ஊகம் செய்யவில்லை, ஜோஸ்யம் கூறவில்லை. அவர் யதார்த்த உண்மைகளைப்பற்றி வாதித்தார்; பகுத்தாராய்ந்தார், அவைகளின் உட்தொடர்புகளை அம்பலத்துக்கு கொண்டுவந்தார்; நிர்ணயமான திட்டவட்டமான முடிவுகளுக்கு வரும்படி நிர்ப்

பந்தம் செய்யும்வகையில், அவற்றை சமர்ப்பித்தார். ஹேகலியன் டைலக்டிக்ஸை* காலூன்ற வைத்தார்; தன்முன்னுள்ள யதார்த்த உண்மைகளில் அவர் தன்னைத்தானே இழக்கவில்லை. தத்துவத்தில், அரசியலில், போர்த்தந்திரத்தில், என்னவேண்டுமென்று அவருக்கு தெரியும்; அதில் உறுதியாக இருந்தார்.

ஏராளமான புத்தகங்களை மார்க்ஸ் படித்தார்; யதார்த்த உண்மைகளைப் பகுத்தாராய்ந்தார். சர்வதேச தொழிலாளிவர்க்கத்துக்கு புதிய புதிய செல்வங்களை தன் வாழ்நாட்களின் இறுதி வரை அளித்துவந்த அவருடைய மேதையின் மூளையுடன், அந்த உண்மைகளை உருவாக்கினர்.

மார்க்ஸ் ஒரு புத்தகப் புழுவல்ல; போர்வீரனின் மகத்தான உற்சாகத்துடன், ஆவேசத்துடன் அவர் வேலைசெய்தார். அனாவசியமான வார்த்தைகளை, அர்த்தமில்லாத பதப் பிரயோகங்களை அவர் வெறுத்தார். "தத்துவ மாயைகளின் மூடுபனி படர்ந்த உலகத்தில்" சஞ்சரிப்பவர்களை எதிர்த்துப் போரிட்டார். மார்க்ஸ் எழுதிய ஒவ்வொரு பதமும், ஒவ்வொரு வார்த்தையும், இன்றும் ஜீவனுள்ளதாகவிருக்கிறது. இந்த மகத்தான விஞ்ஞானியினுடைய போலி விஞ்ஞானங்களை சளைப்பில்லாமல் தகர்த்தெறிந்தவருடைய, நடுத்தரவர்க்க உளறுவாயன்களை அம்பலப்படுத்தியவரின், போலி சோஷியலிஸ்ட் கொள்கைகளுக்கும் கோஷ்டிகளுக்கும் பிரத்தியேக கோஷ்டிகளுக்கும் தீரா ·வைரியாய் திகழ்ந்த

---

* ஹேகலியன் டைலக்டிக்ஸ்: இயற்கையில் காணப்படும் தோற்றங்களை அணுகும் முறை, அவற்றை பரிசீலிக்கும் முறை, அவற்றை உணரும் முறையே டைலக்டிகல் முறை என்கிறோம். மார்க்ஸீய தத்துவத்தின் கருப்பொருள் டைலக்டிகல் மெட்டீரியலிஸம். ஆனால் மார்க்ஸீய டைலக்டிக்ஸின் பிரதான அம்சங்களை ஹேகல் என்ற ஜெர்மன் தத்துவஞானி வகுத்தார், அதன் பொருட்டு மார்க்ஸீய டைலக்டிக்ஸும் ஹேகலியன் டைலக்டிக்ஸும் ஒன்றென்று எண்ணக்கூடாது. ஹேகலுடைய டைலக்டிக்ஸ் மானசீக வாதத்தை (உலகம் மாயை; அது எண்ணத்தின் பிரதிபலிப்பு எண்ணமே முதன்மையானது என்பதே மானசீக வாதம்) அடிப்படையாக கொண்டது. இந்தக் கூட்டில் அடங்கியிருந்த பகுத்தறிவு பூர்வமான சாராம்சத்தை மார்க்ஸும், எங்கல்ஸும் எடுத்து, அதை நவீன விஞ்ஞானத்துடன் இணைத்தார்கள். விஞ்ஞானம் பௌதீகப் பொருள்களால் அமைந்த உலகத்தையே

அவருடைய, புத்தகங்களில் அவ்வளவு உயிரும் ஆவேசமும் எதிரொலிக்கின்றன. அர்த்தமில்லாத வார்த்தைகளை, காரியமில்லாத பதப்பிரயோகங்களை மார்க்ஸ் விரும்பவில்லை. சோஷியலிஸ்ட் பதங்களை பிரயோகிப்பதையே தொழிலாகக் கொண்டவர்களை அவரால் சகிக்கமுடியாது. ஒவ்வொரு பிரச்னையின் உட்சாராம்சத்தையும் அவர் மூளை துருவிப் பார்த்தது. தான் படித்த பல்லாயிரக்கணக்கான பக்கங்களிலிருந்து, தான் சேமித்துவைத்திருக்கும் நூறுயிரக்கணக்கான யதார்த்த உண்மைகளிலிருந்து, அவற்றின் சாராம்சத்தை, பிரதான பிரச்னைகளை, அவரால் கடைந்தெடுக்க முடியும். கொஞ்ச வார்த்தைகளில் மிகுதியான விஷயங்களை எடுத்துச்சொல்லும் ஆற்றல்பெற்றிருந்தார்.

தன் செழிப்பான சிந்தனையை சில வார்த்தைகளில், தெளிவான மொழியில், உருவாக்கும் திறமை அவருக்கிருந்தது. அதனால்தான், இன்றைய தினமும், அவர் புத்தகங்களில் மூழ்கும் யாரும் மனமுருகாமலிருக்கமுடியாது. அவருடைய பிரதான புத்தகங்கள் மாத்திரம் இன்றுவரை முக்கியத்துவத்தை இழக்கவில்லை; முக்கியமான பிரச்னைகளைப்பற்றி அவர் எழுதிய கட்டுரைகள், 19-ம் நூற்றாண்டின் முந்திய பகுதியைப்பற்றி அவர் எழுதிய குறிப்புகள், கடிதங்கள் ஆகியவைகூட இருபதாவது நூற்றாண்டின் தொழிலாளர் இயக்க வளர்ச்சிப் பாதையில் ஒளிவீசுகின்றன. மார்க்ஸ் நமக்கு விட்டுச்சென்ற சம்பத்தை படிக்கப் படிக்க, அதன் முக்கியத்துவம் விளங்குகிறது; இந்தத் தொழி

---

முதன்மையாக கருதுகிறது. எண்ணமே மனித மூளையென்ற பௌதிகபொருளில் உதயமாகிறது; தவிர எண்ணங்கள் பௌதீக பொருள்களால் அமைந்த உலகத்தின் பிரதிபிம்பம்தான். டைலக்டிக்ஸை ஐடியலிஸத்திலிருந்து விடுவித்ததைத்தான், காலூன்ற வைத்ததாக (தலைகீழாக இருந்ததை நேராக நிறுத்தியதாக) ஆசிரியர் குறிப்பிடுகிறார். "வெளி உலகத்துடைய மாறுதல்களின் பொது விதிகளைப்பற்றிய விஞ்ஞானமும், மனித சிந்தனையின் மாறுதல்களின் பொது விதிகளைப்பற்றிய விஞ்ஞானமுமே" (எங்கல்ஸ்) டைலக்டிக்ஸ். பொருள்கள் இடைவிடாமல் மாறிக்கொண்டிருக்கின்றன; அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன; அவை தோன்றி அழிகின்றன. இந்த மாறுதலின் பகைப்புலனில் பொருட்களையும் நிகழ்ச்சிகளையும் உணர்வதே டைலக்டிக்ஸ். (விவரத்துக்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சரித்திரம்-நான்காம் அத்தியாயத்தை படிக்கவும்.) (மொ-ர்.)

லாளிவர்க்கத்தின் தத்துவஞானியுடைய, ஆர்கனைஸருடைய அங்க அடையாளங்கள் மேலும் தெளிவாகத் தெரியவருகின்றன; "இதாருக்காக வாழ்ந்த வர்க்கத்தை தனக்காக வாழும் வர்க்கமாக"* மாற்றும் பணியில் தன் வாழ்நாட்களை அர்ப்பணித்த மார்க்ஸை நம்மால் மேலும் மேலும் புரிந்துகொள்ள முடிகிறது.

மார்க்ஸின் உழைப்பு பல உருவங்களில் பிரதிபலித்த போதிலும், ஓரே கொள்கை அவற்றினூடே பிரதிபலிக்கிறது. அவரது சொல்லிலும் செயலிலும் முரணில்லை. "தனியொருகருத்தையுடையவர்" என்று அவர் தன்னைப்பற்றி கூறிக்கொண்டது வெறும் பேச்சல்ல. ஒரு பிரச்னையையோ, ஒருசில பிரச்னைகளையோ மார்க்ஸுடைய புத்தகங்களிலிருந்து தனிமைபடுத்துவோமானல், அந்த பிரச்னையின் தன்மையை விபரமாக பரிசீலனை செய்வதற்கே அல்லாது வேறெதற்குமல்ல; அதற்கும் முழு மார்க்ஸிஸத்துக்கு முள்ள தொடர்பை, ஜீவதொடர்பை மறக்க முடியாது. மார்க்ஸ் விட்டுச் சென்றிருக்கும் சம்பத்துக்கு ஈடாக யாரும் தன் வார்ஸுகளுக்கு எதையும் விட்டுச் செல்லவில்லை என்பதை நாம் ஆரம்பத்திலேயே கருத்தில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். அத்துடன், மார்க்ஸின் சம்பத்து ஒரே கல் கம்பத்தால் கட்டப்பட்ட கட்டிடம்; அதை தனித்தனிபகுதிகளாக பிரிக்கமுடியாது என்பதையும் நினைவிலிருத்தவேண்டும்.

மார்க்ஸின் சிந்தனைகளிலிருந்தும் கருத்துகளிலிருந்தும், தொழிற்சங்க இயக்கத்தைப்பற்றியும் பொருளாதாரப் போராட்டத்தைப்பற்றியும் அவர் கூறும் பகுதிகளை தனிமைப்படுத்துவது விசேஷ கஷ்டம் வாய்ந்தது. இந்த விஷயத்தைப்பற்றி மார்க்ஸ் ஒரு பிரத்தியேக புத்தகமோ, பாடபுத்தகமோ, சிறு பிரசுரமோ

---

* முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளி வர்க்கம் தன் உழைப்பு சக்தியை விற்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பிலிருந்து லாபம் பெறுகிறது முதலாளி வர்க்கம். முதலாளித்துவ சமூகம் தொழிலாளி வர்க்கத்தை அடக்குகிறது. ஆனல் தொழிலாளி வர்க்கம் தன் உழைப்பின் மூலம் அந்த அமைப்பை காப்பாற்றுகிறது. இந்த நிலை ஒழியவேண்டும். தொழிலாளி வர்க்கம் தனக்காக வாழவேண்டும். அதாவது, தன் வர்க்க விடுதலைக்காக, முதலாளித்துவ அமைப்புக்கு சவக்குழி தோண்டவேண்டும்.

எழுதவில்லை. அவர் புத்தகங்கள் முழுவதிலும், *சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் நடைமுறையில் அவர் ஆற்றியபோது, பொருளாதாரப் போராட்ட பிரச்னைகளைப்பற்றியும் தொழிற் சங்கங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றியும் அவருடைய அபிப்பிராயங்களைக் காணலாம்.

இந்த அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் சேகரிப்பதில் பிரயோசனமுண்டா? இந்த பிரச்னைகளைப்பற்றி அவருக்கு நிர்த்தாரணமான அபிப்பிராயம் உண்டா? என்று கேட்கலாம். பிரயோஜனம் உண்டு என்பதே நம் பதில். தொழிற்சங்கங்களைப் பற்றி அவர் பெரிய புத்தகங்கள் எழுதாவிட்டாலும், அடிக்கடி இதைப்பற்றி எழுதாவிட்டாலும், தனித்தனியாய் அவர் வெளியிட்ட அபிப்பிராயங்கள் ஒரு நிர்ணயமான அமைப்பாகின்றன; அவை ஒரு திட்டவட்டமான பாதையைவரைகின்றன; தொழிலாளி வர்க்கத்தின் பொதுவான **வர்க்கப்போராட்டத்தில் தொழிற்சங்கங்களுடைய பங்கைப்பற்றியும் கடமைகளைப்பற்றியும் ஒரு நிர்த்தாரணமான தெளிவை ஏற்படுத்துகின்றன. மார்க்ஸ் புத்தகங்களை கொஞ்சம் படித்தறிந்தவர்கள் கூட இதை உணர்வார்கள். மார்க்ஸ் புதிய பாதைகளை வகுத்தாரென்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மார்க்ஸிஸத்தின் மூன்று மூலாதாரங்கள் என்று லெனின் குறிப்பிட்டாரே (ஜெர்மன் தத்துவசாஸ்திரம், இங்கிலீஷ் அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சுசோஷியலிஸம்) அற்றை அவர் தீர்க்கமாக கற்றறிய வேண்டியதாயிற்று.

---

* சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்: உலகத் தொழிலாளர்கள் அனைவரும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்களுடைய நலன்கள் பொதுவானவை. உலகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை பிரதிபலிக்கும் முதல் சர்வதேச ஸ்தாபனம் (முதலாவது இன்டர்நேஷனல்) 1864-ல் ஸ்தாபிக்கப்பட்டது. சோஷியலிஸ்ட் லட்சியத்தை ஏற்றுக்கொண்ட தொழிற் சங்கங்கள் பல அதில் அங்கம் வகித்தன. மார்க்ஸ்-எங்கல்ஸ் இருவரும் அதன் தலைவர்களாக விளங்கினர்கள். 1872-ல், பாரிஸ் கம்யூன் தோற்கடிக்கப்பட்டபின் அது கலைக்கப்பட்டது.

* வர்க்கப் போராட்டம்: ஒடுக்குபவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நடக்கும் போராட்டம். உற்பத்தி சக்திகளின் உடைமையாளர்களுக்கும், தங்கள் உழைப்பு சக்தியை இந்த உடைமையாளர்களிடம் விற்கும் உழைப்பாளி மக்களுக்கும் நடக்கும்

முதன் முதலாக, அவர்காலத்திய விஞ்ஞானங்களில் தேர்ச்சி யடைந்தார் மார்க்ஸ். முதலாளித்துவத்தின்கீழ் கிடைத்துள்ள மனிதஅறிவின் யதார்த்த அஸ்திவாரத்தின்மேல் அவர் தன்போ தனைகளாகிய கட்டடத்தை எழுப்பினார் மனித சமூக வளர்ச்சி விதிகளை படித்து சிந்தித்து அறிந்த மார்க்ஸ்.

"முதலாளித்துவம் கம்யூனிஸத்தை நோக்கி வளர்ச்சியடை வது தவிர்க்கமுடியாதது என்பதை உணர்ந்தார். முன்னிருந்து விஞ்ஞான அறிவுமுழுவதையும் ஜீரணித்துவிட்டு, இந்த முதலாளித் துவ சமூகத்தை விவரமாக, பரிபூரணமாக, தீர்க்கமாக, சரியாக ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் கம்யூனிஸத்தை நோக்கி முதலாளித்துவம் வளர்வது தவிர்க்கமுடியாது. இதை நிரூபித்தது அதிமுக்கிய மானது. இதுவரை சிருஷ்டிக்கப்பட்ட வைகளையெல்லாம், ஒரு அம்சம் விடாமல் விமர்சனக்கண்ணோட் டத்துடன் பகுத்தறிந்தார். மனிதர் சிருஷ்டித்தவற்றையெல்லாம் யோசித்துப்பார்த்து, குணதோஷ விமர்சனம் செய்து, தொழி லாளர் இயக்கத்தில் பரீட்சைபார்த்து தன் முடிவுக்கு—இயல்பா கவே குறைபாடுடைய பூர்ஷ்வா கண்ணோட்டம் பெற்றவர்களும், பூர்ஷ்வா தப்பபிப்பிராயங்களால் திருஷ்டியை இழந்தவர்களும் வரமுடியாத முடிவுக்கு—அவர் வந்தார். (லெனின்)

தனிப்பெரும் நேர்மையுடன் கூடியவிஞ்ஞானி கார்ல்மார்க்ஸ் டைலக்டிகல் மெட்டீரியலிஸ முறையை நன்கு ஜீரணத்திருந்தபடி

---

போராட்டம். கடந்த காலத்தில், அடிமை சுவாதீனக்காரர்களுக் கும், அடிமைகளுக்கும் வர்க்கப் போர் நடந்தது; அதன் பின் நிலப்பிரபுக்களுக்கும், பண்ணை அடிமைகளுக்கும், நிலப்பிரபுக் களுக்கும் புதிதாய் எழுந்த முதலாளி வர்க்கத்துக்கும் போராட் டங்கள் நடந்தன. இன்று முதலாளி வர்க்கத்துக்கும் தொழி லாளி வர்க்கத்துக்கும் போராட்டம் நடக்கிறது. சரித்திரத்தை உருவாக்கும் பிரதான சக்தி வர்க்கப் போராட்டமே. பொருளுற் பத்தி முறைகளைப் பொறுத்து, வர்க்கங்கள் உருவாகின்றன; பொருளுற்பத்தி சக்திகள் வளர்ச்சியடைவதால், பழைய சமூக முறைக்கும் அதற்கும் முரண் ஏற்படுகிறது; ஒடுக்கப்பட்ட வர்க் கத்தின் போர் மூலம் சமூக முறை மாறுகிறது. ஆக, ஒவ்வொரு வர்க்கப் போரும் ஒரு அரசியல் போராட்டம். வெற்றி யடைந்து புராலிடேரியட்டின் சர்வாதிகாரம் ஏற்பட்டால், அதன் பின், வர்க்க வேறுபாடுகள் ஒழிந்து, வர்க்க பேதமில்லாத சமுதாயம் மலரும், வர்க்கப் போருக்கு அங்கு இடமில்லை. (மொ-ர்.)

யால் அவரது விஞ்ஞான அறிவுப் புத்தகங்கள் விஞ்ஞான தீர்க்க தரிசனத்துக்கு ஒரு சிறந்த உதாரணமாக திகழ்கின்றன. இங்கிலாந்திலும், பிரான்ஸிலும், ஜர்மனியிலும், தொழிற்சங்க இயக்கம் தோன்றி ஆரம்ப கட்டத்திலிருந்தபோது அவற்றின் பலத்தையும் பலவீனத்தையும் பரிசீலித்தார்; நடப்பு நிகழ்சிகளைப்பற்றி தீர்க்கமாய் சிந்தித்தார். தொழிற்சங்கங்கள் என்றால் என்ன? அவற்றின் நடவடிக்கைகளுடைய எல்லைகள் என்ன, பொருளாதாரத்துக்கும் அரசியலுக்கு முள்ள உறவென்ன ஆகியவற்றை அறிந்தார். அவருக்கே பிரத்தியேகமான ஆழத்துடனும் தெளிவுடனும், கிஞ்சித்தும் தவறாத தன்மையுடனும், அவற்றை அறிந்தார்.

தொழிலாளிவர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தைப் பற்றி, மார்க்ஸின் ஆதர்சத்தின் அடிப்படையான கருத்து என்ன? தொழிலாளிவர்க்கத்தை தனக்காக இயங்கும் வர்க்கமாக்குவது, முதலாளிவர்க்கத்துக்கும் தொழிலாளிவர்க்கத்துக்கு முள்ள வேறுபாட்டை தீர்க்கமாக வரையறுப்பது, தொழிலாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவது, அதன் சக்திகளை உருட்டித் திரட்டுவது, முதலாளிவர்க்கத்துக்கு எதிராக தொழிலாளி வர்க்கத்தை அணிவகுப்பது ஆகியவையே. மார்க்ஸுடைய புத்தகங்களிலும், நடவடிக்கைகளிலும் இந்த கருத்து, ஆடைமுழுவதிலும் நெய்யப்பட்டுள்ள நூலைப்போல, ஊடுருவியிருக்கிறது. தொழிற் சங்கங்களைப்பற்றியும், அவற்றை எதிர்நோக்கும் கடமைகளைப் பற்றியும், தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப்போராட்டத்தில் அவைகளுக்குள்ள பங்கைப்பற்றியும், அவருடைய கண்ணோட்டத்தை இந்த கருத்தே நிர்ணயித்தது.

ஆனால் வர்க்கப்போராட்டத்தின் கொள்கையையும் போர்த்தந்திரத்தையும் தொழிலாளி மக்கள் புரிந்து கொள்ளத்துவங்கும் போதுதான், தொழிலாளி வர்க்கத்தை தனக்காக இயங்கும் வர்க்கமாக மாற்றுவது சாத்தியம்; வர்க்க போராட்ட தத்துவத்தை தானாகசிருஷ்டிக்கவில்லை என்று மார்க்ஸே கூறுகிறார். வெடிமேயர் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் (1852, மார்ச்சு 5) மார்க்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்:—

"புதிதாக நான் செய்தது, கீழ்கண்ட உண்மைகளை ருசுப்பித்ததுவேயாகும்:—உற்பத்தி வளர்ச்சியில், நிர்ணயமான சரித்திரபூர்வமான கட்டங்களை ஒட்டியே வர்க்கங்கள் தோன்றி வாழ்கின்றன. வர்க்கப்போராட்டம் தொழிலாளிவர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நோக்கி (மனிதவர்க்கத்தை) அழைத்துச்செல்கிறது,

இதைத்தவிர்க்க முடியாது. இந்த சர்வாதிகாரமே ஒரு இடைக் காலமுறைதான். சகல வர்க்கபாகுபாடுகளும் ஒழிந்து வர்க்கபேத மற்ற சமுதாயம் இதன்பின் ஏற்படுகிறது."

மேலும், மார்க்ஸின் மேதை கீழ் கண்டவற்றிலும் அடங்கி யிருக்கின்றது—வர்க்க போராட்ட தத்துவத்தை ஒரு உறுதியான பொருளாதார அஸ்திவாரத்தின்மேல் நிறுத்தி, தன் பொருளா தார பரிசீலனைகளிலிருந்து அரசியல் முடிவுகளுக்கும் போர் தந்திர முடிவுகளுக்கும் வந்தார். வர்க்கங்களுக்கிடை பாலம் கட்டு வதற்கும் (சமரசம் செய்வதற்கு) செய்யப்படும் முயற்சிகளை எதிர்த்து தயாதாட்சண்ய மில்லாமல் போராடினார். முதலாளி வர்க்கத்துக்கும் தொழிலாளிவர்க்கத்துக்கு மிடையேயுள்ள பிளவை மறைப்பவர்களை எதிர்த்தும், தத்துவத்திலும் அரசியல் ரீதியிலும் தொழிலாளிவர்க்கத்தை முதலாளிவர்க்கத்தின் உபகரு வியாக, கையாளாக ஆக்கும் முயற்சிகளை எதிர்த்தும், ஈவிரக்கம் காண்பிக்காமல் போராடினார்.

சம்பளத்தைப்பற்றிய சித்தாந்தத்தை மார்க்ஸ் நிர்ணயித்தார். உபரிமதிப்பு சிந்தாந்தத்தை கண்டுபிடித்தார்; உழைப்பின் விலை, கூலிஉயர்வு விகிதத்துக்கேற்றாற்போல் பண்டங்களின் விலை உயர்வு, சாசுவத சம்பள நியமனம் முதலியவற்றைப்பற்றி ஆடாம் ஸ்மித், ரிகார்டோமில், பிரௌதன், லாஸ்ஸால் முதலியோ ருடைய முதலாளிவர்க்க, நடுத்தரவர்க்க அரைகுறை சோஷிய லிஸ்ட் சித்தாந்தங்கள் அனைத்தையும் தகர்த்து தூள்தூளாக்கினார். இந்த வகையில், வர்க்கதொழிற்சங்ககங்ளும், வர்க்கதொழிற்சங்க கொள்கையும் உருவாக்குவதற்கான அரசியல், பொருளாதார அடிப்படையை சிருஷ்டித்தார்.

மேலும், பூர்ஷ்வாவர்க்கத்திலிருந்து* புராலிடேரியட்டை

---

* பூர்ஷ்வா வர்க்கம்; புராலிடேரியட்: உற்பத்தி சாதனங்க ளுடன் ஒரு குறிப்பிட்ட உறவுள்ள ஒரு ஜனப் பகுதியையே வர்க்கம் என்கிறோம். நவீன முதலாளிகள் உற்பத்தி சக்திகளின் சுவாதீனக்காரர்கள்; இவர்களையே பூர்ஷ்வா வர்க்கம் என்கி றோம். உலகத்தின் உற்பத்தி சக்திகளை-பாக்டரிகள் சுரங்கங்கள் முதலியவற்றை சொந்தமாக்கிக் கொண்டு; சொத்தில்லாத உழைப்பாளிகளின் உழைப்பை கூலிக்கு வாங்கும் வர்க்கம்.

புராலிடேரியட்-உற்பத்தி சக்திகள்மீது கொஞ்சம்கூட சுவாதீனமில் லாதவர்கள், வாழ்வதற்காக தங்கள் உழைப்பையே விற்க வேண்டி யிருக்கிறது. இந்த நவீனகால கூலி உழைப்பாளி களையே புராலிடேரியட் என்கிறோம். (மொ-ர்.)

பிரிக்கும் வர்க்கக்கொள்கையைகண்டு, அம்பலப்படுத்தியதில் மாத்திரம் மார்க்ஸின் மேன்மையடங்கியிருக்கவில்லை. தன் வர்க்கக்கோட்பாட்டை முன்னுக்குப்பின் முரணில்லாமல், பாதுகாப்பதற்கான அரசியல் ஆயுதத்தையும் தத்துவக்கருவியையும் அவர் உருவாக்கினார்.

1883-ம் வருஷ, மார்ச்மாதம் 17-ம்தேதி மார்க்ஸின் பூதவுடலுக்கு கடைசிச்சடங்குகள் செய்த காலத்தில், "எல்லாவற்றையும் விடமுக்கிய மானது, மார்க்ஸ் ஒரு புரட்சி வீரர் என்பதே" என்று கூறினார் எங்கல்ஸ். தத்துவத்திலும், சரித்திரத்திலும், பொருளாதாரத்திலும் மாத்திரம் அவர் புரட்சிகாரர் அல்ல; அரசியலிலும் போர்தந்திரத்திலும் கூட அவர் புரட்சிக்காரராய் விளங்கினார். புத்தகங்களிலும் மூலாதார தஸ்தாவேஜுகளிலும் (புத்தகங்களில் மூழ்கிக்கிடப்பதே தனக்கு பிடித்தமான பொழுது போக்கு என்று அவர் கூறுவார்) இவருக்கு ஆர்வமிருந்த போதிலும், அரசியல் நடவடிக்கைக்கு ஓரளவாவது இடம் இருக்கும்போது, தன் தத்துவ புத்தகங்களையெல்லாம் மூட்டை கட்டிவிடுவார். தன் கொள்கைகளுக்காகவும் அபிப்பிராயங்களுக்காகவும் ஆர்வத்துடன் கடினமாகப் போராடாமல் வாழ்க்கையை நடத்த முடியுமென்று அவரால் கற்பனையில் கூட எண்ண முடியாது "இன்பத்தைப்பற்றி உங்கள் கருத்து என்ன ?;' என்ற கேள்விக்கு, "போராடுவது" என்றே அவர் பதில் அளித்தார். இந்த குணநிசயத்தைதான் எங்கல்ஸ் மார்க்ஸின் சவஅடக்க பிரசங்கத்தில் வற்புறுத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, மார்க்ஸ் ஒருபுரட்சிக்காரர் என்கிறார்.

முதலாளித்துவ சமூக அமைப்பையும், அது சிருஷ்டித்திருக்கும் பல்வேறு அரசாங்க உருவங்களையும் தலைகுப்புற கவிழ்ப்பதும், தன் அந்தஸ்தையும் தேவைகளையும் தான் விடுதலை பெறுவதற்கவசியமான சூழ்நிலைகளையும் அவர் உணரும்படி செய்த தற்கால புராலிடேரியட்டின் விடுதலைக்கு உதவுவதுமே அவருடைய வாழ்க்கையின் உண்மையான பணியாக இருந்தது. போராட்டம் அவரது தனியொரு குணம். ஆர்வத்துடன், வைராக்கியத்துடன் போராடினார்; வெற்றியும் பெற்றார். ஒரு சிலரே, இதில் அவருக்கு இணையாக முடியும்.

அவர் தனியொரு தத்துவஞானியாகவும் மகத்தான புரட்சிக்காரனாகவும் விளங்கினார். ஒடுக்கும் கூட்டத்தை எதிர்க்கும்படி

ஒடுக்கப்பட்டவர்களை தட்டியெழுப்புவதே அவருடைய வாழ் நாள் பணி. "நான் முதலாளித்துவத்தின் ஜன்ம சத்துரு" என்ற கூர்மையான சிறு வாக்கியத்தில் இந்த பணியை விளக்கினார்.

அகண்டாகரமான மார்க்ஸீய சம்பத்தில், தொழிற் சங்க பிரச்னைகள் அதிக இடத்தைப் பெறவில்லை. எனினும், இதர பிரச்னைகளைப்போல், இங்கும் மார்க்ஸ் கூறியதை ஜாக்கிரதை யாக உன்னிப்பாக பரிசீலனை செய்வதற்கு காரணம் இருக்கிறது. அவர் காலத்தில் அவர் புதிதான சில விஷயங்களைச் சொன்னா ரென்பதில் மாத்திரம் அவர் கீர்த்தி அடங்கவில்லை. அவர் கண்ட புதுமை, அவர் இறந்த 50 வருஷங்களுக்குப்பின், இன்றைய நிலை லைமைக்குக்கூட பொருந்தும். மார்க்ஸ் பெயரும், மார்க்ஸ் லட்சி யமும் எத்தனை ஆண்டுகளாயினும் அழியாப் புகழுடன் திகழு மென்று எங்கல்ஸ் கூறியது முற்றிலும் உண்மை.

# தொழிற்சங்கங்களைப்பற்றி
# கார்ல் மார்க்ஸ்

............

## முதலாவது அத்தியாயம்

## புராலிடேரியட்டின் வர்க்கப் போராட்டத்தில் தொழிற்சங்கங்களின் பங்கு

காரல்மார்க்ஸ் அரசியலைப்பற்றி சிந்திக்கத் துவங்கிய காலத்தில் தொழிற்சங்கங்கள் முதன் முதலாக தோன்றிக் கொண்டிருந்தன. பிரான்ஸ் முதலிய நாடுகளில், பரஸ்பர, உதவி சங்கங்களிலிருந்து தொழிற் சங்கங்கள் உருவான நேரத்தில் இங்கிலாந்து முதலிய நாடுகளில் தொழிற்சங்கங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவும் வோட்டுரிமைக்காகவும் ஸ்ட்ரைக் போராட்டங்கள் நடத்திவந்த சமயத்தில், காரல்மார்க்ஸ், கம்யூனிஸ்டானார். மார்க்ஸ் கண்ட தொழிற் சங்கங்கள், பிறப்புக்குறிகள்கூட மறையாத, குழவிப்பருவத்திலிருந்தன. பல்வேறு கொள்கைகள் அவைகளிடையே மண்டிக்கிடந்தன. ஆனால் இவை குழந்தைப் பருவத்திலிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் சின்னங்கள் என்பதை புரிந்துகொண்டார் மார்க்ஸ். இந்த ஆரம்ப கால வடிவங்களைக்கொண்டு, தொழிற்சங்கம் என்ற ஸ்தாபனத்தின் சரித்திரபூர்வமான பணியையோ, அதன் வளர்ச்சிப்பாதையையோ மதிப்பிடமுடியாது என்றும் உணர்ந்தார். அது மார்க்ஸின் மேதைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

தொழிலாளர்களின் சக்திகளை ஒன்று திரட்டும் கேந்திரங்களாக, தொழிலாளர்களுக்கு வர்க்க பயிற்சியில் ஆரம்ப பாடங்

களை கற்றுத்தரும் ஸ்தாபன கேந்திரங்களாக, தொழிற்சங்கங்களைக் கருதினர் காரல் மார்க்ஸ்.

மார்க்ஸ் எதை பிரதானமாகக் கருதினர்? சிதறிக்கிடக்கும் தொழிலாளிகள்—ஒருவருக்கொருவர் போட்டிபோடும் தொழிலாளிகள்—ஓரணியில் திரள முன்வருவதையே அவர் முக்கியமான அம்சமாக மதிப்பிட்டார். இது தொழிலாளி வர்க்கம் ஒரு சுதந்திர சக்தியாக வளருமென்பதற்கு ஒரு உத்திரவாதம் என்பது அவர் முடிவு. தொழிற் சங்கங்கள் ஒற்றுமைப் பள்ளிகள், சோஷியலிசம் போதிக்கும் பாடசாலைகள் என்ற கருத்துக்களை மார்க்ஸும் எங்கல்ஸும் மீண்டும் மீண்டும் தங்கள் புத்தகங்களிலும் கடிதங்களிலும் வற்புறுத்துகின்றனர்.

தொழிற்சங்கம் என்ற பள்ளிக்கூடத்தில், தொழிலாளிகளுக்கு சோஷியலிஸம் போதிக்கப்படுகிறது, இது ஒரு சூத்திரம். ஆனல் மார்க்ஸ் சூத்திரங்களை கூறுவதுடன் நிற்பவரல்ல. தன் எண்ணத்தை விரிவாக விளக்குகிருர்; தொழிற்சங்கத்தை பல கண்ணோட்டங்களில் பரிசீலனை செய்கிருர். தொழிற்சங்கங்களின் கடந்தகால சரித்திரம், நிகழ்கால நிலைமை, வருங்கால வளர்ச்சி முறை என்பதைப்பற்றி 1866ல் ஜினீவாவில் நடந்த முதல் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மகாநாட்டில் வந்த தீர்மானத்தின் கர்த்தா காரல் மார்க்ஸ். தொழிற்சங்கங்களின் சரித்திரத்தைப் பற்றி அத்தீர்மானம் கூறுவது என்ன?

பொருளுற்பத்தி சக்திகள் முழுவதும் ஒரு சிலரிடம் குவிந்து கிடக்கிறது. இந்த முதலாளித்வ சமூகத்தில், தொழிலாளியிடம் இருப்பதெல்லாம் அவனுடைய சொந்த உழைப்புசக்திதான், அதனல் தொழிலுக்கும் முதலுக்கும் நியாயமான உடன்பாடு ஏற்பட முடியாது. தொழிலாளிகளிடமுள்ள சமூகசக்தி அவர்களுடைய எண்ணிக்கை பலம் ஒன்றுதான். ஆனல் ஒற்றுமை இல்லாத குறை இந்த சக்திக்கு குறுக்கே நிற்கிறது. முதலாளித்துவ சமூகத்தில், தொழிலாளிகளிடம் தவிர்க்க முடியாத போட்டியிருப்பதால்தான், ஒற்றுமைக்கு ஊறு ஏற்படுகிறது. இந்த ஊறு இதே காரணத்தால் நீடிக்கிறது. இந்தப் போட்டியை ஒழிப்பதற்காக, அல்லது கட்டுப்படுத்துவதற்காக தொழிலாளர்கள் தாங்களாகவே எடுக்கும் பிரயத்தனங்களிலிருந்துதான், ஆரம்பத்தில் தொழிற் சங்கங்கள் உதயமாகின்றன. அப்பட்டமான அடிமை நிலையிலிருந்து தங்களை உயர்த்திக்கொள்ளக்கூடிய வேலை நிபந்தனைகளையாவது பெறவேண்டுமென்பதற்காகவே, தொழிலாளர்கள் இந்த பிரயத்தனத்தில் ஈடுபடுகிருர்கள்.

ஆகவே, தொழிற்சங்கங்களின் உடனடி நோக்கம் என்ன? முதலாளித்துவத்தை எதிர்த்து அன்றாடப்போராட்டம் நடத்துவது, கூலியிலும், வேலைநேரத்திலும், முதாளித்துவம் செய்யும் தினசரி தில்லுமுல்லுகளை எதிர்த்துப் பாதுகாப்புப்போர் நடத்துவது. தொழிற்சங்கங்களுடைய இந்த நடவடிக்கை நியாயமானது என் பதுமாத்திரமல்ல: அது அவசியமானதும்கூட. தற்கால உற்பத்திமுறை நீடிக்கும்வரையில், இதை புறக்கணிக்க முடியாது. அதற்குமாறாக இது, எங்கும் பரவவேண்டும். சகல தேசங்களிலும் தொழிற்சங்கங்களை ஆக்கி ஒன்றுபடுத்தி, இந்த அன்றாடப் போராட்டத்தை உலகமெங்கும் நடத்தவேண்டும்.

ஆனால், அதேசமயத்தில், அவர்களுக்கு தெரியாமலேயே தொழிற்சங்கங்கள் தொழிலாளி வர்க்கத்தை ஸ்தாபனரீதியாக திரட்டுவதற்கான கேந்திரங்களாக பயன்படுகின்றன. பூர்ஷுவாக்களுக்கு மத்தியகால முனிசிபால்டிகளும் நகரசமூகங்களும் இருந்ததுபோல, *முதலுக்கும் தொழிலுக்கும் நடக்கும் கொரில்லா போராட்டத்துக்கு தொழிற் சங்கங்கள் அத்தியாவசியமானால், கூலிக்கு உழைப்பை விற்கும் அமைப்பையே ஒழிப்பதற்கு தொழிற்சங்க ஸ்தாபனங்கள் அதிக முக்கியமாகின்றன.

இந்த தீர்மானத்தில், பல விஷயங்கள், நமது விசேஷ கவனத்தைக் கவர்கின்றன. "பூர்ஷுவாக்களுக்கு மத்தியகால முனிசிபால்டிகளும் நகர சமூகங்களும் இருந்ததைப்போல, தொழிற்சங்கங்கள் தொழிலாளி வர்க்கத்தை ஸ்தாபனரீதியாக திரட்டும் கேந்திரங்களாகின்றன" என்று வற்புறுத்துகிறார் மார்க்ஸ். மார்க்ஸ் பொருளாதார போராட்டங்களுக்குமாத்திரம் தொழிற்சங்கங்களை கேந்திரமாக கருதவில்லை என்பதற்கு உபமானமே சாட்சி. ஏனென்றால், நிலப்பிரபுத்வத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தில், மத்தியகால அமைப்பை எதிர்த்து நடத்திய அரசியல் போராட்டத்தில், பூர்ஷ்வாக்களுக்கு மத்யகால முனிசிபால்டிகளும் நகர சமூகங்களும் கருவிகளாகப் பயன்பட்

---

* மத்திய கால முனிசிபாலிடிகள்: பியூடல் பிரபுத்துவ சமூக அமைப்பு நிலவிய காலத்தையே மத்திய காலம் என்கிறோம். இதன் நடுவே, தீவுகளைப் போல காட்சியளித்த நகரங்களில் புதிதாய் எழுந்த வியாபாரிகள் ஆதிக்கம் வகித்தனர். நில பிரபுத்வ முறையை எதிர்க்க, அவர்களிடமிருந்த அதிகாரத்தைப் பறிக்க இந்த ஆதிக்கம் பூர்ஷ்வாக்களுக்கு பயன் பட்டது.

டன. இந்த உபமானத்துடன் மார்க்ஸ் நிறுத்திக்கொள்ளவில்லை. **"கூலிக்கு உழைப்பை விற்கும் முறையையே ஒழிப்பதற்கு தொழிற் சங்க ஸ்தாபனங்கள் அதி முக்கியமாகின்றன,"** என்றும் இதே பகுதியில் கூறுகிறார். தொழிற்சங்கங்களுக்கு மார்க்ஸ் மகத்தான அரசியல் முக்கியத்துவம் அளித்தாரென்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவைகளை நடுநிலைமை ஸ்தாபனங்களாகவோ, அரசியலுடன் சம்பந்தமில்லாத ஸ்தாபனங்களாகவோ மார்க்ஸ் கருதவேயில்லை.

ஜினிவா மகாநாட்டுத் தீர்மானத்தில், அந்தக் காலத்திலிருந்த தொழிற்சங்க இயக்கத்தைப்பற்றி, நிகழ்காலம் என்ற பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

"அந்தந்த ஸ்தலத்தில் முதலாளித்துவத்துடன் நேரடியான போராட்டம் நடத்துவதில் இதுவரை தொழிற்சங்கங்கள் முழுகவனத்தைச் செலுத்திவந்தன. அடிமைமுறை என்ற அமைப்பையே, தற்கால உற்பத்தி முறையையே தாக்கும் சக்தி தங்களிடமிருப்பதைத் தொழிற்சங்கங்கள் இன்னும் உணரவில்லை. அதனால்தான் அவை சமூக, அரசியல் இயக்கங்களிலிருந்து ஒதுங்கி நின்றன. ஆனால் சமீபகாலத்தில், அவை விழிப்படைந்துவருகின்றன; தங்கள் சரித்திரபூர்வமான பணியை உணர்ந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றன. சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த அரசியல் இயக்கத்தில் தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டதும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொழிற்சங்கங்களின் கண்ணோட்டம் விரிவடைந்திருப்பதும் இதை நிரூபிக்கின்றன.

சமீபத்தில் ஷெபீல்டு நகரத்தில் (இங்கிலாந்து) நடந்த தொழிற் சங்க பிரதிநிதிகளின் கூட்டத்தில் சர்வதேச தொழிலாளரை ஒரு ஸ்தாபனத்தில் ஒன்றுபடுத்த சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் எடுத்துவரும் முயற்சியை ஆதரித்து, தொழிலாளி வர்க்கம் முழுவதும் முன்னேற, நல்வாழ்வுபெற, மகாநாட்டில் கலந்துள்ள சங்கங்கள் அத்தனையும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் சேரவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொழிற் சங்கங்களின் விழிப்புக்கு இதுவும் ஒரு உதாரணம்."

இந்தப் பகுதியில், அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்கும் சகல தொழிற்சங்கங்களும் கடுமையாக கண்டிக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். தங்கள் மகத்தான சரித்திர பூர்வமான பணியை புரிந்துகொள்ளத் துவங்கியிருக்கும் தொழிற்சங்கங்களின் முக்கியத்துவம் வற்புறுத்தப்பட்டிருப்பதையும் காண்கிறோம்.

தொழிற்சங்க இயக்கம் 1860—70 ஆண்டுகளில் இளம் பருவத்தில் இருந்தது. ஆனால் அதற்காக, அவைகளுக்கு அரசியல் ரீதியாக விட்டுக்கொடுப்பது சாத்தியமென்று மார்க்ஸ் நினைக்கவில்லை. பொருளாதார பிரச்னைகளைமாத்திரம் தொழிற்சங்கங்களுக்கு வரையறுக்கவில்லை மார்க்ஸ்; பொதுவான வர்க்கக் கடமைகளையும் வகுத்துத் தந்தார்.

ஜினிவா தீர்மானத்தில், தொழிற்சங்க இயக்கத்தின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் மாத்திரம் விளக்கவில்லை மார்க்ஸ். எதிர்காலத்தைப்பற்றி தீர்மானத்தில் அவர் பின்வருமாறு கூறுகிறார்.

" அவைகளுடைய பழைய கடமைகளுடன், தொழிலாளி வர்க்கத்தை அதனுடைய பரிபூரண விமோசனத்துக்காக, ஸ்தாபனரீதியாக திரட்டும் கேந்திரங்களாக தொழிற்சங்கங்கள் உணர்ச்சிபூர்வமாக வேலைசெய்யப் பயிற்சிபெறவேண்டும். இந்த லட்சியத்தையுடைய ஒவ்வொரு சமூக அரசியல் இயக்கத்தையும் அவைகள் ஆதரிக்கவேண்டும். தொழிலாளி வர்க்கம் முழுவதற்கும் தாங்களே பிரதிநிதிகள் என்ற போதம்பெற்று, அதன்படி நடந்து சங்கத்துக்கு வெளியேயுள்ள சகல தொழிலாளிகளையும் சங்கத்துடன் திரட்டுவதில் தொழிற்சங்கங்கள் வெற்றிபெறவேண்டும். கேவலமான கூலிபெறும் தொழில்களில் வேலைசெய்யும் தொழிலாளிகளின் நலன்களை சிரத்தையுடன் பாதுகாக்கவேண்டும். உதாரணமாக, மோசமான சுற்றுச்சார்பிலிருக்கிறபடியால், எதிர்க்கும் சக்தியைக்கூட இழந்து நிற்கும் பண்ணை வேலைக்காரர்களின் நலன்களை பாதுகாக்கவேண்டும். தங்களுடைய முயற்சிகள் குறுகிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல, சுயநலம் கருதுவதல்ல—தங்கள் முயற்சிகள் ஒடுக்கப்பட்ட பாமர மக்களின் விமோசனத்தை நோக்கமாகக் கொண்டவை—என்று தொழிற்சங்கங்கள் உலகம் முழுவதும் புரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும்."

தொழிலாளிவர்க்கத்தை ஸ்தாபன ரீதியாகத் திரட்டும் கேந்திரங்கள் என்று தொழிற்சங்கங்களின் முக்கியத்துவத்தைமார்க்ஸ் மீண்டும் வற்புறுத்துகிறார். தொழிற்சங்கங்கள் முன்னுள்ள கடமைகளை குறித்துக்கொள்வது மிகவும் முக்கியமானது. அவைகளாவன :—தொழிலாளிவர்க்கத்தின் பரிபூர்ண விமோசனத்துக்கான போராட்டம்; புராலிடேரியட்டின் ஒவ்வொரு சமூக அரசியல் இயக்கத்துக்கும் ஆதரவு ; சகல தொழிலாளர்களையும் சங்கத்தில்

திரட்டுதல். 1886லேயே, விவசாயத் தொழிலாளிகள் முதலிய குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர் நலன்களை தொழிற்சங்கங்கள் பாதுகாக்கவேண்டியதின் முக்கியத்துவத்தை மார்க்ஸ் வற்புறுத்திவிட்டார். தொழிற்சங்கங்கள் குறுகிய மனோபாவத்தில் வேலை செய்யக்கூடாதென்று கூறுகிறார். "அடக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்களை விடுதலை செய்வதை லட்சியமாகக் கொண்ட" நடவடிக்கைகளில் தொழிற்சங்கங்கள் ஈடுபடவேண்டுமென்கிறார் மார்க்ஸ். இந்த தீர்மானம் 69 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டது. (இப்பொழுது, 80 வருஷங்களாகிவிட்டன. மொ-ர்.) ஆனால் இந்த தீர்மானம் பழசாகிவிட்டதென்று சொல்ல முடியுமா? இன்று, முதலாளித்துவ நாடுகளில், இவைகள் தொழிற்சங்களின் கடமைகள் இல்லை என்று சொல்லமுடியுமா? முடியாது. அவருக்கே பிரத்தியேகமான தெளிவுடன், தேர்ச்சியுடன், மார்க்ஸ் முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிற்சங்கங்களின் அடிப்படையான கடமைகளை இதில் சித்தரித்துவிட்டார். ஆனால் மார்க்ஸ் இத்துடன் நிறுத்திக்கொள்ளவில்லை.

பொருளாதாரத்துக்கும் அரசியலுக்கும் உள்ள உறவென்ன? இந்த பிரச்னை மார்க்ஸையும் அவர் தலைமைதாங்கிய முதலாவது இன்டர்நேஷனலையும் எதிர்நோக்கியது. இந்த உறவைப்பற்றி பாக்குனினிஸ்டுகள்*, லஸ்ஸாலே'* பின்பற்றுபவர்கள், தொழிற்சங்கவாதிகள் முதலியோரை எதிர்த்து, தன் கருத்தை மார்க்ஸ் ஸ்தாபிக்கவேண்டியதாயிற்று. அதனால்தான் இந்த பிரச்னையை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார் மார்க்ஸ். 1871-ல் லண்டனில்

---

* பாக்குனினிஸ்டுகள் : இத்தாலி நாட்டைச் சேர்ந்த பாக்குனின் என்பவரை பின்பற்றுபவர்கள். இவர்கள் அரசியலையும் பொருளாதாரத்தையும் பிரித்து, பேதப்படுத்துவார்கள்; அவைகளுக்குள் முரண் இருப்பது போலக்காட்டுவார்கள். புராலிடேரியட்டின் வர்க்கப் போராட்டத்தை எதிர்ப்பதே இவர்கள் அரசியல். அடுத்த அத்தியாயத்தில், இவர்களைப் பற்றி ஆசிரியர் விரிவாக ஆராய்கிறார்.

* லஸ்ஸால் : ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் பங்கெடுத்தவர். சங்க உரிமைகளே வேண்டாமென்று வாதாடினார். ஸ்ட்ரைக்குகளால் பயனில்லை என்று பேரறிவு பகன்றார். தொழிற் சங்கங்களின் அவசியத்தையே மறுத்தார். மூன்றாவது அத்தியாயத்தில் இவரைப்பற்றி விரிவாகக் காணலாம்.

நடந்த முதலாவது இண்டர் நாஷனலின் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அவர் தீர்மானம் இந்த உறவை எடுத்துக் கூறுகிறது:—

> "விமோசனத்துக்காக தொழிலாளிகள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் பலாத்காரமாக அடக்கி நசுக்கி, வர்க்கபாகுபாடுகளேயும் அதன் விளைவான சொத்துரிமையுள்ள வர்க்கங்களுக்குள்ள அரசியல் ஆதிக்கத்தையும் மிருக பலத்தின்மூலம் பாதுகாக்க கடிவாளமிழந்த பிற்போக்குத்தனம் முயற்சிக்கிறது.
>
> சொத்துரிமை வர்க்கங்களின் இந்த கூட்டு சக்தியை எதிர்த்து தொழிலாளிவர்க்கம் ஒரே வர்க்கமாக நிற்கவேண்டுமாளுல், சொத்துரிமைக்காரர்களில் பழைய கட்சிகளுடன் தொடர்பில்லாத, அந்த கட்சிகளே எதிர்க்கக்கூடிய, புதிய அரசியல் கட்சியாக தொழிலாளிவர்க்கம் தன்னைத்தானே ஸ்தாபித்துக்கொள்ளவேண்டும்.
>
> தொழிலாளிவர்க்கம் ஒரு அரசியல் கட்சியாக உருவெடுப்பது, சமூகப் புரட்சியின் வெற்றிக்கும், அதன் இறுதி நோக்கமான வர்க்கபேதங்களே ஒழிப்பதற்கும், அத்தியாவசியம்.
>
> தன் பொருளாதாரப் போராட்டங்கள் மூலம் தொழிலாளி வர்க்கம் ஒன்றுபடுத்தியிருக்கும் சக்தியே நிலச்சுவான்தார்களேயும் முதலாளிகளேயும் எதிர்த்து அரசியல் அதிகாரத்துக்காக அது நடத்தும் போராட்டங்களுக்கு ஆயுதமாக பயன்படவேண்டும்.
>
> சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன அங்கத்தினர்களுக்கு மகாநாடு நினைவூட்டுவதாவது:—தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட நிலேயில், அதன் பொருளாதார இயக்கமும் அரசியல் நடவடிக்கையும் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டு, ஐக்கியமாகிவிடுகின்றன."

காரல்மார்க்ஸின் அரசியல் இலக்கிய சம்பத்து ததும்பி நிற்கும் பகுதிகளில் ஒன்று இந்த தீர்மானம். சுரண்டல் முறையை எதிர்த்து தொழிலாளிவர்க்கம் நடத்தும்போராட்டத்தில் தொழிற்சங்கங்கள் பயன்படவேண்டுமென்ற கருத்து மீண்டும் வலிபெறுகிறது. அரசியல் வேறு, பொருளாதாரம் வேறு என்று பேசி, அரசியல் போராட்டத்தையும் பொருளாதாரப் போராட்டத்தையும் பிரித்துக்காட்டி, அவற்றுக்குள் முரண்காட்டி, ஒன்

றின் மீதொன்று மோதவிடும் பாக்குனினிஸ்டுகளின் முயற்சிக ளுக்கு சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் கம்பீரமாக பதிலளிக் கிறது—தொழிலாளி வர்க்கத்தின் போர்த் திட்டத்தில், அதன் பொருளாதார இயக்கமும் அரசியல் நடிவடிக்கையும் பிரிக்கமுடி யாதபடி பின்னிக்கிடக்கின்றன என்ற பிரகடனமே அந்த பதில்.

இரண்டு மாதங்களுக்குப்பின் போல்ட் (Bolte) என்ற தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் இதே பிரச்னையை எழுப்புகிறார்; புராலிடேரியட்டின் வர்க்கப் போராட்டத்தில், பொருளாதாரப் போராட்டங்களின் பங்கு என்ன என்று விளக் குகிறார் :—

"தொழிலாளிவர்க்கத்தின் அரசியல் இயக்கம் தொழிலாளி வர்க்கத்துக்கு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதையே தன் இறுதிலட்சியமாகக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னால் தொழிலாளிவர்க்கத்துக்கு ஓரளவு வளர்ச்சிபெற்ற ஸ்தாபனம் அவசியம். பொருளாதாரப் போராட்டங்களில்தான் இந்த ஸ்தா பனம் வளர்கிறது.

ஆனால், வர்க்க ரீதியில், ஆளும் வர்க்கத்தை எதிர்த்து தொழி லாளிவர்க்கம் நடத்தும் ஒவ்வொரு இயக்கமும், வெளி நிர்ப்பந் தத்தின்மூலம் ஆளும் வர்க்கத்தை கட்டாயப்படுத்த முயற்சிக்கும் தொழிலாளிவர்க்கத்தின் ஒவ்வொரு இயக்கமும் ஒரு அரசியல் இயக்கம்தான். உதாரணமாக, ஒரு தனிப்பட்ட முதலாளியிட மிருந்து ஒரு தொழிலிலோ தொழிற்சாலையிலோ, ஸ்ட்ரைக் முத லிய போராட்டங்கள் மூலம் வேலைநேரத்தை குறைக்கும்படி செய்தால், இது ஒரு பரிசுத்தமான பொருளாதார இயக்கம், ஆனால், 8 மணி நேரவேலையை சட்டமாக்கவேண்டுமென்றோ, வேறு ஏதாவது சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்றோ, ஒரு இயக்கம் நடத்தினால் அது அரசியல் இயக்கமாகிறது.

இவ்விதமாக, தொழிலாளிகளின் தனித்தனியான பொருளா தார இயக்கங்களிலிருந்து அரசியல் இயக்கம் வளர்கிறது. அதா வது சமூகத்திலுள்ள சகல தொழிலாளிகளுக்கும் பொதுவான லட்சியங்களுக்காக வர்க்க ரீதியில் தொழிலாளிவர்க்கம் இயக் கத்தை நடத்துகிறது. இந்த இயக்கங்களை நடத்த, ஸ்தாபனம் இருந்திருக்கவேண்டும். இவை மூலம் ஸ்தாபனம் மேலும் பண் படுகிறது."

"இதற்குமுன்னால் தொழிலாளி வர்க்கத்துக்கு ஸ்தாபன மிரு க்கவேண்டும்" என்று மார்க்ஸ் கூறுகிறார். பொருளாதார

இயக்கத்தை அரசியல் இயக்கத்துடன் இணைத்து, ஒரு இயக்கம் இன்னொன்றாக வளரும் முறையை புட்டு புட்டுக் காட்டுகிறார். அதாவது, மார்க்ஸ் எதை தெட்டத்தெளிவாகச் சொல்லி யிருக்கிறாரோ, பொருளாதாரக் கோரிக்கை இயக்கமும் அரசியல் இயக்கமும் பிரிக்கமுடியாது பின்னிக்கிடக்கிற தென்ற இந்த உண்மையைத்தான், அவர் இறந்தபின், உலக ரீதியில், சர்வதேச சீர்திருத்த வாதம் மூடி மறைத்தது; திரித்துக்கூறியது.

பொருளாதாரப் போராட்டத்தின் முக்யத்துவம் என்ன? என்ற கேள்விக்கு பதிலளித்தால் போதாது, தொழிலாளிவர்க்கத்தின் பொருளாதார ஸ்தபானத்துக்கும், அரசியல் ஸ்தாபனத்திற்கும் உள்ள உறவு என்ன? என்ற கேள்விகளுக்கும் பதில்வேண்டும். 1872ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஹேக் நகரத்தில் நடந்த முதலாவது இன்டர் நேஷனலின் காங்கிரஸ் தீர்மானம் இதை விளக்குகிறது. "புராலிடேரியட்டின் அரசியல் நடவடிக்கை" பற்றி மார்க்ஸ் யோசனையின்பேரில் ஹேக் மகாநாடு நிறைவேற்றிய திட்டம் அது. சௌகரியக்கார வர்க்கங்களின் கூட்டு சக்தியை எதிர்த்து போராடுவதற்கு, ஆதீனக்காரர்களின் பழைய அரசியல் கட்சிகளுக்கு எதிராக, தனது சொந்த அரசியல் கட்சியை ஸ்தாபித்த பின்தான், புராலிடேரியட் வர்க்க ரீதியாக நடவடிக்கை எடுக்கமுடியுமென்று அந்த தீர்மானத்தில் நாம் படிக்கிறோம். சமூகப் புரட்சி வெற்றியடையவும், அதன் இறுதிலட்சியமான வர்க்கபேதம் ஒழியவும், புராலிடேரியட் தன்னை ஒரே அரசியல் கட்சியாக ஸ்தாபித்துக்கொள்வது அவசியம் என்று தீர்மானம் கூறுகிறது:

"பொருளாதாரப் போராட்டங்களில் திரண்டிருக்கும் தொழிலாளர் சக்திகள் தொழிலாளி வர்க்கத்தை சுரண்டுபவர்களை எதிர்த்து தொழிலாளிவர்க்கம் நடத்தும் அரசியல் போராட்டத்துக்கு பயன்படவேண்டும். நிலச்சுவான்தார்களும் முதலாளிகளும் தங்கள் பொருளாதார ஏகபோக உரிமைகளை பாதுகாத்துக்கொள்ளவும், தொழிலாளி வர்க்கத்தை அடிமைப்படுத்தவும், தங்கள் அரசியல் அதிகாரத்தை எப்போதும் உபயோகித்து வருவதால், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது புராலிடேரியட்டின் மகத்தான கடமையாகிறது."

ஹேக் காங்கிரஸ் முடிந்தவுடன், அதன் தீர்மானங்களின் முக்கியத்துவத்தை விளக்கி மார்க்ஸ் ஒரு பிரசங்கம் செய்தார். எது ஹேக் மகாநாட்டின் முக்கியமான தீர்மானம் என்று மார்க்ஸ் கருதினார்?

1. பழைய சமூக முறையை எதிர்த்து, அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் தொழிலாளிவர்க்கம் போராட வேண்டியதின் அவசியத்தை ஹேக் காங்கிரஸ் பிரகடனப்படுத்தியது.

2. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில், பலாத்காரம் புரட்சியின் கருவியாக இருந்துதீரும். **தொழிலாளிவர்க்கத்தின் ஆட்சி ஏற்படவேண்டுமானுல், தொழிலாளர்கள் பலாத்காரத்தை மேற்கொண்டுதானுகவேண்டும்.**

மீண்டும் பார்க்கிறேம்—தொழிலாளிவர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தில் பொருளாதாரப் போராட்டத்தின் முக்கியத்துவம் தெளிவாக வரையறுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறேம். தொழிலாளிவர்க்கம் தன்னை சுரண்டுபவர்களின் அரசியல் அதிகாரத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் தொழிற்சங்கங்களைக் கருவிகளாக பயன்படுத்தவேண்டும்.

பொதுஜனங்களின் இதயத் துடிப்புகளை உணர்ந்த கலைஞர் காரல் மார்க்ஸ். ஒவ்வொரு விஷயும் அவர்கள் சார்பில் பேச அவருக்கு தெரியும். தொழிலாளர்களின் வளர்ச்சியை மனதில் கொண்டு, அவர்களுக்கு புரியும்படி, உதவக்கூடிய முறையில் பேசுவார் மார்க்ஸ். 1847-ல் அவர் ஆக்கிய கம்யூனிஸ்ட் அறிக்கையையும்* (Communist Manifesto) அதற்கு 17 வருஷங்களுக்குப் பின் எழுதிய முதல் இன்டர்நேஷனலின் ஆரம்பவிழா பிரசங்கத்தையும் (Inaugral address of the International) ஒத்திட்டுப் பார்த்தால் இது விளங்கும். முதல் இன்டர் நேஷனலின் ஆரம்பவிழாப் பிரசங்கம் ஐக்கிய முன்னணிக்கு ஒரு அறைகூவல்; கம்யூனிஸத்துக்குப் பக்குவம் அடையாத தொழிலாளர் பகுதிகளையும் ஸ்தாபனங்களையும்கூட ஒன்று திரட்டும் நோக்கத்தைக்கொண்ட பிரகடனம் அது. அந்த ஆரம்ப விழாப் பிரசங்கம் முழுவதிலும் கம்யூனிஸம் என்ற வார்த்தை ஓரிடத்தில்கூட தென்படவில்லை. எனினும், அது முழுக்க முழுக்க ஒரு கம்யூனிஸ்ட் பிரகடனம்; கம்யூனிஸ்ட் கண்ணோட்டத்துக்கு சிறந்த உதாரணம். அமெரிக்க தொழிற்சங்க

---

* கம்யூனிஸ்ட் அறிக்கை : தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியின் திட்டத்தைக் கூறும் அறிக்கை; மார்க்ஸும் எங்கல்ஸும் தயாரித்தது. விஞ்ஞான சோஷலிஸத்தின் கருத்துகளை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சரித்திர பிரசித்தி பெற்ற பிரகடனம்.

இயக்கத்தின் சரித்திராசிரியர் ஜான்காமன்ஸ் என்பவர் "ஆரம்ப விழாப் பிரசங்கம் ஒரு தொழிற்சங்க சாசனம்; கம்யூனிஸ்ட் பிரகடனமல்ல" என்று எழுதினார். இந்த விமர்சனம் தவறானது. ஆரம்பவிழா பிரசங்கத்தின் தன்மையை விளக்குவது அதன் உருவமா? அதிலுள்ள வார்த்தைகளா? இல்லை; அதன் கருத்துகள்; அது வகுக்கும் கொள்கைகள். வாஸ்தவம்; ஆரம்ப விழாப் பிரசங்கத்தில் தொழிலாளர்களின் பொருளாதார நிலைமை, தொழிலாளர் சட்டம், இன்னும் பல பிரச்னைகளை பெரிய பிரச்னைகளென்று வற்புறுத்துகிறார் மார்க்ஸ். ஆனால் இதே பிரகடனத்தில் "அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது தொழிலாளி வர்க்கத்தின் மகத்தான கடமை" என்பதையும் மார்க்ஸ் வற்புறுத்துகிறார். அரசியல் கட்சி பிரச்னையையும் அவர் பரிசீலனை செய்கிறார்—விசேஷ முறையில் பரிசீலனை செய்கிறார். மார்க்ஸ் எழுதியதாவது:—

"வெற்றியடைவதற்கான அம்சம் ஒன்று அவர்களிடம் இருக்கிறது: அதுதான் எண்ணிக்கை. ஆனால் ஒன்றுபட்டு நின்றால்தான், அறிவின் தலைமை பெற்றிருந்தால்தான், எண்ணிக்கை எடை நிற்கமுடியும். பல நாடுகளிலுள்ள பாட்டாளிகளிடையே இருக்கவேண்டிய சகோதர உறவு உதாசீனம் செய்யப்பட்டால், தொழிலாளர்கள் தங்கள் விமோசனத்துக்காக நடத்தும் போராட்டங்களில் ஒருவரோடொருவர் இணைந்து உறுதியாக நிற்க வேண்டுமென்ற போதம் புறக்கணிக்கப்பட்டால், அவர்களுடைய பிரயத்தனங்கள் ஒன்றோடொன்று இணையாது, தனித்தனியாய் சிதறுண்டு நிற்கும்; அந்த பிரயத்தனங்கள் அனைத்தும் பொதுவான தோல்வியில் கொண்டுவரும்—கடந்தகால அனுபவம் கற்றுத் தரும் படிப்பினை இது".

இது மார்க்ஸின் அசாதாரணமான வாக்கியம். தொழிற்சங்கத்தில் திரட்டப்பட்டிருக்கும் தொழிலாளர்கள், அரசியல் கட்சியில் திரண்டுநிற்கும் தொழிலாளி மக்கள், இண்டர்நேஷனலில் திரண்டுநிற்கும் தொழிலாளி மக்கள் என்று மூவகை கண்ணோட்டங்களில் சங்கத்தில் சேர்ந்த தொழிலாளி மக்களை காண்கிறார் மார்க்ஸ்.

"அறிவின் தலைமையை"ப்பற்றிய மார்க்ஸ் வாக்கியமும் அசாதாரணமானது. அவர் எந்த அறிவைப்பற்றிக் குறிப்பிடுகிறார்? சர்வகலாசாலை விஞ்ஞானத்தையா? கல்லூரி பேராசிரியர்களையா? ஆராய்ச்சி நிபுணர்களையா? இல்லை. இங்கு அறிவு

என்பது கம்யூனிஸத்துக்கு மாறு பெயர். இத்தகைய வார்த்தைகளையும் வாக்கியங்களையும் மார்க்ஸ் காரணத்துடன்தான் உபயோகித்தார். பொதுமக்களின் மத்தியிலே மேலும் தன் கருத்துகள் ஆழமாக ஊடுருவவேண்டுமென்றே அவற்றை உபயோகித்தார்.

"ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட சக்திகளை ஒரு மாபெரும் சேனையில் திரட்டி ஐக்கியப்படுத்துவதுதான் அதன் (முதல் இன்டர்நேஷனலின்) நோக்கம். பிரிட்டிஷ் தொழிற்சங்கங்கள், பிரெஞ்சு, பெல்ஜியன், இத்தாலிய, ஸ்பானிஷ் *பிரௌதனிஸ்டுகள், ஜர்மன் லாஸ்ஸலியன்கள் ஆகியோர் முகத்தில் கதவைச் சாத்தி தாளிடாத திட்டத்தைத்தான் இண்டர்நேஷனல் வகுக்கவேண்டியதாயிற்று" என்று எங்கல்ஸ் எழுதினார். (கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு முன்னுரை 1888).

"தொழிலாளர் இயக்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நிலைமைக்கு ஏற்றவாறு, நமது அபிப்ராயத்தை அது ஒப்புக்கொள்ளக்கூடிய ரூபத்தில், பிரச்னைகளை விளக்குவது வெகு கடினமாயிருந்தது......மறுமலர்ச்சியடைந்த இயக்கம் பழைய தைரிய மொழிகளை அனுமதிக்க, கொஞ்சகாலம் செல்லவேண்டும்" என்று கார்ல் மார்க்ஸ் எழுதினார்.

ஒரு விஷயத்தை உஷாராய் கவனிக்கவேண்டும்—அபிப்பிராயங்களை எடுத்துக்கூறும் முறையைத்தான் மார்க்ஸ் இங்கு குறிப்பிடுகிறார்; அபிப்பிராயங்களின் சாராம்சத்தை அல்ல. கொள்கை பற்றி, கம்யூனிஸ்ட் அபிப்பிராயங்களின் சாரத்தைப்பற்றி பிரஸ்தாபம் வந்தால், மார்க்ஸ் தயவுதாட்சணியம் காண்பிக்கமாட்டார்; தணிந்து கொடுக்கமாட்டார்; இம்மியளவு கூடவிட்டுக் கொடுக்கமாட்டார். ஆனால் சொல்லும்முறைதான், கருத்தின் ரூபம்தான் பிரச்னை என்றால், வளைந்து நெளிந்துகொடுப்பார்; ஒரே கருத்தை பல முறைகளில் எடுத்துக்கூறும் திறமையை பிரதிநிதித்துவப் படுத்துவார். கம்யூனிஸ்ட் அறிக்கைக்குப்பின் மிகச் சிறந்த பிரசுரமான ஆரம்பவிழா பிரசங்கத்தின் "தொழிற்சங்க பாஷை"க்கு காரணம் இப்பொழுது விளங்கும். இந்த விதமாக, தொழிலாளர்கள் இயக்கத்துக்கு கம்யூனிஸ்ட் உணர்வூட்டவேண்டு

* பிரௌதனிஸ்டுகள்: இவர்கள் தொழிற்சங்க வாதிகள்; பிரௌதன் என்பவரை பின் பற்றுபவர்கள். இவரைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் காணலாம். (மொ-ர்.)

மென்ற தனியொரு நோக்கத்தை உடைய மார்க்ஸ் பொதுமக்களை அணுகும் முறைகளையும் உருவங்களையும் மாற்றிக்கொண்டார். இயக்கத்தின் தரத்தையும், தொழிலாளிவர்க்க ஸ்தாபனங்களின் வளர்ச்சியையும் பொறுத்து, அவர்முறைகளை மாற்றிக்கொண்டார்.

பொருளாதார, அரசியல் போராட்டங்களின் பரஸ்பர உறவை சரியாக விளக்குவதென்றால், தொழிற்சங்கங்களுக்கும் கட்சிக்குமுள்ள உறவை சரியாக விளக்கவேண்டும். புராலிடேரியட்டின் பொருளாதாரப் போராட்டங்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் முக்கியத்துவம் அளித்தபோதிலும், மார்க்ஸ் பொருளாதாரத்துக்கு முன்னால் அரசியல்தான் என்று எப்பொழுதும் வற்புறுத்தினார்—அவர் வற்புறுத்தியதைத்தான் * போல்ஷவிக் கட்சியும் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலும்** தங்கள் வேலைகளின் அடிப்படையாக்கிக்கொண்டன.

பொருளாதாரத்துக்குமுன், அரசியலுக்கு முதல் முக்கியத்துவம் என்றால் என்ன அர்த்தம்? தொழிற்சங்கங்களை அரசியல் கட்சியாக்கிவிடுவதா? தொழிற்சங்கங்கள் ஒரு பரிசுத்தமான கட்சித் திட்டத்தை ஏற்றுக்கொள்வதா? தொழிற்சங்கங்களுக்கும் கட்சிக்குமுள்ள வேறுபாடுகளை ஒழித்துவிடுவதா? இல்லை. இதுவல்ல மார்க்ஸ் கூறிய கூற்று. தொழிற்சங்கங்கள் பாட்டாளி மக்களின் ஸ்தாபன கேந்திரங்களாக விளங்கவேண்டுமென்று கூறி, அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் மார்க்ஸ்

---

* போல்ஷ்விக் கட்சி: ஸோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட்கட்சி. சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சிக்கு உதாரணமாய் விளங்கும் கட்சி.

** கம்யூனிஸ்ட் இண்டர்நேஷனல்: இரண்டாவது இண்டர்நேஷனலின் தலைமைகள் முதல் மகா யுத்தத்தில், தொழிலாளி வர்க்கத்துக்கு துரோகம் செய்தன. லெனின் தலைமையில் உருவான போல்ஷிவிக் கட்சி மாத்திரமே வர்க்கப் போராட்டப் பாதையிலிருந்து வழுவாது நின்றது, புரட்சி நடத்தியது. அதன் ஆதர்சத்தால் உந்தப் பட்டு, இதர நாடுகளிலுள்ள உண்மையான மார்க்ஸிஸ்டுகள் சேர்ந்து, கம்யூனிஸ்ட் இண்டர்நேஷனலை ஸ்தாபித்தனர். லெனின்-ஸ்டாலின் தலைமையில் தோன்றிய இந்த ஸ்தாபனம் தான், உலகம் முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சிகள் பக்குவமடைய பேருதவி செய்தது. ஒவ்வொரு நாட்டிலும் கம்யூனிட் கட்சிக்கு வயது வந்த பின், அவசியம் இல்லாததால் 1943-ல் இது கலைக்கப்பட்டது. (மொ-ர்.)

தொழிற்சங்கம் வேறு; கட்சி வேறு; இரண்டையும் ஒன்ருக் குவதை எதிர்த்துப் போராடினர் மார்க்ஸ். புராலிடேரியட்டின் அரசியல், பொருளாதார ஸ்தாபனங்கள் இரண்டுக்கும் புராலிடேரியட்டின் பொருளாதார விமோசனம் என்ற ஒரே நோக்கம் தான் இருக்கமுடியும் என்பது அவர் நம்பிக்கை. ஆனால் ஒவ்வொன்றும் தனக்கு பிரத்யேகமான முறைகளில் இந்த லட்சியத் துக்காகப் போராடுகின்றன. பொருளாதாரத்தைவிட அரசிய லுக்கு அதிக முக்கியத்துவம் எப்படி அளித்தார்? தொழிற்சங்கங் களைப் பொறுத்தவரை, அவை ஒவ்வொன்றின் பிரத்தியேக கடமைகளைவிட, வர்க்கரீதியான அரசியல் கடமைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார். இரண்டாவது, புராலிடேரியட்டின் அரசியல் கட்சி பொருளாதார கடமைகளை வகுத்து, தொழிற்சங் கங்கள் ஸ்தாபனத்துக்கே தலைமைதாங்கவேண்டுமென்ருர்.

# இரண்டாவது அத்தியாயம்

# பிரௌதனிஸத்தையும் பாக்குனினிஸத்தையும் எதிர்த்து

கொள்கைப் போராட்டம், அரசியல் போராட்டம் என்ற உலைக்களத்தில் மார்க்ஸ் தன் உலக கண்ணோட்டத்தையும் போர்முறைகளையும் வார்த்தெடுத்தார். அதிகமாக பரவிக் கிடந்த பிரௌதனின் கொள்கைகளை முக்கியமாக அவர் எதிர்த்துப்போராடவேண்டியிருந்தது. பிற்போக்கான கொள்கைகளும் வீர மொழிகளும் கலந்துநிற்கும் நடுத்தரவர்க்க சோஷியலிஸ்ட் ரகத்தை சேர்ந்தவர் பிரௌதன். சாமர்த்தியம் மிகுந்த பிரசாரகர், "தலைமுதல் கால்வரை நடுத்தர வர்க்கத்தின் தத்துவாசிரியர், பொருளாதார நிபுணர்" (மார்க்ஸ்).

"சொத்துரிமை திருட்டுத்தனம்" என்ற சூத்திரத்தைக் கொண்டு பூர்ஷுவாக்களை பிரௌதன் குற்றம் சாட்டினார்; தாக்கினார். தொழிலாளிவர்க்கத்தின் கொள்கையை வகுக்கும் குருவாக தன்னைத்தானே பாவித்துக்கொண்டார் பிரௌதன். வறுமையின் தத்துவத்தைப்பற்றி தைரியமாக வாதிக்கத் துவங்கினார். ஆனால் தத்துவமும் கொள்கையும் பிரௌதனுக்கு பலவீனமான சங்கதிகள். பூர்ஷுவா வர்க்கத்தின் விஞ்ஞானம் கிழித்த கோட்டை தாண்டமாட்டார் அவர். அதனால்தான், மார்க்ஸ் பிரௌதனிஸத்தை வன்மையாகத் தாக்கினார். அரிய சாதனையென்ற எண்ணத்தில், பிரௌதன் ஒரு புத்தகம் எழுதினார். அதன்பெயர் "வறுமையின் தத்துவம்." சமூக வளர்ச்சிக்கான சட்ட திட்டங்களை இதில் ஸ்தாபிக்க விரும்பினார். இந்த புத்தகத்தில் அவர் வெளியிட்ட கீழ்க்கண்ட கருத்து நமது கவனத்துக்கு உரியது:

"ஒவ்வொரு கூலி உயர்வின் விளைவு என்ன தெரியுமா? கோதுமை, சாராயம் முதலிய சாமான்களின் விலையும் உயர்ந்துகொண்டேபோகும். ஏனென்றால், கூலி என்பது என்ன? கோதுமை முதலிய சாமான்களின் அடக்கவிலை—உண்மையான விலை—கூலி. இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆராய்வோம். செல்வத்தின் ஒரு விகிதம் கூலி. ஒவ்வொரு தினமும் இந்த

கூலியை வாங்கும் தொழிலாளிகள் அதற்கான உற்பத்தி செய்கிருர்கள். கூலியை இரட்டிப்பாக்கினல், என்ன அர்த்தம்? ஒவ்வொரு உற்பத்தியாளனுக்கும் அவன் உற்பத்திசெய்வதைவிட அதிகமாகக் கொடுப்பது என்று அர்த்தம். இது முன்னுக்குப் பின் முரணனது. ஒருசில தொழில்களில் மாத்திரம் கூலி உயர்வு ஏற்பட்டாலும், பொதுவான ஆட்டம் கொடுக்கும். கிராக்கி ஏற்படும். கூலி உயர்வுபெற்றுத் தரும் ஸ்ட்ரைக்குகளால், பண்ட கிராக்கி அதிகமாகாமல் போகாது. இரண்டும் இரண்டும் நான்கு என்பதைப்போல இது நிச்சயமான சமாச்சாரம்."

பிரௌதனிஸ்டுகளின் இந்த அபூர்வமான அபத்த வாதங்களை மேற்கோள் கொடுத்துவிட்டு, "இரண்டும் இரண்டும் நாலு என்பதைத் தவிர மீதி வாதங்கள் அத்தனையையும் மறுக்கிருேம்" என்று காரமாக முத்தாப்பு வைக்கிருர் மார்க்ஸ்.

மேற்சொன்ன பிரௌதன் கருத்துக்களின் அரசியல் அர்த்தம் என்ன? கூலி உயர்வுக்காகப் போராடாமல், தொழிலாளர்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்காது! கூலி உயர்ந்தால், அதே வீதாச்சாரப்படி உணவுப் பொருள்களின் விலையும் உயரும்! அப்படியானல், தொழிலாளர்களின் போராட்டமெல்லாம் விழலுக்கிறைத்த நீர்தானே!

இந்த பிற்போக்கான தத்துவத்தின் சாராம்சத்தை உடனுக்குடன் உணர்ந்தார் மார்க்ஸ். அவருக்கே பிரத்தியேகமான உத்வேகத்துடன், இந்த அனர்க்கிஸ்ட்* ஞானியின் முதலாளி வாதங்

---

* அனர்க்கிஸ்டுகள்: அரசாங்கமே சமூக தீமைகளுக்கு காரணமென்பது அனர்க்கிஸ்ட் சித்தாந்தம். அரசாங்கம் (சிறை, கோர்டு போலீஸ், ராணுவம், நிர்வாகம்) கூடவே கூடாது என்பது அவர்கள் கோஷம்

இது தவறு. அரசாங்கம் ஆளும் வர்க்கத்தின் அரண். புராலிடேரியட்டின் புரட்சி வெற்றியடைந்தால், தோற்கடிக்கப்பட்ட பண மூட்டைகள் எதிர் புரட்சி செய்வதைத் தடுக்க, தொழிலாளி வர்க்கமும் பொதுமக்களும் புதிய அரசாங்கத்தை கட்ட வேண்டும். இது பொது மக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இது தான் மார்க்ஸியத்தின் போதனை. அனர்க்கிஸ்ட்கண்ணேட்டத்தில் அரசாங்க யந்திரம் புலப்படுகிறது; ஆனல் அதன் பின்னுள்ள வர்க்கம் புலப்படவில்லை. (மொ-ர்)

களை தாக்கினர். ஆனால் பிரௌதன் இத்துடன் நிறுத்திக்கொள்ள வில்லை. அதே பாதையில் மேலும் சென்றார்! ஸ்ட்ரைக் இயக்கத்தை எதிர்த்து, உறுதியாகப் பேசினர்! "வறுமையின் தத்துவத்திலே"யே, கீழே யுள்ளதையும் நாம் படிக்கிறோம் :

"தொழிலாளிகளின் ஸ்ட்ரைக் சட்டவிரோதமானது. சட்ட திட்டங்கள் மாத்திரம் அப்படிச் சொல்லவில்லை. பொருளாதார அமைப்பும், ஸ்தாபிக்கப்பட்டுள்ள சமூக அமைப்பின் அவசியமும் அதைத்தான் வலியுறுத்துகிறது.......ஒவ்வொரு தொழிலாளியும் தன் உடலையும், கையையும் தன்னிஷ்டப்படி உபயோகிக்கலாம் என்று சொல்வதை அனுமதிக்கலாம். ஆனால் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஏகபோக உரிமைக்கு பலாத்காரம் விளைவிப்பதென்றால், அதைத்தான் சமூகம் ஒருக்காலும் அனுமதிக்காது."

பிரௌதனின் தத்துவ வறுமை எவ்வளவு பிர்ம்மாண்டமானது என்பதை உணர இது போதும். கூலி ஸ்தாபித விதிகளையும், பண்டங்களின் விலை நிர்ணயத்தையும், ஸ்தாபனத்தின் முக்கியத்துவத்தையும்—எல்லாவற்றையும் குழப்புகிறார் பிரௌதன். முதலாளிகளை எதிர்த்துக் கூட்டுப் போராட்டம் நடத்த தொழிலாளிகள் ஒன்றுபடுவதை அனுமதிக்க முடியாதென்று கருதினர் அவர். சங்கம் வைத்த தொழிலாளிகளை தண்டித்து வந்தவர்களின் கொள்கையை, முதலாளித்துவ நாடுகளின் பிற்போக்கான பிரதிநிதிகளின் கொள்கைகளை பிரௌதனும் ஆதரித்தார். தான் எதை சமாளிக்க வேண்டுமென்று மார்க்ஸுக்கு தெரியும். ஏன் இத்தகைய பிற்போக்கான கருத்துகள் பிரான்ஸில் நாகரீகமாக கருதப்படுகிறதென்று அவருக்குத் தெரியும். அதனல், அவருடைய பதிலில் மார்க்ஸ் பிரௌதனின் கொள்கை சூனியத்தையும் அவருடைய புராலிடேரியட் எதிர்ப்பு அரசியல் முடிவுகளையும் ஆராய்கிறார். பிரௌதனின் பிற்போக்கான அபத்தத்தைப்பற்றி, "தத்துவ வறுமை" (Poverty of Philosophy) என்ற புத்தகத்தில் மார்க்ஸ் பின்வருமாறு எழுதினர்.

"ஒருவருக் கொருவர் பரிச்சய மில்லாத ஒரு ஜனக்கூட்டத்தை யந்திரத்தொழில் ஓரிடத்தில் குவிக்கிறது. போட்டி அவர்கள் நலன்களை வெவ்வேறுக்குகின்றன. ஆனல் தங்கள் சம்பளத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற பொதுவான நலன் அவர்களை முதலாளியை எதிர்க்கும் நோக்கத்தில் ஒன்றுபடுத்துகிறது. இந்த ஒற்றுமைக்கு எப்பொழுதுமே இரு லட்சியங்கள்

உண்டு. தங்களுக்குள்ளிருக்கும் போட்டியை நீக்குவது; அதன் மூலம் முதலாளியை எதிர்த்து ஒன்ருய் நிற்பது. இந்த எதிர்ப்பின் முதல் நோக்கம் சம்பள பாதுகாப்பாக இருந்தாலும், முதலாளிகள் அடக்குமுறையை அதிகரிக்க, அதிகரிக்க தனித்தனியாய் நின்ற தொழிற் சங்கங்கள் கோஷ்டி கோஷ்டியாய் சேர்ந்து இடைவிடாது ஒன்றுபட்டு நிற்கும் முதலாளித்வத்தின் தாக்குதலை எதிர்க்கிறது. அவர்களுக்கு சம்பள பாதுகாப்பைவிட சங்க பாதுகாப்பு முக்கியமாக ஆகின்றது. இது நூற்றுக்கு நூறு உண்மையாய் இருப்பதால்தான், சங்கங்கள் சம்பளப் பாதுகாப்புக்காக ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறதென்று கருதிய இங்கிலீஷ் பொருளாதார நிபுணர்கள் தொழிலாளர்கள் சம்பளத்தின் பெரும்பகுதியை தங்கள் சங்கங்களுக்கும், அவற்றின் நடவடிக்கைகளுக்கும் தியாகம் செய்வதைக் கண்டு பிரமித்து நின்றனர். இந்தப் போராட்டத்தில்—இந்த உண்மையான வர்க்கப் போராட்டத்தில்—எதிர்கால போராட்டத்துக்கு அவசியமான அம்சங்கள் அனைத்தும் ஒன்றுபடுத்தப்படுகின்றன; அவை வளர்ச்சி யடைகின்றன. இந்த கட்டம் அணுகியவுடன், சங்கம் அரசியல் தன்மை பெறுகிறது."

இங்கு தனக்கு பிரத்தியேகமான தெளிவுடன் மார்க்ஸ் புராலிடேரியட்டின் பொருளாதாரப் போராட்டத்தின் (உண்மையில் அது வர்க்கப் போராட்டமே) முக்கியத்துவத்தை எழுப்புகிருர். இத்துடன் அவர் நிற்கவில்லை. பூர்ஷ்வாக்களும் தொழிலாளிவர்க்கமும் தத்தம் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் நடத்திய போராட்டங்களைப்பற்றி விதவிதமான விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் அனுஷ்டித்த பற்பல மனோபாவங்களை ஆராய்கிருர். ஸ்ட்ரைக் இயக்கத்தைப்பற்றி, பிரௌதன் அனுஷ்டித்த முதலாளி மனப்பான்மைக்கு மார்க்ஸ் பின்வருமாறு பதில் எழுதுகிருர் :—

"ஆரம்பகாலத்திலிருந்த கம்யூனிலிருந்து, பூர்ஷ்வா வர்க்கம் உருவானவரை, பூர்ஷ்வாக்கள் வாழ்ந்த பல்வேறு சரித்திர சகாப்தங்களைப் பற்றி ஏராளமான ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன.

ஆனல் ஸ்ட்ரைக்குகள், தொழிற்சங்கங்கள் முதலிய பல ரூபங்களில், நம் கண் முன்னல் தொழிலாளர்கள் தங்களை ஒரு வர்க்கமாக ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவதைத் தொகுப்பதென்ருல், சிலர் பயத்துக்கு இரையாகின்றனர்; இதரர் அதை அகம்

பாவத்துடன் பரிகசிக்கின்றனர். வர்க்கங்களின் விரோதங்களை அடிப்படையாகக்கொண்ட எந்த சமூகத்திலும் ஒரு ஒடுக்கப்பட்ட வர்க்கம் நிச்சயமாக இருந்தே தீரும். ஒடுக்கப்பட்ட வர்க்கம் விடுதலையடைய வேண்டுமானால், புதிய சமூகம் சிருஷ்டிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். ஒடுக்கப்பட்ட வர்க்கம் விடுதலை பெறுவதற்கு, அதுவரை சேகரிக்கப்பட்டுள்ள உற்பத்தி சாதனங்களும் அன்று அமுலிலிருக்கும் சமூக உறவுகளும் சேர்ந்து வாழ முடியாமல் இருப்பது அத்தியாவசியமாகும். புரட்சிகரமான வர்க்கமே சகல உற்பத்தி சாதனங்களிலும் மிகப் பெரிய உற்பத்தி சக்தியாகும். புரட்சிகரமான அம்சங்களை யெல்லாம் ஒரு வர்க்கமாகத் திரட்டமுடியுமென்றால், பழைய சமூகத்தில் வளரக்கூடிய அளவு உற்பத்திசக்திகள் பெருகிவிட்டதென்று அர்த்தம்." (தத்துவத்தின் வறுமை)

"பாரபட்சமற்றவர்களென்று சொல்லிக்கொள்ளும் பூர்ஷ்வா விஞ்ஞானிகள் பொருளாதார போராட்டத்தை மறைக்கவோ அல்லது மழுப்பவோ முயற்சி செய்வதை மார்க்ஸ் உணர்ந்தார். புராலிடேரியட்டின் பொருளாதார இயக்கத்தைப்பற்றி பூர்ஷ்வா விஞ்ஞானிகள் எதிர்ப்பு மனோபாவம் கொண்டிருப்பதை மார்க்ஸ் கண்டிக்கிறார். வாய் நிறையப் புரட்சி பேசும் பிரௌதன்போன்ற 'புரட்சிக்காரர்கள்' ஜீவாதாரமான கோரிக்கைகளுக்காக தொழிலாளிவர்க்கம் நடத்தும் போராட்டத்தை எவ்வளவு அகம்பாவமாக, ஏளனமாக, மதிப்பிடுகிறார்கள் என்பதையும் மார்க்ஸ் புரிந்து கொண்டார். புராலிடேரியட்டின் பொருளாதாரப் போராட்டத்தைக் கேலி செய்யும், கிண்டல் செய்யும் 'புரட்சிக்காரர்களை' இன்று நாம் பார்க்கவில்லையா?

பிரௌதனிஸத்தின் கருப்பொருள் என்ன? 1851ம் வருஷம் ஆகஸ்ட்மாதம் 21ம் தேதி, மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தில், எங்கல்ஸ் பின்வருமாறு கூறுகிறார்.

"பிரௌதன் எழுதியிருப்பதில் பாதியை நான் படித்துவிட்டேன். உங்கள் அபிப்பிராயத்தை அது பரிபூர்ணமாக ஊர்ஜிதப் படுத்துகிறது. பூர்ஷ்வாக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுப்பது, ஸெயிண்ட்ஸைமனைப்* பற்றி நினைவூட்டுவது, இன்னும் அவர் குறிப்பிடும் நூற்றுக்கணக்கான விஷயங்கள் எல்லாம் எதைக் காண்பிக்கிறது? யந்திரத் தொழில்வர்க்கங்களை—பூர்ஷ்வாக்களை

* ஸெயிண்ட்ஸைமன்: இவர் ஒரு கற்பனை சோஷியலிஸ்ட்

யும் புராலிடேரியட்டையும்—ஒன்றாகவே கருதுகிறார் என்பதை யும், புரட்சி பூர்ணத்துவம் அடையாததால்தான், அவைகளுக் குள் பரஸ்பர எதிர்ப்பு வந்திருக்கிறது என்றுமே அவர் கருதுகிறார் என்பதையும் அவை ஊர்ஜிதப்படுத்துகின்றன."

1866ம் வருஷம் அக்டோபர் மாதம் ஒன்பதாந்தேதி, கூகல்மா னுக்கு (Gugelmann) மார்க்ஸ் எழுதிய கடிதத்தில் பிரௌதனைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார் :—

"பிரௌதன் ரொம்ப விஷமம் செய்துவிட்டார். [1] கற்பனு சோஷியலிஸ்டுகளை அவர் கண்டிப்பது போலும் எதிர்ப்பது போலும் செய்த ஹம்பக் (பிரௌதனே ஒரு குறுகிய மனோபாவ முள்ள கற்பனை சோஷியலிஸ்ட், [2] போரியர், [3] ஓவன் முதலியவர் களின் கற்பனைக்கோட்டைகளாவது புது உலகத்தை நன்கு சித்த ரித்தன) புத்திசாலிகளான பல வாலிபர்களையும் மாணவர்களை யும் கெடுத்துவிட்டது. அதன்பின் அதே ஹம்பக் தொழிலாளி களையும்—குறிப்பாக பாரிஸ் தொழிலாளிகளை கெடுத்துவிட்டது."

---

[1] கற்பனு சோஷியலிஸ்ட்: முதலாளித்துவ சமூக அமைப்பில் வினை யும் கொடுமைகளையும் சுரண்டலையும் கண்டு மனம் கொதித்த னர் இவர்கள். இந்த முறை ஒழிந்து, அபேதவாதம் ஏற்பட வேண்டுமென்று விரும்பினர். ஆனால் பிரசாரம் மூலம் மக்கள் மனதை மாற்றி, தங்கள் லட்சியத்தை கைகூடும்படி செய்யலா மென்பது அவர்கள் பிரமை. இதையே கற்பனு சோஷியலியம் என்கிறோம். தொழிலாளி வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு, ஸோஷியலிஸத்துக்காக போராட அவர்கள் வரவில்லை; வர்க்கப் போராட்டங்கள் மூலமே சரித்திரம் சிருஷ்டிக்கப் படுகிற தென்றும், ஒரு சமூக அமைப்பு அதில் பொருள் உற்பத்திக்காக வர்க்கங்கள் உருவாகியிருப்பதைப் பொறுத்ததென்றும், தொழி லாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்ட மூலம் சோஷிய லிஸ்ட் சமூக அமைப்பை ஸ்தாபிக்க முடியுமென்றும்-மார்க்ஸிஸம் அறிவுறுத்திருக்கிறது-இதை விஞ்ஞான சோஷியலிஸம் என்கி றோம். கற்பனு சோஷிலிஸத்தின் இலக்கணத்தை 4-வது அத்தி தில் காணலாம்.

[2] போரியர் : இவரும் ஒரு கற்பனை சோஷியலிஸ்ட்.

[3] ஓவன் : இவரும் அப்படியே. தொழிலாளிகளுக்கு வசதி செய்து, தொழில் நடத்தினர். தன் உதாரணத்தைக் கண்டு, முதலாளி கள் மனம் மாறுவார்கள் என்பது அவர் பிரமை,

பிரௌதன் அனர்க்கிஸ்ட் ஸிண்டிகலிஸத்தின் * ஸ்தாபகர். அனர்க்கிஸ்டு ஸிண்டிகலிஸ்டுகள் அப்படித்தான் சொல்கிறார்கள். மார்க்ஸைவிட பிரௌதனை பெரிய மனிதனாக பாவிக்கிறார்கள். ஆனால், பிரௌதன் சங்க உரிமைக்கு சத்துரு; ஸ்ட்ரைக் இயக்கத்தின் பகைவன் என்ற உண்மையை அவர்கள் மறைக்கிறார்கள். சங்க உரிமையையும் ஸ்ட்ரைக் இயக்கத்தையும் அவன் விஷமாக வெறுத்தான்; ஸ்ட்ரைக்கர்கள் கொலை செய்யப்படுவதைக் கூட நியாயமென்று வாதாடினான். வறுமையின் தத்துவம் என்ற அதே புத்தகத்தில், 1846ல் பிரௌதன் பின்வருமாறு எழுதினான்:

"ஒவ்வொரு தொழிலாளிக்கும் தன்னிஷ்டப்படி தன் விதியை நிர்ணயித்துக்கொள்ள உரிமை கொடுப்பதென்றால் ஒப்புக்கொள்ளலாம்; ஆனால் பொதுநலன்களையும் சட்ட விதிகளையும் பொருட்படுத்தாமல், தொழிலாளர் கூட்டங்கள் ஒன்றுபட்டு முதலாளிகளின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பலவந்தமாக ஆக்கிரமிப்பதை சமூகம் எந்த சந்தர்ப்பத்திலும் அனுமதிக்க முடியாது. முதலாளிகள்மீதும் நிலச்சுவான்தார்கள்மீதும் பலாத்காரத்தை கையாள்வது, வேலையை நிறுத்துவதற்காக தொழிற்சாலை ஸ்தாபனத்தை ஸ்தம்பிக்கவைப்பது, முதலாளித்துவத்தை பயமுறுத்துவது—இவை எல்லாம் பொதுவான நாசத்தை உண்டாக்க சதி செய்வதாகும். ரிவ்டீகீர் என்ற இடத்தில் சுரங்கத் தொழிலாளிகளை சுட்டுத்தள்ளிய அதிகாரிகளுக்கு அது ஒரு துரதிர்ஷ்டமாகும். ஆனால், பிள்ளைப் பாசமா? கடமையா? எது முக்கியம் என்ற பிரச்னை எதிர்நோக்கியபோது, புருடன் எந்தவிதமாக நடந்துகொண்டானோ, அதைப்போல நடந்துகொண்டனர் அதிகாரிகள். குடியரசைப் பாதுகாப்பதற்காக அவன் குழந்தைகளை தியாகம் செய்வது அவசியமாயிருந்தது. புருடன் தயங்கவில்லை; அவன் பிற்காலத்தவரும் அதற்காக அவனைக் கண்டிக்கத் துணியவில்லை".

---

* அனர்க்கிஸ்ட் ஸிண்டிகலிஸம்: இந்த தத்துவம் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கைகளை நிராகரிக்கிறது. தொழிற் சங்கம் என்ற ஒரே ஸ்தாபனம் தான் தொழிலாளி வர்க்கத்துக்கு இருக்க வேண்டுமென்பது இதன் போதம். இதன் குரு பிரௌதன்; தொழிலாளி வர்க்கம் அரசியல் ரீதியில் போராடுவதைத் தடுப்பதன் மூலம், இந்த தத்துவம் கிரியாம்சையில் முதலாளி வர்க்க அரசு நீடிப்பதற்கு உதவுகிறது.

காலம் கடந்தபின்னராவது, பிரௌதன் இந்த முதலாளி அபிப்பிராயத்தை கைவிட்டிருப்பானென்று யாராவது எதிர் பார்த்திருக்கலாம். ஆனால் அவன் சுடுகாட்டுக்கு போகும்வரை இந்த அபிப்ராயத்தை மாற்றிக்கொள்ளவில்லை. 1865ல் அவன் இறந்தான். அதே வருஷத்தில்தான், தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் திறமை என்ற புத்தகத்தை முடித்தான். அதில் மேற் கண்ட பகுதியை அவன் மேற்கோள் காட்டுகிறான். இதே கருத்தை அப்புத்தகத்தில் மேலும் வியாக்கியானம் செய்கிறான். அப்புத்தகத்தில் மூன்றாவது நெப்போலியன் அரசாங்கத்தை பிரௌதன் தாக்குகிறான்; குறிப்பாக அக்கால லிபரெல் தலைவர் மார்சல் ஆலிவரை தாக்குகிறான். சிலருக்குள்ள உரிமை பல ருக்கு மறுக்கப்படக்கூடாது; தொழிலாளிகளுக்கு மாத்திரம் சங்க உரிமை இல்லையென்று சொல்லக்கூடாது—என்று தொழிலாளர் களின் தொழிற்சங்க உரிமைக்காக ஆலிவர் வாதித்தார்; அதனால் தான் அவர்மீது பிரௌதனுக்கு கோபம். பூர்ஷுவாக்கள் தாங்க ளாக விரும்பி, தொழிலாளருடைய ஸ்தாபன உரிமையை ஆத ரிக்கவில்லை. தொழிலாளர்களின் இடைவிடாப் போராட்டத்தால் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு அவர்கள் சங்க உரிமையை ஒப்புக் கொண்டார்கள். ஆனால் பிரௌதன் இதை உணரவில்லை. சங்க உரிமையை ஆதரிப்பவர்களைக் கண்டித்து பின்வருமாறு எழுது கிறான் பிரௌதன்:

"சங்கம் ஸ்தாபிப்பதை அனுமதிக்கும் சட்டம், உண்மையில், சட்டத்துக்கு விரோதமானது; பொருளாதாரக் கொள்கைக்கும் எதிரானது. பொது பந்தோபஸ்துக்கும் எந்த சமூக கட்டுப்பாட் டுக்கும் முரணானது. இந்த சட்டத்தில், எந்தவிதமான சலுகை அளிக்கப்பட்டாலும் அது செல்லாது. கிரிமினல் குற்றவழக்கு கள் தொடுக்கலாம்......புதிய சட்டத்தை நான் குறிப்பாக ஆட்சே பிக்கிறேன். கூலியை உயர்த்தவும் குறைக்கவும் சங்கம் வைத்துக் கொள்வதென்றால், அது உணவுப்பொருள் அல்லது இதர பண் டங்களின் விலைகளை ஏற்றவும் இறக்கவும் சங்கம் வைப்பதைப் போலத்தான்".

இந்த வாதங்களைப்பற்றி என்ன சொல்வது? வெறிப்பிடித்த நடுத்தரவர்க்கத்தினன்தான் இந்தமாதிரி வாதாடமுடியும். ஒரு புறத்தில் "சொத்துரிமை திருட்டுத்தனம்" என்று கூச்சலிடுபவன் மறுபுறத்தில், "ஸ்ட்ரைக்கர்களை சுட்டுத்தள்ளு" என்கிறான்!

பிரௌதனை ஆதரிப்பவர்கள் இக்கோஷங்களின் முரண் களை எப்படி விளக்கினார்கள்? அவன் சிஷ்யர் ஒருவர், பிரௌ

தன் புத்தகம் ஒன்றுக்கு முகவுரை எழுதுங்கால், பிரௌதனை மகாபுருஷனென்று போற்றவேண்டுமென்று, பிரௌதன் எழுதியவற்றிருந்து பல மேற்கோள்களைக் கொடுத்துவிட்டு பிரௌதனிஸத்தை பின்வருமாறு சுருக்கமாக விளக்கினார் :—

"வர்க்கப்போராட்டம்—ஆனால் சமூக நாசத்துக்கு அறைகூவல் இல்லை ; வர்க்கப்போராட்டம்—ஆனால் தொழிலாளிகளை நடுத்தரவர்க்கத்தினருடன் ஒத்துழைக்கவேண்டுமென்று அழைக்கிறார் ; வர்க்கப்போராட்டம்—அதே சமயத்தில் ஸ்ட்ரைக்குகள் கூடாது.........வர்க்கப்போராட்டம்—அதேசமயத்தில் வர்க்கங்களுக்கிடையே கூட்டுறவுவேண்டும்......"

இந்த முரண்பாடுகளை எப்படி தீர்த்துவைக்கிறார்? அவர் அவற்றை தீர்க்கவில்லை, விளக்கவுமில்லை.—இதன் முடிவு என்ன? பிரௌதன் "மார்க்ஸைவிட உயர்ந்த சிந்தனையாளர்" என்பதே!

ஸ்ட்ரைக்குகளின் பகைவன், வர்க்கப் போராட்டத்தின் விரோதி பிரௌதனை, அனார்கோஸிண்டிகலிஸ்டுகள் தங்கள் குருவாகக் கருதினால், அது அவர்கள்பாடு! நம்மைப் பொறுத்தவரையில், ஸ்ட்ரைக்கையும் சங்க உரிமையையும் ஆதரித்துநின்ற மார்க்ஸ், பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து எப்படி போராடுவதென்று தன் வாழ்நாள் முழுவதும் தொழிலாளிவர்க்கத்துக்கு கற்றுக்கொடுத்த மார்க்ஸ், தொழிலாளர்களின் உடனடிக் கோரிக்கைப் போராட்டங்களை இறுதி லட்சியத்துக்கான போராட்டத்துடன் எப்படி இணைப்பதென்று கற்றுத்தந்த மார்க்ஸ்—அந்த மார்க்ஸையே நாம் நமது ஆதர்ச குருவாக விரும்புவோம்.

தொழிலாளர் இயக்கத்தில் பிரௌதன் கொண்டுவந்த குழப்பத்தை மார்க்ஸூம் எங்கல்ஸூம் சகித்துக்கொண்டிருக்க முடியுமா? முடியாது. பிரௌதனையும் அவர்கள் கொள்கைகளையும் எதிர்த்துத் தீவிரமாய்ப் போராடினார்கள்.

ஆனால், ஆரம்பத்தில் தொழிற்சங்கங்களையும் ஸ்ட்ரைக் உரிமையையும் எதிர்த்த பிரௌதனிஸ்டுகள் அனுபவத்தில் அடிபட்டு, தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்கள்.

ஜினிவா (1866) விலும் லாஸேன்னிலும் (1867) தொழிற்சங்கத்தை எதிர்த்த பெல்ஜிய பிரௌதனிஸ்டுகளும் பிரெஞ்சு பிரௌதனிஸ்டுகளும் இன்று தொழிற்சங்கத்தின் தீவிர ஆதரவாளர்களாயிருப்பது பெரிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது" என்று 1868

செப்டம்பர் மாதம் 12-ம் தேதி மார்க்ஸ் எங்கல்ஸுக்கு எழுதினார்.

இதிலிருந்து பிரௌதனிஸ்டுகள் தங்கள் குருவின் கொள்கையைத் தலைகீழாக மாற்றிவிட்டார்களென்று தெரிகிறது. ஆனால், இதனால் அவருடைய கொள்கை அமிவிருத்தியடையவில்லை. இந்த ஸ்தாபனத்துக்காகத்தான் மார்க்ஸும் எங்கல்ஸும் பிரௌதனிஸ்டுகளின் கொள்கையையும் நடைமுறையையும் எதிர்த்து உறுதியாகப் போராடினார்கள்.

பிரௌதன் சிஷ்யர்களில் மிகப்பெரியவன் மைகேல் பாக்குனின்; பிரௌதன் பாதையைப் பின்பற்றினார். பிரௌதனின் உலக கண்ணோட்டத்திலுள்ள பலவீனங்களையும், குறைகளையும் பாக்குனின் உணர்ந்தார். பிரௌதனை உயர்வாக மதிப்பிட்ட பாக்குனின், பிரௌதனைப்பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:—

"யதார்த்தவாதியாக இருக்கவேண்டுமென்று எவ்வளவோ முயன்றும் பிரௌதன் மானசீகவாதியாகத்தானிருந்தார். மானசீகவாதத்தின் பரம்பரையை ஆட்டிவைக்கவேண்டுமென்று எவ்வளவோ முயற்சித்தும், அவர் மானசீகவாதியாகத்தானிருந்தார். (கிருஸ்தவ வேதமான) பைபிளும் ரோமன் சட்டமும் அவரை ஊக்குவித்தன. அவர் இறந்துபோவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் நான் அவரிடமே சொன்னதைப்போல், சாகும்வரை அவர் தவறும் நம்பிக்கையை ஆதாரமாகக்கொண்டு, சிந்தனை செய்து, கற்பனை பாதையில் பிரபஞ்சத்தின் உண்மையைக் காண்பதாகக் கூறும் வேதாந்த முறையைத்தான் தழுவினார்.

பிரௌதனை தன் குருவென்று பாக்குனினே கூறிக்கொள்வார்; தன் குருவைப்பற்றி சிஷ்யன் இதைவிட மோசமான சித்திரம் வரையமுடியாது. பிரௌதனின் மாயவாதக் குழப்பத்தை எதிர்த்து மார்க்ஸ் ஈவிரக்கமில்லாமல் போராட்டம் நடத்தியதில் ஆச்சரியமில்லையல்லவா?

பிரௌதனுடன் ஒத்திட்டுப் பார்த்தால், பாக்குனின் மகா வீரன்தான். அவன் பெரிய புரட்சிக்காரன், சுறுசுறுப்பானவன்; ஆனால் அவன் உலக கண்ணோட்டம் என்ன? சமூகத்தில் வர்க்கங்கள் இருப்பது அவன் கண்ணில் படவில்லை. பொதுவாக ஜனங்களைத்தான் அவன் எப்போதும் குறிப்பிடுகிறான். தொழிலாளி வர்க்கத்தைப்பற்றி அவன் பேசவில்லை. "தொழிலாளிகள்" "ஏழைமக்கள்", "வறுமையால் தாக்கப்பட்ட ஜனப்பகுதிகள்" "சாதாரண உழைப்பாளி" போன்ற பொதுவான பதங்களையே

அவன் உபயோகிக்கிருன். முற்போக்கான தொழில்களிலுள்ள தொழிலாளர்களை 'மேல்ஜாதியினர்' என்று உதாசீனப்படுத்தினுன். சமூகத்தின் வியாதியான சோம்பேரிகளையும், கழிசடைகளையும் (Lumpen proletariat) புரட்சிக்காரர்களென்ருன். மார்க்ஸ் வகுப்புகள் நடத்துவதும், தொழிலாளிகளுக்கு பிரசங்கங்கள் பயிற்சிசெய்வதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. மார்க்ஸ் வீண் வேலை செய்வதாகவும், தொழிலாளிகளுக்கு வாதப்பிரதிவாதம் கற்றுக்கொடுத்து அவர்களை கெடுப்பதாகவும் பாக்குனின் கூறினுன்.

அப்படியானுல், பாக்குனினிஸம் எதை பிரதிநிதித்வப்படுத்துகிறது? பாக்குனிஸத்தை பாக்குனினே இவ்வாறு வர்ணிக்கிருர். "பிரௌதனின் அராஜக அமைப்பை மாயாவாதத்திலிருந்தும் ஆத்மார்த்திக வாதத்திலிருந்தும் நாங்கள் வளர்த்து விரிவுபடுத்தியிருக்கிரேம்."

அதாவது பிரௌதனிஸம் பரிசுத்தமடைந்து நம்முன் நிற்கிறது. பழைய பிரௌதனிஸத்தைப்போலவே, மார்க்ஸீய கொள்கைக்கும், மார்க்ஸீய அரசியலுக்கும் இதற்கும் ரொம்பதூரம்.

அரசியலின் அவசியத்தையே பாக்குனின் மறுத்தார். தொழிலாளிவர்க்கத்தின் அரசு ஏற்படுவதை அவர் எதிர்த்தார். புராலிடேரியட்டின் அரசியல் போராட்டத்தையோ, அரசியல் ஸ்தாபனத்தையோ அவர் ஏற்கவில்லை. மார்க்ஸ்—பாக்குனின் போராட்டம் இருவித உலக கண்ணேட்டங்களுக்கிடையே, இருவித அமைப்புகளுக்கிடையே, இருவித தத்துவங்களுக்கிடையே, நடக்கும் போராட்டம். இருவித அரசியல் கொள்கைகளுக்கு, இருவித போராட்ட முறைகளுக்கு நடக்கும் போராட்டம். இது ஸ்தாபன பிரச்சினையிலும் பிரதிபலிக்காமலிருக்க முடியவில்லை. அதனுல் ஸ்தாபன பிரச்னை பின்னுல் ஏற்பட்ட பிளவுக்குகாரணம் இல்லை; பிளவுக்கு ஒரு சந்தர்ப்பம்தான்.

பாக்குனின் தத்துவ அமைப்பில், தொழிற்சங்கங்களின் பங்கு என்ன? பொருளாதாரப் போராட்டத்தின் பங்கு என்ன? இண்டர்நேஷனலின் கொள்கை என்ற புத்தகத்தில் பாக்குனின் எழுதுவதாவது:—

"தொழிலாளர் விடுதலை என்பது தொழிலாளர்களுடைய சொந்த லட்சியம். நமது பொதுவிதிகளின் முன்னுரையிலேயே இது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இது ஆயிரம் தடவை உண்மை. நமது மகத்தான யூனியனுக்கு இதுதான் பிரதான அடிப்படை. எனினும், ஏராளமான தொழிலாளிகள் ஒன்றுமறி

யாதவர்கள்; அவர்களுக்கு இன்னும் கொள்கை தெரியாது; கோட்பாடு தெரியாது. ஆகவே அவர்கள் முன் ஒரே ஒரு பாதை தான் இருக்கிறது—நடைமுறையில் விமோசனம் தேடும் பாதை தான். இந்த நடைமுறை என்னவாயிருக்கவேண்டும்? அது ஒன்றே ஒன்ருகத்தானிருக்க முடியும்: முதலாளிகளை எதிர்த்து, ஒற்றுமை அடிப்படையில் தொழிலாளிகள் நடத்தும் போராட்டம். அதாவது தொழிற்சங்கங்கள்; ஸ்தாபனங்கள்; பாதுகாப்பு நிதிக் கழகங்களின் சம்மேளனங்கள்.

இந்த உண்மையை உணர்ந்து, நாம் இக் கேள்வியை எழுப்பு கிறேம். நாம் எதிர்பார்க்கும் சமூகப் புரட்சிக்கும் இன்றைக்கும் மத்தியயிலுள்ள இந்த ஏற்றத்தாழ்வு நெடுங்காலத்தில் இண்டர் நேஷனல் என்ன கொள்கையை கடைப்பிடிக்கவேண்டும்?

அதன் விதிகளின்படி, இண்டர்நேஷனல் ஸ்தலரீதியிலும்சரி, தேசீயரீதியிலும் சரி, அரசியலை நிராகரித்துவிடவேண்டும். இண்டர்நேஷனலினுல் சகல நாடுகளிலும் தொழிலாளிகளுடைய கிளர்ச்சி நடவடிக்கைகளை முழுக்க முழுக்க பொருளாதாரப் பாதையில் நடத்தவேண்டும். வேலைநேரத்தைக் குறைப்பதும் கூலியை உயர்த்துவதும் அதன் லட்சியமாக இருக்கவேண்டும். தொழிலாளர் ஸ்தாபனமும், பாதுகாப்பு நிதி திரட்டுவதும் அதன் முறைகளாக இருக்கவேண்டும்."

"முழுக்க முழுக்க பொருளாதாரக் கிளர்ச்சி"யாயிருக்க வேண்டுமென்ருர் பாக்குனின். பொருளாதாரப் போராட்டத் துக்கு பாதுகாப்பு நிதிக் கழகங்கள் சிருஷ்டிப்பதைப்பற்றி பேசுகி ருர். தொழிலாளர்கள் ஒன்றும் தெரியாதவர்களாம்! அவர்கள் கடினமான பிரச்னைகளை வைத்துக்கொண்டு மண்டையை உடைத்துக்கொள்ளக்கூடாதாம்! பிரௌதனைவிட பாக்குனின் ஓரிரண்டு அடிகள் முன்னேபோலும், அவர் பாதையிலிருந்து வழுவவில்லை என்பது இதிலிருந்து நன்கு விளங்கும். தொழிற் சங்கங்கள் தொழிலாளி மக்களை ஸ்தாபனரீதியாக திரட்டும் கேந் திரங்களென்பதையோ, புராலிடேரியட்டின் சர்வாதிகாரத்துக் கான போராட்டத்துக்கு தொழிலாளி மக்களை பக்குவப்படுத்தும் ஸ்தாபனங்களென்ருே, பாக்குனின் உணரவில்லை; தொழிற்சங்க இயக்கத்தில் ஆரம்பத்திலேயே மார்க்ஸ் உணர்ந்ததை, இத்தனை வருடங்கள் சென்றபின்கூட பாக்னினுக்கு புரியவில்லை.

தொழிலாளர்கள் என்ன கோரவேண்டும்? இதைப்பற்றி, பாக்குனின் அபிப்பிராயம் ருசிகரமானது. பாக்குனின் எழுது கிருர்:—

"தொழிலாளி கோருவதும் கோரவேண்டியதும். (1) அரசியல், பொருளாதார, சமூக, சமத்துவம்—பூமிமீதுள்ள சகலவர்க்கங்களுக்கிடையே சகல மக்களுக்கிடையே சமத்துவம். (2) தாய சொத்து ஒழியவேண்டும். (3) நிலத்தை விவசாய சங்கங்களுக்கு, அவைகளின் உபயோகத்துக்காக மாற்றிக் கொடுப்பது; மூலதனத்தையும் உற்பத்திசாதனங்களையும் தொழிலாளர் தொழில் ஸ்தாபனங்களுக்கு மாற்றிக் கொடுப்பது."

வர்க்கங்கள் ஒழியவேண்டுமென்றார் மார்க்ஸ்; வர்க்கங்களுக்குள் சமத்துவம் கோருகிறார் பாக்குனின். (பிற்காலத்தில் மார்க்ஸ் கண்டனத்துக்குப் பின் பாக்குனின் இந்த கோஷத்தை கைவிட்டார்.) தொழில்களை தொழிலாளர் தொழில் ஸ்தாபனங்களுக்கு மாற்றிக் கொடுப்பதென்ற கோஷம்தான் பிற்காலத்தில் பிரெஞ்சு, ஸ்பானிஷ், இத்தாலிய அனார்க்கிஸ்டு—ஸிண்டிகலிஸ்டுகளின் கொள்கைகளுக்கு அடிப்படையாயிற்று. அதிகாரத்தில் நம்பிக்கையில்லாதபோதிலும், பல இடங்களில் அனார்க்கிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்தனர். ஆனால் ஓரிடத்திலும் இக்கொள்கை பலிதமடையவில்லை.

இக்கொள்கைகளைப்பற்றி மார்க்ஸ்—எங்கல்ஸ் அபிப்பிராயம் என்ன? இவற்றை எதிர்த்து உறுதியாகப் போராடினார்கள். பொருளாதாரப் போராட்டத்தைப்பற்றியும் பொருளாதார கோரிக்கைகளைப்பற்றியும் பாக்குனின் நிறையப் பேசியபோதிலும், தொழிற்சங்கங்களை விஷயமறியாதவர்களின் சங்கமாகக் கருதினார். அனார்கிஸத்தின் புண்ணிய பூமிக்கு இந்த விவரமறியாத பாமரர்களை அழைத்துச்செல்ல, ஒரு மகாபுருஷன் தேவை என்பது அவர் நம்பிக்கை. மகாபுருஷன் வேண்டுமென்று ஒரு புறம் நினைத்தார்; மறுபுறம், ஒன்றுந் தெரியாத பாமர ஜனங்கள் தாங்களாகவே கலகம் செய்வார்களென்று நம்பினார். மார்க்ஸ் மக்கள்மீது, வர்க்கத்தின்மீது, ஸ்தாபனத்தின்மீது நம்பிக்கை வைத்தார். அதனால்தான், முதல் இண்டர்நேஷனல் காலத்தில், பாக்குனினிஸமும் மார்க்ஸிஸமும் அவ்வளவு தீவிரமாக மோதிக் கொண்டன. இரண்டுக்குமிடையேயுள்ள வித்தியாசம் ஆழமாயிருந்ததால்தான், இன்றுகூட பாக்குனினிஸத்தின் மிச்சசொச்சங்களை எதிர்த்து சில நாடுகளில் போராட்டம் நடத்தவேண்டியிருக்கிறது.

# மூன்றாவது அத்தியாயம்

# லஸ்ஸாலியனஸையும் ஜெர்மன் சந்தர்ப்ப வாதத்தின் இதர ரூபங்களேயும் எதிர்த்து

ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியை மார்க்ஸ் உன்னிப்பாக கவனித்து வந்தார். அந்தக் காலத்தில், *1848-ம் வருஷ புரட்சிதான் ஜெர்மன் தொழிலாளர் இயக்க நடவடிக்கையின் சிகரம். 1848-க்கு பின், அலே தணியத் துவங்கியது, தொழிலாளர் இயக்கம் பிளவுபட்டது; பல புரட்சிக்காரர்கள் பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு போய்விட்டார். ஜெர்மனிக்குள்ளே, பரஸ்பர உதவிச் சங்கங்கள் முதலிய பற்பல ஸ்தாபனங்கள் முளேத்தன.

அயல்நாடுகளுக்கு சென்ற புரட்சிக்காரர்களுடனும், ஜெர்மனியிலேயே இருந்த, புரட்சிக் காரர்களுடனும் மார்க்ஸ் தொடர்பு வைத்திருந்தார். 1848-க்குப் பின் ஏற்பட்ட அடக்கு முறையின் எதிரொலியாக மார்க்ஸின் தோழர்கள் பலர் புரட்சி இயக்கத்தை விட்டுப்போய்விட்டனர். 1860ம் வருஷத்தில் அடக்கு முறையின் கொடுமை குறைந்தது; ஜெர்மனியில் தொழிலாளர் இயக்கமும் மீண்டும் பூத்தது. 1863-ல் லஸ்ஸால் ஜெனரல் தொழிலாளர் யூனியனை ஸ்தாபித்தார். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கடமைகளேயும் உரிமைகளேயும்பற்றி பேச ஆரம்பித்தார். தொழிலாளர்களின் மறுமலர்ச்சி மனேபாவத்தை லஸ்ஸால் ஆதரித்ததால், லஸ்ஸாலின் ஜெனரல் தொழிலாளர் யூனியன் பிரபல

---

* **1848-ம் வருஷப் புரட்சி:** 1848-ம் வருஷத்தை புரட்சி வருடமென்று சொல்லுதல் பொருந்தும். பிரான்ஸில் நடந்த புரட்சி முடியாட்சியை ஒழித்து, இரண்டாவது குடியரசை ஸ்தாபித்தது. பூர்ஷ்வா வர்க்கம் பதவிக்கு வந்த பின் தொழிலாளிவர்க்கத்தை அடக்கியது. ஜெர்மனியில் தேசிய ஒற்றுமையும் ஜனநாயகமும் புரட்சியின் நோக்கங்கள். ஆனல் பூர்ஷ்வாக்கள் இங்கும் துரோகம் செய்தனர். ஐரோப்பிய புரட்சிகளில் தொழிலாளி வர்க்கத்தின் சக்தியைக் கண்டு பயந்த முதலாளிவர்க்கங்கள் தயங்கின; துரோகம் செய்தன.

டாயிற்று. மார்க்ஸும் எங்கல்ஸும், லஸ்ஸாலுக்கு நன்மதிப்பளித்தனர். பல "ஆறுல்கள்" போட்டபோதிலும் லஸ்ஸால் உறுதியாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறார்" என்று எங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் குறிப்பிடுகிறார். "15 வருஷ உறக்கத்துக்கு பிறகு, ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தை லஸ்ஸால் தட்டி யெழுப்பி விட்டார். அது அவருக்கு அழியாக் கீர்த்தி அளிக்கும்" என்று இன்னொரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

எனினும், ஆரம்பத்திலிருந்தே, லஸ்ஸாலின் கொள்கையிலும் நடைமுறையிலுமுள்ள பல குறைகளை மார்க்ஸும் எங்கல்ஸும் கண்டனர். லஸ்ஸால் தன் தவறான கொள்கையை விளக்க விளக்க, இந்த வித்தியாசங்கள் வளர்ந்தன. தொழிற்சங்க உரிமைக்காக தொழிலாளர்கள் போராடுவதில் லஸ்ஸால் அவநம்பிக்கைகொண்டார். ஸ்ட்ரைக்குகளால் யாதொரு பயனும் ஏற்படாதென்பது அவர் முடிபு.

"சங்க உரிமைகளால் தொழிலாளிக்கு ஒருவித நன்மையுமில்லை. தொழிலாளர் நிலைமையில் அந்த உரிமைகள் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியாது" என்று லஸ்ஸால் வாதித்தார். பிரிட்டிஷ் ஸ்ட்ரைக்கர்களின் அனுபவங்களை "துயரம் மிகுந்த அனுபவங்கள்" என்று வர்ணித்து, தோல்வி மனப்பான்மையை பரப்பினார். சம்பள உயர்வுக்காக தொழிலாளிகள் போராடுவதில் பிரயோசனமில்லை என்றார் அவர். ஏனென்றால், பொருளாதாரத்தின் அஸ்திவாரக் கல்லான சாசுவத சம்பள நியமத்தை (Iron Law of Wages) தொழிலாளிவர்க்கம் மாற்ற முடியாதென்பது அவர் கருத்து. சகல தொந்திரவுகளுக்கும் சர்வரோக நிவாரணியாக லஸ்ஸால் இரு கோரிக்கைகளை வகுத்தார்:— (1) சகலருக்கும் வோட்டுரிமை (2) தொழிலாளர் சங்கங்களுக்கு அரசாங்க உதவி அளித்தல், ஆதலால், தொழிலாளிவர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தை அவர் ஆதரிக்கவில்லை; தொழிற்சங்கங்களின் உபயோகத்தை மறுத்தார். இந்த கண்ணோட்டம் முழுவதும் மார்க்ஸ் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது.

"யூனியன்களை ஸ்தாபிக்கும் இயக்கத்தை லஸ்ஸால் எதிர்த்தார். லஸ்ஸாலின் அபிப்பிராயத்தை பொருட்படுத்தாமல், லீப்நெக்ட் பெர்லின் அச்சுத் தொழிலாளர்களுடைய சங்கங்களை கட்டினார்" என்று எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதினார். (13-2-1865)

லஸ்ஸாலின் கருத்துகளை மார்க்ஸும் எங்கல்ஸும் கண்டிக்காமல் இருக்கமுடியாது. ஜெர்மன் தொழிலாளர் யூனியன்

ஒரு நடுத்தரவர்க்க கட்சியாக இருப்பதை அவர்கள் கண்டு கொண்டனர்.

மார்க்ஸ்—லஸ்ஸால் போராட்டம் சாசுவத சம்பள நியமனத்தைப்பற்றி ஆரம்பித்தது. இக்கொள்கையின் உட்கருத்து என்ன? தொழிலாளி என்ன செய்தாலும் சரி, எவ்வளவு கடினமாய் போராடினாலும் சரி, அவனால் தன் நிலைமையை சீர்திருத்திக் கொள்ளமுடியாது.

[ஏன்? முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளி உழைப்பு சக்தியை மார்க்கட்டில் விற்கிறான். உழைப்புசக்தி என்பது இதர செய்பண்டங்களைப்போல் ஒரு விற்பனைப்பண்டம். ஒரு விற்பனை பண்டத்தின் மதிப்பு அதில் அடங்கியுள்ள சராசரி மனித உழைப்பைப் பொறுத்திருக்கிறது. உழைப்புசக்தியின் மதிப்பு என்ன? உழைப்புசக்தியை உண்டாக்கக்கூடிய ஜீவனத்துக்கும் அவன் குடும்பத்தை நடத்துவதற்கும் அத்தியாவசியமான செலவே அதன் மதிப்பு. பண்டத்தின்விலை அடக்க செலவைப் பொறுத்த தல்லவா? அதைப்போல தொழிலாளியின் கூலி உழைப்பு சக்தியின் உற்பத்தி செலவை பொறுத்திருக்கிறது. நீண்ட நாட்களுக்கு இந்த உற்பத்தி செலவைவிடக் குறைவாக சம்பளம் கொடுக்கமுடியாது. இந்த செலவைவிட அதிகமாகவும் நீண்ட காலம் சம்பளம் பெறமுடியாது. அதனால் தொழிலாளியின் சம்பளம் சாசுவதமானது. அவனது குறைந்தபட்ச தேவையை அடிப்படையாகக் கொண்டது. அப்படியானால் தொழிலாளி சங்கத்தில் சேர்ந்து போராடி பயனில்லையல்லவா? சாசுவத சம்பள நியமனம்என்று லஸ்ஸால் கூறுவதில் கருத்து இதுதான்] (மொ-ர்.)

பொருளாதாரப் போராட்டத்தை நிராகரிக்குமிந்த கொள்கையிடம் மக்கள் அனுதாபம் காண்பிக்க முடியாது. லஸ்ஸாலின் சாசுவத சம்பள நியமனத்தை அவர் கண்டித்தார். அது தவறு என்பதை நிரூபித்தனர். எப்படி? சம்பளம் என்பது இரு பாகங்கள் அடங்கியது. (1) தொழிலாளியின் குறைந்த பட்ச தேவையை அடிப்படையாகக் கொண்ட பாகம். (2) சமூக நிலைமையை பொறுத்தது இரண்டாவது பாகம். இது சமூக நிலைமைக்கு தகுந்தபடி மாறும்; வெவ்வேறு சரித்திர பூர்வமான நிலைமைகளில் வெவ்வேறு அளவாக இருக்கும்.

தொழிலாளி சீவ உயிரோடு வாழ்வதற்கும், அவன் குலம் நீடிப்பதற்கும் அவசியமான குறைந்தபட்ச கூலி—உற்பத்தி செலவு—தொழிற்சங்க இயக்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கிடைக்கும். இதுதான் மார்க்ஸ் குறிப்பிடும் முதல்பாகம்.

சம்பளத்தில் இன்னொரு பாகமும் இருக்கிறது. இது நாட்டு நிலைமையையும், தொழில் வளர்ச்சியையும் தொழிலாளர் இயக்கத்தையும் பொறுத்திருக்கிறது. தொழிற்சங்க இயக்கம் இருந்தால், தொழிலாளர்களுக்கிடையேயுள்ள போட்டியை கட்டுப்படுத்தி, கூட்டு பேரம் செய்து, நேரடி நடவடிக்கைமூலம், உயர்ந்த சம்பளம் பெறமுடியும். [பிரிட்டிஷ் பஞ்சாலை தொழிலாளியின் சம்பளத்துக்கும் தமிழ்நாட்டு பஞ்சாலைத் தொழிலாளரின் சம்பளத்துக்கும் வித்தியாசம் இருப்பதின் காரணம் இதுதான்.]

(மொ-ர்.)

லஸ்ஸால் தன் சாசுவத சம்பள நியமனத்தையே வற்புறுத்தினார்; அது மாத்திரமல்ல; அரசாங்கம் தொழிற் சங்கங்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்றார்.

"தன்னிச்சையாக ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களை நான் விரும்புகிறேன் என்று அடிக்கடி வற்புறுத்தியிருக்கிறேன். ஆனால் இவை ஏற்படவேண்டுமானால், இதற்கு அவசியமான அரசாங்க பண உதவியைப் பெறவேண்டும்.

"உங்கள் வர்க்கம் விடுதலை அடையவேண்டுமானால், ஒரு சில தனிப்பட்ட தொழிலாளிகளல்லாது, தொழிலாளிவர்க்கமே விமோசனம் பெறவேண்டுமானால், கோடிக்கணக்கான டாலர்கள் (நாணயம்) வேண்டும்; அவை அரசாங்கத்தினிடமிருந்துதான் கிடைக்கும்; சட்டம் செய்தால்தான் கிடைக்கும்".

இந்த முறையில், லஸ்ஸால் தொழிலாளர் பிரச்னையை சுலபமாகத் தீர்த்துவிட்டார்! முதலில் நாம் வோட்டுரிமை பெறவேண்டும்; "சர்க்கார் கோடிக்கான டாலர்களை அளிக்கும்" என்ற இந்த நடுத்தர வர்க்க அசட்டு கற்பனையை, கேடுவிளைவிக்கும் கற்பனையை மார்க்ஸ் எதிர்க்காமலிருக்க முடியுமா?

1863, ஏப்ரல் மாதம் 9ம் தேதி எங்கல்ஸுக்கு மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்:—

"லீப்ஸிக் நகரத்தில் கூடிய தொழிலாளர் காங்கிரஸுக்கு, தான் அனுப்பிய பகிரங்க கடிதத்தை லஸ்ஸால் எனக்கு நேற்று முன்தினம் அனுப்பினார். நம்மிடமிருந்து கடன்வாங்கிய சில வார்த்தைகளை வீசி எறிந்துவிட்டு, தொழிலாளர்களின் எதிர்கால சர்வாதிகாரிபோல நடந்துகொள்கிறார் லஸ்ஸால். கூலிக்கும் மூலதனத்துக்குமுள்ள சச்சரவை "விளையாட்டாக சுலபமாக" தீர்க்கிறார் லஸ்ஸால். எப்படி தெரிமா? வோட்டுரிமைக்காக தொழிலாளிகள் கிளர்ச்சி செய்யவேண்டும். வோட் கிடைத்த

வுடன், விஞ்ஞானத்தையே ஆயுதமாகக்கொண்ட அவரை (லஸ்ஸாலே) போன்றவர்களை சட்ட சபைக்கு அனுப்பவேண்டும். பிறகு அவர்கள் தொழிலாளர்களின் தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பார்கள், இவற்றுக்கு அரசாங்கம் முன்பணமாக மூலதனம் அளிக்கும். மெள்ள மெள்ள தேசம் முழுவதும் இந்த மாதிரி ஸ்தாபனங்கள் ஏற்படும். எப்படியிருந்தாலும், இது ஆச்சரியம் தரும் புதுமைதான்!"

இதுதான் லஸ்ஸாலே எதிர்த்து மார்க்ஸ் தொடுத்த தாக்குதலின் முறை—முதலாவதாக லஸ்ஸாலின் திட்டம் தவருனது. இரண்டாவது, அவர் தந்திரம், தவருன தந்திரம்; மூன்ருவதாக, அவர் ஸ்தாபனம் தவருனமுறையில் கட்டப்பட்டிருக்கிறது.

லஸ்ஸாலின் மரணத்துக்கு பிறகு, ஷிவீட்ஸர் (Schweitzer) ஜெனரல் தொழிலாளர் யூனியன் தலைவரானுர். அவர் சங்க உரிமையை ஆதரித்தார்; சம்பள உயர்வுப் போராட்டங்களுக்கும் ஆசிகூறினுர். குருவின் உபதேசங்களை நிராகரித்தபோதிலும், ஷிவீட்ஸர் தன் கட்டுரைகளில் கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வருகிருர்:

1. பொருளாதார கண்ணேட்டத்தில் பார்த்தால், எந்த வேலைநிறுத்தத்திலும் தோல்விதான் ஏற்படும்.

2. எனினும், தொழிலாளர் இயக்கம் வெடித்து, தன்வர்க்க பலத்தை தொழிலாளிவர்க்கம் புரிந்துகொள்ளக்கூடிய அளவு உயரத்துக்கு எழும்ப, வேலைநிறுத்தம் ஒரு நல்ல கருவி.

3. இறுதி லட்சியம் ஈடேறக் கூடிய தருணத்தில் ஸ்ட்ரைக்குகள் கூடாது என்பது விதியாயிருக்க வேண்டும். ஏனென்ருல், சமூகத்தின் அடித்தளங்களைப் மாற்றி அமைக்கும் இறுதி நோக்கம் கைகூடாத தொழிலாளி வர்க்கத்துக்கு அதன் முழு பலமும் தேவை. ஸ்ட்ரைக்குகள் இந்த ஒரு லட்சியத்திலிருந்து பல துறைகளில் பலத்தை சிதரடித்துவிடும். ஸ்ட்ரைக்குகளால் சம்பள உயர்வு ஏற்படுமென்று எண்ண மிஞ்வது கைகூட போவதில்லை.

லஸ்ஸாலேப் போலல்லாமல், ஷ்வீட்ஸர் கண்ணேட்டம் நேர்மையற்றதாகும்; அவர் வாதத்தில், புதிய ராகங்களை கேட்கிருேம். அவர் ஆதரிக்கிருர்; அதே சமயத்தில் எதிர்க்கிருர். 1868ல் ஷ்வீட்ஸர் ஜெர்மனியில் ஒரு அகில தேச தொழிலாளர் காங்கிரஸைக் கூட்டினுர். எதற்கு?" வேலை நிறுத்தம் மூலம் இயக்கத்தை வளர்க்க உள்ள தொழிற் சங்கங்களை நிலைநிறுத்தி புதிய தொழிற்

சங்கங்களை கட்டுவது காங்கிரஸ் நோக்கமாயிற்று. புதியதாக உருவான தொழிற்சங்கங்கள் லஸ்ஸாலியனிஸத்தை எதிர்த்தன.

ஜெர்மனியில் தொழிலாளர் யூனியன் பரிணமித்துவரும் விதத்தை மார்க்ஸ் உன்னிப்பாக கவனித்து வந்தார். ஏனெனில், லஸ்ஸாலின் சீடர்களிடையே குழப்பம் அதிகமாயிருப்பது அவருக்கு தெரியும்; குறிப்பாக சங்க உரிமை பற்றி பரவியுள்ள குழப்பத்தை அவர் அறிவார். 1865, பிப்பரவரி, 18-ல், எங்கல்ஸுக்கு மார்க்ஸ் பின் வருமாறு எழுதுகிறார்:—

"ஸ்தாபனங்கள் அமைவதும், தொழிற் சங்கங்கள் அவற்றிலிருந்து வளர்வதும் பூர்ஷ்வாக்களை எதிர்த்து தொழிலாளி வர்க்கம் போராட்டம் நடத்துதவற்கு மிக முக்கியமானது. வோட்டுரிமை இருந்தும், குடியாட்சி இருந்தும், தொழிற் சங்கங்களில்லாமல், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தொழிலாளர்கள் முன்னேற முடியவில்லையென்பது இந்த முக்கியத்துவத்தை நன்கு எடுத்துக் காண்பிக்கிறது. அதோடுகூட, பிரஷ்யாவிலும் ஜெர்மனியிலும் சங்க உரிமை போலீஸ் ஆதிக்கத்திலும் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்திலும் உடைப்பு ஏற்படுத்துகிறது. கிராமத்தில் 'பண்ணை அடிமை' சட்டத்தையும் ஜமீன்தாரி பொருளாதாரத்தையும் தூள்தூளாக்குகிறது. சுருங்கச் சொன்னால், அது பொதுமக்களுக்கு மெஜாரிட்டி பலத்தை தருகிறது. முற்போக்காளர் கட்சியான, பிரஷ்யாவில் எதிர்கட்சியாய் விளங்கும் பூர்ஷ்வா கட்சியும் பைத்தியகாரர்களாய் இல்லாவிட்டால், பிரஷ்ய சர்க்காரைவிட, குறிப்பாக பிஸ்மார்க் சர்க்காரைவிட நூறு தடவை சீக்கிரமாகவே சங்க உரிமையை அங்கீகரிக்கும்."

[தொழிற் சங்க இயக்கம் பூர்ஷ்வாக்களைத் தானே எதிர்க்கிறது! பிஸ்மார்க் மன்னனிடமிருந்து நம் உரிமையை வாங்கி விடலாம்! என்பது லஸ்ஸால் பிரமை; ஆனால் உண்மையில், சங்க உரிமை பூர்ஷ்வாக்களை மாத்திரம் எதிர்க்கவில்லை. போலீஸ் அதிகாரவர்க்க பேயாட்சிக்கு ஆட்டம் கொடுக்கிறது; நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு சாவுமணி யடிக்கக் கூடியது. ஆகவே நிலப்பிரபுத்துவ அமைப்பின் தலைவராயுள்ள, அதிகாரவர்க்க அமைப்பின் அரசனுயுள்ள பிஸ்மார்க்கிடம் சங்க உரிமை பெறலாமென்பது வெறும் சபலம். பூர்ஷுவாக்களிடமிருந்து ஒரு வேளை—பிஸ்மார்க்கை அவர்களும் எதிர்ப்பதால், பிஸ்மார்க்கை எதிர்க்க தொழிலாளரை தங்கள் கருவியாக உபயோகிக்க அவர்கள் விரும்புவதால், சங்க உரிமை கிடைத்தாலும் கிடைக்கலாம்! பிஸ்மார்க்கிடமிருந்து கிடைக்கவே கிடைக்காது. மொ-ர்.]

அதே கடிதத்தில், பிரஷ்ய சர்க்காரிடமிருந்து தொழிற் சங்கங்களுக்கு பண உதவி பெறவேண்டுமென்ற லஸ்ஸால் கருத்தை பற்றியும் மார்க்ஸ் வியாக்கியானம் செய்கிறார்.

"பிரஷ்ய சர்க்கார் சோஷியலிஸ்ட் கண்ணோட்டத்துடன் தலையிடுமென்ற லஸ்ஸால் பிரமை ஏமாற்றத்தில் முடியுமென்பதில் துளி சந்தேகமும் இல்லை. ஆனால் அனுபவம் பொய்ப்பிப்பதற்கு முன்னாலேயே, இந்த பிரமைகளை நிராகரிப்பதுதான் தொழிலாளி வர்க்கத்தின் கட்சியுடைய கௌரவத்துக்கு உகந்தது. தொழிலாளி வர்க்கம் புரட்சிகரமான வர்க்கம்; இல்லாவிட்டால், அது ஒன்றுமில்லை."

இந்த அபூர்வமான கடிதம், லஸ்ஸால் கொள்கைகளைப் பற்றிய மார்க்ஸ் அபிப்ராயத்தை பளிச்சென்று எடுத்துக் காட்டுகிறது. தொழிலாளி வர்க்கம் புரட்சிகரமானது; இல்லாவிட்டால் அது ஒன்றுமில்லை. [தொழிலாளி வர்க்கம் புரட்சிகரமானதாயில்லாவிட்டால், அதன் சரித்திரபூர்வமான கடமையை, வர்க்கப் போராட்டத்தை, புறக்கணித்தால், அது முன்னேற முடியாது. கூலி அடிமைகளாக, முதலாளித்துவத்தின் சங்கிலிகளால் தளைபட்டு காலம் தள்ள வேண்டியதுதான்! வேறு இரண்டாம் பாதை கிடையாது. மொ-ர்.] இதுதான் மார்க்ஸ் கொள்கை.

ஜெனரல் தொழிலாளர் யூனியன் ஒரு ஸெக்டேரியன்* ஸ்தாபனமா யிருக்கிறதென்று மார்க்ஸ் கருதினார். ஷ்வீட்ஸருக்கு எழுதிய கடிதத்தில் இந்த அபிப்ராயத்தை அடிக்கடி வற்புறுத்தினார். 1868 அக்டோபர் 13-ல் மார்க்ஸ் ஷ்வீட்ஸருக்கு எழுதுகிறார்:—

"லஸ்ஸால் ஒரு பிரத்தியேக கோஷ்டியை ஸ்தாபித்தார். அதனால் ஜெர்மனியிலிருந்து பழைய தொழிலாளர் இயக்கத்துக்

---

* **ஸெக்டேரியனிஸம்:** பொதுமக்களின் இயக்கத்துடன் ஜீவ தொடர்புவைத்துக் கொள்வதற்கு பதிலாக, தவறான கொள்கையின் மூலம் வர்க்கத்திடமிருந்து தனிமைப்பட்டு, தன்னந்தனியே நிற்பது. தொழிலாளி வர்க்கத்தின் சக்தியில் நம்பிக்கையில்லாதவர்களின் தத்துவம்.

சரியான கொள்கையை தவறான முறையில் அனுஷ்டித்து, பொதுமக்களிடமிருந்தும், தொழிலாளி வர்க்கத்திடமிருந்தும் தனிமைப் படுத்திக் கொள்வதும் ஸெக்டேரியனிஸமே. (மொ-ர்)

கும் தனக்கும் தொடர்பு கிடையாதென்றார். பிரௌதன் செய்த தவறையே, இவரும் செய்தார். வர்க்க இயக்கத்தின் யதார்த்த தலைமையிலிருந்து தன் கிளர்ச்சிக்கு உண்மையான அடிப்படை தேடுவதற்கு பதிலாக, தொழிலாளர் இயக்கம் எந்த பாதையில் செல்ல வேண்டுமென்று தானாக ஒருவழி கூறுகிறார்!

ஸெக்டேரியன் இயக்கத்துக்கும் வர்க்க இயக்கத்துக்குமுள்ள முரண்பாட்டை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்கள். பிரத்தியேக மான கோஷ்டியாக கருதுகின்றவர்கள் தங்கள் கோஷ்டித் தன்மையின் காரணத்தையும் கௌரவத்தையும் எப்படி புரிந்து கொள்கிறார்கள்? வர்க்க இயக்கத்துக்கும் தங்களுக்கும் பொதுவாக உள்ளதிலா தங்கள் கோஷ்டித் தன்மையின் ஆதாரத்தை காண்கின்றனர்? இல்லை. வர்க்க இயக்கத்திடமிருந்து வித்தியாசப்பட்ட ஒரு விசேஷமான கோஷமே தங்கள் கோஷ்டித் தன்மைக்கு காரணமென்றும், கௌரவமென்றும் கருதுகின்றனர். (ஸெக்டேரியனிஸம் என்பதற்கு இது அபூர்வமான விளக்கம் மொ-ர்). ஆனால், தொழிற்சங்கங்கள் ஸ்தாபிக்க, நீங்கள் ஹாம்பர்க் மகாநாட்டை கூட்டியபோது, தலைவர் பதவியை ராஜீநாமா செய்வேனென்று பயமுறுத்தியதின்மூலம்தான் ஸெக்டேரியன் எதிர்ப்பை தோற்கடிக்க முடிந்தது. தவிர, நீங்கள் இரு ஹோதாவில் பேசவேண்டியதாயிற்று—ஒரு தடவை, பிரத்தியேக கோஷ்டியின் தலைவராக பிரகடனம் செய்துகொண்டீர்கள்; மறு தடவை வர்க்க இயக்கத்தின் சார்பில் பேசினீர்கள்.

"ஜெனரல் தொழிலாளர் யூனியன் கலைக்கப்பட்டது, உங்களுக்கு முன்னேற சந்தர்ப்பம் அளித்தது. ஒரு புதிய வளர்ச்சி சகாப்தம் அணுகிவிட்டது, வர்க்க இயக்கத்துடன் சங்கமமாக ஸெக்டேரியன் இயக்கம் பக்குவமடைந்துவிட்டது என்று நீங்கள் விரும்பினால், நீங்கள் பிரகடனம் செய்யமுடியும், நிரூபிக்கமுடியும். பிரத்தியேக கோஷ்டியின் யதார்த்த சாராம்சத்தை பொறுத்தவரை, பழைய தொழிலாளர் கோஷ்டிகளைப்போல, இந்த கோஷ்டியின் குணத்தையும், சாரத்தையும் பொதுவான இயக்கம் ஆகரஷித்துவிடும். இதற்கு பதிலாக, நீங்கள் கேட்பதென்ன? வர்க்க இயக்கம் ஒரு பிரத்தியேகமான கோஷ்டி இயக்கத்துக்கு கட்டுப்படவேண்டும் என்கிறீர்கள். நீங்கள் "உங்களுடைய சொந்த தொழிலாளர் இயக்கத்தை" எப்படியிருந்தாலும் காப்பாற்றப்பார்க்கிறீர்களென்பதை உங்களுடைய நண்பரல்லாதவர்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள்."

4

ஹாம்பர்க் காங்கிரஸுக்கு சற்று முன்னால், மார்க்ஸுக்கு ஷ்வீட்ஸர் தன் புதிய யூனியனின் நகல் விதிகளை அனுப்பினர். அந்த நகலை கண்டிப்பதற்கு அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டார் மார்க்ஸ். ஒரு அரசியல் தொழிற்சங்க சம்மேளனம் யதார்த்தத்துக்கு பொருந்தாது என்றும், அதிகாரவர்க்க பாணியில் நாயகத்துவம் ஸ்தாபிப்பது (மையத்துக்கு கட்டுப்பட்டு இயங்கும் ஸ்தாபனமுறை) அபாயகரமானது, முக்கியமாக ஜெர்மனியில் ரொம்ப அபாயகரமானது என்றும் மார்க்ஸ் கருதினார்.

1868 செப்டம்பர் 13ல், மார்க்ஸ் ஷ்வீட்ஸருக்கு பின்வருமாறு எழுதினார் :—

"ஸ்தாபன அமைப்பு நகலைப் பொறுத்தவரை, அது கொள்கைரீதியில் தவறிவிட்டதென்பது என் அபிப்பிராயம். தொழிற்சங்க இயக்கத்தின் என் காலத்தவர் எவருக்கும் என்னை விட அதிக அனுபவம் கிடையாது. விபரங்களை விஸ்தரிக்காமல், இங்கு நான் சொல்லவேண்டியது இதுதான் : இன ரகசியங்களுக்கும் செக்டேரியன் இயக்கங்களுக்கும் பொருத்தமாயிருக்கலாம் ; ஆனால் தொழிற்சங்க இயக்கத்தின் தன்மைக்கு இந்த ஸ்தாபன முறை நேர்முரணானது. இந்த ஸ்தாபனமுறை சாத்தியமானதல்ல என்று நான் சொல்கிறேன் ; சாத்தியமானாலும், அது விரும்பத்தக்கதல்ல ; அதுவும் ஜெர்மனியில் நிச்சயமாய் விரும்பத்தக்கதல்ல. இங்கு, குழந்தையாய்ப் பிறந்தது முதல், தொழிலாளிகள் அதிகாரவர்க்கத்தின் ஆணைக்குட்பட்டிருக்கிறார்கள் ; ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதிகாரபீடங்களிடமும் அதிகாரிகளிடமும் நம்பிக்கை வைக்கிறார்கள். அதனால், தாங்களாகவே எப்படி நடப்பது என்று அவர்களுக்கு கற்றுக்கொடுப்பது முதற்கடமை.

இதர துறைகளிலும், உங்கள் திட்டம் கவைக்குதவாதது. வெவ்வேறுவிதமாக தோன்றும் மூவகை அதிகாரங்களை—தனித்தனி அதிகாரங்களை—நீங்கள் உங்கள் யூனியனில் அமைக்க விரும்புகிறீர்கள்—(1) தொழில்கள் தேர்ந்தெடுக்கும் கமிட்டி. (2) பொது வோட்டால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர். இவர் அவசியமே இல்லை. (3) ஸ்தல சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ். ஆக, எங்கும் மோதுதல்கள் ஏற்படும். ஜரூராய், வேகமாய் நடவடிக்கை எடுக்க, உதவுமென்று நம்பப்படுகிறது !"

லஸ்ஸால்—ஷிவீட்ஸர் யதேச்சாதிகார நடுநாயகத்துவத்தை, கடிதம் கண்டிக்கிறது. ஜெர்மன் தொழிலாளிகளுக்கு தாங்களாக நடக்க கற்றுக்கொடுக்கவேண்டுமென்ற கொள்கையை வகுக்கிறது. மார்க்ஸ்-எங்கல்ஸ் கடிதங்களில் மீண்டும் மீண்டும் இது வற்புறுத்தப்படுகிறது. அதிகாரவர்க்க ராணுவ முறைகளை அவர்கள் அறிவார்கள். தொழிற்சங்க ஸ்தாபனங்களும் தொழிலாளிவர்க்கத்தின் அரசியல் கட்சியும் இதே அதிகாரவர்க்க பணியில் கட்டப்பட்டால், அது ஜெர்மன் தொழிலாளிவர்க்கத்துக்கு நீங்காக் கேட்டை விளைவிக்கும். ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தின் யதேச்சாதிகார நடுநாயகத்துவம் பிரஷ்ய ராணுவ முறைகளை எதிரொலித்தது. அதன்பயனாய், இன்றுவரை ஜெர்மன் தொழிலாளர் இயக்கம் பலவீனமாகக் கிடக்கிறது.

ஷிவீட்ஸரின் சர்வாதிகார முறைகளை மார்க்ஸும் எங்கல்ஸும் கண்டித்தார்கள். இதனால் ஸ்தாபனமே சீர்குலைந்து விடுமென்று நிரூபித்துக் காட்டினார்கள். பொதுவான தொழிற்சங்க ஸ்தாபனமா? அல்லது குறுகிய, பிரத்தியேகமான கோஷ்டியாக விளங்கும் குறுகிய, அரை அரசியல்—அரை தொழிற்சங்க ஸ்தாபனமா? எது வேண்டுமென்று முடிவு செய்யவேண்டு மென்றனர்.

லஸ்ஸால் ஸ்தாபனத்தின் ஸெக்டேரியன் "குணம்—பிரத்தியேக கோஷ்டி மனப்பான்மை—இயக்கவளர்ச்சிக்கு முரணானது. தொழிலாளி பொதுமக்களை இத்தகைய ஸெக்டேரியன் ஸ்தாபனத்துக்குள் திணிக்க முடியாதென்று மீண்டும் மீண்டும் மார்க்ஸ் வற்புறுத்தினார்.

1871 நவம்பர் 23ல், போல்ட் என்பவருக்கு எழுதிய கடிதத்தில், "லஸ்ஸால் ஸ்தாபனம் ஒரு செக்டேரியின் ஸ்தாபனம்; சர்வதேசீய தலைமையிலுள்ள உண்மையான தொழிலாள இயக்க ஸ்தாபனத்துக்கு நேர் விரோதமானது" என்று மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

கோதாவில் லஸ்ஸாலியன்களும் ஈஸனச்சர்களும் (Eisenachers) ஒற்றுமை மகாநாடு நடத்தினார்கள். அதற்காக தயாரான கோதாநகல் திட்டத்தை மார்க்ஸ் ஈவிரக்கமில்லாமல் கண்டித்தார். சாசுவத சம்பள நியமனத்தைப் பிரஸ்தாபித்து "லஸ்ஸாலுக்கு சம்பளம் என்றால் என்ன என்று தெரியாது. பூர்ஷுவா பொருளாதார நிபுணர்களைப்போல, தோற்றத்தை யதார்த்தமாக தப்பர்த்தம் செய்துவிட்டார்" என்று காண்பித்தார். அரசாங்கத்

திடம் கடன்வாங்கி புதிய சமூகம் கட்டிவிடலாமென்றும், ரெயில் வேப் போடுவதைப்போல அவ்வளவு சுலபமானதென்றும் லஸ் ஸால் கற்பனை செய்கிறார்" என்று லஸ்ஸாலிய பிரமையைபுட்டுப் புட்டு வைத்தார்.

பெபலுக்கு (Bebel) எழுதிய கடிதத்தில் எங்கல்ஸ் கூறுகிறார்:

"தொழிற்சங்கங்கள் மூலம் தொழிலாளி வர்க்கத்தை வர்க்க ரீதியாக ஸ்தாபனத்தில் திரட்டுவதைப் பற்றி ஒரு வார்த்தையில்லை. இது மிக முக்கியமான பிரச்னை. ஏனென்றால், அவைகள்தான் புராலிடேரியட்டின் உண்மையான வர்க்க ஸ்தாபனங்கள்; அவை மூலம் புராலிடேரியட், மூலதனத்தை எதிர்த்து அன்றா டப் போராட்டத்தை நடத்துகிறது; அவைகளில்தான் அது பயிற்சி பெறுகிறது. இன்று அமுலிலிருக்கும் பேயாட்சியால் கூட அவை உடைக்க முடியாதவை. ஜெர்மனியிலும் இவை அடைந்துள்ள முக்கியத்துவத்தை உத்தேசித்து, அவற்றை கோதா திட்டத்தில் குறிப்பிடுவதும், முடிந்தால், கட்சி ஸ்தாபனத்தில் அவற்றுக்கு ஓர் இடம் அளிப்பதும் அத்தியாவசியமென்பது எங்கள் அபிப்ராயம்!

மார்க்ஸ்-எங்கல்ஸ் விமர்சனத்தைக்கேட்டு பெபல் முதலி யோர் அதிருப்தி அடைந்தனர். பிற்காலத்தில், பெபல் தன் "என் வாழ்க்கையிலிருந்து" என்ற புத்தகத்தில் மேற்கண்ட எங்கல்ஸ கடிதத்தைக் கொடுத்துவிட்டு, கீழ்க்கண்ட விமர்சனம் செய்கிறார்.

"லண்டனிலுள்ள இரு கிழவர்களிடமும் (மார்க்ஸ்-எங்கல்ஸ்) ஒரு உடன்பாட்டுக்கு வருவது சுலபமாயில்லை. எதெதை நாங்கள் சாமர்த்திய கணக்கு என்று கருதினோமோ, திறமையான தந்திரம் என்று எண்ணினோமோ, அவற்றை பலவீனங்களாகவும் பொறுப் பற்றவிதத்தில் நிலைமையின் அபாயத்தை உணராமல் காரியம் செய்வதாயும் அவர்கள் கருதினார்கள்."

இது பெபல் மனப்பான்மையை படம்பிடித்துக்காட்டுகிறது' தோன்றியகாலம் தொட்டு, ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கம்' மார்க்ஸிஸ்ட் கொள்கைகளிலிருந்து பின்வாங்கும் போதெல்லாம், அதை தந்திரம், தந்திரம் என்று சொல்வது வழக்கம். தந்திரம் என்பது கொள்கையிலிருந்து வேறுபட்டதைப்போல்.

ஜெர்மன் தொழிலாளர் இயக்கம் குழந்தைப் பருவத்திலிருந்த போதே, மார்க்ஸ்-எங்கல்ஸ் என்ன செய்தார்கள் என்பது தெளிவு. தொழிலாளர் இயக்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கையையும் உன்

னிப்பாக கவனித்தார்; தவறுகளை எடுத்துக்காட்டினார்கள். இயக்கத்தின் பலத்தையும் பலவீனத்தையும் வலியுறுத்தினார்கள்.

தொழிற்சங்கங்களை கட்சியாக்க முயற்சித்ததை, தொழிற் சங்கங்களை லஸ்ஸால்-ஷ்வீட்ஸா நாசம் செய்யப்பார்த்தனர். இது மாத்திரமல்ல, இதற்கு நேர் எதிரான போக்கும் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் தோன்றியது—தொழிற்சங்கம் ஒன்றே தொழிலாளர் இயக்கத்தின் ரூபம் என்ற போக்கு அது. இண்டர்நேஷனலின் ஜெர்மன் ஸெக்ஷன் தலைவர் பெக்கர் என்பவரே இத்தவறைச் செய்தார்.

ஜெர்மனியில் புராலிடேரியட்டின் அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்படும்போது, தொழிற்சங்கங்கள், கட்சி, தொழிலாளர்களின் பல்வேறு கல்விக் கழகங்கள் இவைகளுக்குள்ளிருக்கவேண்டிய பரஸ்பர உறவு பெரிய பிரச்னையாயிற்று. தொழிலாளர் பொது ஸ்தாபனத்தையே, லஸ்ஸாலும்-ஷ்வீட்ஸரும் அரசியல் கட்சியாக்கப் பார்த்தனர். தொழிற்சங்கம் ஒன்றுதான் தொழிலாளர் இயக்கத்தின் உண்மையான உருவம் என்று வாதித்தார் பெக்கர். பெக்கர் கூறியதாவது:

"தொழிற்சங்கங்கள் மாத்திரமே தொழிலாளர் ஸ்தாபனங்களுக்கும் எதிர்கால சமூகத்துக்கும் சரியான உருவம் அளிப்பதை முன்னிட்டும், தொழிலாளர்களிடையே நிலவும் தொழில் நுணுக்க அறிவைக்கொண்டு சமூக விஞ்ஞானத்துக்கு உறுதியான அடிப்படையை சிருஷ்டிக்க வசதியாயிருப்பதாலும்.

தொழிற்சங்க ஸ்தாபனங்கள் பூர்ணத்துவம் அடைவதைப் பொறுத்து கலப்பு ஸ்தாபனங்களின் (உதாரணமாக தொழிலாளர் கல்விக்கழகம், ஜெனரல் தொழிலாளர் யூனியன்போன்றவை) அவசியம் போய்விடுகிறது. முன்மாதிரிகளாய் இருந்து, தங்கள் பணியை அவைகள் நிறைவேற்றிவிட்டன"

கட்சி என்றால் என்ன? அதை எப்படி கட்டவேண்டும்? என்பதுபற்றி தெளிவாகப் புரிந்துகொள்ளத் தவறியதாலேயே, இந்த முறையில் அவர் குறிப்பிட்டார்.

இதைப்பற்றி, மார்க்ஸ்—எங்கல்ஸ் அபிப்பிராயத்தை எங்கல்ஸின் கடிதம் பிரதிபலிக்கிறது:—

"வயதான மனுஷன், பெக்கருக்கு மூளை கெட்டுவிட்டதென்பது தெளிவு. தொழிற்சங்கங்கள்தான் உண்மையான தொழிலாளர் ஸ்தாபனங்கள். மீதி ஸ்தாபனங்கள் எல்லாம் தற்காலிகமாகத்தான் இருக்கமுடியுமென்று அவர் எப்படி கூறமுடியும்! அதுவும்

இன்றுவரை சரியான தொழிற்சங்கங்கள் ஏற்படாத ஜெர்மனியில் 'இந்த தொழிற்சங்க ஸ்தாபனத்தில்' என்ன குழப்பம். ஒருபுறத்தில், ஒவ்வொரு தொழிலிலும், ஒருதேசீய நடுநாயகத்துவம் ஏற்படுகிறது; மறுபுறத்தில், ஒவ்வொரு ஸ்தலத்திலுமுள்ள சகலதொழில்களுக்கும் பொதுவாக ஒரு ஸ்தல நடுநாயகத்துவம் ஏற்படுகிறது. சதாக்காலமும் பேதம் அரசுபுரியவேண்டுமானால், இந்த ஏற்பாட்டை அமுல் நடத்தவேண்டும்"

புரட்சிப் பேச்சுகளைக் கண்டு மார்க்ஸ் மயங்கியது கிடையாது. அக்காலத்திலிருந்த நவீன சோஷியலிஸ்டுகள் அதிகமாக சத்தம் போட்டால், வெட்டொன்று துண்டிரண்டாக பதில் கொடுப்பார்கள். மோஸ்ட் (Most) என்பவரைப்பற்றி மார்க்ஸும் பேர்ன்ஸ்டீனும் (Bernstein) அனுஷ்டித்த முறைகள் குறிப்பிடத்தக்கது. மோஸ்ட் இடதுசாரிக்காரரென்று அவரைக் கண்டித்தார் பெர்ன்ஸ்டீன். அந்த கண்டன புகைத்திரையின்பின்னே தனது வலதுசாரி கருத்துக்களை பிரசாரம் செய்தார். இந்த திருட்டுத்தனத்தை மார்க்ஸ் உடனுக்குடன் அம்பலப்படுத்தினார். 1879 செப்டம்பர் 19-ல் ஸார்ஜ் (Sorge) என்பவருக்கு மார்க்ஸ் எழுதுகிறார்:—

"மோஸ்டிடம் நமக்குள்ள தகராருக்கும் ஸூரிச் கனவான்களுக்கு (பெர்ன்ஸ்டீன் கோஷ்டி) மோஸ்டிடமுள்ள தகராறுக்கும் எந்தவிதமான ஒற்றுமையும் இல்லை. மோஸ்ட் புரட்சிகாமாயிருப்பதாக நாம் கண்டிக்கவில்லை. அவர் புரட்சிகரமான வார்த்தைகளை கயிறு திரிக்கிறாரே அல்லாது, அதில் புரட்சிகரமான சாரம் இல்லை என்பதே நமது கண்டனம்.

ஆம்! "இடதுசாரி" வாய்ப்பந்தலை எதிர்த்து புரட்சிகரமான மார்க்ஸிஸம் நடத்தும் போராட்டத்துக்கும், சீர்திருத்தவாதிகள் இடதுசாரிகளை எதிர்த்து நடத்தும் போராட்டத்துக்கும் சம்பந்தமே கிடையாது. கொள்கைப்பிடிப்பில் மார்க்ஸ்—எங்கல்ஸ் எவ்வளவு உறுதியாயிருக்கிறார்களென்பதை இதில் நாம் பார்க்கிறோம்.

சந்தர்ப்பவாதத்தையும் அரசியலில் "குடும்ப உறவு" பார்ப்பதையும், எதிர்த்து மார்க்ஸும் எங்கல்ஸும் ஈவிரக்கமில்லாமல் போராடினார்கள். அரசியல் வேறுபாடுகளோ, கொள்கை வித்தியாசங்களோ மழுப்பப்படுவதை அவர்கள் ஒரு பொழுதும் சகிக்கமாட்டார்கள். எப்பொழுதும் போராடுவதற்கு தயாராய் இருந்

தனர். 1907-ல், இவர்களின் இந்த குணத்தை லெனின் வலியுறுத்தி யிருக்கிறார்.

ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்திடம் அவர்களுக்குள்ள நெருங்கிய உறவின் காரணமாக, இக்கு கொள்கை தெளிவுக்காகவும், அரசியல் கொள்கை உறுதிக்காகவும் மார்க்ஸும் எங்கல்ஸும் பிரமாதமான முறையில் போராட முடிந்ததை நாம் பார்க்கிறோம்.

ஜெர்மன் சமூக ஜனநாயகத்தில் அயலார் ஊடுருவி வருவதைப்பற்றி அபாயக்குரல் எழுப்பியது அவர்கள்தான். தத்துவத்திலும், பொருளாதாரத்திலும் டாக்டர் பட்டம் வாங்கியவர்களும் ஏட்டுச் சுரைக்காய் பேராசிரியர்களும் சமூக ஜனநாயக இயக்கத்தில் அமிதமான பங்கு எடுப்பதை அறிவுறுத்தினர் மார்க்ஸ். "கொள்கைபற்றி ஒன்றுமறியாதவர்கள், காரியத்தில் உபயோக மில்லாதவர்கள், தங்கள் குழப்பிய அறைகுறை அறிவை வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு அறிவூட்டப் போகிறார்களாம். இவர்கள் உதவாக்கரைகள், புரட்சி–எதிர்ப்பு பேச்சு வீரர்கள்" என்று அவர்களை கண்டிக்கிறார்.

இது இன்றைக்கு பழசு என்று யாராவது சொல்லமுடியுமா? எத்தனை பேச்சுப் புலிகள்—புரட்சியின் பகைவர்கள்—சோஷியலிஸ்ட், மார்க்ஸிஸ்ட் கொடியின் கீழ் மறைந்து நிற்கிறார்கள்?

ஸெக்டேரியனிஸத்தையும் சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்து போராடினார்கள் மார்க்ஸ்—எங்கல்ஸ். முக்கியமாக, கட்சிக்கும் தொழிற் சங்கங்களுக்கும் தவறான உறவுகள் ஸ்தாபிக்கப்படுவதை எதிர்த்தனர். அவர்களுடைய கடிதங்கள் அரசியல் கண்காணிப்புக்கும் கொள்கை உறுதிக்கும், கட்சித் தலைமையின் உஷாருக்கும் ஒரு நல்ல உதாரணம்.

# நான்காவது அத்தியாயம்

# பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கமும் மார்க்ஸூம்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியின் ஓர் முக்கியமான அம்ஸம்; இங்கிலாந்தில் தொழிற்சங்கம் அதி தீவிரமாக வளர்ந்து பரவியது. 1824-ல் தொழிற்சங்கத் தடைச்சட்டம் ரத்து செய்யப்பட்டவுடனே, அதுவரை ரகசியமாக, தலைமறைவாக இருந்த தொழிற்சங்கங்கள் வெளிக்கிளம்பி இங்கிலாந்து முழுதும் பரவின. தனித்தனித் தொழில் பிரிவுகளுக்கு வெவ்வேறு தொழிற்சங்கங்கள் என்ற குறுகிய முறையில்தான் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்கள் அமைந்திருந்தன. (கம்பாசிடர்களுக்கு தனிச் சங்கம், ஸ்பின்னர்களுக்கு தனிச்சங்கம் என்பதுபோல) அச்சங் கங்களின் லக்ஷியங்களோ, வேலைநேரத்தைக் குறைத்தல், கூலி உயர்வு முதலிய அநுபவ சாத்தியமான லக்ஷியங்களாகவே இருந் தன. பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிப் போக் கைப் பல வருஷங்கள் மார்க்ஸூம், எங்கல்ஸூம் கவனித்தனர். எங்கல்ஸால் மிகுந்த சிரத்தையுடன் எழுதப்பட்ட முதல் புஸ்த கமே, இங்கிலாந்து தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையைப்பற்றி யதுதான். மார்க்ஸால் எழுதப்பட்ட, பிரசித்திபெற்ற மூலதனம் (Capital) என்ற புஸ்தகமுங்கூட, பிரிட்டிஷ் பொருளாதாரத்தை யும், பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தையும் அலசி ஆராய்ந்து எழுதப்பட்டது. தொழிலாளர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காக, தயவு தாக்ஷண்யமின்றி, ஈவிரக்கமற்ற போராட் டம் நடத்திவந்த காரணத்தினுல், மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகிய இரு வருமே பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களுக்கு விசேஷ முக்கியத்துவ மளித்தனர். "இன்று நடைபெறும் சமூக இயக்கங்களுக்கெல் லாம் அஸ்திவாரமாகவும், ஆரம்ப பீடமாகவு மிருப்பது தொழி லாளி வர்க்கத்தின் நிலைமைதான்" (எங்கல்ஸ்) என்பதை அவர் கள் நன்குணர்ந்திருந்ததால்தான் இத்தகைய முக்கியத்துவத்தைக் கொடுத்தனர்.

தனித் தனித் தொழிற் பிரிவுகளுக்கு தனித் தனிச்சங்கம் என்ற மிகக்குறுகிய முறையில் தொழிற்சங்கங்கள் அமைந்திருந்ததையும், அவை மிகக் குறுகிய கண்ணோட்டங் கொண்டிருந்ததையும் மார்க்ஸும், எங்கல்ஸும் அறியாமலில்லை; தெரிந்துதானிருந்தார்கள். எனினும், இத்தொழிற்சங்கங்களை, பிரிட்டிஷ் (பிரிட்டிஷ்மட்டுமேயல்ல) தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னேறும படிகளாகவே அவர்கள் மதித்தனர்.

எங்கல்ஸ் எழுதினர்:—ஆளும் வர்க்கத்தின் சக்தியை உடைப்பதற்கு, தொழிற்சங்கங்களும், ஸ்ட்ரைக்குகளும் மட்டுமேயன்றி, இன்னும் சில விஷயங்கள் தேவை. ஆனால், தொழிற்சங்கங்களாயினும் சரி, அவற்றிலிருந்து கிளம்பும் ஸ்ட்ரைக்குகளாயினும் சரி, பரஸ்பர போட்டியை ஒழிப்பதற்குத் தொழிலாளிகள் எடுத்துக்கொள்ளும் முதல் முயற்சியாக இருப்பதால்தான் அவற்றிற்கு உண்மையில் முக்கியத்துவம் ஏற்படுகிறது. தொழிலாளர்களுக்குள்ளேயே போட்டியும், ஒருமைப்பாடின்மையும் நிலவுவதை அஸ்திவாரமாகக்கொண்டே பூர்ஷுவாக்களின் ஆதிக்கம் இருக்கிறதென்ற உண்மையைத் தொழிலாளிகள் உணர்ந்துவிட்டனர் என்பதன் பிரதிபலிப்புதான் தொழிற்சங்கங்களும் ஸ்ட்ரைக்குகளும். இன்றைய சமூக அமைப்பின் ஜீவநாடியையே, மர்மஸ்தானத்தையே தொழிற்சங்கங்கள் தாக்குவதால், அது குறுகலான அளவில் அரைகுறைத் தாக்குதலாயிருந்தபோதிலுங்கூட, இந்த சமூக அமைப்புக்கு ஆபத்தானதேயாகும். முதலாளித்துவத்தையும், அத்துடன் இன்றைய நடைமுறை சமூக அமைப்பு முழுவதையுமே, இதைவிட வேறெந்த மர்மஸ்தானத்திலும் உழைக்கும் மக்களால் தாக்கமுடியாது.

அக்காலத்து பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கத்தில் ஒரு சங்கடமான நிலைமை; மிக வளர்ச்சியடைந்த தலைவர்களின் சோஷியலிஸக் கண்ணோட்டமுங்கூட குழப்பமடைந்திருந்தது. அக்காலத்தில் பிரிட்டிஷ் சோஷியலிஸம் மிக மேலெழுந்தவாரியானதாகவும், தெளிவற்றதாகவுமிருந்தது. அக்காலத்து சோஷியலிஸ்டுகளைப்பற்றிய எங்கல்ஸின் வர்ணனையின் வருமாறு:—

"இங்கிலீஷ், சோஷியலிஸம் ஓவன் என்ற கைத்தொழில் முதலாளி (Manufacturer) யுடன் தோன்றியது. ஆகவே, அது பூர்ஷுவாக்களுக்கும் புராலிடேரியட்டுக்குமிடையேயுள்ள வர்க்க வேறுபாடு ஒழிய வேண்டுமென்பதை இறுதிலட்சியமாக வலி

யுறுத்திக் கோரியபோதிலுங்கூட, அது கையாளும் முறைகள் பூர்ஷுவாக்கள் விஷயத்தில் தயவு தாட்சண்யம் காட்டக்கூடிய தாகவும், புராலிடேரியட்டுக்கு அநீதி விளைவிப்பனவாகவுமே இருக்கின்றன.

சோஷியலிஸ்டுகள் முழுக்க முழுக்கப் பணிந்து போகிறவர்களாகவும் சமாதானத்தை விரும்புபவர்களாகவு மிருக்கிறார்கள். இன்று நடைமுறையிலுள்ள சமூக அமைப்பை மோசமானதாயிருந்தபோதிலும், ஒப்புக்கொள்ளுகிறார்கள். பொதுஜன அபிப்பிராயத்தைத் தவிர இதர முறைகள் அனைத்தையும் புறக்கணிக்கிறார்கள்...கீழ்த்தர வர்க்கங்களிலேற்படும் சோர்வைக்கண்டு அவர்கள் வருந்துகிறார்கள்...பூர்ஷுவாக்களுக்கெதிராக உழைக்கும் மக்கள் ஏன் கோபங் கொள்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும் வாஸ்தவமே. ஆனால், தொழிலாளியை தன்னுடைய இறுதிலக்ஷியத்தை நோக்கி உந்திச் செல்லும் ஒரே ஒரு தார்மீகத் தூண்டுகோலான வர்க்கத் துவேஷத்தைப் பயனற்றதென அவர்கள் கருதினார்கள். இதற்குப் பதிலாக இன்றைய இங்கிலாந்தின் நிலைமையில் ஒரு சிறிதும் பயனற்ற "பரோபகாரம், அன்பு" என்ற தத்துவப் பிரசாரம் செய்தனர். உலகம் முழுதுமே, தனி மனிதனுள்பட, சென்ற காலத்தின் அடிப்படையிலேயே நிற்கின்றது. இதற்குமாறாக அவர்கள் (சோஷியலிஸ்டுகள்) சென்ற காலத்திற்கு சிறிதும் சம்பந்தமே யில்லாமல், மானசீக வளர்ச்சியும் மனிதவளர்ச்சியும் ஏற்படுவதாகக் கருதுகிறார்கள். அதனால் தான் அவர்கள் எவ்வித குறிக்கோளற்ற முறையில் மாயாவாதம் பேசுகிறார்கள்; அதனால்தான் அவர்களால் ஒன்றும் சாதிக்க முடிவதில்லை."

பிரிட்டிஷ் சோஷியலிஸத்தைப்பற்றிய இச்சிறந்த விமர்சனத்துடன், சார்ட்டிஸத்தைப்பற்றிய ஆராய்ச்சியையும், 1839-42 ல் நடந்த பயங்கர நிகழ்ச்சிகளுக்குப் பின் பிரிட்டிஷ் சார்டிஸத்தில் தோன்றிய வித்தியாசங்களைப்பற்றிய ஒரு அனுபந்தத்தையும் சேர்த்தார் எங்கல்ஸ். சார்டிஸத்திலிருந்தே ஒரு உண்மையான சோஷியலிஸம் உருவாகும் என்று எங்கல்ஸ் கருதினார். சார்ட்டிஸ்டுகள் தத்துவரீதியாக மிகப் பிற்போக்கானவர்கள்; போதிய வளர்ச்சியடையாதவர்கள். ஆனால் அவர்கள் உண்மையான புராலிடேரியட்; புராலிடேரியட்டின் உண்மையான பிரதிநிதிகள் என்று எங்கல்ஸ் கருதினார். ஆனால் அவருடைய இந்த ஹேஷ்யம் சரியானதல்ல என்பதை எங்கல்ஸே பின்னர் எழுதியுள்ளார். 1850—1860 வருஷங்களில் சோஷியலிஸம் எவ்வாறு தெளிவற்

றுப் பயனற்றதாக இருந்ததோ அதே மாதிரியே பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிய பிரிட்டிஷ் சோஷியலிஸம் தெளிவும் பயனு மற்றதாகவே இருந்தது.

இங்கிலாந்தின் பொருளாதாரத்தையும் வர்க்கப் போராட்டங் களையும் மார்க்ஸ் ஆராய்ந்தார். அட்லாண்டிக் சமுத்திரத்தின் இருபுறத்திலும் இருந்த உற்பத்தி சக்திகளின் உறவுகளிலிருந்தே சுயமாகத் தோன்றி வளர்ந்த தொழிலாளி இயக்கத்தில் பரிபூரண மாக ஈடுபட்டார் மார்க்ஸ்.

முதலாளிகளை எதிர்த்து நடத்தும் போராட்டத்திற்கு தொழிற் சங்கங்கள் ஓர் ஆயுதம்; ஆகவே, தொழிற்சங்கங்கள் தோன்றுவது தொழிலாளிவர்க்கம் ஒருபடி முன்னேறுவதை எடுத்துக்காட்டு கிறது—என்ற இந்த அபிப்பிராயந்தான் மார்க்ஸ் எழுதிய மூல தனம் என்ற நூல் முழுவதிலும் ஊடுருவிப் பிரதிபலிக்கிறது. உதாரணமாக, வேலை நேரத்தைக் குறைக்கவேண்டுமென்பதற் காக நடந்த தொழிலாளிகளின் போராட்டத்தைப்பற்றிய தமது விரிவான ஆராய்ச்சியில் மார்க்ஸ் பின்வருமாறு எழுதுகிறார் :

"1865-ம் வருஷ முடிவுக்குப் பின், ஸ்காட்லாந்தில் முதல் முத லாக விவசாயத் தொழிலாளர்களிடையில் ஒரு தொழிற்சங்கம் நிறுவப்பட்டது ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சி யாகும்."

தொழிற்சங்கங்களுக்கு மார்க்ஸ் மகத்தான முக்கியத்துவங் கொடுத்தார் என்பதை, முதலாவது இண்டர்நேஷனலில் தொழிற் சங்கங்கள் இணைக்கப்படவேண்டுமென்ற அபிப்பிராயத்தை அவ ராகவே கொடுத்ததிலிருந்தும், பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் ஸ்தல கிளைகளுடன் நெருங்கிய நேரடியான தொடர்புகளை அமைக்க அவர் பெரிதும் பாடுபட்டதிலிருந்தும் நன்கு அறிய லாம். முதலாவது இண்டர்நேஷனலைப்பற்றி சில தொழிற்சங் கங்களின் மனோபாவம் என்ன என்பதை ஜெனரல் கவுன்ஸிலின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் காணலாம். அவை வருமாறு :

"1865ஆு பிப்ரவரி 21ந் தேதி, செங்கல் சூளைத்தொழிலாளிக ளிடமிருந்து வந்த கடிதமொன்று ஜெனரல் கவுன்ஸிலில் வாசிக் கப்பட்டது. இண்டர் நேஷனலில் சேரத் தாங்கள் விரும்புவதாக அதில் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். 1865 மார்ச்சு 28ல் செருப் புத் தைப்போர் மகாநாட்டுக்கு ஜெனரல் கவுன்ஸிலின் சார்பில் அனுப்பப்பட்ட தூதுகோஷ்டி தனது ரிப்போர்ட்டைச் சமர்ப் பித்தது. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் கொள்கைகளைப்

பூரணமாக ஒப்புக்கொள்வதாகவும், அதன் தாராளமானதும், பெருமிதமானதுமான கொள்கைகளைத் தனது சங்கங்களுக் கிடையே பரப்ப முயற்சி செய்வதென்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு அம்மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1865ஹு ஏப்ரல் 1ந் தேதி செல்ஸியா நகரத் தச்சர்கள் சங்கம், சர்வதேச சங்கத்தின் கொள்கைகளை விளக்கிக்கூற பிரதிநிதிகளை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொண்டது. சுரங்கத் தொழிலாளர் யூனியனுக்கு அனுப்பப்பட்ட தூதுகோஷ்டியைப்பற்றி வெஸ்டன் தெரியப்படுத்தினர். 1866 ஏப்ரல் 6-ந் தேதி பிரிட்டிஷ் தையல் தொழிலாளர் யூனியன் நிர்வாகக் கமிட்டி, இண்டர் நேஷனலைப் பற்றிய நல்லெண்ணத்தை தெரிவித்து அதில் சேருவதாகவும் வாக் களித்தது. கவண்ட்ரி நகரத்தின் ரிப்பன் முதலிய சிற்றுடை நெய்வோர்கள் தாங்கள் சர்வதேச தொழிலாளர் சங்கத்தில் சேர விரும்புவதாக ஜெனரல் கவுன்ஸிலுக்கு தெரிவித்தார்கள். 1866 ஏப்ரல் 10-ந்தேதி வெஸ்ட் எண்ட் பூட்ஸ் தைப்போர் சொஸைடி ஜெனரல் கவுன்ஸிலுக்கு ஒரு பவுன் நன்கொடை யளித்திருப்ப தாகவும் ஆட்கர் (Odger) என்பாரை காங்கிரஸுக்கு பிரதிநிதி யாக நியமிக்க உத்தேசித்திருப்பதாகவும் அனுப்பிய செய்தி வாசிக்கப்பட்டது. 1866 ஏப்ரல் 17-ல் இந்த சொஸைடியை சர்வ தேச தொழிலாளர் சங்கத்தின் கிளையாக ஒப்புக்கொள்ளப்பட் டது. மேலும், பிளாஸ்டர் செய்வோர் கமிட்டி மீட்டிங்குக்கு வெஸ்டன், ஜங் ஆகியோர் பிரதிநிதிகளாகச் சென்று கலந்து கொள்ளுவதென்ற விஷயம் அறிவிக்கப்பட்டது. 1866 மே 1-ந் தேதியன்று செங்கல் தொழிலாளர்களின் ஸ்தல கிளைச்சங்கத் துக்கு தானும் லாபோர்கும் சென்று வந்த விஷயத்தைப் பற்றி ஜங் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். மிகுந்த உற்சாகத்துடன் அவர் கள் வரவேற்கப்பட்டனர்: உதவி யளிப்பதாகவும் வாக்குறுதி கொடுக்கப்பட்டனர். 1866 மே 15ல் ஒன்றுபடுத்தப்பட்ட தையல் தொழிலாளர் யூனியனின் டார்லிங்டன் பகுதி இண்டர் நேஷன லில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. 1866 ஜுலை 17ல் ஏற்கனவே இண்டர் நேஷனலில் சேர ஒப்புக்கொண்டிருந்த கூபர்களின் பரஸ்பர உதவிசங்கம் (Hand-in-Hand Society of Coopers) ஜினிவா காங்கிரஸின் செலவை ஈடுகட்டுவதற்காக ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு ஷில்லிங் கட்டணம் விதித்திருக்கிறதென்னும் செய்தி வாசிக்கப்பட்டது. அந்த மீட்டிங்கின்பொழுதே, பர்னிசர் செய்வோர் (மேஜை நாற்காலி முதலியன செய்வோர்) மீட்டிங் குக்கு இண்டர்நேஷனலின் தூதுகோஷ்டி சென்றிருந்ததாகவும்

காங்கிரஸின் செலவுகளுக்காக ஒரு பவுன் பிடிப்பதென்று அந்த மீட்டிங் முடிவு செய்ததாகவும் அறிவிக்கப்பட்டது. 1866 ஆகஸ்ட் 17ல், ஜினிவா காங்கிரஸுக்குச் செல்ல தங்கள் காரியதரிசியைத் தேர்ந்தெடுத்திருப்பதாக கம்பாஸிடர்களின் லண்டன் சொசைடி செய்த முடிவு அறிவிக்கப்பட்டது. ஒன்றுபடுத்தப்பட்ட இஞ்சினீயர்களின் சொஸைடி செய்த, காங்கிரஸுக்கு ஒரு பிரதிநிதியை அனுப்பவேண்டுமென்னும் பிரேரணையை ஒப்புக்கொள்ளமறுத்து விட்டதுடன், அதன் கிளைகளுக்கு தூதுக்கோஷ்டி அனுப்பவும் அனுமதி மறுத்துவிட்டது."

நிகழ்ச்சிக் குறிப்புகளில் (மினிட்ஸ்) காணும் இக்குறிப்புகள் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தவை- ஏனெனில், முதலாவது இண்டர்நேஷனலைப்பற்றி சில தொழிற்சங்கங்களிடையே இருந்த சிரத்தையை அவை பிரதிபலிக்கின்றன. ஜோஹன் பிலிப் பெக்கர் என்பவரால் நடத்தப்படும் வோர்போடி என்ற சஞ்சிகையின் 1866 மே இதழில் ஐந்து பெரிய தொழிற்சங்கங்கள் பூராவும் அதாவது 1000 மெம்பர்களைக்கொண்ட ஸில்க் ரிப்பன் நெசவாளர் சங்கம், 8000 மெம்பர்களைக் கொண்ட தையல் தொழிலாளர் சங்கம், 9000 அங்கத்தினரைக்கொண்ட பூட்ஸ் தைப்போர் சங்கம் மெகானிக்குகள் சங்கம், சல்லடை (sieve) செய்வோர் சங்கம் ஆகியவை இண்டர்நேஷனலுடன் இணைக்கப்பட்ட விஷயம் காணப்படுகிறது. (அதுவரை தொழிற்சங்க மெம்பர்களான தனி நபர்கள்தான் இண்டர் நேஷனலில் சேர்ந்துவந்தார்கள் : சங்கம் பூராவுமாக சேரவில்லை. மேற்சொன்ன வார்போடி சஞ்சிகையின் ஜூலை மாத இதழில், இங்கிலாந்து, மான்செஸ்டர் நகரத்தின் பர்னிசர் செய்வோர்களின் பிரதிநிதிகள் கூட்டம் ஆப்பிள்கார் (Applegarh) என்பவரின் தலைமையில் கூடியபோது, தங்கள் ஸ்தல சங்கங்கள் இண்டர் நேஷனலில் சேரவேண்டுமென்று சிபார்சு செய்யும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென்ற விஷயம் காணப்படுகிறது.

இம்மாதிரியே லண்டனிலும், ஸ்ட்ராட்போர்டிலுமிருக்கும் கொத்தனார்களின் சங்கங்களும், வேறுபல சிறிய சொசைடிகளும், கடைசியாக 3300 மெம்பர்களைக்கொண்ட பிரிட்டிஷ் மெக்கானிக்குகளின் ஒன்றுபட்ட சங்கமும் இண்டர்நேஷனலில் சேர்ந்தன. 300 அங்கத்தினர்களைக்கொண்ட இங்கிலாந்தில் கூடை செய்வோர் சங்கமும், 28000 மெம்பர்களைக்கொண்ட கப்பற் படைத் தொழிலாளர் சங்கமும் இண்டர் நேஷனலுடன் இணைக்

கப்பட்ட விஷயத்தை வார்போடி சஞ்சிகையின் நவம்பர் இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

பேல் (Basle) காங்கிரஸுக்கு மார்க்ஸ் எழுதிய ரிப்போர்ட்டில் அதற்குமுன் பர்மிங்காமில் நடந்த பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் பொதுக்காங்கிரஸில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

"சர்வதேசத் தொழிலாளர் சங்கம் உழைக்கும் மக்களின் நலவுரிமைகளை ஸ்திரப்படுத்தவும், விரிவுபடுத்தவும் பாடுபட்டு வருவதாலும், எல்லாவிடங்களிலும் உழைக்கும் மக்களின் நலன்கள் ஒன்றாயிருப்பதாலும், அந்த ஸ்தாபனத்தை பிரிட்டனிலுள்ள (United Kingdom) தொழிலாளி மக்கள், குறிப்பாக எல்லா ஸ்தாபனங்களும் ஆதரிக்கவேண்டுமென்று மனப்பூர்வமாக சிபார்சு செய்கிறது. இந்த ஸ்தாபனத்தின் கொள்கைகள் உருவாவதனால் உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கிடையே நிரந்தரமான சமாதானமேற்படுமென்ற நம்பிக்கையுடன் அதில் சேரவேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது."

ஆனால் தொழிற்சங்கங்களில் பல இண்டர்நேஷனலில் சேர மறுத்துவிட்டன என்ற விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக, 1866 அக்டோபரில் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் ஜெனரல் கவுன்ஸில், லண்டன் தொழிற்சங்கங்களின் கவுன்ஸிலை இண்டர்நேஷனலில் சேருமாறு கேட்டுக்கொண்டது. இதை ஒப்புக்கொள்ளாவிட்டால், அவர்களின் மீட்டிங்குக்கு இண்டர் நேஷனலின் பிரதிநிதிகள் சென்று சர்வதேச சங்கத்தின் நோக்கத்தைப்பற்றி விளக்கிக்கூற அனுமதி கோரப்பட்டது. ஆனால் லண்டன் தொழிற் சங்கங்களின் கவுன்ஸில் முடியாதென்று மறுத்துவிட்டது. அச்சமயத்தில் ஆட்கர், ஆப்பிள்கார்த், வெஸ்டன், ஸ்யூக்ராப்ட் முதலிய பல இங்கிலீஷ்காரர்கள் ஜெனரல் கவுன்ஸிலிலேயே இருந்தனர்—ஆட்காரோ ஜெனரல் கவுன்ஸிலின்—தலைவராகவே இருந்தார்—என்ற விஷயம் கவனிககத்தக்கது. பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கத்தின் சரித்திராசிரியர்களான ஸிட்னியும், பீட்ரிஸ் வெப்பும் தாங்கள் எழுதிய இண்டஸ்டரியல் டெமாக்ரஸி என்ற இரண்டு பாகங்கள் கொண்ட புஸ்தகத்தில், முதலாவது இண்டர்நேஷனல் சம்மந்தமாக பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் மனோபாவமென்ன என்பது பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை என்பதும் ருசிகரமான விஷயம். தொழிற்சங்கங்களின் சரித்திரம் என்ற புத்தகத்திலோ இந்த விஷ

யத்தைப்பற்றி ஒரே குறிப்பு மாத்திரம் எழுதியிருக்கின்றனர். உண்மையில் இந்த விஷயம் முக்கியமான விஷயமென்பது நமக்குத் தெரியும். தொழிற்சங்கத்தின் சட்டதிட்டத்தையோ, அல்லது தொழிற்சங்க இயக்கத்தின் தீமைகளைப் பற்றியும், ஸ்ட்ரைக் இயக்கத்தின் மத விரோதத்தன்மையைப் பற்றியும், பூர்ஷுவா பொருளாதாரவாதிகளும், பிரிட்டிஷ் பாதிரிகளும் எத்தகைய அபிப்பிராயங் கொள்ளுகிருர்கள் என்பதையோவிட, இந்தப் பிரச்னை முக்கியமான தென்பதை நாம் அறிவோம். எனினும், எல்லா தொழிற் சங்கங்களின் சட்டதிட்டங்களையும், பல நூற்ருண்டுகளின் அப்ரண்டிஸ் சம்மந்தமான விதிகளையும், மற்றும் தொழிற்சங்கங்கள் சம்மந்தமான முக்கியத்துவம் இல்லாத தகவல்களையும் சேகரித்த இந்த சரித்திராசிரியர்கள் முதலாவது இண்டர்நேஷனலைப்பற்றி, 1864 முதல் 1872வரை லண்டனிலேயே இருந்து வந்த முதலாவது இண்டர்நேஷனலைப்பற்றி, அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதவில்லை என்றே தோன்றுகிறது. இந்த சாஸ்திரீய ரீதியான குருட்டுத்தனம் அவர்கள் அரசியலை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

மார்க்ஸையும், சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தையும் இவ்வாறு அலக்ஷியப்படுத்துவதன் மூலமாக, மார்க்ஸுக்கும் முதலாவது இண்டர்நேஷனலுக்கும் உள்ள மதிப்பைக் குறைத்துவிடலாமென பிரிட்டிஷ் தொழிற் சங்க இயக்கத்தின் இந்த பேபியன் (Fabian) சரித்திராசிரியர்கள் கருதியிருக்க வேண்டும். ஆனல் இதில் அவர்கள் தவறி விட்டார்கள்; மார்க்ஸையும், முதலாவது இண்டர்நேஷனலையும் கண்டு சோஷியலிஸ்டுகளெனத் தங்களைத் தாங்களே அழைத்துக்கொண்ட படித்த வர்க்கத்தார் எவ்வளவு தூரம் பயந்தார்கள் என்பதையே இது மேலும் நிரூபித்தது.

இங்கிலாந்தில் சோஷியலிஸ்ட் கருத்துக்களும், சோஷியலிஸம் என்ற பெயரால் நிலவிய போலிக் கருத்துக்களும் எவ்வாறு உருவாகி வளர்ந்தன என்பதை எங்கல்ஸ் பல வருஷ காலம் நன்ருகக் கவனித்து வந்திருக்கிருர்; அவர் பேபியன் சோஷியலிஸத்தைப்பற்றி ஆராய்ந்து மிகச் சிறந்த முறையில் விமர்ஸனம் செய்திருக்கிருர். இதைப்பற்றி அவர் 1893 வருஷம் ஜனவரி மாதம் 18-ந் தேதி ஸோர்ஜ் (Sorge) என்பவருக்கு எழுதியது பின்வருமாறு:

இங்கு, லண்டனிலிருக்கும் பேபியன்கள் ஒரு பதவி வேட்டைக்கும்பல்; எனினும் சமூகப் புரட்சி தவிர்க்க முடியாதது

என்று உணருமளவுக்கு அவர்கள் புத்திசாலிகள்தான். சமூகப் புரட்சி யென்னும் மகத்தான பணியை, ஒரு விபரமுமறியாத புராலிடேரியட்டிடம் ஒப்படைக்கத் தயாராக இல்லாததால், அதற்குத் தலைமை தாங்க முன்நிற்கிறார்கள். புரட்சியைக் கண்டஞ்சுவதுதான் அவர்களின் முக்கியமான கொள்கை. அவர்கள் 100-க்கு 100 படித்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் சோஷியலிஸம், முனிஸிபல் சோஷியலிஸம்; கம்யூன்தான், ஆரம்பக் காலத்திலாவது, உற்பத்தி சாதனங்களுக்கு சொந்தக்காரனாயிருக்கவேண்டும்; உற்பத்தி சாதனங்கள் தேசத்திற்குச் சொந்தமாயிருக்கக் கூடாது. சோஷியலிஸம் இறுதியில் வந்துதான் தீருமென்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் பூர்ஷ்வாக்களின் மிதவாத மனப்பான்மையின் காரணமாக சோஷியலிஸம் வரும் என்கிறார்கள். பூர்ஷ்வா மிதவாதமே சோஷியலிஸத்தை ஈன்றெடுக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. அதனால் தான் மிதவாதிகளை விரோதிகளாகக் கருதி உறுதியான போராட்டம் நடத்தாமல், அவர்களைக் கொண்டே சோஷியலிஸ்ட் முடிவுகளைச் செய்யும்படி பின்னாலிருந்து உந்திவிடும் தந்திரத்தைக் கையாண்டார்கள். அதாவது மிதவாதமே சோஷியலிஸம், சோஷியலிஸமே மிதவாதம் என்னும் முறையில் குழப்பி எப்படியாவது அவர்களை ஏமாற்றுவது; எலக்ஷனில் மிதவாதிகளுக்கு எதிராக சோஷியலிஸ்ட் அபேட்சகர்களை நிறுத்தாது, வேறு பல தில்லுமுல்லுச் சூழ்ச்சிகளின் மூலமாக சோஷியலிஸ்ட் அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்படச்செய்வது முதலிய தந்திரங்களைக் கையாளுகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட அற்பத்தனமான சூழ்ச்சிகளால் அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். சோஷியலிஸத்தையே கறைப்படுத்துகிறார்கள் என்பதை அவர்கள் உணருவதில்லை.

"பேபியன்கள் பல உதவாக்கரை புத்தகங்களோடு நல்ல பிரசாரத்திற்கேற்ற ஒரு சில புஸ்தகங்களையும் பிரசுரித்திருக்கின்றனர். இத்துறையில் இங்கிலீஷ்காரர்களால் பிரசுரிக்கப்பட்டவைகளில் இவை மிகச் சிறந்தவை. ஆனால் காரியாம்சத்தில் நடைமுறையில் அநுஷ்டிக்க வேண்டிய தந்திரங்களைப் பொறுத்த வரையில், வர்க்கப் போராட்டம் சம்பந்தப்பட்ட வரையிலும் அவர்கள் மார்க்ஸையும் நம்மெல்லோரையும் நஞ்செனக வெறுக்கிறார்கள்."

பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் சரித்திராசிரியர்கள் கையாளும் சாஸ்திரரீதியான "நடு நிலைமைக்கு", பேபியன்

களின் மேற்குறித்த குணதிசயங்களே காரணமென்பது தெளிவாகிறது. "புரட்சியைக் கண்டஞ்சுவதே அவர்களின் கொள்கையாக இருக்கும்பொழுது" பேபியன்கள் மார்க்ஸை முட்ட முழுக்க வெறுத்ததில் ஆச்சரியமில்லை; ஏனெனில் மார்க்ஸ் புராலிடேரியட்டின் புரட்சியில் ஓர் ஆர்வமிக்க போர் வீரராகத் திகழ்ந்தார். பிரிட்டிஷ் பூர்ஷுவா பத்திரிகைகள் மார்க்ஸை "சிவப்பு பயங்கர டாக்டர்" (Red Terror Doctor) என்று அழைத்ததும் காரணமில்லாமல் அல்ல.

முதலாவது இண்டர்நேஷனலின் ஜெனரல் கவுன்ஸில், பல விதமான மனப்பான்மை யுள்ளோர்களைக் கொண்டதாக இருந்தது. தொழிலாளர் இயக்கம் சம்மந்தமான தத்துவங்களையும் பற்றிய பிரச்சினைகளிலும், அரசியல் பிரச்சினைகளிலும் சதா சர்வமும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் ஜெனரல் கவுன்ஸிலால், மார்க்ஸுக்கும் வெஸ்டனுக்கும் இடையே, "மதிப்பும், விலையும், லாபமும்" என்பதைப் பற்றி ஆரம்பித்து வைக்கப்பட்ட விவாதம் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

1864 நவம்பர் ஆரம்பத்தில் மார்க்ஸ், எங்கல்ஸுக்கு பின் வருமாறு எழுதினர்:

"முன்னர் ஓவனைப் பின்பற்றி வந்தவரும், இன்று தாமே ஒரு கைத் தொழில் முதலாளியாக (Manufacturer) இருப்பவருமான வெஸ்டன் பழகுவதற்கு ஒரு நல்ல மனிதர், வயது முதிர்ந்த கிழவர். அவர் ஒரு மிகக் குழப்பமான வழவழாத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்."

வசீகர மிக்க இந்த நல்ல மனிதர் மிகுந்த குழப்பத்தை உண்டாக்கினர். விவாதத்துக்குரிய இப்பிரச்சினையைபற்றி ஒரு விவாதத்துக்கு ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று ஜெனரல் கவுன்ஸில் முடிவு செய்தது. 1865 மே, 20-ந் தேதி மார்க்ஸ் எங்கல்ஸுக்கு பின் வருமாறு எழுதினர்:

"இன்றிரவு இண்டர்நேஷனலின் விசேஷக் கூட்டமொன்று நடைபெறும். வெஸ்டன் என்னும் ஒரு ஓவனிஸ்ட், ஒரு பழைய சாரணர், ஒரு பர்னிச்சர் வியாபாரி. அவர் இரண்டு விஷயங்களை இடைவிடாது வற்புறுத்துகிறர்.

(1) சம்பளத்தில் (கூலியில்) ஒரு பொதுவான விகிதத்தில் கூலி உயர்வு கொடுப்பதால் தொழிலாளிகளுக்கு எத்தகைய நன்மையுமில்லை.

(2) இத்தியாதி காரணத்தால் தொழிற் சங்கங்களால் தீமை ஏற்படும்.

"நமது சொசைடியின் அங்கத்தினர்களில் இவர் ஒருவர் மட்டும்தான் இவ்விரு சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார். இதை ஒப்புக்கொள்ளுவதாயின், நமது ஸ்தல தொழிற் சங்கங்கள் விஷயத்திலும், இன்று இக்கண்டம் முழுதுமே பரவிவரும் ஸ்ட்ரைக்குகளின் விஷயத்திலும் நாம் மிகுந்த சங்கடமான நிலைமைக்கு ஆளாவோம்.

"இந்த மீட்டிங்கில் மெம்பரல்லாதவருங்கூட அநுமதிக்கப் படுவார்களாதலால் இந்த சந்தர்ப்பத்தில் — ஏற்கனவே இதே மாதிரியான கருத்துடன் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்ட ஒரே ஒரு இங்கிலீஸ்காரருடைய ஆதரவும் அவருக்கு (வெஸ்டனுக்கு) கிடைக்கும். அவரது வாதத்திற்கு நான் எதிர்வாதம் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

"நான் என்ன வாதிக்க வேண்டுமென்பது எனக்கு முன்னரே தெரியும்:

1. பொருள்களின் (பண்டங்களின்) மதிப்பை கூலிதான் நிர்ணயிக்கிறது.

2. முதலாளிகள் இன்று நான்கு ஷில்லிங்குகளுக்குப் பதிலாக ஐந்து ஷில்லிங்குகள் (கூலி) கொடுப்பார்களானால் நாளைக்கு அவர்கள் பண்டங்களை விற்கும்பொழுது நான்கு ஷில்லிங்குகளுக்குப் பதிலாக ஐந்து ஷில்லிங்குகளுக்கு விற்பார்கள். (அதிகப் படியான தேவையின் பயனாக அவர்களால் அவ்வாறு விற்க முடியும்)."

மார்க்ஸுக்கும், வெஸ்டனுக்குமிடையே நடந்த விவாதத்தை ஜெனரல் கவுன்ஸிலின் நிகழ்ச்சிக் குறிப்பில் பின்வருமாறு குறிக்கப்பட்டிருக்கிறது:

"1865 மே, 30-ந் தேதி கூலியைப் பற்றிய தமது சித்தாந்தத்தை வெஸ்டன் வாசித்தார். மார்க்ஸ் அதைப் பற்றிய தமது அபிப்பிராயத்தைக் கூறினார்; அது வெஸ்டன் கூறிய கருத்துக்கு மாறுபட்டிருந்தது. 1865 ஜூன், 27-ந் தேதி வெஸ்டன் கேட்டுக்கொண்டதற்கிணங்க கூலியைப் பற்றிய தமது கருத்தை மார்க்ஸ் படித்துக் காட்டினார். வெஸ்டனும், மார்க்ஸும் கூறிய கருத்துகளைப்பற்றி 1865 ஜூலை, 4-ந் தேதி யன்று ஒரு வாதப் பிரதிவாதம் (Debate) நடந்தது."

இந்த வாதப் பிரதிவாதங்களைப் பற்றிய முழுவிபரங்கள் இல்லாதிருப்பது வருந்தத்தக்க விஷயம். எனினும் இந்த மீட்டிங்குகளில் மார்க்ஸ் என்ன கூறினர் என்பது நமக்குத் தெரியும். மதிப்பும், விலையும், லாபமும் என்ற விஷயத்தைப்பற்றி ஜெனரல் கவுன்ஸிலுக்கு அவர் கொடுத்த ரிப்போர்ட், மூலதனத்தின் முதல் பாகத்தில் இதே விஷயத்தைப்பற்றிய (மதிப்பும், விலையும், லாபமும்) அத்தியாயத்தில் காணப்படுவதைப் போன்றதுதான். வெஸ்டனுடைய அபிப்பிராயங்களைப்பற்றி மார்க்ஸ் தமது முடிவான கருத்தை கீழ்க்கண்டவாறு கூறினர்.

முதலாவதாக, தேசிய பொருளுற்பத்தியானது, நிர்ணயமாக வரையறுக்கப்பட்ட விஷயம்; கணித நிபுணர்கள் கூறுவது போல அது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அல்லது அளவைக் கொண்டது; நிரந்தரமாக ஒரே மாதிரியான அளவைக் கொண்டது. இரண்டாவதாக, உண்மையான கூலியின் அளவு, அதாவது அந்தக் கூலியைக்கொண்டு எவ்வளவு பொருள்களை வாங்க முடியும் என்பதை அளவு கோலாகக்கொண்டு பார்க்கும்பொழுது அந்த உண்மையான கூலியும் நிரந்தரமாக ஒரே மாதிரியான அளவைக் கொண்ட தொகையேயாகும்." சுருங்கக்கூறின் வெஸ்டனின் கருத்து இதுதான்."

இந்தச் சிறிய தத்துவம் மதிப்பிடற்கரிய அரசியல் முடிவுகளைக் கிளப்பியது. கூலியைக் குறைப்பதினாலோ அல்லது உயர்த்துவதினாலோ கூலியில் ஏற்படும் மாறுதலானது தொழிலாளிகளின் வாழ்க்கைத் தரத்தை எந்த விதத்திலும் பாதிப்பதில்லையென்றால், தொழிற் சங்கங்களை அமைப்பதிலும், ஸ்ட்ரைக்குகளுக்குத் தயாரிப்பதிலும் மற்றும் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவதிலும் ஏன் வீணாக பணத்தையும் சக்தியையும் விரையமாக்கவேண்டும்? நாம் ஏற்கனவே கண்ட லாஸ்ஸேலின் சாசுவத சம்பள நியமம்தான் இங்கும் பிரிட்டிஷ் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் என்ற புதிய மேதையின் போர்வையில் காட்சி யளிக்கின்றது. "இன்று வெஸ்டன் நமக்குப் படித்துக் காட்டிய விஷயத்தை அவர் ஒரு சின்னஞ்சிறு சிமிழியில் அடைத்து வைத்திருக்க வேண்டும்" என்று மார்க்ஸ் தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார். ஆனால், வெஸ்டனின் இந்தக் தத்துவத்தை மார்க்ஸ் அலசி ஆராய, ஆராய அந்தச் சின்னஞ் சிறு சிமிழியுங்கூட காலிச் சிமிழியாக இருப்பதாகவே தோன்றியது. அன்பு மிக்க அக்கிழவர் வெஸ்டனால் பெரிதும் ஆதரிக்கப்பட்ட

முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் பல்வேறு குண தோஷங்களைப்பற்றி மார்க்ஸ் விரிவாக அலசி ஆராய்ந்து கீழ்க் கண்ட தத்துவரீதியான முடிவுகளையும், நடைமுறைத் திட்ட முடிவுகளையும் எடுத்துக் கூறினார் :

"ஒன்று; ஒரு பொதுவான கூலி உயர்வின் காரணமாக, பொதுவான லாப விகிதத்தில் வீழ்ச்சி ஏற்படும்; ஆனால் அத்தகைய கூலி உயர்வால் பெரும்பாலும் பண்டங்களின் விலைகள் பாதிக்கப்படமாட்டாது.

இரண்டு. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பொதுவான போக்கால், சராசரிக் கூலித் தரம் குறைகிறதே யொழிய, உயரவில்லை.

மூன்று. மூலதனத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் தளங்களாகவே தொழிற்சங்கங்கள் வேலை செய்கின்றன. அவை தங்கள் சக்தியை, எந்த சந்தர்ப்பத்தில் எப்படி உபயோகிக்கவேண்டும் என்ற சரியான நிர்ணயிப்பு இல்லாமல் உபயோகிப்பதாலேயே சிற்சில சமயங்களில் தோல்வியடைகின்றன. தங்களின் ஒன்றுபடுத்தப்பட்ட கட்டுப்பாடான சக்தியை ஒரு சாதனமாகக் கொண்டு, தொழிலாளி வர்க்கத்தின் இறுதியான விடுதலைக்காக, அதாவது கூலித் திட்டத்தையே அடியோடொழிப்பதற்காகப் போராடுவதைவிட்டு, இன்றைய நடைமுறை சமூக அமைப்பையே அடியோடு மாற்றுவதற்குப் பாடுபடுவதைவிட்டு, அந்த நடைமுறை சமூக அமைப்பின் விளைவுகளை எதிர்த்து கொரில்லாப் போராட்டம்மட்டும் நடத்துவதாலேயே தொழிற்சங்கங்கள் பெரும்பாலும் தோல்வியடைகின்றன."

மார்க்ஸ் இறந்து 50 வருஷங்கள் ஆகிவிட்டபோதிலும் (இப்பொழுது 63 வருஷங்களாகிவிட்டன) அவர் அன்று வெஸ்டனின் தத்துவத்துக்களித்த பதிலைப்பற்றி நாம் விசேஷ விமர்ஸனம் செய்யவேண்டிய அவசியமேயில்லை; ஏனெனில் மார்க்ஸின் கருத்துக்கள் மூன்று கோடிக்கணக்கான மக்களின் ஆஸ்தியாக ஆகிவிட்டது. ஆனால், தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்களுக்கு சர்வ சாதாரணமாக ஐயந்திரிபறத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டிய இப்படிப்பட்ட விஷயத்தைப்பற்றி, இண்டர்நேஷனலின் தலைமையினுள்ளேயே விவாதிக்க நேர்ந்தது, மார்க்ஸுக்கு எவ்வளவு சங்கடமான காரியமாயிருந்திருக்கவேண்டும் என்பதை யூகித்துப்பாருங்கள். வெஸ்டனின் தத்துவத்திற்கு இத்தகைய விஞ்ஞான ரீதியான, விளக்கமான பதிலை அப்

பொழுது மார்க்ஸ் கொடுத்தார் என்றால், அக்காலத்தில் இந்தப் பிரச்சினையைப்பற்றி எல்லா நாடுகளிலும் சந்தேகங்களும் குழப்பங்களும் தாறுமாறான பல்வேறு தவறான கருத்துக்களும் நிலவி வந்ததே அதற்குக் காரணம்.

இங்கிலேயில் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களில் பெரும்பகுதி இத்தகைய விஷயங்களைப்பற்றிக் கவலைகொள்ளாததில் ஆச்சரியமில்லை; முதலாவது இண்டர்நேஷனல் யாரையும் கட்டுப்படுத்தாது, யாரும் அதற்குக் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை என்றே அவைகள் கருதின. தொழிற்சங்கத் தலைவர்களும், சார்டிஸ்ட் இயக்கமும் நாளுக்குநாள் அரசியலில் மங்கிக்கொண்டு வருவதையும், தொழிற்சங்கங்களைத் தங்களிஷ்டப்படி ஆட்டி வைக்கும் கைப்பாவைகளாக்குவதில் பூர்ஷுவாக்கள் வெற்றியடைந்துவருவதையும், பூர்ஷுவா கட்சிகளின் தொங்குசதையாகத் தொழிற்சங்கங்களை மாற்றுவதில் முதலாளித்துவம் வெற்றியடைந்துவருவதையும் மார்க்ஸும் எங்கல்ஸும் கண்கூடாகக் கண்டனர். அதனால்தான் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத் தலைமையை அவர்கள் மிக வன்மையாகக் கண்டித்தனர். சார்ட்டிஸ்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவர் முதலாளி-தொழிலாளிகளுக்கிடையே சமரஸப்பான்மை வேண்டும் என்று பிரசாரம் செய்த ஒரு சந்தர்ப்பத்தைப்பற்றி 1857 நவம்பர் 24-ந் தேதி எங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு மார்க்ஸ் கூறுகிறார்:

"ஜோன்ஸ் இங்கு அற்பத்தனமான காரியங்களைச் செய்து வருகிறார். நெருக்கடி ஏற்படுவதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே, சமாதானமான காலத்தில் ஏதாவது கிளர்ச்சி செய்வதற்கு ஒரு சாக்கு வேண்டுமென்பதற்காகவே சார்ட்டிஸ்ட் மகாநாட்டைக் கூட்டத் திட்டமிட்டார் என்பது உங்களுக்குத் தெரியும்.... ஆனால், இப்பொழுதேற்பட்டிருக்கும் நெருக்கடியை ஒரு நல்ல சந்தர்ப்பமாக உபயோகித்துக்கொண்டு, ஏற்கெனவே ஏதாவது ஒரு கிளர்ச்சி செய்யச் சாக்கு வேண்டுமென்பதற்காக அரைகுறையாகத் திட்டமிட்ட அந்த மகாநாட்டையே, ஒரு உண்மையான, பயனளிக்கத்தக்க கிளர்ச்சி செய்வதற்கு ஏற்றமுறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக, தமது முட்டாள்தனமான போக்கில் இறங்கியிருக்கிறார்; முதலாளித்துவத்துடன் சமரஸப்பான்மை கொள்ளவேண்டுமென்று உபதேசம்செய்து தொழிலாளிகளை திடுக்கிடச்செய்துவருகிறார்."

ஜோன்ஸ் அடித்த இந்த பல்டியில் மார்க்ஸ்ஸூம் எங்கல்ஸூம் மிகுந்த கவனஞ் செலுத்தினார்கள். 1858 அக்டோபர் 7-ல் எங்கல்ஸ் மார்க்ஸுக்கு பின்வருமாறு எழுதினார்:—

"ஜோன்ஸைப்பற்றிய கதை மிகவும் வெறுக்கத்தக்கதாயிருக்கிறது. பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கம் ஒரு புதிய ஜீவனுள்ள ரூபத்தில் மலரவேண்டுமானால் அதன் பழைய பரம்பரையான சார்ட்டிஸ்ட் உருவம் முதலில் அடியோடு ஒழிந்தாகவேண்டும் என்ற முடிவுக்குத்தான் இக்கதையைக் கேட்டவர்கள் வரவேண்டியிருக்கும்.... தவிர, ஏற்கனவே இதற்குமுன் இத்தகைய கூட்டுறவை ஏற்படுத்துவதில் ஏகதேசமாக வெற்றிகரமான முயற்சிகள் செய்த அதே ஜோன்ஸ் மறுபடியும் அத்துறையில் புதிய முயற்சி எடுப்பதானது, பிரிட்டிஷ் புராலிடேரியட் நாளுக்குநாள் மேலும் மேலும் பூர்ஷுவா மனப்பான்மையில் வளர்ந்துவருவதுடன் சம்மந்தப்பட்ட விஷயமாகும். எல்லா நாடுகளைக்காட்டிலும் பூர்ஷுவாமுறையில் வளர்ந்துள்ள இந்த நாடு (இங்கிலாந்து) கடைசியில் பூர்ஷுவாக்களுடன்கூடவே, பூர்ஷுவா அதிகாரவர்க்கமும், பூர்ஷுவா புராலிடேரியட்டும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறதுபோலும்! உலக முழுவதையுமே சுரண்டிக் கொழுக்கும் ஒரு நாட்டுக்கு இது இயற்கையே!"

புராலிடேரியட்டின்பேரில் பூர்ஷுவாக்களுக்குள்ள செல்வாக்கைப்பற்றியும், பிரிட்டிஷ் தொழிலாளிகளிடையே பூர்ஷுவா மனோபாவம் வளர்ந்துவருவதற்கான காரணங்கள் என்ன என்பதைப்பற்றியும் எங்கல்ஸ் ஏற்கனவே இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இப்பிரச்னையைப்பற்றி மார்க்ஸூம் எங்கல்ஸூம் அடிக்கடி குறிப்பிட்டுள்ளனர்.

1878 பிப்ரவரி 11ல் மார்க்ஸ், லீப்னெக்ட் என்பாருக்கு எழுதுகிறார்:

"1848-க்குப்பின் எங்கும் ஊழல் மண்டிக்கிடந்தது, அக்காலத்தில் இங்கிலாந்து தேசத் தொழிலாளிவர்க்கம் சிறிது சிறிதாக மேலும் மேலும் சோர்வடைந்து கடைசியில் அவர்களை அடிமைப்படுத்திவைத்துள்ள முதலாளிகளின் கட்சியான "மகத்தான" லிபரல் கட்சியின் கைப்பொம்மைகள் எனத் தகுமளவுக்கு மாறிவிட்டார்கள். இங்கிலாந்து தொழிலாளிவர்க்கத்தின் தலைமை முழுதுமே ஊழல் மலிந்த தொழிற்சங்கத் தலைவர்களின் கைக்கு, சுயநலக் கிளர்ச்சிக்காரர்களின் கைக்கு மாறிவிட்டது."

பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின், தொழிலாளரியக்கத்தின் புரட்சிகரமான போக்கில் வீழ்ச்சி ஆரம்பித்த காலத்தை மார்க்ஸ் மேற்கண்டவாறு வரையறுத்துக் கூறினர்.

சார்ட்டிஸ்ட் இயக்கத்தின் வீழ்ச்சிக் காலத்திலேயே இதுவும் நடந்தது.

முதலாவது இண்டர்நேஷனலை ஆரம்பிப்பதைப்பற்றி சில தொழிற்சங்கங்கள் உண்மையான அனுதாபத்துடன் நோக்கின; ஆனல் மற்றவைகளோ, ஆரம்பத்திலிருந்தே ஸ்ட்ரைக் காலங்களில் உருப்படியான பொருளுதவி கிடைக்கத்தக்க ஒரு சாதனமாகவே இண்டர்நேஷனலை மதித்தன. 1865 பிப்ரவரி 25ல் மார்க்ஸ் எங்கல்ஸுக்கு எழுதியதைப் பாருங்கள்:

"லண்டன் தொழிற்சங்கங்களைப் பொருத்தவரையில், ஒவ்வொருநாளும் தொழிற்சங்கங்கள் இண்டர்நேஷனலில் சேருகின்றன; ஆகவே நாம் விரைவில் ஒரு சக்தியாக வளரமுடியும். ஆனல் இனிமேல் பல கஷ்டங்களும் ஆரம்பமாகும்."

அக்கஷ்டங்கள் என்ன? இண்டர்நேஷனலில் சேர்ந்துவிட்டதாலேயே, அத் தொழிற்சங்கங்கள் எல்லாம் முதலாவது இண்டர்நேஷனலின் கொள்கைகளைப் பூரணமாக ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடவில்லை. இந்த விஷயத்தை மார்க்ஸ் நன்கு உணர்ந்திருந்தபோதிலுங்கூட, சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் தொழிற்சங்கங்கள் சேருவதற்கு விசேஷ முக்கியத்துவம் கொடுத்தார். 1866 ஜனவரி 15ல் அவர் கூகல்மானுக்கு பின்வருமாறு எழுதினர்:

"இதுவரை கூலிப் பிரச்சினைகளில் மட்டுமே கவனஞ் செலுத்திவந்த இங்கிலீஷ் தொழிற்சங்கங்களை, ஒரு உண்மையான பெரிய தொழிலாளர் ஸ்தாபனத்தை நமது இயக்கத்தினுள் ஆக்ரஷிப்பதில் நாம் வெற்றிபெற்றுவிட்டோம்."

எனினும் இதுவே தொழிற்சங்கங்களின் முடிவல்லவென்றும், தொழிற்சங்கத் தலைவர்களுடன் தகராறு ஏற்படுவதைத் தடுக்க முடியாதென்றும் மார்க்ஸ் உணர்ந்தார். ஸ்ட்ரைக் காலங்களில் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்திலிருந்து உதவி கிடைக்கக்கூடுமென்று பிரிட்டிஷ் தொழிற்சங்களிடையே ஒரு வதந்தி பரவியதால், அதுவரை சோஷியலிஸத்துடன் எத்தகைய சம்மந்தமுமில்லாத சில தலைவர்கள் இண்டர்நேஷனலில் சேர ஓடோடியும் வந்தார்கள். 1867 செப்டம்பர் 11ல் மார்க்ஸ் எங்கல்ஸுக்கு எழுதுகிறார்:

"முன்னர் நாம் அமிதமான சலுகைகள் காட்டியதால், பிரிட்டிஷ் தொழிற்சங்கவாதிகளான அயோக்கியர்கள் பலர் இன்று நம்மைத் தேடி ஓடிவருகிறார்கள்."

அவர்கள் எதற்காக ஓடிவந்தார்களென்பது தெளிவாகிவிட்டது. உருப்படியான பொருளுதவி கிடைக்குமென்பதற்காகவேயொழிய வேறல்ல. இங்கிலீஷ் தொழிற்சங்கத் தலைவர்களை மார்க்ஸ் எவ்வளவுதூரம் வெறுத்தார் என்பதை அவர் கூகல்மானுக்கு எழுதிய கடிதத்தில் காணப்படும் கீழ்க்கண்ட வாசகத்திலிருந்து அறியலாம்:

"இங்கிலாந்தில் இச்சமயத்தில் கிராமாந்திரத் தொழிலாளர் இயக்கத்தில்தான் சிறிது முன்னேற்றம் காணப்படுகிறது. யந்திரத் தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் முதலில் இன்றைய தலைவர்களைத் தொலைத்துத் தலைமுழுகவேண்டும். ஹேக் காங்கிரஸில் நான் அவர்களைக் கண்டித்து பேசியபொழுது அதனால் எனக்குக் கெட்ட பெயர் ஏற்படும்; வீணான அவதூறுகளுக்கும் உள்ளாவேன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அம்மாதிரி விஷயங்களை நான் என்றுமே பொருட்படுத்திக் கொண்டதில்லை. நான் அவ்வாறு அன்று கண்டித்துப் பேசும்பொழுது எனது கடமையைத்தான் செய்தேன் என்பதை இப்பொழுது சிற்சில இடங்களில் மக்கள் உணரத் தலைப்பட்டுவிட்டனர்."

இங்கிலாந்து தேசத் தொழிற்சங்கங்களின் இத்தகைய நிலைமைக்குக் காரணம் என்ன? தொழிலாளிகளில் பெரும்பாலான பகுதிகள் மேலும் மேலும் முதலாளித்துவ மனப்பான்மையடைந்துவருவது எதனால்?

பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் குணாதிசயங்களைக் குறித்து எங்கல்ஸ் எழுதிய நூல்களில் பல பக்கங்கள் ஒதுக்கியிருக்கிறார். 1878 ஜூன் 17ல் செர்ன்ஸ்டீன் என்பாருக்கு எங்கல்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்:

"பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கம் இன்று மாத்திரமல்ல, கடந்த பல வருஷங்களாகவே, கூலிஉயர்வு, குறைந்த வேலைநேரம் ஆகியவற்றுக்காக மட்டும் ஸ்ட்ரைக்குகளை நடத்தும் குறுகிய பாதையில் வேலைசெய்து வந்திருக்கின்றன; ஆனால் அதற்கான பரிகாரத்தைக் காணவில்லை. தவிர, இந்த ஸ்ட்ரைக்குகளை பிரசாரத்துக்கும், ஸ்தாபன வளர்ச்சிக்கும் அடிகோலும் ஒரு சாதனமாகவோ, உசிதமான வழியாகவோ கருதப்படவில்லை;

அதற்கு மாருக அவையே இறுதி லக்ஷியமாகக் கருதப்பட்டன. எல்லா அரசியல் நடவடிக்கையும் தத்துவரீதியில் தொழிற்சங்கங்கள் புறக்கணிக்கின்றன ; அதற்கேற்பவே அவற்றின் சட்ட திட்டங்களுமிருக்கின்றன. ஆகவே, தொழிலாளிவர்க்கம், ஒருவர்க்கம் என்ற முறையில் எத்தகைய பொதுவான நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொள்வதையும் அங்கீகரிப்பதில்லே. அரசியல் ரீதியாகப் பார்த்தால் தொழிலாளிகள் கன்சர்வேடிவ்களாகவும், மிதவாதிகளாகவும் ; டிஸ்ரெலி (பீகன்ஸ் பீல்ட்) மந்திரிசபையை ஆதரிப்பவர்களாகவும், கிளாஸ்டன் மந்திரிசபையை ஆதரிப்பவர்களாகவும் பிரிந்துகிடக்கின்றனர். ஆகவே, இங்கு ஸ்ட்ரைக்குகள் நடத்துவதைப்பற்றி மாத்திரம்தான் தொழிலாளர் இயக்கம் எனக் கூறமுடியும். ஆனல் ஸ்ட்ரைக்குகள், வெற்றிபெற்ருலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி, அவற்ருல் இயக்கத்தை வளர்த்து தொழிலாளிவர்க்கத்தை அடுத்த அடிக்கு அழைத்துச் செல்லமுடியாது. சென்ற பொருளாதார மந்தகாலத்தின் கடைசி வருஷங்களில், தொழிற்சாலேகளே மூடுவதற்கு ஒரு சாக்கு வேண்டுமென்பதற்காக முதலாளிகளாகவே ஸ்ட்ரைக்குகளே உண்டாக்கினுர்கள். அப்படிப்பட்ட ஸ்ட்ரைக்குகளின் பயனுக தொழிலாளிவர்க்கம் ஒரு அடிகூட முன்னேறவில்லே. இந்த ஸ்ட்ரைக்குகளே உலக சரித்திரம் காணுத மகத்தான போராட்டங்களென வர்ணிப்பது, இவற்றைப்பற்றி பாராட்டிப் போற்றிப் பேசுவது இவற்ருல் தீமைதான் விளேயும் என்பது என் அபிப்ராயம். இன்று ஐரோப்பாக் கண்டத்தில் நிலவும் அர்த்தத்தின்படி இங்கு ஒரு இயக்கமே இல்லே என்கிற விஷயத்தில் நாம் அசிரத்தை காட்டி மௌனஞ் சாதிக்க முடியாது.''

இந்தப் பிரச்சினேயைப்பற்றி எங்கல்ஸ் மறுபடியும் பிரஸ்தாபிக்கிருர். அடிமை நாடுகள் சம்மந்தமாக அநுஷ்டிக்கப்படும் கொள்கையைப்பற்றி இங்கிலீஷ் தொழிலாளிகளின் அபிப்ராயம் என்ன என்று காட்ஸ்கி எங்கல்ஸைக் கேட்டதற்கு, அவர் தமது 1882 செப்டம்பர் 12-ந் தேதிய கடிதத்தில் பின்வருமாறு பதிலளிக்கிருர் :

''பொதுவாக அரசியலேப்பற்றி அவர்கள் என்ன நினேக்கிருர்களோ அப்படித்தான் இந்தப் பிரச்சினேயைப்பற்றியும் நினேக்கிருர்கள்; பூர்ஷுவாக்கள் என்ன நினேக்கின்ருர்களோ, அதைத்தான் அவர்களும் நினேக்கிருர்கள். ஏனெனில் இங்கு தொழிலாளிகளின் கட்சி இல்லே; கன்சர்வேடிவ் கட்சியும் மிதவா

தக் கட்சியும்தான் இங்கிருக்கின்றன. உலகச் சந்தையிலும், அடிமைநாட்டு மார்க்கெட்டுகளிலும் பிரிட்டிஷாருக்குள்ள ஏக போக உரிமை ஆதிக்கத்தின் காரணமாக அவர்களும் அந்தக் கொள்கையையே ஆதரிக்கிறார்கள்."

பிரிட்டனுக்கு இத்தகைய அந்தஸ்து ஏற்பட்டதற்கான காரணங்கள் என்றென்றும் இருக்கமுடியாது. உலக மார்க்கெட்டில் இங்கிலாந்து வகிக்கும் விசேஷ ஸ்தானத்துக்கு ஒரு முடிவு ஏற்பட்டுத்தான் தீரவேண்டும். உலக மார்க்கெட்டில் இங்கிலாந்துக்கு இருக்கும் ஏகபோக உரிமை ஆதிக்கம் ஒழிந்தால்தான் அந்நாட்டுத் தொழிலாளி இயக்கம் அரசியல் ரீதியில் தீவிரமான முன்னேற்றத்தையடைய முடியும் என்று எங்கல்ஸ கருதினார். 1883 ஆகஸ்ட் 20ல் பெபல் என்பாருக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதத்தில் கூறுகிறார்.

"உலகத்தில் பிரிட்டிஷாரின் ஏகபோக ஆதிக்கம் தகர்ந்து விட்டதென்று தொழிலாளர்கள் உணரத் தொடங்கிய பின்னர் தான் ஒரு உண்மையான தொழிலாளி வர்க்க இயக்கம் இங்கு வளர்ச்சியடையும். எதிர்பாராத ஏதேனும் விசேஷ சம்பவங்கள் ஏற்பட்டாலொழிய இது தவிற வேறு வழியில்லை. பிரிட்டிஷ் தொழிலாளர்களின் அரசியல் பிற்போக்குக்கு, உலக மார்க்கெட்டின் ஆதிக்கத்தில் அவர்களும் பங்கெடுத்துக்கொள்ளும் பொருளாதார அடிப்படையே காரணமாக இருந்தது. இன்னும் அது தான் காரணம். இந்த ஏகபோக உரிமை ஆதிக்கத்தைக்கொண்டு பொருளாதாரச் சுரண்டல் நடத்தும் பூர்ஷ்வாக்களின் வாலைப் பிடித்துக்கொண்டே அவர்கள் வந்தார்கள்; பூர்ஷ்வாக்கள் அடிக்கும் லாபக் கொள்ளையில் பங்கும் பெறுகிறார்கள். எனவே தங்களுக்குச் சில துண்டு துக்காணிகளை வீசி, தொழிற்சங்கத்தையும் வேலைநிறுத்த உரிமையையும் அங்கீகரித்திருக்கும் "மகத்தான மிதவாதக் கட்சியின்" வாலைப் பிடித்துக்கொண்டே அவர்களின் அரசியல் கண்ணோட்டமும் இயற்கையாகச் செல்கிறது. மேலும் வரையறையற்ற வேலைநேரத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் விட்டுக்கொடுத்து, உயர்ந்த சம்பளம்பெறும் தொழிலாளிகளில் பெரும்பகுதிக்கு ஓட்டுரிமையுமளித்துள்ள பூர்ஷ்வாக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே அவர்களின் அரசியல் கண்ணோட்டம் செல்வதில் ஆச்சரியமில்லை. ஆனால் அமெரிக்காவும் மற்ற யந்திரத் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளின் கூட்டான போட்டியுமாகச் சேர்ந்து இந்த ஏகபோக உரிமையை உடைக்

குமேயானல், (இரும்பைப் பொறுத்தவரையில் இதற்கு நாள் நெருங்கிவிட்டது; ஆனல் துரதிர்ஷ்டவசமாக பருத்தி விஷயத்தில் விஷயம் அப்படியில்லை) இங்கு வேறுவிதமாக விஷயங்கள் உருவாவதைக் காணலாம்.

எங்கல்ஸ் மிகச்சரியானபடி தீர்க்கதரிசனத்துடன், இங்கிலாந்து தேசத் தொழிலாளர் இயக்கத்தில் தீவிரமான மாறுதல் ஆரம்பிக்கக்கூடிய காலத்தைக் கணித்தார். அதே சமயத்தில் சாதாரண ஜனங்களிடையே இங்கிலீஷ் ஏகபோக உரிமை எவ்வளவுதூரம் வேரூன்றி நிற்குமென்பதையும், உலகமார்க்கெட்டில் டஜன்கணக்கான வருஷங்களாக இங்கிலாந்துக்கு இருந்துவந்த ஏகபோக உரிமை அந்தஸ்தின் காரணமாக அதை எதிர்த்து வெற்றிபெற தொழிலாளி வர்க்கத்திற்கு எவ்வளவு காலம் பிடிக்கும், அதற்காக எவ்வளவு மகத்தான விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும்கூட எங்கல்ஸால் முன்கூட்டியே தெளிவாக உணரமுடிந்தது. தொழிற் சங்கங்களின் தலைவர்கள் அன்று மட்டுமல்ல, இன்றுங்கூட பூர்ஷுவாக் கட்சிகளின் கைப் பொம்மைகளாகவே, தொங்குசதைகளாகவே இருப்பதோடல்லாமல், வளர்ந்துவரும் புரட்சிகரமான தொழிலாளரியக்கத்தின் பரம விரோதிகளாக இன்று மாறியிருக்கிறார்கள். 1882 டிஸம்பர் 8 ல் எங்கல்ஸ் மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தில் பின்வரும் ருசிகரமான விஷயத்தை தெரிவித்திருக்கிறார்,

"தொழிற்சங்க தூதுகோஷ்டியைப்பற்றி: பாஸ்ஸிபிளிஸ்டு* களின் மீட்டிங்கில் பிரஞ்சுக்காரர்கள் அவர்களைக் கௌரவிக்கும் முறையில் "மார்ஸெல்ஸ்" கீதம் (பிரெஞ்சுக் குடியரசின் தேசீய கீதம்) பாடியபொழுது கனம். ஷிப்டனும் அவரது கோஷ்டியும் தாங்களும் பதிலுக்குப் பாடவேண்டுமென்று கருதினார்கள்.

---

* பாஸ்ஸிபிளிஸ்டுகள் தொழிற்சங்க சீர்திருத்தவாதிகள்; வர்க்கப் போராட்டமில்லாமலேயே, சமூக அமைப்பை மாற்றமுடியுமென்று கருதினர்கள்.

இருநாட்டு தொழிற்சங்கவாதிகள் கூடும்பொழுது, பிரெஞ்சு தொழிற்சங்கவாதிகள் தேசீயப் புரட்சி கீதமான 'மார்ஸேல்ஸை' பாடுகின்றனர்; ஆனல் பிரிட்டிஷ் தொழிற்சங்கவாதிகள் மன்னர் பெருமானை வாழ்த்தும் கீதத்தை பாடுகின்றனர். பிரிட்டிஷ் தொழிற்சங்க தலைவர்களுக்கு பூர்ஷுவா அமைப்பின் பாதுகாவலனிடம் எவ்வளவு பக்தி.

உடனே "கடவுள் மகாராணியைக் காப்பாராக" என்று பாட ஆரம்பித்துவிட்டார்கள். (!)"

இங்கிலேயில், தொழிற்சங்கங்கள் தங்கள் சரித்திரரீதியான கடமைகளைச் செய்வதிலிருந்தும் தவறி அவற்றை மேலும்மேலும் தவருன பாதையில் நடத்திவந்த தொழிற்சங்கத் தலைவர்களை மார்க்ஸும் எங்கல்ஸும் வெறுத்ததில் ஆச்சரியமில்லை. இங்கிலாந்து தேச நவீன தொழிற்சங்க இயக்கத்தையும்; அது பின்தங்கி நிற்பதற்கான காரணங்கள் என்ன என்பதையும்: அதைப் பிற்போக்கிலிருந்து திருத்துவதற்கான முறைகளைப்பற்றியும் நன்ருக அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புவோர், பிரிட்டிஷ் புராலிடேரியட்டின் பூர்ஷுவா மனப்பான்மையைப்பற்றியும்; தொழிற்சங்கங்களின் ஆரம்பதினத்தைப்பற்றியும்; எப்படி அவை வளர்ச்சியடைந்தன என்பதைப்பற்றியும் மார்க்ஸிஸத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் என்ன எழுதினுர்கள் என்பதைக் கவனமாகப் படிக்கவேண்டும்.

## ஐந்தாவது அத்தியாயம்

# பிரஞ்சுத் தொழிலாளர் இயக்கமும் மார்க்ஸூம்

பிரஞ்சு சோஷியலிஸம் மார்க்ஸிஸத்தின் தோற்றுவாய்களில் ஒன்று என்பது நன்கறிந்த விஷயமே. பிரஞ்சு சோஷியலிஸத்திலிருந்து மார்க்ஸ் எதை எடுத்துக்கொண்டார்? என்னென்ன புதிய விஷயங்களை அதனுடன் அவர் சேர்த்தார்? 1789ம் வருஷத்திய மாபெரும் புரட்சியிலிருந்து பிரஞ்சுப் புரட்சிகளைப்பற்றி மார்க்ஸ் நுணுக்கமாக ஆராய்ந்தார். வேலைநிறுத்தங்கள், கலகங்கள், பிரஞ்சு பிராலிடேரியட்டுகளின் பொதுஜனப் போராட்டங்கள் முதலிய வர்க்கப் போராட்டங்களும், தொழிலாளி—விவசாயப் பொதுமக்களின் எல்லா இயக்கங்களும் (சோஷியலிஸ்ட்—கற்பனாவாதிகள், கம்யூனிஸ்டுகள், கற்பனாவாதிகள், பிளாங்கிஸ்ட்கள், மியூசுவலிஸ்ட்கள். பாஸ்ஸிபிலிஸ்ட்கள், மார்க்ஸிஸ்ட்கள் முதலிய) வெவ்வேறு சோஷியலிஸ்ட் முறைகளில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதையும் துல்லியமாக ஆராய்ந்தார் மார்க்ஸ். "கலோன் கம்யூனிஸ்ட் விசாரணை"க்கு முகவுரை எழுதுகையில், தாமும் மார்க்ஸூம் கம்யூனிஸ்ட் யூனியனுக்கு தலைமை தாங்கி நடத்துவதில் மார்ட்டின் உதாரணத்தைப் பின்பற்றி வந்ததாக எங்கல்ஸ் கூறுகிறார். இறுதிவரை தொடர்ச்சியாக உறுதியுடன் பூர்ஷுவா புரட்சிக்காரரான இந்த மாரட், தனது இரும்புபோன்ற மனவுறுதியாலும், புரட்சிகரமான வளைந்துகொடுக்காத தன்மையாலும், புரட்சிகரமான அச்சமற்ற தன்மையாலும் மார்க்ஸையும் எங்கெல்ஸையும் பெரிதும் ஆக்ரஷித்தான். மிகச் சிறந்த பூர்ஷுவா புரட்சிக்காரர்களின் அனுபவத்தைக்கொண்டு, புராலிடேரியட் புரட்சிக்காரர்கள் இவ்வாறு தான் பண்பட்டார்கள்.

பிரஞ்சு பூர்ஷுவா புரட்சிகளைப்பற்றி ஆராய்ந்து, பூர்ஷுவாக்கள் தொழிலாளிகளை எப்படி பலி ஆடுகளாக உபயோகித்

தார்கள், ஒவ்வொரு புரட்சியும் முடிந்தபின்னர் உழைப்பாளி மக்களை ஒடுக்குவதற்கு புதிய அரசாங்க யந்திரங்களையும் பழைய சர்க்கார் யந்திரங்களையும் எப்படி பிரயோகித்தார்கள் என்பதை தமது இயற்கையான சக்திகரமான முறையில் விளக்கிக்காட்டினார். பாபோப் (Boblef) செயிண்ட் ஸைமன், போரியர், காபெட் ஆகியோரின் திட்டங்கள் நடைமுறைக் கொவ்வாது மனக்கோட்டைக் கட்டுவனவாக இருந்ததை மார்க்ஸ் கண்டார். எனினும், விஞ்ஞான சோஷியலிஸத்தின் முன்னோடிகளான அவர்களைப் பெரிதும் மதித்தார் மார்க்ஸ். லூயி பிளாங்கும் அவனது கோஷ்டியும் அனுஷ்டித்த நடுத்தவர்க்க சோஷியலிஸ்ட் சூழ்ச்சிகளுக்கும் உண்மையான கற்பனை சோஷியலிஸத்திற்கும் இடையே சரியான எல்லையை வரையறுப்பதெப்படி என்பது மார்க்ஸுக்குத் தெரியும். வெம்புயல் வீசியடித்த பிரஞ்சுப் பாட்டாளிமக்களின் சரித்திரத்தையும் அதன் புரட்சிகரமான சாதனைகளையும் கற்பனை சோஷியலிஸத்தையும் டைலக்டிகல் முறையில் பரிசீலனை செய்து விஞ்ஞான சோஷியலிஸத்தை சிருஷ்டித்தார் மார்க்ஸ். பொது மக்களின் புரட்சிகரமான அனுபவங்கள்தான் மார்க்ஸிஸத்தின் மூலத்திற்கு பிரான்ஸிலிருந்து கிடைத்த மிகப்பெரிய ஆதாரமாகும்.

தெர்மிடோரியன் பிற்போக்கின் வெற்றிக்கு, "மகத்தான புரட்சி (1789ம் வருஷ முயற்சி) யால் ஏமாற்றப்பட்ட பொழுது ஜனங்கள் சமத்துவவாதிகளின் சதியின் மூலமாகப் பதிலளித்தார்கள். பாபோவியன்களை தங்கள் கருத்துக்களை (1) சமத்துவவாதிகளின் அறிக்கை (2) தத்துவங்களின் ஆராய்ச்சி (3) புரட்சிகளின் சட்டம் (4) தீர்ப்புகள் ஆகிய நான்கு தஸ்தாவேஜுகளின் மூலம் வெளியிட்டார்கள். பணக்காரர்களுக்கு எதிராக ஏழைகளின் புரட்சியைத் துவக்குவதைத் தங்கள் நோக்கமாக கொண்டிருந்தனர் பாபோவியன்கள். தனிச் சொத்துரிமையே சகல தீமைகளுக்கும் காரணம் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்; ஆகவே, அவர்கள் பொருளாதார சமத்துவத்துக்காகப் போராடினார்கள். "இன்னொரு மிகப்பெரிய, மிக சக்திகரமான புரட்சியின் இறுதிப் புரட்சியின் முன்னோடிதான் பிரஞ்சுப் புரட்சி" என்று சமத்துவவாதிகளின் அறிக்கை பிரகடனப்படுத்தியது. பாபோவியன்களின் செயல்முறைத் திட்டமானது அந்தக் காலத்தில் ஒருமிகப்பெரிய முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. தங்களின் அந்தத் திட்டத்தை எந்த சமூக சக்தியால் உண்மையில் செய்து முடிக்க முடியும் என்பதை பாபோபும் பாபோவியன்களும் உண

றத்தவறியபோதிலும்கூட (இங்குதான் அவர்களின் கற்பனைவாதம் தொக்கி நிற்கிறது) இந்த கம்யூனிஸ்ட் திட்டமானது, பல வருஷ காலப் புரட்சிகரமான பேரெழுச்சிகளால் எத்தகைய நன்மையு மடையாத பொதுமக்களுக்கிடையே ஏற்பட்டிருந்த மகத்தானதும் முற்போக்கானதுமான போக்கையே பிரதிபலித்தது.

சமத்துவவாதிகளின் சக்தி நசுக்கப்பட்டதாலும், உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளின்மேல் நெப்போலியன் வெற்றியடைந்த தாலும், சாதாரண பொதுமக்களிடையே ஓரளவு தளர்ச்சி தலை தூக்கியது. சோஷியலிஸக் கருத்துக்கள் பாதிமதபோதனை ரூபத்திலும் பாதி சோஷியலிஸ்ட் போதனை ரூபத்திலுமாக முன்னணிக்கு வரத் தொடங்கியது. செல்வந்தனை ஸெயிண்ட் ஸைமனும், சாதாரண பிரஜையான சார்லஸ் போரியரும் மனிதவர்க்கத்தையே புனர் நிர்மாணம் செய்வதற்கான தங்கள் திட்டங்களுடன் வெளிவந்தார்கள். அவர்களின் போதனைகளின் நன்மை பயக்கத்தக்க பகுதி இன்பகரமான எதிர்காலத்தைப்பற்றிய அவர்களின் திட்டங்களில் இல்லை; ஆனால் நிகழ்காலத்தைப் பற்றிய அவர்களின் கண்டனங்களிலும், ஏழை பணக்காரரிடையேயுள்ள விரோதப்பான்மையைப் பற்றி அவர்கள் அழுத்தந்திருத்தமாக வற்புறுத்தியதிலுமே அடங்கியிருக்கிறது. ஆனால் ஸெயிண்ட் ஸைமனும், சார்லஸ் போரியரும், அவர்களின் பிறப்பிடம் திட்டங்களில் மாறுபட்டிருந்தபோதிலும், இருவரும் "மனித ஹிருதயத்துக்கு" தங்கள் வேண்டுகோள்களை விட்டனர்; அதன்மூலமாக முற்போக்கான முதலாளிகளை தங்கள் பக்கம் இழுத்துவிடலாம், சரியான பாதையிலிருந்து வழுவிச் செல்லும் மனிதனின் பகுத்தறிவை சமாதானமான முறைகளைக் கொண்டே மறுபடியும் மாற்றியமைத்து விடலாம் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

புரட்சி என்ற வார்த்தையைக் கேட்கவுங்கூட இந்த கற்பனை வாதிகளில் யாரும் விரும்பவில்லை. ஸெயிண்ட் ஸைமனும் போரியரும் தங்கள் ஆசைக்கனவை நனவாக்கவல்ல சமூக சக்தி எது என்பதை உணராத காரணத்தால், அவர்கள் மறு உலக சக்திகளுக்கும் மதத்திற்கும் வேண்டுகோள்விட்டனர். அவர்களுடைய போதனைகளில் மதம் மிகப்பெரும்பங்கை ஏற்றது. ஸெயிண்ட் ஸைமன் போரியர் ஆகியோரின் சிஷ்யர்களோ இம்மாபெரும் கற்பனைவாதிகளின் போதனைகளில் காணப்பட்ட ஆத்மார்த்திக பகுதியை மேலும் மிகப்பெரிய அளவுக்கு வளர்த்தார்கள். பஜாாட், என்பான்டின், விக்டர் கன்ஸிடரன்ட் பியர்ரீ லெரோ

ஆகியவர்களுடைய சிஷ்யர்கள் இந்த மாபெரும் உடோரியன் போதனைகளின் ஆத்மார்த்திக—கற்பனாவாதப் பகுதியை புதிய நிலைமைகளுக்கேற்ற முறையில் மேலும் வளர்க்கப் பிரயத்தனப் பட்டார்கள் ; அதற்காகத்தான் கம்யூனிஸ்ட் அறிக்கையில் அவர்கள் தாக்கப்பட்டார்கள். பாபோப் இயற்றிய நூல்கள் புராலிடேரியட்டின் கோரிக்கைகளைப் பிரதிபலிக்கின்றன" மார்க்ஸூம் எங்கல்ஸூம் ஸ்தாபித்தபோதிலும் கற்பனா சோஷியலிஸ்டுகளைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்கள் :

" இந்த (தத்துவ பொருளாதார) அமைப்புகளின் கர்த்தாக்கள் வர்க்க முரண்பாடுகளைக் காண்கிறார்கள்; இன்றைய சமூக அமைப்பில் தேய்வடைந்துவரும் க்ஷீணித்துவரும் அம்சங்களைக் காண்கிறார்கள். ஆனால் இன்னும் குழவிப் பருவத்தில் இருக்கும் தொழிலாளிவர்க்கம் ஒரு சரித்திரத்தை சிருஷ்டிக்கும் சக்தியும், ஒரு சுதந்திரமான அரசியல் இயக்கமாக இயங்கும் சக்தியும் படைத்த வர்க்கமாக அவர்களுக்கு தோற்றமளிக்கவில்லை. தொழில்வளர்ச்சிக்கு ஒத்தமுறையில் வர்க்க முரண்பாடுகள் வளர்ச்சியடைகின்றன. அன்று அவர்கள் கண்ட பொருளாதார நிலைமையில், புராலிடேரியட்டின் விடுதலைக்கான யதார்த்த சூழ்நிலை இருப்பதாக அவர்களுக்குத் தெரியவில்லை. அதனால் இந்த சூழ்நிலைகளை சிருஷ்டிக்கக்கூடிய புதிய சமூக விஞ்ஞானத்தையும் புதிய சமூக வளர்ச்சிகளையும் தேடி அலைகின்றனர்.

"வர்க்கப் போராட்டம் போதிய அளவு வளர்ச்சியடையாதிருப்பதும், அவர்களுடைய சூழ்நிலையும் போதிய அளவு வளர்ச்சியடையாதிருப்பதும், தாங்கள் எல்லா வர்க்க முரண்பாடுகளுக்கும் அப்பாற்பட்டவர்களென்றும், வர்க்க முரண்பாடுகளால் பாதிக்கப்படாமல், அவைகளுக்கு மேலே இருப்பவர்களென்றும், இத்தகைய சோஷியலிஸ்டுகள் தங்களைப்பற்றி கருதுவதற்கு காரணமாயிருக்கிறது. சமூகத்திலுள்ள ஒவ்வொருவருடைய அந்தஸ்தையும், மிகவும் சௌகரியமான நிலைமையில் உள்ளவர்களுடைய அந்தஸ்தையுங்கூட, உயர்த்தவேண்டுமென்பது அவர்கள் லட்சியமாகிறது. ஆகவே, வர்க்க பாகுபாடுகளை, வர்க்க முரண்பாடுகளைக் குறிக்காத முறையில், சமூகத்திலுள்ள அனைவருக்கும் பொதுப்படையாக வேண்டுகோள் விடுக்கின்றனர்; ஏன்? ஆளும் வர்க்கத்துக்கு அதிகப்படியான முக்கியத்துவம் அவர்கள் வேண்டுகோளில் அளிக்கிறார்கள்.

" ஆகவே, அவர்கள் அரசியல் நடவடிக்கைகளையும், குறிப்பாக சகல புரட்சிகரமான நடவடிக்கைகளையும் நிராகரிக்கிறார்

கள். சமாதான வழிகளாலும், முயற்சிகளாலும் தங்கள் லட்சியத்தை அடையவிரும்புகின்றனர்; நிச்சயமாய் தோல்வியடையக் கூடிய சிறு சோதனைகள்மூலம், உதாரண பலத்தைக்கொண்டு, தங்கள் புதிய சமூக முறைக்கு வழிகோலிவிடலாமென்று கருதுகிறார்கள்." (கம்யூனிஸ்ட் அறிக்கை)

தன் பிரசித்திபெற்ற "ஆன்டி-டூரிங்" (Anti-Duhring) என்ற புத்தகத்தில் பிரெஞ்சு கற்பனவாதிகளைப்பற்றி எங்கல்ஸ் வகுத்த நிர்ணயிப்பும் ருசிகரமானது. 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரஞ்சு பொருளாதார உறவுகள், வளர்ச்சி ஏணியில் பின்தங்கி நின்றதை வற்புறுத்திவிட்டு, எங்கல்ஸ் எழுதுகிறார்:—

"எல்லா மனிதர்களும் வேலை செய்யவேண்டும்" என்ற கொள்கையை "ஜினிவா கடிதங்கள்" எழுதியபோதே ஸெயின்ட் ஸைமன்* வரையறுத்தார். இந்தப் புத்தகம் எழுதும்போதே, பயங்கர ஆட்சி, சொத்துரிமையற்ற மக்கள் நடத்திய ஆட்சி என்பது அவருக்குத் தெரியும்......ஆனால், 1802ம் வருஷத்தில், பிரெஞ்சு புரட்சியை நிலப்பிரபுத்துவத்துக்கும், மன்னனுக்கும், பூர்ஷுவாக்களுக்கும், சொத்துரிமையில்லாத பொதுமக்களுக்கும் நடந்த வர்க்கப் போராட்டம் என்று உணர்ந்ததே ஒரு மேதையின் கணிப்புதான்.

"போரியரின் புத்தகங்களில், நடப்புசமூகத்தின் நிலைமைகளைப்பற்றிய ஆணித்தரமான, ஆழமான கண்டனங்களை நாம் காண்கிறோம்"

மார்க்ஸும், எங்கல்ஸும் கற்பனவாதிகளை மதித்ததின் காரணம் இதிலிருந்து தெரியும். கற்பனவாதிகள் அவர்கள் காலத்தில்

---

*ஸெயின்ட் ஸைமன் என்பவர் ஒரு கற்பனு சோஷியலிஸ்ட். சகல மனிதர்களும் உழைக்கவேண்டுமென்றார். ஜினிவா கடிதங்களை எழுதும்போது, பிரான்ஸில் நடந்த சொத்தில்லாத பாமரர் ஆட்சியைப்பற்றி அவருக்குத் தெரியும், அதை அவர் கண்டிக்கவும் செய்தார். "பார்! உங்கள் தோழர்கள் பிரான்ஸில் அரசு புரிந்தபோது என்ன நடந்தது? அவர்கள் பஞ்சத்தை சிருஷ்டித்தார்கள்!" என்று அவர் கண்டிக்கிறார். கண்டித்தபோதிலும் பிரெஞ்சுப் புரட்சி பூர்ஷுவா வர்க்கத்தையும் நிலப் பிரபுத்துவ மன்னனையும் எதிர்த்து நடந்த வர்க்கப் போராட்டமென்பதை அவர் உணர்ந்ததே அவருடைய மேதையைக் காண்பிக்கிறது. (மொ-ர்)

ஏழைகளின் நலன்களைப்பற்றிப் புதிதாய் பேசினார்கள். வர்க்க முரண்பாடுகளைக் கண்டார்கள்—இவைகளே மார்க்ஸ், எங்கல்ஸுக்கு முக்கியமாகப்பட்டன. இயக்கத்தை பின்னோக்கி இழுக்கவும், தாண்டிவந்த கட்டத்திலேயே தேங்கியிருக்கவும், இந்த கற்பனாவாதிகளின் சிஷ்யர்கள் பாடுபட்டனர். அதனால் அவர்களைப் பற்றி மார்க்ஸும் எங்கல்ஸும் வேறுவிதமானபோக்கை அனுஷ்டித்தார்கள். கம்யூனிஸ்ட் அறிக்கை கூறுகிறது:—

"......இந்த அமைப்புகளின் ஸ்தாபகர்கள், பல துறைகளில் புரட்சிகரமாயிருந்தபோதிலும், அவர்களுடைய சீடர்கள் ஒவ்வொரு துறையில், பிற்போக்கான தனிகோஷ்டியாகிவிட்டார்கள். புராலிடேரியட்டின் சரித்திரபூர்வமான வளர்ச்சி முன்னேற்றத்துக்கு எதிராக, தங்களுடைய குருக்களின் பழைய அபிப்பிராயங்களையே தழுவி நிற்கின்றனர். ஆகவே, அவர்கள் வர்க்கப் போராட்டம் நடக்கவிடாமல் செய்யவும், வர்க்க முரண்பாடுகளை சமரஸப்படுத்தவும் விடாப்பிடியாய் முயலுகின்றனர்...... கொஞ்சங் கொஞ்சமாக பிற்போக்கான சோஷியலிஸ்டுகளுடன் கலந்து சங்கமமாகின்றனர்: டம்பப் பேச்சிலும், தங்களுடைய சமூக விஞ்ஞானத்தின் அற்புதமான பலன்களைப்பற்றிய குருட்டுத்தனமான, பிடிவாதமான மூடநம்பிக்கையிலுமே அந்த சோஷியலிஸ்ட் பிற்போக்காளர்களிடமிருந்து வித்தியாசப்பட்டு நிற்கின்றனர்.

"ஆகவே, அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் அனைத்தையும் மூர்த்தண்யமாய் எதிர்க்கின்றனர். அவர்களுடைய புதிய கொள்கையிலுள்ள குருட்டு அவநம்பிக்கையே தொழிலாளிவர்க்கத்தின் அரசியல் நடவடிக்கைகளுக்குக் காரணம் என்பது அவர்கள் அபிப்பிராயம்" (கம்யூனிஸ்ட் அறிக்கை).

கம்யூனிஸ்ட் கற்பனாவாதியான எடீன்கேபட்கூட அவருக்கு முன்னிருந்த பாபோப்பை எந்தவிதத்திலும் ஒத்திருக்கவில்லை. தம் செல்வத்தைப் பெருக்க புரட்சியையே ஒரு சாதனமாகப் பயன்படுத்தியவர்களை எதிர்த்து கலகம் செய்ய பாபோப் பொது மக்களைத் திரட்டி கலகம் செய்ய ஏற்பாடுசெய்தார். ஆனால் கேபட்டோ போராட்டமெதுவும் இல்லாமல் கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணிக்கலாமென்று கனவுகண்டார். "புரட்சிமாத்திரம் என் கைக்குள் இருந்தால், தேசப்பிரஷ்டத்தில் (நாடுகடத்

தப்பட்டு) சாகவேண்டிவந்தாலும் அதை நான் விடுவிப்பேன்"* என்று தன் புத்தகத்தை முடிக்கிறார். கடந்த காலத்தில், தொழிலாளி வர்க்கத்துக்கு சாதகம் ஏற்படாமல், புரட்சிகள் முடிந்ததால் ஏற்பட்ட ஏமாற்றமே இந்தப் புரட்சியைப்பற்றிய பயத்துக்கு காரணம்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இந்த தத்துவ கர்த்தாக்கள் மார்க்ஸையும் மார்க்ஸிஸத்தையும் பற்றி என்ன நினைத்தார்கள்? ஸெயின்ட்ஸைமன், போரியர், அவர்களுடைய சீடர்கள் ஆகியோரின் கருத்துக்களை ஒன்றுசேர்த்து சுருக்கித்தருவதே மார்க்ஸிஸம் என்று சில எழுத்தாளர்கள் நம்பினார்கள். பிரெஞ்சு சோஷியலிஸ்ட் பால்லூயி இதே முடிவுக்கு வந்தார். அவர் எழுதுகிறார் :

"அரசாங்க அதிகாரத்தை கைப்பற்றவேண்டியதின் அவசியத்தை லூயிபிளான்கும் விடாலும் (Vidal) வற்புறுத்தினார்கள். அதிகாரத்தை கைப்பற்றுவதை ஒவ்வொரு புரட்சிக்கும் அத்தியாவசியமான நிபந்தனை என்றனர். கூட்டு வாழ்வைப்பற்றியும், கம்யூனிஸத்தைப்பற்றியும் முதன் முதலில் விவரமாக பெக்கரும் கேபட்டும் ஆராய்ச்சி செய்தனர். இறுதியாக, வர்க்க நலன்களின் முரண்பாடுகளையும், தனி சொத்துரிமையின் குறைபாடுகளையும், கூலி உழைப்பாளி, முதலாளியால் இடைவிடாது சுரண்டப்படுவதையும் பிரௌதன் விவரமாக வர்ணித்தார். செல்வம் அதிகரிக்க அதிகரிக்க, துரதிர்ஷ்டசாலிகளின் தொகையைப் பெருக்கும் பொருளாதார அமைப்பினுள்ளேயுள்ள முரண்பாடுகளையும் பிரௌதன் அம்பலத்துக்கு கொண்டுவந்தார். இவைகளை எல்லாம் ஒன்றுசேர்த்தால், அநேகமாக மார்க்ஸிஸத்தின் முழுஉருவமும் (முழுமையும்) முழுத்தன்மையும் நமக்குக் கிடைக்கிறது."

பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினராயிருப்பதுடன் அவதூறுகளை பரப்பும் கூலிப் பத்திரிகைகளில் கட்டுரை

---

* கேபட் புரட்சிக்காரரென்று காட்டிக்கொள்கிறார். தன்னால் மாத்திரம் புரட்சி செய்யமுடியுமானால், உயிரைத் தியாகம் செய்தும் புரட்சியைக் கொண்டுவருவேனென்றார். ஆனால் புரட்சி என்றால் தொழிலாளி மக்கள் தயாராயிருக்கவேண்டும். அதுதான் நடக்காத காரியம் என்கிறார். கடந்த காலத்தில் நடந்த புரட்சிகளில் ஏற்பட்ட ஏமாற்றம் இதில் பிரதிபலிக்கிறது.

கள் எழுதுவதை இணைக்க முயலும் கொள்கையற்ற, பகுத்தறிவும் விஞ்ஞானமும் இல்லாத மனிதன்தான்—பிளான்க், விடால், கர் பிரௌதனின் தத்துவங்களின் கூடுதல், "மார்க்ஸிஸத்துக்கு கிட்டதட்ட சமம்" என்ற முடிவுக்கு வரமுடியும். அந்த தத்துவாசிரியர்கள் மாயாவாதிகளென்றும், ஹிஸ்டாரிகல் மெட்டீரியலிஸத்தை* அறியவில்லையென்றும், பால் லூயி ஒப்புக்கொள்கிறார். ஆனால் இது அவருக்கு முக்கியமாகப் படவில்லை. ஏனெனில், "ஹிஸ்டாரிகல் மெட்டீரியலிஸம் மார்க்ஸிஸ்ட் சித்தாந்தத்தின் பிரிக்கமுடியாத பாகமில்லை" என்கிறார். (ஹிஸ்டாரிகல் மெட்டீரியலிஸம் அவ்வளவு அவசியமான பாகமில்லையாம்) சோஷியலிஸ்ட் கற்பனைவாதிகள், கம்யூனிஸ்ட் கற்பனைவாதிகள், பிரௌதன், பிளான்க் போன்ற நடுத்தரவர்க்க சோஷியலிஸ்டுகள் ஆகியோருடைய கருத்துகள் கிட்டத்தட்ட மார்க்ஸிஸமாகும் என்று சொல்லமுடியுமா? ஒருக்காலும் சொல்லமுடியாது. அப்படிக் கூறுவது மார்க்ஸிஸத்துக்கும் அக்காலத்திய பிரெஞ்சு சோஷியலிஸ்ட்டுகளுடைய போதனைகளுக்குமுள்ள வித்தியா

---

* ஹிஸ்டாரிகல் மெட்டீரியலிஸம் சரித்திரரீதியான லோகாயுதவாதம் என்று சொல்லலாம். சமூக சரித்திரத்தை, யதார்த்த சரித்திரத்தை உணரும் விஞ்ஞானம். ஒரு சமூக அமைப்பை, அதன் அங்க லக்ஷணங்களை நிர்ணயிப்பது, ஒரு அமைப்பிலிருந்து இன்னொரு அமைப்புக்கு சமூகம் மாறுதலடைந்து செல்வதை நிர்ணயிப்பது, "சமூகத்தின் யதார்த்த வாழ்க்கை நிலைமை" என்று மார்க்ஸிஸம், ஹிஸ்டாரிகல் மெட்டீரியலிஸம் கூறுகிறது. மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான வாழ்க்கைச் சாதனங்களை அடையும்விதம்தான், சமூக அமைப்பையும் சமூக சரித்திரத்தையும் நிர்ணயிக்கும் சக்தி. அது பொருளுற்பத்தி சக்திகளையும், அவற்றின் விளைவாக எழும் சமூக உறவுகளையும் பொறுத்ததென்று போதிக்கிறது. உற்பத்தி சக்திகள் வளர்ச்சியடைவதால், சமூக அமைப்புகள் மாறுகின்றன, புதிய வர்க்கங்கள் ஏற்படுகின்றன. இன்றைக்கு பொருளுற்பத்தி சக்திகளின் வளர்ச்சியால் ஏற்பட்டிருக்கும் சமூக உற்பத்திக்கு முதலாளித்துவ அமைப்பு தடையாகிவிட்டது. (ஆரம்பக் கட்டத்தில் முதலாளித்துவமே உற்பத்தி சக்திகளை வளர்த்தபோதிலும்) அதனால் இந்த முரண்பாட்டை நீக்கி, சமூக உற்பத்திக்கேற்ற சமூக உறவுகள்--சோஷியலிஸ்ட் சமூக உறவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்று போதிக்கிறது.

சத்தை புரிந்துகொள்ளத் தவறுவதாகும். பிரான்ஸில், சோஷிய லிஸத்தைப்பற்றி சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் கருத்துகளை மார்க்ஸ், விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்தார் என்பது வாஸ் தவம். ஆனால் அவற்றுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, மார்க்ஸ் புதிதாக என்னென்ன மூலக் கருத்துக்களை வெளியிட்டார்?

(1) சோஷியலிஸத்துக்காக வெற்றிகரமாக போராடக்கூடிய சக்தி புராலிடேரியட்டே என்பது அவர் கருத்து.

(2) புராலிடேரியட்டின் அரசியலுக்கும் இதர வர்க்கங் களின் அரசியலுக்கும் தீர்க்கமான வித்தியாசம் இருப்பதைச் சுட்டிக்காட்டினர்.

(3) பலாத்காரம்மூலமே புரட்சிசெய்ய முடியுமென்றும், தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பது ஒன்று தான் சோஷியலிஸத்தை அடையும் பாதை என்றும் மார்க்ஸ் நம்பினர்.

19-வது நூற்றாண்டின் முற்பகுதியில் வேலைசெய்யத் துவங் கியவர்களில் ஒரே ஒரு சோஷியலிஸ்ட்டைத்தான் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக்காரனாக மார்க்ஸ் கருதினர். அவர்தான் அகஸ்டி பிளான்கி. (Auguste Blanqui) ஒடுக்கும் கும்பலை பிளான்கி அறவே வெறுத்தார்; உண்மையில் அவர் விஞ்ஞான சோஷியலிஸத்தை புரிந்துகொள்ளாவிட்டாலும், பொதுஜன இயக்க அடிப்படையிலில்லாமல் சிறு 'சதிகாரர்கள்' கோஷ்டி யின் நடவடிக்கைகளின்பேரிலேயே அவர் தன் திட்டங்களை வகுத்தபோதிலும், பாபோப்புக்குப் பின்னல் பிளான்கியே மிகப் பெரிய கம்யூனிஸ்ட் புரட்சிக்காரரென்று மார்க்ஸ் கருதினர். தொழிலாளிவர்க்க அரசியல் கட்சித் தலைவரென்று அவரை அழைத்தார்.

பிரெஞ்சுப் புரட்சியில் இயங்கும் சக்திகளையும், அவற்றிற் குள்ள பரஸ்பர தொடர்புகளையும் மார்க்ஸ் நன்கறிந்திருந்தார். அவர் எழுதினர்:—

"(1830) ஜூலை நாட்களில் தொழிலாளர்கள் போராடி பூர்ஷுவா முடியாட்சியை தோற்கடித்தார்கள்; அதைப்போலவே (1848) பிப்ரவரி நாட்களில் தொழிலாளிகள் பூர்ஷுவா குடி யரசை எதிர்த்துப் போராடித் தோற்கடித்தனர். குடியரசு ஸ்தாப னங்களால் சூழப்பட்ட முடியரசு என்று பிரகடனப்படுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஜூலை முடியாட்சிக்கு ஏற்பட்டது போல, சமூக ஸ்தாபனங்களால் சூழப்பட்ட குடியரசு என்று

பிப்ரவரி குடியரசு பிரகடனப்படுத்திக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பாரிஸ் தொழிலாளிவர்க்கம் இந்த சலுகையையும் நிர்ப்பந்தம்மூலம் பெற்றது."

ஆனால் தொழிலாளிகள் பெயரளவில்தான் திருப்தியடைந்தனர்.

"பிப்ரவரி மாதம் 23-ம் தேதி, உச்சிநேரத்தில், பல தொழில்களைச் சேர்ந்த சுமார் 12,000 தொழிலாளிகள் க்ரீவ் சதுக்கத்துக்கு வந்து ஆழ்ந்த மௌனத்தில் நின்றனர். அவர்களுடைய கொடிகளில், "தொழில் ஸ்தாபனம் வேண்டும்," "தொழில் மந்திரிசபை வேண்டும்" "மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்துவிடு" ஆகிய கோஷங்கள் பொறிக்கப்பட்டிருந்தன."

லூயி பிளான்க் போன்ற சோஷியலிஸ்டுகள் வகுத்த முதல் இரு கோஷங்களைப்பற்றி மார்க்ஸ் கீழ்க்கண்டவாறு குத்தலாக எழுதினார் :—

"தொழில் ஸ்தாபனம்: இன்றுள்ள பூர்ஷுவா தொழில் ஸ்தாபனம் கூலி உழைப்புதான். கூலி உழைப்பு இல்லாவிட்டால், மூலதனம் இல்லை, பூர்ஷுவாவர்க்கம் இல்லை, பூர்ஷுவா சமூக அமைப்பு இல்லை." அவர்களுக்கு சொந்தமான தொழில் மந்திரிசபைகள்! ஆனால் நிதி, வர்த்தக, மராமத்து இலாகாக்களின் மந்திரிகள் பூர்ஷுவா தொழில் மந்திரிகளல்லவா?" (பிரான்ஸில் வர்க்கப் போராட்டம்)

தொழிலாளிகளின் கோரிக்கைகளுக்கு லக்ஸம்பர்க் கமிஷன் என்ற கமிஷனை அமைப்பதின்மூலம் இடைக்கால சர்க்கார் சாதுரியமாக பதிலளித்தது. அந்த கமிஷன்முன், பிளான்கும் ஆல்பர்ட்டும் எதிர்காலத்தைப்பற்றி நீண்ட பிரசங்கங்கள் செய்தார்கள். நிகழ்காலத்திலிருந்து தொழிலாளர் கவனத்தை திருப்பினார்கள். தொழிலாளிகளின் ஆரம்பக் கோரிக்கைகளிலும் லக்ஸம்பர்க் கமிஷனிலும்கூட, மார்க்ஸ் வர்க்கப்போராட்டத்தின் பிரதிபிம்பத்தைக் கண்டார் :—

"தொழிலாளிவர்க்கத்தின் புரட்சிகரமான கோரிக்கைகளைக் குறிக்கும் தெளிவில்லாத முதல் சூத்திரம்—வேலைசெய்யும் உரிமைக் கோரிக்கை.

"தொழிலாளிவர்க்கத்தின் விடுதலை என்ற லட்சியமே 19-ம் நூற்றாண்டுப் புரட்சிகளின் அந்தரங்கம். இதை உலகத்துக்கு ஐரோப்பிய அரங்கத்திலிருந்து எடுத்துக்காட்டிய பெருமை பாரிஸ்

தொழிலாளர்களின் சிருஷ்டியாகிய லக்ஸம்பர்க் கமிஷனுடையது."

(1848) ஜூலை நாட்களில் பாரிஸ் புராலிடேரியட்டுக்கு தோல்வி ஏற்பட்டது. தன் சரித்திரபூர்வமான கடமைகளை செய்துமுடிக்கும் அளவுக்கு ஸ்தாபனரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் புராலிடேரியட் வளர்ச்சியடையாததே காரணம். 1848ம் வருட புரட்சியில் வர்க்க சக்திகளின் பலாபலத்தைப்பற்றிய அற்புதமான ஆராய்ச்சியில் மார்க்ஸ் கூறுவதாவது :—

"சமூகத்தின் புரட்சிகரமான நலன்கள் எந்த வர்க்கத்தைச் சார்ந்திருக்கிறதோ, அந்த வர்க்கம் தோன்றியவுடனேயே தன்னுடைய நிலையில் தனது புரட்சிகரமான நடவடிக்கைக்கு அவசியமான சாராம்சத்தையும் ஆயுதத்தையும் காண்கிறது:—பகைவர்களை வீழ்த்தவேண்டும், இதற்கான போராட்டத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும், இந்த நடவடிக்கைகளின் விளைவுகளே மேலும் அந்த வர்க்கத்தை உந்தித் தள்ளும் தூண்டுகோல்களாக விளங்குகின்றன. தன் கடமையின் தத்துவத்தைப்பற்றி அந்த வர்க்கம் ஆராய்ச்சி செய்வதில்லை. பிரெஞ்சு தொழிலாளி வர்க்கம் இந்த நிலையை அடையாததால், புரட்சியை சாதிப்பதற்கு அப்பொழுது (1848) சக்தியற்றிருந்தது". (பிரான்ஸில் வர்க்கப் போராட்டம்).

ஆனால், தொழிலாளி வர்க்கம் தனக்காக ஒரு புரட்சியைச் செய்வதற்கு முன்னால், ஓரளவுக்கு அரசியல் உணர்வும் ஸ்தாபனமும் வளர்ந்திருந்தால் போதா ; அந்த தேசத்தின் வர்க்க சக்திகளின் சேர்க்கைகளும் அதற்கு சாதகமாக இருக்கவேண்டும் என்று மார்க்ஸ் எழுதுகிறார் :

"புராலிடேரியட்டுக்கும், பூர்ஷுவா வர்க்கத்துக்குமிடையே நிற்கும் தேச மக்கள், விவசாயிகளும் நடுத்தர வர்க்கமும், அமுலிலுள்ள அமைப்பை, மூலதனத்தின்·ஆதிக்கத்தை, எதிர்த்து கலகம் செய்யாமல் இருப்பது புரட்சிப் போக்கிலேயே மாறி, புராலிடேரியட்டின் தலைமையின் கீழ் அவர்கள் திரண்டு நிற்கும்வரை, பிரெஞ்சு தொழிலாளிகளால் ஒரு அடிகூட முன்னேற முடியவில்லை; பூர்ஷுவா அமைப்பின் ரோமத்தைக்கூட தொடமுடியவில்லை. ஜூன் மாதத்தில் ஏற்பட்ட மாபெரும் தோல்வி மூலமே (அதாவது, அதன் படிப்பினைகள் மூலமே—மொ-ர்) தொழிலாளர்களுக்கு இந்த வெற்றி கிடைத்தது."

வர்க்க சக்திகளின் நிலைமையிலுள்ள இந்த பிரத்தியேக குணம்தான், அக்காலத்திய சோஷலிஸ்ட் ஆதர்ச அமைப்புகளை நிர்ணயித்தது.

"புராலிடேரியட் சுயமாக இயங்கும் சுதந்திர இயக்கமாக, சரித்திரபூர்வமான இயக்கமாக வளர்ச்சியடையும் வரை, அதன் தத்துவார்த்த பிரதிபலிப்பாக அது விளங்கியது". பூர்ஷுவா, நடுத்தரவர்க்க சோஷியலிஸ்ட் அமைப்புகளும் வர்க்க சக்திகளின் விசேஷ நிலையிலிருந்தே உதித்தன.

ஆனால் இந்த சோஷியலிஸம் புரோலிடேரியட்டிடமிருந்து நடுத்தர வர்க்கத்திடம் சென்று தஞ்சம்புக,

"தொழிலாளி வர்க்கம் புரட்சிகரமான சோஷியலிஸத்தின் கீழ், (விளக்கெண்ணெய் சோஷியலிஸத்திடமிருந்து பிரித்துக் காட்டுகிறார் மார்க்ஸ்—மொ-ர்) கம்யூனிஸத்தின்கீழ் மேலும்மேலும் திரள்கின்றனர். இந்த புரட்சிகரமான சோஷியலிஸத்தை பிளான்கியின் பெயரால் பூர்ஷுவா வர்க்கம் அழைக்கிறது. இந்த சோஷியலிஸம் புரட்சியின் சாசுவதத் தன்மையை பிரகடனப் படுத்தியது. புரட்சி மூலம் வர்க்க பேதங்கள் ஒழிவதின் தவிர்க்க முடியாத விளைவாக தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க சர்வாதிகாரம் உருவாகுமென்று பிரகடனப் படுத்தியது; வர்க்க பேதங்கள் ஒழிவதால், வர்க்கபேத அஸ்திவாரத்தின் மேலெழுந்திருக்கும் சகல உற்பத்தி உறவுகளும், இந்த உற்பத்தி உறவுகளுக்கு ஒத்த முறையில் நிலவும் சமூக உறவுகளும் ஒழியுமென்றும் பிரகடனப்படுத்தியது. இந்த சமூக உறவுகளின் விளைவாய் அமுலிலிருக்கும் கருத்துகளிலும் கோட்பாடுகளிலும் கொள்கைகளிலும் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும் என்று பிரகடனப்படுத்தியது".

"பிரான்ஸின் வர்க்கப் போராட்டம்".

1848-ல் தலைதூக்கி நின்ற சோஷியலிஸ்ட் போக்குகள், பிரெஞ்சு புராலிடேரியட்டின் போராட்டத்தில் இந்த சோஷியலிஸ்ட் போக்குகளுக்குள்ள பங்கு, ஜூன் மாத தோல்வியின் காரணங்கள் ஆகியவற்றை, மார்க்ஸ் இவ்விதமாக மதிப்பிடுகிறார். பல வருஷங்களுக்கு பின்னர் 1890-ல், கம்யூனிஸ்டு அறிக்கைக்கு முகவுரை எழுதுங்கால், 1848-ம் வருட பிரரவரி புரட்சிக்கு முன்னரேயே சோஷியலிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் திட்டவட்டமான தீர்க்கமான வேறுபாடு இருந்ததென்று, எங்கல்ஸ் எழுதுகிறார். அவர் கூறுவதாவது:

"எனினும், அரசியல் புரட்சி மாத்திரம் போதாதென்று உணர்ந்து சமூகத்தை தீவிரமான முறையில் புனர்நிர்மாணம் செய்ய வேண்டுமென்று தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதி கோரியது. அது கம்யூனிஸ்ட் என்று தன்னை அழைத்துக்கொண்டது. அப்போது அது நன்கு செதுக்கப்படாத கம்யூனிஸமாகவே இருந்தது; ஓரளவு தெளிவற்றதாகவும், உணர்ச்சியிலிருந்து எழும்புவதாகவும் காரண காரியங்களை உணராததாகவும் இருந்தது அக்கம்யூனிஸம்......1847-ல் சோஷியலிஸம் பூர்ஷுவா இயக்கத்தின் சார்பில் நின்றது; கம்யூனிஸம் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சார்பில் நின்றது" (கம்யூனிஸ்ட் அறிக்கை).

1848 ஜூன் மாதத்தில், பாரிஸ் தொழிலாளர்களுக்கு சம்பவித்த தோல்வியுடன், பிரான்ஸிலும் ஐரோப்பா கண்டமும் முழுவதும் பிற்போக்கின் இருளாட்சி துவங்கியது, நீண்ட காலம் நீடித்தது. அரசியல் தோல்வி, தத்துவரீதியிலும் பிரதிபலித்தது. அரசியல் போராட்டத்தை நிராகரிக்கும் போக்கு வெற்றியடைந்தது; மியூட்சுவலிஸத்தின்* மீது கவனம் திரும்பியது.

பிரௌதனிஸ்ட் மியூட்சுவலிஸத்தின் அரசியல் கரு என்ன? வர்க்கப் போராட்டத்துக்கு பதிலாக, பரஸ்பரம் தொண்டாற்றுவது, பரஸ்பர உதவி முதலிய கருத்துகள் பரப்பப்பட்டன. பல புரட்சிகளில் 'கறைபட்ட' பிரெஞ்சு தொழிலாளி வர்க்கத்திடம் பூர்ஷுவா வர்க்கம் இதையே விரும்பியது.

ஜூன் எழுச்சி ரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டபின், பிரெஞ்சு தொழிலாளர் இயக்கம் மீண்டும் எழுந்தது; ஆனால் பல பெரிய கஷ்டங்களை சமாளிக்க வேண்டியிருந்தது. சமூக பிரச்னையை மியூட்சுவலிஸத்தின் மூலம், தொழிலாளர் பாங்குகள் மூலம், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கம்யூனிஸ்ட் காலனிகளை அமைப்பதின் மூலம் தீர்க்க முயற்சிகள் செய்யப்படும்போதே, தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்காகவும் ஜீவாதார தேவைகளுக்காகவும்

---

* மியூட்சுவலிஸம் தொழிலாளர்கள் பரஸ்பரம் உதவிசெய்து கொள்வதற்காக, ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்து கொள்வதற்காக, பரஸ்பர உதவிச் சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு, இந்த ஸ்தாபனங்களுக்கு உதவி யளிக்கும்படி பூர்ஷுவா அரசாங்கத்தை கேட்பது. அந்த அரசாங்க உதவி மூலம், பரஸ்பரம் உதவி புரிவதன் மூலம், தொழிலாளி வர்க்கம் சோஷியலிஸத்தை அடைந்துவிடலாம் என்ற கோமளித் தத்துவமே மியூட்சுவலிஸம்.

நடக்கும் பொருளாதாரப் போராட்டம் கூர்மையாயிற்று. மூன்றாவது நெப்போலியனின் சர்க்கார் அடக்குமுறையை அனுஷ்டித்தது ; வாய் நிறையப் பேசி, வாய்வீச்சின்மூலம் ஏமாற்றப் பார்த்தது. சர்வதேச கண்காட்சிகளுக்கு தொழிலாளர் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு ஊக்கமளித்தது ; அதே சமயத்தில், தொழிற் சங்கங்கள், பரஸ்பர உதவி சங்கங்கள், பரஸ்பர கடன் உதவி ஸ்தாபனங்கள், யந்திரத் தொழிலாளர் ஸ்தாபனங்கள், தொழிலாளர் எதிர்ப்புக் கழகங்கள் முதலிய பலதரப்பட்ட தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளையும் தடுக்கப் பிரயத்தனப்பட்டது. இந்த ஸ்தாபனங்களின் அரசியல் திட்டங்கள் யதார்த்த உண்மைகளை விஞ்ஞானரீதியாய் பகுத்துணர்ந்து தயாரிக்கப்பட்டதல்லவென்றாலும், அவற்றின் ஸ்தாபன முறையில் பலவீனங்கள் இருந்தபோதிலும், அவை தொழிலாளி வர்க்க சக்திகளை ஒன்றுதிரட்டும் தளங்களாக இருந்ததால்தான் அவற்றை அடக்க முற்பட்டது.

1862ல் இரண்டு தொழிலாளர் பிரதிநிதிகள் தேர்தலில் வெற்றியடைந்தனர் ; 1864ல் பல்வேறு தொழிலாளர்வர்க்க ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் 60 பேர் கையெழுத்திட்ட தேர்தல் அறிக்கை வந்தது. சர்க்கார் தன் தந்திரங்களை விடவில்லை ; லண்டனில் நிகழ்ந்த சர்வதேச கண்காட்சிக்கு 200 தொழிலாளர்கள் போய் வர சர்க்கார் செலவை ஒத்துக்கொண்டது. சில பரஸ்பர உதவி சங்கங்களுக்கு பண உதவி அளித்தது; இறுதியில், 1864ம் வருஷம் மே 25ல் நிறைவேற்றிய சட்டப்படி தொழிலாளர்களுக்கு சங்க உரிமை அளித்தது. ஆனால் இந்த சலுகை பெயரளவில்தான் அளிக்கப்பட்டதென்பது, ஸ்ட்ரைக்கர்கள் கொடுமைப்படுத்தப்பட்டதில் தெளிவாயிற்று. 1864 வரை, வருஷத்துக்கு 70 வேலை நிறுத்த வழக்குகள் நடந்தன ; ஸ்ட்ரைக் உரிமையை அங்கீகரிக்கும் சட்டம் பிரகடனமானபின், வருஷத்துக்கு 50 வழக்குகள் நடந்தன.

1862-ல் இங்கிலாந்துக்கு சென்றுவந்த பிரதிநிதிகளுக்கு அப்பிரயாணம் பிரயோசனப்பட்டது. அவர்கள் திரும்பிவந்து சமர்ப்பித்த ரிப்போர்ட்டுகள் தொழிலாளிவர்க்கத்தின் அரசியலும் ஸ்தாபனமும் வளர்ச்சியடைய உதவியது. இந்த பிரயாணத்தின் போது, பிரெஞ்சு தொழிலாளர்களும் பிரிட்டிஷ் தொழிலாளர்களும் பரிமாறிக்கொண்ட வாழ்த்துக்கள் முக்கியமானது ; அதுதான் சர்வதேச தொடர்புகள் ஸ்தாபிக்கப்படுவதற்கான ஆரம்

பம். 1862ம் வருஷ பிரயாணம் சர்வதேச தொடர்புகளுக்கு ஆரம்பமானல், 1864-ம் வருஷ பிரயாணம் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தை (முதலாவது இண்டர்நேஷனல்) ஸ்தாபிப்பதற்கே ஆரம்ப நடவடிக்கையாயிருந்தது. 1864 முதல் 1872வரை ஒன்பது வருஷங்கள் சர்வதேச முதலாளித்துவத்துக்கு சிம்ம சொப்பனமாகவும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமுள்ள பாடுபடும் மக்களின் தீபஸ்தம்பமாகவும் திகழ்ந்த இந்த ஸ்தாபனத்தை ஸ்தாபிப்பதைப்பற்றி, மார்க்ஸும் எங்கல்ஸும் கொண்டிருந்த கருத்துக்கள் பரவுவதற்கு, 1864-ம் வருஷ பிரயாணம் பெரும் பங்கு உதவியது.

நான் முன்னரே கூறியபடி, மார்க்ஸ் முதலாவது இண்டர்நேஷனலின் ஜீவனுகை விளங்கினுர். தேசீய பகுதிகளில் குறிப்பாக பிரெஞ்சு பகுதியில், அரசியல் தரமும் (வளர்ச்சி அளவையும் வளர்ச்சிக் கட்டத்தின் அம்சத்தையும் குறிக்கிறது தரம்.) தத்துவ தரமும் குறைவாகவிருப்பதை இதரரைவிட மார்க்ஸ் தெளிவாகக் கண்டு கொண்டார். ஆனல், அதன் உறுப்புகளின் தரத்தை உயர்த்துவதற்குத்தானே முதலாவது இண்டர்நேஷனல் சிருஷ்டிக்கப்பட்டது! பிரெஞ்சு தொழிலாளிகள் தங்களுடைய மகத்தான புரட்சி பரம்பரையை இண்டர்நேஷனலுக்கு கொண்டு வந்தனர். ஆனல், அத்துடன் நடுத்தரவர்க்க சோஷியலிஸ்ட், அரைகுறை சோஷியலிஸ்ட், பிரௌதனிஸ்ட் கருத்துக்களையும் இண்டர்நேஷனலுக்குள் செலுத்திவிட்டனர். பாக்குனின் இவைகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். இதன் விளைவாக முதலாவது இண்டர்நேஷனல் சிதைந்து சிதறியது.

இண்டர்நேஷனல் சிருஷ்டியை பிரெஞ்சு தொழிலாளர்கள் மகத்தான சிரத்தையுடன் வரவேற்றனர். 1864 முதல் 1870க்குள் இண்டர்நேஷனலில் ஒரு பிரான்ஸின் சக்தியாக வளர்ந்தது. தேசம் முழுவதும், இண்டர்நேஷனலின் சங்கங்கள் பெருகின; அவை பல்வேறு மாதிரியாக இருந்தன. பிரான்ஸில் மூலைமுடுக்குகளில் கூட, ஸ்தல சங்கங்களும், எதிர்புக் கழகங்களும், பரஸ்பர உதவி சங்கங்களும், அரசியல் கட்சிகளும், ஸ்ட்ரைக் போராட்டம் நடத்தும் ஆண்பெண் தொழிலாளிகளும் இண்டர்நேஷனலுடன் இணைத்துக் கொண்டனர். "பாரிஸிலும், பெல்ஜியத்திலும், ஸ்விட்ஸர்லந்திலும், இத்தாலியிலும் இண்டர்நேஷனல் அடைந்த வெற்றி நாம் எதிர்பார்த்ததை எல்லாம் தூக்கியடித்துவிட்டது" என்று மார்க்ஸ் (1865 பிப்ரவரி 23ல்) கூகல்மானுக்கு எழுதினுர்.

பிரெஞ்சு தொழிலாளர் இயக்கம் முதலாவது இண்டர்நேஷனலின் நிகழ்ச்சிக் குறிப்புகள் எப்படி பிரதிபலித்ததென்று முதலில் பார்ப்போம். ஜெனரல் கவுன்ஸில் நிகழ்ச்சிக் குறிப்பில் கீழ்க்கண்டிருப்பதை படிக்கிறோம் :—

1865 ஜூன் 20ல், லில்லி நெசவாளர் சங்கம் இண்டர்நேஷனலில் அநேகமாகச் சேருமென்ற ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. 1865 ஜூலை 4ல், 400 அங்கத்தினர் பதிவு புத்தகங்கள் வந்து சேர்ந்ததை ஊர்ஜிதம் செய்து லயான்ஸிலிருந்து வந்த கடிதம் வாசிக்கப்பட்டது. ஜீவனக் கஷ்டத்தை தாக்குப் பிடிக்க முடியாமல், சரணடையவேண்டிய நிர்ப்பந்தம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டதென்றும் ஸ்டிரைக் தொழிலாளர்களுக்கு பாதகமாக முடிந்ததென்றும் கூறப்பட்டது. 1869-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 29-ம் தேதி, கூடைகட்டுபவர்களின் ஆலையில் கதவடைப்பு ஏற்பட்டிருப்பதாகவும் உதவி வேண்டுமென்று கோரி, மார்ஸேல்ஸிலிருந்து ஒரு கடிதம் வாசிக்கப்பட்டது. பண உதவி செய்ய வழியில்லையென்று பதில் எழுதுமாறு காரியதரிசிக்கு உத்திரவிடப்பட்டது. லண்டன் கூடைகட்டும் தொழிலாளிகளுக்கும் எழுதும்படி காரியதரிசிக்கு உத்திரவிடப்பட்டது. 1869, அக்டோபர் 12ல் ஒபரிலிருந்து வந்த கடிதம், எல்யோபில் கம்பளி நெய்பவர்கள் ஸ்ட்ரைக் செய்திருப்பதாயும் உதவி தேவையென்றும் கூறியது. விலை ஜாப்தாவை நிர்ணயிக்கவேண்டுமென்பது நெசவாளர்கள் கோரிக்கை. இதர நகரங்களிலும் இதே கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். 15 நாட்களுக்குள் இணங்காவிட்டால் அவைகளும் ஸ்ட்ரைக் செய்யும். 1869 அக்டோபர் 26ல் வாசிக்கப்பட்ட ரிப்போர்ட் ஆபேன் ரத்தக்கிளரி சம்பந்தமாக (இதில் 36 பேர் கொல்லப்பட்டனர், 36 பேருக்கு படுகாயம்) 27 பாரிஸ் தொழிற்சங்க பிரதிநிதிகள் மீது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு விசாரணை விவரம் இருந்தது. பிரஞ்சு சுரங்கத் தொழிலாளர் போராட்டத்தைப்பற்றி ஒரு ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. அதிக நேரம் வேலை வாங்கப்படுவதை எதிர்த்து, நவம்பர் 2-ல் ஜினிவா நகரத்தில் ஒரு தச்சுப்பட்டரைத் தொழிலாளிகள் ஸ்ட்ரைக் செய்துவிட்டனர். ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை வாங்குவதை எதிர்த்து வேலைநிறுத்தம்செய்த நெசவாளிகளுக்கு பதிலாக வேலைசெய்ய பிரெஞ்சு சர்க்கார் கருங்காலிகளை அளித்தது. நவம்பர் மாதம் 9ம் தேதி வாசிக்கப்பட்ட ரிப்போர்ட்டில், பாரிஸிலுள்ள 2000 முலாம் பூசும் தொழிலாளிகள் எந்த சந்தர்ப்பத்திலும் தினசரி 10 மணிக்குமேல் வேலை செய்யமாட்டோமென்று

தீர்மானித்திருப்பது குறிப்பிடப்பட்டது. 300 அங்கத்தினர்களைக் கொண்ட தகரத்தட்டு தொழிலாளர் சங்கமும் இண்டர்நேஷனலில் சேர்ந்தன. ஸ்ட்ரைக் செய்திருக்கும் பருத்தி ஆடைமீது அச்சிடும் தொழிலாளர்களுக்கு உதவிகோரி நீவில்-ஸர்-ஸான் என்ற இடத்திலிருந்து வந்த கடிதம் நவம்பர் 11ம் தேதி வாசிக்கப்பட்டது. இதைப்பற்றி மான்சஸ்டருடன் கடிதப் போக்குவரத்து நடத்துமாறு காரியதரிசிக்கு கட்டளையிடப்பட்டது. ஸ்ட்ரைக் செய்திருந்த பாரிஸ் மருத்துவ ஆயுதங்கள் செய்யும் தொழிலாளிகள் உதவி கோரினார்கள். கவுன்ஸில் ஒப்புக்கொண்டு, ஷெப்பீல்டு மருத்துவ ஆயுத தொழிலாளிகளுக்கு வேண்டுகோள்விடுத்தது. க்ரிநோட் விசாரணைப்பற்றிய வேண்டுகோளை பிரசுரம் செய்வதை ஒத்திப்போடலாமென்று 1870, ஏப்ரல் 6ல் மார்க்ஸ் தன் அபிப்பிராயத்தை தெரிவித்தார். எல்லோரும் நிதியளித்திருக்கிறார்கள். லண்டன் வார்த்தையளவிலே நிற்பது தவறான அபிப்ராயத்துக்கு இடம் கொடுக்குமென்று அவர் கூறினார். ஏப்ரல் 10ல், இண்டர்நேஷனல் தலைமையில் ஒரு தொழிற்சங்க பகுதியை ஏற்படுத்த லின்லி போய்விட்டுவந்ததாக, பாரிஸிலிருந்து வார்லின் எழுதிய கடிதம் வாசிக்கப்பட்டது. பல்வேறு சங்கங்களுக்கும் அந்த பகுதி—சமஷ்டி கவுன்ஸில்—தலைமைதாங்கும். க்ரீஸாட் ஸ்ட்ரைக் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட சுரங்கத் தொழிலாளிகளுக்கு கொடும் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதை கவுன்சில் கவனத்துக்குக் கொண்டுவந்து, கவுன்ஸில் ஒரு வேண்டுகோளை விடுக்கவேண்டுமென்று டுபண்ட் கோரினார். இந்த வேண்டுகோளை தயாரிக்க டுபண்டும் மார்க்ஸும் நியமிக்கப்பட்டனர். மே 31ல், ஸ்ட்ரைக் செய்திருக்கும் பாரிஸ் இரும்புத் தொழிற்சாலைகளின் பிரதிநிதி, கூட்டத்தில் ரிப்போர்ட் செய்தார். தொழிற்சங்கங்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கு, அப்பிரதிநிதிக்கு உதவ அவருடன்கூடச் செல்ல, கவுன்ஸில் ஒரு தூதுகோஷ்டியை அனுப்ப முடிவு செய்தது. ஜங்கும், ஹேல்ஸும் நியமிக்கப்பட்டனர்.

எனினும், பிரெஞ்சு தொழிலாளர்களுக்கும் முதலாவது இன்டர் நேஷனலுக்குமுள்ள உறவுகளை ஓரளவுக்கே இவை உணர்த்துகிறது. எங்கல்ஸ், கூகல்மன் முதலியவர்களுக்கு எழுதிய கடிதங்களில் மார்க்ஸ் பிரெஞ்சு விவகாரங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கிறார். வன்மையான பதங்களை உபயோகிக்க அவர் தயங்கவில்லை. பிரௌதனிஸ்டுகளுடைய நடவடிக்கைகள் அவர் மனதைக் கிளர்ந்தன: ஏனெனில் அதில் புராலிடேரியட்மீது பூர்ஷுவா

வர்க்கத்துக்குள்ள செல்வாக்கைக் கண்டார். 1866 அக்டோபர் 9-ல், கூகல்மனுக்கு மார்க்ஸ் எழுதுகிறார் :

"பாரிஸ் கனவான்களின் மண்டைகளில் அர்த்தமில்லாத பிரௌதனிஸ்ட் பதங்கள் நிரம்பியிருக்கின்றன; அவர்கள் விஞ்ஞானத்தைப்பற்றி உளறுகிறார்கள்; உண்மையில் அவர்களுக்கு விஞ்ஞானம் ஒன்றும் தெரியாது. சகல புரட்சிகரமான நடவடிக்கைகளையும்—வர்க்கப் போராட்டத்திலிருந்தெழும் நடவடிக்கைகளை, ஒன்றுபட்ட சமூக இயக்கங்களை, அரசியல் முறைகளில் நடக்கும் சகல இயக்கங்களையும் (உதாரணமாக வேலை நேரத்தை சட்டத்தின்மூலம் நிர்ணயிப்பதற்கான இயக்கம்) அவர்கள் வெறுக்கிறார்கள். சுதந்திரம், அரசாங்கமுறை எதிர்ப்பு, தனிநபர் எதேச்சாதிகார எதிர்ப்பு ஆகிய போர்வைகளின்கீழ், இக்கனவான்கள் கடந்த 16 வருஷகாலமாக படுமோசமான சர்வாதிகாரத்தை சகித்துவந்தவர்கள், இன்றும் சகிப்பவர்கள், சாதாரண பூர்ஷுவா விஞ்ஞானத்தைத்தான்—பிரௌதனிஸ்ட் மாயாவாத மெருகிட்டு—போதிக்கின்றனர்!"

நடிப்பு புரட்சிக்காரர்களையும் வேஷதாரி வீரர்களையும் மார்க்ஸ் வெறுத்தார். லண்டனிலுள்ள பிரெஞ்சுக்காரர்களின் தொழிற்சங்க பகுதியை அவர் தன் கடிதங்களில் விசேஷமாக தாக்குகிறார். 1868, டிஸம்பர் 5 ல் கூகல்மானுக்கு எழுதிய கடிதத்தில், இந்த லண்டன் பகுதியில் நடோடிகளும் பலவித உருப்படியாகாதவர்களும்தான் இருப்பதாகக் கூறுகிறார். "தவிர, இந்த ஸ்ட்ரைக் உடைப்பு கருங்காலிகளால் நாம் பிற்போக்காளர்களாகக் கருதப்படுகிறோம்" என்று எழுதுகிறார். இங்கே அவர் பீலிக்பியாட் என்பவனை அற்புதமாக சித்தரிக்கிறார்:—

"மட்டரகமான நாடகங்கள் எழுதும் பிரெஞ்சு ஆசிரியர்; நாடகக் கலையில் உயரமுடியவில்லை. 1848-ம் வருஷ புரட்சியில், விருந்துகளில் வாழ்த்துகூறும் வேலையைத்தான் செய்தார். ரகசியத்தைக்கூட உரத்தக் குரலில் பேசுவதும், அபாயகரமான சதிகாரனை நடிப்பதும் இந்த சுய கௌரவவாதிக்கு ரொம்ப பிடித்தம். இந்த...பியாட் தன் கும்பலைக் கொண்டு, முதலாவது இண்டர் நேஷனலை தன் கருவியாக்கப் பார்த்தான். நம்முடன் சமரஸம் செய்துகொள்ள குறிப்பாக முயன்றான். சர்வதேச ஸ்தாபனத்தின் கூட்டம் என்று தண்டோரா போட்டு, தமுக்கடித்து நடந்த பிரெஞ்சுக் கிளையின் பொதுக்கூட்டத்தில் (பிரெஞ்சு அரசுத் தலைவன்) லூயிநெப்போலியனுக்கு மரணதண்டனை விதிக்

கப்பட்டது. அந்த தண்டனையை நிறைவேற்றும் பொறுப்பு பாரிஸ் மக்களுக்கு விடப்பட்டது!

"பிளான்குவி தன் நண்பர் ஒருவரைக்கொண்டு பியாட்டைப் பரிகசிக்கச் செய்ததைப் பார்த்து நாங்கள் திருப்தியடைந்தோம். சுயமமதை கொண்டவன் அல்லது போலீஸ் ஏஜெண்ட் என்று இரண்டிலொன்றுகவே ஜனங்கள் கருதக்கூடிய நிலைக்கு வந்து விட்டான்."

அந்த தேசத்தின் இயக்கத்தை வளர்ப்பதில்தான் மார்க்ஸுக்கு அதிகசிரத்தை. பொதுஜன இயக்கத்தை உன்னிப்பாக கவனித்து வந்தார்; தன் அபிப்பிராயங்களையும் கருத்துகளையும் தன் நண்பர்களுடன் பரிமாறிக்கொண்டார். 1869 ஜனவரி 13 ல் எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதுகிறுர்:—

"ரூவன், வீயன் முதலிய இடங்களில் பஞ்சாலை வேலைநிறுத்தங்கள் தொடங்கி, 6, 7 வாரங்களாகிவிட்டன. அதைப்பற்றிய ருசிகரமான சம்பவம் என்னவென்றுல், ஸ்ட்ரைக் நடப்பதற்கு கொஞ்சம் முன்புதான், ஏமியன்ஸ் நகரில், அந்நகர மேயர் தலைமையில், உற்பத்தியாளர் மகாநாடு நடந்தது. இங்கிலீஷ்காரர்கள் முதலியோருடன் போட்டியிட இந்த தீர்மானிக்கப்பட்டது. இன்னும் சம்பளத்தை குறைப்பதன் மூலம் இதை நிறைவேற்ற முடிவெடுத்தார்கள். இங்கிலீஷ் பஞ்சாலைகளுடன் பிரான்ஸ் போட்டியிடவேண்டுமானுல், பிரிட்டிஷ் தொழிலாளிகளின் கூலியைவிட குறைத்தால்தான் சாத்தியம் என ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த ஏமியன்ஸ் கூட்டத்துக்குப்பின், ரூவன், வீயன் முதலிய இடங்களில் சம்பளம் வெட்டப்பட்டது. ஆகவே ஸ்ட்ரைக்குகள் ஏற்பட்டிருக்கின்றன. இங்குள்ள கேவலமான நிலைமையை (குறிப்பாக பஞ்சாலைகளில் நிலவும் நிலைமையை)யும் தற்காலததில் நிதி திரட்டும் முறைக்கு தடையாயுள்ள கஷ்டங்களையும் ஸ்ட்ரைக்கர்களுக்கு டேபண்ட் மூலம் தெரிவித்திருக்கிறேம். இதற்குள் வீயனிலிருந்து வந்துள்ள கடிதம் காட்டுவதுபோல, வீயன் ஸ்ட்ரைக் முடிந்துவிட்டது. போராட்டத்தை நீடிக்கும் ரூவன் தொழிலாளிகளுக்கு, பாரிஸின் வெண்கலத் தொழிலாளிகளை 20 பவுண்டுகள் கொடுக்கும்படி கட்டளை யிட்டிருக்கிறேம். வெண்கலத் தொழிலாளிகளுக்கு கதவடைப்பு ஏற்படுவதற்கு முன்னரேயே அவர்கள் நமக்கு கொடுக்கவேண்டிய தொகை இது. பொதுவாகச் சொல்லப்போனுல், இந்த பிரெஞ்சு தொழிலாளிகள் ஸ்விஸ் தொழிலாளிகளைவிட நியாயமாக நடந்துகொள்கிறுர்கள்; அவர்

களுடைய தேவைகளும் ஸ்விஸ் தொழிலாளர்களுடையதைவிட மிதமாகவே இருக்கிறது."

அக்காலத்தில், பிரெஞ்சு நிலைமையில், சிக்கல் அதிகமாகி வந்தது. புரட்சி சமீபித்துக்கொண்டிருக்கிறது. புரட்சி மோப்பம் பிடித்தவுடன் மிதவாத ஜனநாயக வாதிகளின் குலைப்பு அதிகரித்தது. 1869 நவம்பர், 29-ல் கூகல்மனுக்கு மார்க்ஸ் எழுதினர்:

"பிரான்ஸில், காரியங்கள் நன்கு நடைபெற்று வருகின்றன. ஒரு பக்கத்தில் பத்தாம் பசலி வாய்ப்பந்தல் வீரர்களும் ஜனநாயக உளறுவாயன்களும் தங்கள் கொள்கைகளை சமரஸப் படுத்தி (விட்டுக்கொடுத்து) வருகின்றனர். மறுபுறத்தில், போனபார்ட்டி (பிரெஞ்சி அரசுத் தலைவன்) சலுகைக்குமேல் சலுகை கொடுக்கும்படி நிர்ப்பந்தப் படுத்தப்படுகிருன். இந்த ரீதியில் அவன் கழுத்தை முறித்துக்கொள்வது நிச்சயம்".

1869, மார்ச் 3-ல், மார்க்ஸ் கூகல்மானுக்கு விரிவான கடிதமொன்று எழுதினர். அதில் பிரெஞ்சு நிலைமையை பரிசீலனை செய்தார். அப்போது தோன்றிய குறிகளிலிருந்து வரப்போகும் புயலை முன்கூட்டியே உணர்ந்தார் மார்க்ஸ் :—

"பிரான்ஸில் மிக ஜோரான இயக்கமொன்று நடக்கிறது. சமீப காலத்திய புரட்சிகளின் அனுபவங்களை பாரிஸ் மக்கள் நன்கு ஆராய்ந்து கற்றுவருகின்றனர். வரப்போகும் புதிய புரட்சிக்கு ஆயத்தமாகும்பொருட்டே இதைச் செய்துவருகின்றனர் . . . . . . சரித்திர எரிமலை குமுறிக்கொண்டிருக்கிறது . . . . . . அந்நாள் எப்பொழுது வரும்?"

இண்டர்நேஷனலின் பகுதிகள் சந்தர்ப்பத்துக்கு தக்கமுறையில் வளர்ந்து தம் கடமைகளை ஆற்றுமா என்பதே மார்க்ஸின் பிரதான கவலையாயிருந்தது. பிரௌதனிஸ்டு பரம்பரைகளை உடைத்தெறிந்து பிரெஞ்சு தொழிலாளிகள் முன்னேறும் ஒவ்வொரு தடவையும், மார்க்ஸ் அதை முக்கியமான சாதனையாக கணித்தார். 1870, மே 18-ல், எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதுகிருர் :—

"ஒரு ரகசிய அரசியல் கழகத்துக்கும் உண்மையான தொழிற்சங்கத்துக்குமுள்ள வித்தியாசத்தை நமது பிரெஞ்சு அங்கத்தினர்கள் பிரெஞ்சு சர்க்காருக்கு பிரத்தியட்சமாக காண்பித்து வருகின்றனர். பாரிஸ், லயான்ஸ், ரூவன் மார்ஸேல்ஸ் முதலிய நகரங்களின் கமிட்டிகளில் அங்கம் வகிக்கும் சகலரையும் சிறையில் போடுவதற்குள் (சிலர் பெல்ஜியத்துக்கும் ஸ்விட்ஸர்லந்துக்

கும் தப்பியோடிவிட்டனர்) புதிய கமிட்டிகள், இரட்டிப்பு எண்ணிக்கை பலத்துடன், தாங்கள் பழைய கமிட்டிகளின் ஸ்தானங்களில் அமர்ந்துவிட்டதாக பத்திரிகைகளில் பிரகடனப்படுத்தின; தங்கள் வீட்டு விலாசங்களையும் அறிவித்தன. ஆளும் வர்க்கத்தை பொருட்படுத்தாதமுறையில், அஞ்சாநெஞ்சத்துடன், பல பிரகடனங்களை செய்தன. நாம் நீண்டகாலமாக விரும்பியதை இறுதியாக பிரெஞ்சு சர்க்கார் செய்துவிட்டது:—குடியரசா அல்லது சாம்ராஜ்யமா? (ஏகாதிபத்தியமா?) என்ற அரசியல் பிரச்னையை தொழிலாளிவர்க்கத்தின் ஜீவமரண பிரச்னையாக்கிவிட்டது."

பிராங்கோ-பிரஷ்ய யுத்தம் (பிரான்ஸுக்கும் பிரஷ்யாவுக்கும்) தொடங்கிய, 1870 ஜுலை 19-ல் சம்பவங்கள் கொதித்தெழும் நிலையை, சிகரத்தை அடைந்தன. யுத்தம் ஆரம்பித்த நாட்களிலிருந்தே, தொழிலாளர் இயக்கத்தின் அலைப்பெருக்கு தணியத் தொடங்கியது. எனினும் இயக்கம் அழியவில்லை.

பல பிரெஞ்சு தொழிற்சங்கங்களும் ஜெர்மன் தொழிற்சங்கங்களும் யுத்தத்தை எதிர்த்தன. "சர்வ தேசங்களிலுள்ள தொழிலாளர்களுக்கும்" அறைகூவல் விடுத்த யுத்த எதிர்ப்பு பிரகடனத்தை ரிவீல் என்ற பத்திரிகை பிரசுரித்தது. யுத்தம் துவங்கி மூன்றுநாட்களானவுடன் ஜுலை 22ல், நூல்லி-ஸர்-ஸீனிலுள்ள இண்டர்நேஷனலின் பகுதி யுத்தத்தை வன்மையாக கண்டித்து ஒரு அறிக்கையை வெளியிட்டது:—

"இது நியாயமான யுத்தமா? இல்லை! இது தேசீய யுத்தமா? இல்லை! இது ஆதிக்கத்துக்காக நடக்கும் யுத்தம். மனித வர்க்கத்தின் பெயரால், ஜனநாயகத்தின் பெயரால், பிரான்ஸின் உண்மையான நலன்களின் பெயரால், இண்டர்நேஷனலின் யுத்த கண்டனத்தை, யுத்த எதிர்ப்பை, பரிபூர்ணமாக, அழுத்தம் திருத்தமாக ஆதரிக்கிறோம்".

ஜுலை 23லேயே, முதல் இண்டர்நேஷனலின் ஜெனரல் கவுன்ஸில் யுத்தத்தை எதிர்த்து ஒரு வேண்டுகோள் விடுத்தது. மார்க்ஸால் எழுதப்பட்ட இந்த பிரகடனம், நெப்போலியனையும் (பிரெஞ்சு தலைவன்), பிஸ்மார்க்கையும் (பிரஷ்ய ஆட்சித் தலைவன்) கண்டித்தது; பிராங்கோ பிரஷ்ய யுத்தத்துக்கு காரணஸ்தர்களான இந்த தீவட்டிக்காரர்களை அம்பலப்படுத்தியது. இந்த பிரகடனத்தில் தீர்க்கதரிசனம் ததும்பிய கீழ்க்கண்ட வாக்கியமும் உளது:

"பிரஷ்யாவுடன் லூயி போனபார்த்தி நடத்தும் போராட்டத்தின் பிரச்னை என்னவாயினும் சரி, இரண்டாவது சாம்ராஜ்யத்தின் (பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின்) சாவுமணி ஏற்கனவேயே பாரிஸில் அடித்துவிட்டது"

இந்த தீர்க்கதரிசனம் சீக்கிரமே மெய்யாயிற்று: 1870 செப்டம்பர் முற்பகுதியில், ஸொடானில் நெப்போலியன் தன் ராணுவத்துடன் சரணடைந்தான். ஸெப்டம்பர் 4ம் தேதி ஒரு புரட்சி மூண்டது. அதன் விளைவாய் உருவான "தேசபாதுகாப்பு சர்க்காரில்" அங்கம் வகித்தவர்களை "பேராசை பிடித்த வக்கீல்களின் கூட்டம்" என்றார் மார்க்ஸ். இந்த சர்க்காரிடம், இண்டர்நேஷனலின் பாரிஸ் பகுதி பிரதிநிதிகளும் "தொழிற்சங்கங்களின் சமஷ்டியின்" பிரதிநிதிகளும் அடங்கிய தூது அதாவது பாரிஸ் தொழிலாளி வர்க்கத்துக்கு பிரதிநிதித்வம் வகிக்கும் தூது சென்று பேட்டிகண்டது. ஒரு திட்டத்தையும் சர்க்காருக்கு சமர்ப்பித்தது. பாரிஸ் தொழிலாளிவர்க்கத்துக்கு புதிய சர்க்காரிடம் உண்டாக்கக்கூடிய நம்பிக்கையும், புதிய சர்க்காருக்கு அது அளிக்கும் ஆதரவும், இந்த திட்டத்தை அனுஷ்டானத்துக்கு கொண்டுவருவதைப் பொறுத்திருக்கிறது என்று கூறியது. இத்திட்டத்தின் பிரதான கோரிக்கைகளாவன :—

—பாரிஸ் நிர்வாகம் ஜனங்கள் கைக்கு மாற்றப்படவேண்டும். ஜனங்களே நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள்; ஜனங்களின் மத்தியிலிருந்து தேசீயப் படை திரட்டப்படும்.

—பரிபூர்ண பத்திரிகை சுதந்திரம்.

—சிறைப்பட்டவர்களனைவருக்கும் விடுதலை.

—மத நிர்வாகத்தை சர்க்காரிடமிருந்து பிரித்துவிடவேண்டும்.

அதிகாரத்தை கைப்பற்றியிருந்த தீர்ஸ், ஜூல்ஸ் பேப்பர் ஆகியோரின் கும்பல் தன் பதிலை மழுப்பிவிட்டது. ஆகவே, தொழிலாளிகள் சர்க்காரின் நடவடிக்கைகளை உஷாராய் கவனிக்க ஒரு கண்காணிப்பு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். ஆரம்பத்திலிருந்தே, பாரிஸ் புராவிடேரியட்டுக்கும் தேசீய பாதுகாப்பு சர்க்காருக்கும் பரஸ்பர நம்பிக்கை இல்லை என்பதை இருவரும் பகிரங்கப் படுத்தினார்கள். பிரஷ்யர்களைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக தொழிலாளிகளைக் கண்டால் பயப்படும் ஒரு தேசத்துரோக சர்க்காரை சமாளிக்க வேண்டுமென்று தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வர்க்க உணர்ச்சி எடுத்துரைத்தது. செப்டம்பர் மாதம் ஒன்பதாம் தேதி, முதல் இண்டர்நேஷனல்

ஒரு புதிய பிரகடனத்தை வெளியிட்டது. அதில் "பாதுகாப்பு" என்ற (நவீன வார்த்தை! ஆ-ர்) திரையிட்டுக்கொண்டிருக்கும் பிரஷ்யா ஏகாதிபத்திய வெறியை அம்பலப்படுத்தியது; பிரெஞ்சு முதலாளிவர்க்கத்தின் ஏஜெண்டுகளான தீர்ஸ் கும்பலின் குடியரசுடைய உண்மை ரூபத்தை சித்தரித்தது. மார்க்ஸ் எழுதுகிருர்:—

"இக்குடியரசு சிம்மாசனத்தை (முடியரசை) கவிழ்க்கவில்லை; காலியாக இருந்த ஸ்தானத்தில் அமர்ந்து . . . . . (நாட்டில் ஏற்பட்டிருக்கும்) நாசத்துடன் தொழிலாளிவர்க்கத்தை கண்டு குலைநடுங்கும் பயத்தையும் சாம்ராஜ்யத்திடமிருந்து பிதுர்ராஜிதமாகப் பெற்றது".

தீர்ஸ் குடியரசைப் பற்றிய இந்த அபூர்வ நிர்ணயிப்பு சில மாதங்களில் மெய்ப்பிக்கப்பட்டது. ஆனல், நெப்போலியன் வீழ்ந்த பல நாட்களுக்குப் பின் இந்த தீர்ஸ் சர்க்காரை (செப்டம்பர் 4-ல் ஏற்பட்ட சர்க்கார்) தொழிலாளிகள் அச்சமயத்தில் கவிழ்க்க மாட்டார்களென்று மார்க்ஸ் எண்ணிஞர்.

"பகைவர்கள் பாரிஸ் நகர வாசலில் இருக்கும்பொழுது, புதிய சர்க்காரை கவிழ்க்கமுயற்சிப்பது நம்பிக்கையற்ற துடிதுடிப்பாலுண்டாகும் பைத்தியக்காரத்தனமாகும்" என்று மார்க்ஸ் எழுதிஞர். எனினும், 1870 அக்டோபர், 8, 31-ந் தேதிகளிலும், 1871 ஜனவரி 29-ந் தேதியிலும் சர்க்காரைக் கவிழ்க்க பிளான்குவிஸ்டுகள் சில முயற்சிகள் செய்தனர். அவைகளை பாரிஸ் பொது மக்கள் ஆதரிக்க வில்லையாதலால், அவை தோற்றன. சர்க்காரின் துரோகம் யதார்த்தமான அனுபவ உண்மையானபின்னரே, சர்க்கார் தேசீய படைகளை (ஜனங்களின் படைகள்) நிராயுதபாணிகளாக்க முயற்சித்த பொழுது, உழைப்பாளி மக்கள் எழுச்சிபுற்றனர்—'மகிமை பொருந்திய தொழிலாளர் புரட்சி பாரிஸில் தங்கு தடையற்ற அரசு புரிந்தது" (மார்க்ஸ்) பாரிஸில் பாட்டாளி மக்கள் புரட்சி செய்து, பாட்டாளி அரசை ஸ்தாபித்தனர். சோவியத் யூனியன் அரசாங்கத்தின் முன்னேடியாக விளங்கியது இந்த பாரிஸ் கம்யூன். தன்னலமற்ற தியாகத்துடனும் மகத்தான தீரத்துடனும் தொழிலாளர்கள் போராடிய போதிலும், அது இரண்டே மாதங்கள்தான் நீடிக்க முடிந்தது. ஒன்றுபட்ட பிற்போக்காளர்களின் தாக்குதலுக்கு கம்யூன் பலியாயிற்று. நேற்று ஒருவருக்கொருவர் சண்டையிட்ட "பரம்பரை விரோதிகள்" இன்று ஐக்கிய முன்னணி அமைத்து கம்யூனைத் தாக்கினர்கள். கம்யூனுக்கு தலைமைவகித்த பிரௌதனிஸ்டு

களும், பிளான்குவிஸ்டுகளும் ஒன்றும் புரியாமல் தத்தளித்தபடியாலும், சமயத்துக்குவேண்டிய உறுதியும் வைராக்கியமுமில்லாமல் நின்றபடியாலும், கம்யூன் வீழ்ந்தது.

கம்யூன் பிரகடனம் செய்யப்பட்டவுடனேயே, இந்த தொழிலாளர் சர்க்காரின் பாதுகாப்பு வேலைக்கு மார்க்ஸ் தன்னை அர்ப்பணித்தார். அச்சமயத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை அவர் எதிர்த்து வந்திருந்தபோதிலும், அவர் வாதிக்கவில்லை; ஒரு எழுச்சிமாத்திரமல்ல, தொழிலாளி வர்க்கம் அதிகாரத்திலுமிருப்பதை அவர் கண்டார். வாதிப்பதல்ல, உதவுவதே ஒரு புரட்சிக்காரனுடைய கடமை என அவர் கருதினார். கூகல்மனுக்கு 1871 ஏப்ரல் 12-ல் எழுதிய கடிதத்தில், மார்க்ஸ் கம்யூனை காத்து நின்றவர்கள் வீரத்தைப்போற்றி—அவர்கள் "வானுலகத்தையும் கைப்பற்றத் தயாராயிருந்தார்கள்"—என்று உற்சாகமாக எழுதுகிறார். அவர்களுடைய உறுதிக்குறைவை அவர் கண்டிக்கிறார். "அவர்கள் தோற்றால், அதற்கு அவர்களுடைய தாராளபுத்திமீதே பழிபோடவேண்டும்" என்று கூறுகிறார். கம்யூனின் பலவீனங்களை மார்க்ஸ்கண்டார். அவர் யோசனை சொல்லி, அவற்றை ஒழிக்க முடியவில்லை; கம்யூனின் குறைபாடுகளை இண்டர்நேஷனல் ஈடு செய்யமுடியவில்லை.

கம்யூன் நசுக்கப்பட்டது. பத்தாயிரக்கணக்கான பாட்டாளிகளின் எலும்புகள்மீது, "ஒழுங்கு" வெற்றிகரமாக நிலைநாட்டப்பட்டது. பிரான்ஸின் இந்த உள்நாட்டு யுத்தத்தைப்பற்றி முதல் இண்டர் நாஷனல் ஒரு வேண்டுகோளை வெளியிட்டது. இதில், மார்க்ஸ் சுரண்டும் கும்பல்மீது தன்னுடைய எல்லையற்ற வெறுப்பைக் கொட்டினார். ஒரு பெரிய புரட்சிக்காரனின் ஆவேசமும் அவற்றில் பிரதிபலித்தன. அது ஒரு வேண்டுகோள் மாத்திரமல்ல; தன் சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்க தொழிலாளிவர்க்கம் நடத்தும் போராட்டப் பாதையில் ஒளிவீசும் ஒரு அரசியல் சாசனம் அது. கம்யூனை புதியவித சர்க்காராக மார்க்ஸ் கருதினார். தான் தோன்றும்பொழுதே, பழைய அமைப்பை நாசம் செய்யும் சர்க்கார் அது. கம்யூன் பார்லிமெண்டரி முறையை பின்பற்றக் கூடாது; அது உழைக்கும் சர்க்காராக—ஐக்கியபாவத்தின் பிரதிபலிப்பாக—இருக்கவேண்டுமென்று மார்க்ஸ் எண்ணினார். பழைய அரசாங்க அமைப்பை அழித்துவிட்டு புதிய அரசாங்க முறையை ஸ்தாபிப்பதென்ற இக்கருத்து லெனின் சித்தாந்த புத்தகங்களுக்கு (அரசாங்கமும் புரட்சியும்) ஆதாரமாய் அமைந்ததுடன், சோவி

யத் குடியரசைச் சிருஷ்டித்த நடவடிக்கைகளுக்கும் அஸ்திவாரமாய் அமைந்தது.

இரண்டுமாதங்களுக்கு மாத்திரமே பதவியிலிருந்த ஒரு சர்க்காரிடமிருந்து அதிகமாக கோருவது முடியாத காரியம் என்று மார்க்ஸுக்கு தெரியும். ஆகவே, கம்யூனின் முக்கியத்வத்தை குறைத்துக் கூறியவர்களையும், அது தோற்றபின், அதனுடைய "தவிர்க்கமுடியாத தோல்வி"யைப்பற்றி கரைந்தவர்களையும் மார்க்ஸ் குத்திக்குத்திக்காட்டி, வன்மையாகத்தாக்கினர். மார்க்ஸ் எழுதுகிறார்:—

"கம்யூனின் தோற்றமே, கம்யூனின் நடவடிக்கையே கம்யூனின் மகத்தான சோதனை. பொதுஜன சர்க்கார் பொதுமக்கள் மூலமாக வளர்ச்சியடையும் பாதையைத்தான் கம்யூனின் நடவடிக்கைகள் காண்பிக்கமுடியும்.

கம்யூன் வெற்றியடையாததால், இந்த முயற்சியில் இறங்கியிருக்கவே வேண்டியதில்லை என்று கூகல்மன் எழுதிய கடிதத்துக்கு மார்க்ஸ் 1871 ஏப்ரல் 17 ல் பதிலெழுதினர்:—

"நிச்சயமாக வெற்றியடையும் என்ற நிலைமையில்தான் போராட்டங்கள் நடக்கவேண்டுமென்ருல், உலக சரித்திரம் மிக சுலபமாகிவிடும்...உடனடியான பலன்கள் எவ்வாருயினும் சரி, உலகசரித்திர முக்கியத்துவம்பெற்ற பாதை திருப்பத்தில் முதல் அடி எடுத்து வைத்தாகிவிட்டது"

தங்களுக்கு சொந்தமான தொழிலாளர் ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் முயற்சியில் பாரிஸ் புராலிடேரியட் ஏராளமாக தியாகம் செய்யவேண்டியிருந்தது. கம்யூன் நசுக்கப்பட்டதால், தொழிலாளிவர்க்கத்துக்கு ஏற்பட்ட சேதம், அதை சிலகாலத்திற்கு அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்கும்படி செய்தது. இண்டர்நேஷனலின் பிரெஞ்சு பகுதிகள் துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாயின: இறுதியில், 1872-ல் விசேஷ உத்திரவின்மூலம் அவை கலைக்கப்பட்டன. அச்சமயம், பல வர்ணங்களையுடைய மிதவாதிகள்—புரட்சியைக் கண்டு பயந்து இண்டர்நேஷனலை விட்டு விலகியவர்கள், கம்யூனைப்பற்றி மதில்மேல் பூனைக் கொள்கையை அனுஷ்டித்தவர்கள, தொழிலாளர்களிடம் வேலை செய்யத் தொடங்கினர். பார்பாட் ஒரு 'தொழிலாளர்களின் தொழிற்சங்க கழகத்தை' ஆரம்பித்தார், "கல்வியின்மூலம் ஒற்றுமையும் நியாயமும் அடைவதை இக்கழகம் அதன்நோக்கமாகக் கொண்டது. தொழிலாளர்கள் எவ்வளவு மிதமாக தங்கள் உரிமைகளை எடுத்துக்கூறுகின்றனர் என்று

பொதுஜன அபிப்பிராயத்துக்கு எடுத்துக் கூறுவதும் அதன் நோக்கம். இத்தகைய "ஒருபாவமுமறியாத" கழகங்கள்மீதும் அடக்குமுறை தலைவிரித்தாடியது. எனினும் அவை ஏராளமாகப் பெருகின. தொழிலாளர்கள் மீண்டும் சர்வதேச கண்காட்சிக ளில் கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள். 1875-ல் 135 தொழிற் சங்கங்கள் ஏற்பட்டுவிட்டன. தொழிலாளர் காங்கிரஸைக் கூட் டுவதைப்பற்றியும் விவாதிக்கப்பட்டது. 1876-ல் காங்கிரஸ் நடந்தது. கம்யூனின் புரட்சிகரமான கருத்துகளுக்கும் கோஷங் களுக்கும் மாற்று மருந்தாக, பரஸ்பர உதவி, தொழிற் ஸ்தாப னங்கள் முதலிய பிரச்சினைகள் இங்கு விவாதிக்கப்பட்டன. பூர்ஷுவா சமூக அமைப்பை வீழ்த்துவதற்கு திட்டமிடுவதைப் பற்றி பிரதிநிதிகள் சிந்திக்கவும் இல்லை; பூர்ஷுவா அமைப்பைக் கொஞ்சம் தொட்டுப்பார்த்து, அபிவிருத்தி செய்யவே விரும்பி னார்கள். "உற்பத்தியிலும் உபயோகத்திலும், முதலுக்கும் தொழிலுக்கும் உள்ள உறவுகளை சரிசெய்ய" விரும்பினார்கள். உள்நாட்டு யுத்தத்துடன் (அதாவது தொழிலாளர் புரட்சி) ஸ்ட் ரைக் போராட்டங்களையும் கண்டித்தனர். ஏனெனில், அவை "பலசாலிகளைத் தாக்குகின்றன; பலமில்லாதவர்களை அழிக் கின்றன" என்றார்கள். (பலசாலிகள் முதலாளிகள்: பலஹீன மானவர்கள் தொழிலாளிகள். மொ—ர்.)

1879ல் மார்ஸேல்ஸ் காங்கிரஸில் பரிபூர்ணமாக வித்தியாசப் பட்ட மனோபாவம் காணப்பட்டது. பாரிஸ் கம்யூன் வீழ்ச்சிக்கு பிறகு, தொழிலாளிவர்க்கம் மீண்டும் பலம்பெற்றுவருவதை அது எடுத்துக்காட்டியது. 1877ல் துடங்கிய மார்க்ஸிஸ்ட் பத்திரிகை, எகலிடியின் செல்வாக்கும் இதற்கு உதவிசெய்தது. மார்ஸேல்ஸ் காங்கிரஸைக் கூட்டிய ஸ்தாபன கமிட்டிக் காரியதரிசி எலாம் பார்ட் இக்காங்கிரஸுக்கு "பிரெஞ்சு சோஷியலிஸ்ட் தொழிலா ளர் காங்கிரஸ்" என்று பெயரிடலாமென்று யோசனை கூறினார். அது ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரசங்கிகள் லூயி பிளான்கையும் அவன் சித்தாந்தங்களையும் பகிரங்கமாக எதிர்த்த னர். முன்னர் கூடிய தொழிலாளர் காங்கிரஸில் கம்யூனைப் பற்றி பேசக்கூடாதென்றார்கள். மார்ஸேல்ஸ் காங்கிரஸோ, கம்யூனை காத்துநின்று, அதற்காக நாடுகடத்தப்பட்டு, லண்டனில் வசிக்கும் புரட்சிக்காரர்களின் வாழ்த்துக்களுக்கு கீழ்க்கண்ட பதிலை அனுப்பியது:

"உங்கள் ஆதரவு மார்ஸேல்ஸ் சோஷியலிஸ்ட் தொழிலா ளர் காங்கிரஸின் சகல அங்கத்தினர்களையும் மெய்மறக்கச்

செய்தது. நீங்கள் எந்தக் கொள்கைகளுக்காக போராடினீர்களோ, கஷ்டப்பட்டீர்களோ, அதே கொள்கைகளை அணுவளவும் பிறழாமல் போற்றிக் கடைப்பிடிப்போமென்று இங்கு கூடியிருக்கும் பிரதிநிதிகள் மீண்டும் பிரகடனப்படுத்துகின்றனர்"

அரசியல் இயக்க மறுமலர்ச்சியையும் காங்கிரஸ் ஆரம்பித்துவைத்தது. இங்கு, பலதரப்பட்ட அபிப்ராயங்களை உடைய ஒரு தொழிலாளர் அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இக் கட்சியின் திட்டத்தை தயாரிப்பதில் மார்க்ஸ் பெரும் பங்கெடுத்தார்.

இந்த திட்டத்தின் பிரதான ஷரத்துகள் என்ன?

"உற்பத்திசெய்யும் வர்க்கம் விடுதலையடைந்தால், அதே சமயத்தில், ஆண் பெண் வித்தியாசமில்லாமல், வர்ண வித்தியாசமில்லாமல், சகல ஜனங்களும் விடுதலையடைவார்கள்; உற்பத்தி சாதனங்கள் உற்பத்தியாளர் ஆதீனத்துக்கு வந்தால்தான் உற்பத்தியாளர்கள் விடுதலை பெறமுடியும்;

உற்பத்தி சாதனங்கள் உற்பத்தியாளருக்கு சொந்தமாக இருப்பதற்கு, இரண்டே இரண்டுமுறைகள்தானிருக்கின்றன:

(1) தனிநபர் உடைமை—இது நீடூழி வாழ்ந்த முறையல்ல. தற்காலத்தில் ஏற்பட்டுவரும் தொழில் வளர்ச்சியால், மேலும் மேலும் இது க்ஷீணித்துவருகிறது.

(2) பொது சொத்துரிமை—இதற்கான யதார்த்த சூழ்நிலை—லோகாயுத ரீதியிலும் அறிவுவளர்ச்சி ரீதியிலும், முதலாளித்துவ சமூக வளர்ச்சியாலேயே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டாவது உருவம் (கூட்டு சொத்துரிமை) ஸ்தாபன ரீதியாக திரட்டப்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தின் பலனாக அமையும். இந்த ஸ்தாபனத்தை உருவாக்க, புராலிடேரியட்டிடமுள்ள சகல சக்திகளையும் பயன்படுத்தவேண்டும். பொது வோட்டுரிமையை பெற்று, இந்த ஸ்தாபனத்தின்மூலம், ஏமாற்றுக் கருவியாக இருந்துவந்த அந்த வோட்டுரிமையை (பூர்ஷ்வா வர்க்கத்தின் ஏமாற்றுக் கருவி—மொ-ர்.) விடுதலைக் கருவியாக்கவேண்டும்.

ஆகவே, சகல உற்பத்தி சாதனங்களையும் சமூக சொத்தாக்கும் பொருளாதார நடவடிக்கை நோக்கமாகக்கொண்ட பிரெஞ்சு சோஷியலிஸ்ட் தொழிலாளிகள் தங்கள் ஸ்தாபனத்தையும் போராட்டத்தையும் வளர்க்கும்பொருட்டு, தேர்தலில் கலந்துகொள்ளத் தீர்மானிக்கிறார்கள்."

அக்காலத்திய பிரெஞ்சு தொழிலாளர் இயக்கத்தில் தேர்தல் பிரச்னை முக்கியமானதாயிருந்தது. ஒருபுறத்தில், அரசியலே வேண்டாம் என்ற மனோபாவம், சட்டசபை எதிர்ப்பு மனோபாவம், தொழிலாளிகளிடம் அதிகமாயிருந்தது. மறுபுறத்தில், வோட்டுப் பெட்டியின் மகத்துவத்தைப்பற்றி அளவுக்கு மீறி கற்பனைசெய்து, சாத்வீக முறைகளிலேயே தொழிலாளி வர்க்கத்தை விடுதலை செய்துவிடலாமென்று எண்ணினர் பலர். ஆகவே, தொழிலாளர் கட்சியின் திட்டத்தில், புராலிடேரியட்டுடைய வர்க்கப் போராட்டத்தில் தேர்தல் இயக்கத்தின் பங்கைப்பற்றி ஒரு விசேஷ அத்தியாயம் இருந்தது. திட்டம் கூறுவதாவது:—

"அரசியல் சுதந்திரம் பறிக்கப்பட்டால், அது பொதுமக்கள் சமூக அழிவுபெறவும், புராலிடேரியட் விடுதலை அடையவும் தடையாயிருக்கிறது;......அரசியல் நடவடிக்கை ஒரு கிளர்ச்சி முறையாக பயன்படுமென்பதையும் மனதில்கொண்டு, தேர்தல் களம் ஒரு போர்களம், அதிலிருந்து ஒருவர் ஓடக்கூடாது என்பதையும் கருத்தில்கொண்டு, சோஷியலிஸ்ட், தேசீய, சர்வதேச காங்கிரஸ்களின் தீர்மானங்களை இந்த காங்கிரஸ் ஊர்ஜிதம் செய்து பிரகடனப்படுத்துவதாவது:—

(1) தொழிலாளி மக்களின் சமூக விடுதலை அவர்களுடைய அரசியல் விடுதலையுடன் பிரிக்கமுடியாதபடி பின்னிக் கிடக்கிறது.

(2) அரசியல் நடவடிக்கையிலிருந்து ஒதுங்கிநிற்பது விபரீதமான விளைவுகளைக் கொடுக்கும்.

(3) தொழிலாளி வர்க்கத்தை விடுதலைசெய்ய, புரட்சி ஒன்று தான் மார்க்கம்; ஆனால் ஸ்தாபனரீதியாக திரட்டப்பட்ட தொழிலாளிவர்க்கத்தின்மூலமே புரட்சி சாத்தியம்".

இதன்பின் வரும் பகுதிகள் அரசியல் பொருளாதார திட்டங்களை விளக்குகின்றன. தொழிலாளர் இயக்கவளர்ச்சிக்கு குறுக்கே நிற்கும் அரசியல் தடைகளை அகற்றவேண்டுமென்று கோருகிறது. வேலைநேரம், சம்பளம், மறைமுக வரிகள் ஒழிப்பு முதலியவற்றைப்பற்றிய கோரிக்கைகளும் உருவாக்கப்பட்டன. 1875ல் ஜெர்மன் சமூக ஜனநாயகவாதிகள் தயாரித்த கோதா திட்டத்தைவிட உயர்ந்த திட்டமிது. எனினும் இத்திட்டம் முழுவதும் உயர்ந்ததல்ல; பெர்ன்ஸ்டீனுக்கு எழுதிய கடிதத்தில் (1881, அக்டோபர் 25) எங்கல்ஸ் எழுதினார்:—

"குறைந்தபட்ச சம்பளத்தைப்பற்றிய அபத்தத்தை சேர்க்க வேண்டுமென்று கூஸ்ட் (Guesoe) பிடிவாதம் பிடித்தார். திட்

டத்துக்கு நாமல்ல, பிரெஞ்சுக்காரர்களே ஜவாப்தாரியாயிருப்பதால், மார்க்ஸ் இக்கொள்கையை தவருகக் கருதியபோதிலும், நாங்கள் இணங்கவேண்டியதாயிற்று".

மார்க்ஸும் எங்கல்ஸும் நேரடியாக அரசியல், ஸ்தாபன உதவி அளித்து, சிருஷ்டிக்கப்பட்ட தொழிலாளர் கட்சியில் மார்க்ஸிஸ்ட்களுக்கும் பாஸிபிலிஸ்டுகளுக்கும் போராட்டம் மூண்டது. பாஸிபிலிஸ்டுகளின் தலைவன் மாலன். முக்கியமான கொள்கை பிரச்னைகளைப்பற்றிய போராட்டம் அது. பார்லிமெண்டரி சோஷியலிஸமா? புரட்சிகரமான சோஷியலிஸமா? வர்க்க ஒத்துழைப்பா? வர்க்கப் போராட்டமா? போன்ற பிரச்னைகள் அவை. மறுபுறத்தில், வாலியண்ட் தலைமையில் பிளான்குவிஸ்டுகள் தனி கட்சி அமைத்தனர். இறுதியாக, பிரௌதனிஸ்ட்—பாக்குனினிஸ்ட் கருத்துகள் தலைதூக்கி நின்ற தொழிற்சங்கங்களில் மார்க்ஸிஸ்ட்—எதிர்ப்பு கருத்துக்களுக்கு வலுவேற்பட்டன.

தொழிலாளர் கட்சிக்குள், மார்க்ஸிஸ்டுகளுக்கும் மார்க்ஸிஸ்ட் எதிரிகளுக்கும் நடந்த போராட்டம் தீவிரப்பட்டது. மாலனும் பிரௌன்ஸும் சந்தர்ப்பவாதிகளுக்கு தலைமை தாங்கினார்கள். 1882-ல் நடந்த தொழிலாளர் கட்சி காங்கிரஸில், மார்க்ஸிஸ்ட் பகுதி கட்சியிலிருந்து விலக்கப்பட்டது. இந்த பிளவை மார்க்ஸும் எங்கல்ஸும் எதிர்பார்க்காமல் இல்லை. 1882 அக்டோபர் 28-ல், பெபலுக்கு எங்கல்ஸ் எழுதுகிருர் :—

"நீண்ட நாட்களாய் எதிர்ப்பார்த்த பிளவு பிரான்ஸில் சம்பவித்து விட்டது. கட்சி ஆரம்பித்தபோது, ஏற்பட்ட ஒத்துழைப்பு நீடிக்குமென்று நானோ, மார்க்ஸோ தப்பெண்ணத்தில் இருந்ததில்லை. ஏனெனில், நமது வித்தியாசம் கொள்கை வித்தியாசம்—நமது போராட்டத்தை பூர்ஷுவா வர்க்கத்தை எதிர்த்து புராலிடேரியட் நடத்தும் வர்க்கப் போராட்டமாக நடத்துவதா? அல்லது வோட்டு பிடிப்பதற்காக, ஆதரவு தேடுவதற்காக, எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் இயக்கத்தின் வர்க்க குணத்தையும் திட்டத்தையும் சந்தர்ப்பவாத ரீதியில் புறக்கணிப்பதை அனுமதிக்கலாமா? பின்னர் கூறியதை மாலன் ஆதரித்தார். இந்த விதத்தில், அவர்கள் இயக்கத்தின் வர்க்க குணத்தை தியாகம் செய்து, பிளவை தவிர்க்க முடியாததாக்கி விட்டார்கள். அதனால் பரவாயில்லை. தனக்குள்ளேயே நடக்கும் போராட்டங்கள் மூலம்தான், எல்லா விடங்களிலும் புராலிடேரியட் வளர்ச்சியடை

கிறது. முதன் முதலாக தொழிலாளர் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட பிரான்ஸ் இதற்கு விதிவிலக்கல்ல."

மாலன் தொழிற் சங்கங்களை தாஜா செய்தார். அவற்றை சேர்த்துக்கொண்டு மார்க்ஸிஸ்ட் எதிர்ப்பு அணி உருவாக்க விரும்பினார். 1882 நவம்பர் 23-ல், எங்கல்ஸ் மார்க்ஸுக்கு எழுதுகிறார் :

"தொழிற் சங்கங்களை திருப்திசெய்வதற்காகத்தான், மாலன் கம்பெனி மார்ஸைல்ஸ் காங்கிரஸிலிருந்து தொழிலாளர் கட்சி கட்டி வளர்த்த பரம்பரையையும் திட்டத்தையும் தியாகம் செய்த தென்பது வெள்ளிடைமலை. மாலன் எதை தன் பலம் என்று கருதுகிறானோ, அதுவே உண்மையில் அவனுடைய பலவீனமாய் இருக்கிறது. சர்வ சாதாரணமான தொழிற் சங்கங்களின் தரத்துக்கு ஒருவன் தன் திட்டத்தை தாழ்த்திக்கொண்டால், வெகுஜன ஆதரவு, கிடைப்பது சுலபம்தான் !"

இவ்விதமாக, 1882-ல் பிரான்ஸில் ஒரு மார்க்ஸிஸ்ட் கட்சி பிறந்தது. 1882 லிருந்து 1914 வரை, பிரெஞ்சு மார்க்ஸிஸத்தின் நடவடிக்கைகளைக் கவனித்தால், திருப்தியடைய முடியாது. மார்க்ஸை ஆதரித்த கூஸ்ட் சில காலத்துக்கு புரட்சிக்காரனாய் இருந்ததில் சந்தேகமில்லை. ஆனால் கூஸ்டின் மார்க்ஸிஸம் தேசீய குணத்தைக் கொண்டிருந்தது. மார்க்ஸ், எங்கல்ஸ் கருத்துகள் அடிக்கடி எடுத்துரைக்கப்பட்டன. ஆனால், தொழிலாளர் கட்சிக்கு பொது ஜனங்களிடையே ஓரளவு செல்வாக்கு இருந்த போதிலும், பார்லிமெண்டில் அதன் பிரதிநிதிகள் இருந்தபோதிலும், மார்க்ஸிஸம் ஒரு பெரிய சக்தியாக பிரான்ஸில் வளரவில்லை. ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு தாவுவது பிரெஞ்சு மார்க்ஸிஸத்துக்கு சகஜமாயிருந்தது. பிரெஞ்சு மார்க்ஸிஸ்டுகளில் தலைசிறந்தவர் கூஸ்ட் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவர் மார்க்ஸிஸம் முழுவதும் மார்க்ஸுடையதல்ல; தானாக மார்க்ஸிஸத்துடன் பல விஷயங்களை கூட்டிக்கொண்டுவிட்டார். முதல் உலக யுத்தகாலத்தில், கூஸ்ட் முதலிய பிரெஞ்சு 'மார்க்ஸிஸ்ட்கள்,' அந்த கொள்ளைக்கார யுத்தத்தை இறுதியான புனித யுத்தமாக, ராணுவ ஆட்சியை எதிர்த்து ஜனநாயகம் நடத்தும் யுத்தமாக கருதியதில் பிரெஞ்சு மார்க்ஸிஸத்தின் கஃப்பட குணம் வெளியாயிற்று. இந்த விதத்தில், சரித்திர சோதனையில் வெல்ல முடியாது போய்விட்டதால், பிரெஞ்சு மார்க்ஸிஸம் கெட்டிருந்தது தெளிவு. 1914-ல் சகல சோஷியலிஸ்ட், அனார்க்கிஸ்ட், அனார்கோ ஸீண்டிகலிஸ்ட் கோஷ்டிகளும் அரசியல்ரீதியில் சூனியமாகி விட்

டன என்பது உண்மை. அதனால், பிரான்ஸிலிருந்து ஒரே ஒரு மார்க்ஸிஸ்ட் ஸ்தாபனமும் பிரெஞ்சு ஏகாதிபத்திய நலன்களை பாதுகாக்க, தொழிலாளி வர்க்கத்தின் பரமவைரிகளுடன் கை கோர்த்து நின்றதின் முக்கியத்துவம் குறையாது. இதை எப்படி விளக்குவது? பிரான்ஸின் இதர அனார்க்கிஸ்ட், சோஷியலிஸ்ட் கொள்கைககளைப் போல, மார்க்ஸிஸமும் 'விதிவிலக்கு வியாதியால்' பிடிக்கப்பட்டது. (பிரான்ஸ் சூழ்நிலை விசேஷமானது என்றுகூறி, மார்க்ஸிஸத்தின் போதனைகளுக்கு விதிவிலக்காக பிரான்ஸ் இருக்கவேண்டுமென்று வாதிப்பது) 1789-ல் நடந்த புரட்சியின் வார்ஸுகளாக பிரெஞ்சு சோஷியலிஸ்டுகள் தங்களைக் கருதினார்கள். பிரான்ஸை உலகத்தின் நடுமையமாகக் கருதினார்கள். பிரெஞ்சு ஏகாதிபத்யம் வளரவளர, பிரஞ்சு மார்க்ஸிஸமும் தேசியத்தை மேலும் மேலும் உட்கொண்டது—அதாவது அதன் மார்க்ஸிஸத்தை இழந்தது. அதனால், அதன் புரட்சிப் போருணர்வை இழந்தது; ஜெர்மனியிலும் இதே விதத்தில், இதே காரணங்களால், மார்க்ஸிஸம் அதன் சத்தை, சாராம் சத்தை இழந்தது. (அதைப்பற்றி உலக யுத்தத்துக்கு நீண்ட காலம் முன்னரே மார்க்ஸும் எங்கல்ஸும் எச்சரித்திருந்தனர்). பிரெஞ்சு மார்க்ஸிஸ்டுகளும் ஜெர்மன் மார்க்ஸிஸ்டுகளும் அரசியல் ரீதியில சூன்யமானார்கள். ஒரே தினத்தில், ஒரே தேசியத் தோல் மீது அவர்கள் சறுக்கிவீழ்ந்தனர்; பிரெஞ்சு மார்க்ஸிஸம் தேசியமாயிற்று; **தேசீயம் வர்க்கக்கொள்கையை வெளியேற்றுமிடத்தில், மார்க்ஸிஸமே இல்லை.** முதல் உலக யுத்தம் மார்க்ஸிஸத்தின் சூன்யத்தையா நிரூபித்தது? இல்லை. யுத்தம் மார்க்ஸிஸ்ட் கட்சிகளில் ஊடுருவியுள்ள அழுகல் தன்மையை அம்பலப்படுத்தியது; மார்க்ஸிஸ்ட் கொடியின்கிழ் தேசிய பிரசாரம் நடந்துவந்திருப்பதை எடுத்துக்காட்டியது. மார்க்ஸிஸம் சூனியமாகவில்லை, போலி மார்க்ஸிஸம்தான் சகல நாடுகளிலும் ஏகாதிபத்திய முதலாளிகளின் கையாட்களாக அம்பலத்துக்குவந்து, அதன் சூனியத்தை உலகுக்கு பறையடித்துக் கூறியது. போலி மார்க்ஸிஸமும் மார்க்ஸிஸ்ட் எதிரிகளும் நசித்துப்போனார்கள். ஆனால் மார்க்ஸின் பரம்பரை பண்புகளை பின்பற்றிய கட்சி, புரட்சிகரமான மார்க்ஸிஸ்ட் அடிப்படையில் தன் ஊழியர்களை வார்த்தெடுத்த கட்சி, லெனினுடைய கட்சி புரட்சிகரமான மார்க்ஸிஸத்தின் தன்மையை நிதரிசனமாகக் காட்டியது. சரித்திரம் நேர்கோடுகளின் பார்வையில் வளர்வதில்லை; அதன் அலைகள் ஓங்கி உயர்கின்றன; தணிந்து வடிகின்றன: அதில் ஏற்ற தாழ்வுகள் உண்டு. அமைதி

யான இடைக்காலமும், புயல்காற்று சூறையும் மாறிவரும். போலி மார்க்ஸிஸமும் அனார்க்கோஸிண்டிகலிஸமும் அழிந்ததின் மூலம், பிரெஞ்சு புராலிடேரியட் புரட்சிகரமான மார்க்ஸிஸத்தின் உண்மையான கட்சியை ஸ்தாபிக்கும் கட்டத்தை அடைந்தது. மார்க்ஸின் வார்ஸாய் வந்து, மார்க்ஸிஸத்துக்கு துரோகம் செய்தவர்களை எதிர்த்து நடந்த போராட்டத்தில், இக்கட்சி வளர்ந்தது; பிரௌதன், மாலன், பிரௌன், ஜார்ன், கூஸ்ட் முதலியோரின் வார்ஸுகளை எதிர்த்து நடந்த போராட்டத்தில் அது பண்பட்டு விருத்தியடைந்தது : தன் ஏகாதிபத்திய வெறியை தந்திரமாக மூடி மறைத்துக்கொண்டுநின்ற பிரான்ஸின் போலி ஜனநாயகத்தை எதிர்த்துநடந்த போராட்டத்தில் அது புதிய புதிய பகுதிகளை ஆகர்ஷித்து, கெட்டிப்பட்டு வளர்ந்தது. பிரான்ஸில் மார்க்ஸின் புரட்சிகரமான போதனைகளை தாங்கிநிற்பது கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான்; ஏனெனில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வெளியே புரட்சிகரமான மார்க்ஸிஸம் இருக்கவில்லை, இருக்கவும் முடியாது.

# ஆருவது அத்தியாயம்

# அமெரிக்க ஐக்ய நாடுகளும் மார்க்ஸீயம்

*"முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் சுற்றுச் சார்பை ஆதாரமாகக்கொண்டு, முதலாளித்துவ வளர்ச்சிக்காக, ஒரு லட்சிய தேசத்தை நிர்மாணிக்க விரும்பினல், அந்த தேசம் அமெரிக்க ஐக்ய நாடுகளை விட அதன் விசேஷ தன்மைகளிலும், அளவிலும், வித்தியாசமாயிருக்க முடியாது."*

## ஸோம்பார்ட்: "வட அமெரிக்க தொழிலாளி வர்க்க வளர்ச்சியின் சரித்திரம்

ஏகபோக முதலாளித்துவத்*தின் நாட்டை ஸோம்பார்ட் இவ்விதமாக வர்ணிக்கிருர். மார்க்ஸ் அரசியலில் பிரவேசித்த காலத்தில், ஏராளமான ஜனங்கள் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு (அமெரிக்கா என்றே இனி கூறுவோம் மொ-ர்.) சென்று குடியேறினர்கள். இந்த குடியேற்ற வெள்ளத்தை வெகுவேகமாக அந்த தேசம் தனக்குள்ளே கிரஹித்துக் கொண்டது; ஆனல் குடியேற்றம் நிற்கவில்லை, அதிகமாயிற்று. புதிய தேசிய இனங்களையும் புதிய சமூகப் பகுதிகளையும் அது

---

* ஏகபோக முதலாளித்துவம்: பண்ட உற்பத்தியில் ஏகபோக ஆதிக்கம் வகிக்கும் முதலாளித்வம். முதலாளித்துவ சமூகத்தில், தொழிலாளிவர்க்கத்தின் உழைப்பை சுரண்டுவதன் மூலம், மூலதனம் பெருகுகிறது. பெரிய மீன் சிறிய மீனை விழுங்குவது போல, மதுரை ஹார்வி மில், விக்ரமசிங்கபுரம் மில்லையும் மதுரை பாண்டியன் மில்லையும் விழுங்குவதுபோல, தங்களுடன் போட்டியிடுபவர்களை ஒழிக்கின்றனர்; அல்லது அவர்களில் சிலரைச் சேர்த்து, கூட்டு கம்பெனி நடத்துகின்றனர். போட்டி போடும் சுதந்திரம்" என்ற முதலாளித்துவ பொருளாதார விதி போய்

ஆகர்ஷித்தது. யந்திரம் வந்ததால் பாழடைந்த கைத்தொழில் வேலைக்காரர்கள், குழந்தைப் பருவத்திலிருந்த தொழில்களிலிருந்து, வேலையில்லை என்று விரட்டப்பட்டவர்கள், நகரப்புற நடுத்தரவர்க்கத்தினர் முதலியோர்பலர் அமெரிக்காவுக்கு குடியேறச் சென்றனர். 1858ல், பிரான்ஸிலும், ஆஸ்டிரியாவிலும், ஜெர்மனியிலும் நடந்த புரட்சிகள் தோற்றபின், குடியேற்றம் அதிகமாயிற்று. 1790லிருந்து 1845க்குள் 10 லட்சம் பேர் அமெரிக்கா (ஐக்ய நாடுகளில்) வில் குடியேறினர்கள்; 1845 முதல் 55க்குள்ளாக, 30 லட்சம் பேர் குடியேறினர்கள்; இதில் பெரும்பான்மையோர் 1848க்கு பின்னரே அமெரிக்காவுக்குப் போனர்கள். அமெரிக்க பொருளாதார அமைப்பில் இந்த நீண்டு—கொடுக்கும் தன்மை—தெற்கு மாகாணங்களில் அடிமைத்தனத்தின் அடிப்படையிலும், வடக்கு மாகாணங்களில் உழைப்பை விற்கும் 'சுதந்திரம்' அங்கீகரிக்கப்பட்டதின் அடிப்படையிலும் எழுந்த இந்த சுத்தசுயம் பிரகாச முதலாளித்துவம்—அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தில் ஒரு பிரத்தியேக முத்திரையை வைத்தது.

புதிய நிலம்-பயிர் செய்யப்படாத நிலம், ஏராளமாயிருப்பது ஐரோப்பிய கற்பனவாதிகளை ஆகர்ஷித்தது. தங்கள் லட்சிய நாட்டின் சமூகங்களை அவற்றில் ஸ்தாபிக்கலாமென்று அவர்கள் நம்பினர்கள். 1824ல் ராபர்ட்ஓவனே அமெரிக்கா சென்றார்; ஏராளமான விஸ்தீரணம் உள்ள நிலத்தை வாங்கினர். தொழிலாளிகளும், கடந்தகால பாபங்களுக்கும் பேராசைக்கும் வருந்தி மனம் நோகும் முதலாளிகளும் ஒருவருக் கொருவர் உதவிக்

---

ஏகபோக முதலாளித்துவம் வருகிறது. ஏகபோக முதலாளி, உற்பத்தியை கட்டுப்படுத்தவும், விலையை இஷ்டப்படி நிர்ணயிக்கவும் சக்தி பெற்றிருக்கிருன். ஏகபோக முதலாளித்துவத்தின் 'புண்ணிய பூமி' அமெரிக்கா. நம் மாகாண நூல் உற்பத்தியில் 25 சத வீதத்துக்குமேல் பிடித்துவைத்திருக்கும் டோக் ஒரு ஏகபோக முதலாளி; பிர்லா, டாடா, டால்மியா முதலியோர் ஏகபோக முதலாளிகள். ராமவிலாஸ், பஸ் போக்குவரத்தில் ஒரு ஏகபோக முதலாளி. ஏகாதிபத்ய முதலாளித்துவத்தின் அம்சம் அது.

ஏகபோக முதலாளித்துவத்தில் போட்டி ஒழிந்து விடவில்லை. பிர்லாவுக்கும், டால்மியாவுக்கும் போட்டியில்லையா? அமெரிக்க ஏகபோக முதலாளித்வமும் இங்கிலீஷ் ஏகபோக முதலாளித்வமும் சந்தைக்காக போட்டிபோடுகின்றனவல்லவா?

கொண்டு சாத்வீக வாழ்வு நடத்துவார்களென்று எதிர்பார்த்தார்; இவர்கள் வசிக்கும் லட்சிய'சொஸைடிகளை தன் நிலத்தில் அமைக்கத் துவங்கினர். 1825-ல் கொடையாளிகளின் உதவியுடன், 'பெல்லோஸ் பிரிங்' சொஸைடியை தோற்றுவித்தார்; அதன்பின் பல சமூகங்கள் தோன்றின.

19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், போரியர் சொஸைடிகள் நியூயார்க், நியூஜர்ஸி முதலிய மாகாணங்களில் தோன்றின. ஓவன் ஆதரவாளர்கள் அமைத்த சொஸைடிகளைப்போல், இவையும் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. அவைகளில் தலை சிறந்தவைகூட தேங்கி சிதறி சின்னாபின்னமாயின. கம்யூனிஸ்ட் கற்பனாவாதியான கேபட்டை பின்பற்றியவர்கள் அமைத்த காலனிகளும் இதே கதியை அடைந்தன. அமெரிக்கா முதலாளித்துவத்தின் லட்சிய நாடாக உருவாயிற்று; கற்பனா சோஷியலிஸத்தின் உயர்ந்த 'உதாரணங்களுக்கெல்லாம்' லாயக்கற்றதாக இருந்தது.

நிலப்பிரபுத்துவ உறவுகளே ஏற்படாதிருந்த அமெரிக்காவில், சோஷியலிஸ்ட் 'காலனிகளை' ('சொஸைடிகள்' என்ற பொருளில் இங்கு உபயோகிக்கப்படுகிறது) அமைப்பதற்கு முன் நின்ற முன்னோடிகள் யார்? கற்பனா சோஷியலிஸ்டுகளை ஆதரித்த ஐரோப்பியர்கள், புரட்சிகளில் ஏமாற்றமடைந்து, வர்க்கப் போராட்டத்துக்கு அப்பாற்பட்ட முறைகள்மூலம் சமூக பிரச்னையை தீர்க்க எண்ணியவர்கள். கற்பனா சோஷியலிஸ்டுகளின் கற்பனைக்காகவல்ல, சோஷியலிஸத்துக்காக, மார்க்ஸ் அவர்களை மதித்ததுண்டு. விமர்சன பூர்வமான மெட்டீரியலிஸ்ட் சோஷியலிஸத்தின் முன்னோடிகளாக அவர்களை கருதினர். (சமூகத்தின் லோகாயுத நிலைமையை விமர்சன கண்ணோட்டத்தில் பார்த்தனர், சுரண்டலை வெறுத்தனர்; வர்க்க பேதத்தை வெறுத்தனர்; வர்க்க பேதமில்லாத சோஷியலிஸமே சமூகத்திலுள்ள யதார்த்த தீமைகளை ஒழிக்குமென்றனர். ஆகவேதான் இந்த கற்பனா சோஷியலிஸ்டுகளை விமர்சனபூர்வமான மெட்டீரியலிஸ்ட் சோஷியலிஸத்தின் முன்னோடிகளென்று மார்க்ஸ் கூறுகிறார்). ஆனால், அடக்கமாகி பல வருஷங்கள் கழிந்த பின்னர், அந்த கற்பனா சோஷியலிஸத்தைத் தோண்டி எடுத்து புத்துயிர் அளிக்க முயன்ற வீட்லிங் போன்ற கற்பனா சோஷியலிஸ்டுகளை மார்க்ஸ் தயாதாட்சண்யமில்லாமல் கண்டித்தார். வீட்லிங் முதலில் மார்க்ஸை பின்பற்றினார். பின்னர், தன்னை ஒரு தீர்க்கதரிசி என்றும் ஒரு விசேஷ கொள்கையின் கர்த்தா என்றும் கூறிக்கொண்டார். அவர் எழுதிய முக்கியமான புத்தகம்—சுதந்திரத்துக்கும் சந்துஷ்டிக்கும்

**உத்திரவாதங்கள்**—பழைய முறையை கைவிட்டு விட்டு புதிய வாழ்க்கையை மேற்கொள்ளும்படி மனித ஹிருதயத்துக்கு விடுக்கும் கம்யூனிஸ்ட் வேண்டுகோளாகவே இருந்தது. 1840–50-ல் அவர் அமெரிக்கா வந்தார்; ஜெர்மனியிலிருந்து குடியேறியிருப்பவர்களிடையே ஸ்தாபன வேலை தொடங்கினர்: மார்க்ஸையும் மார்க்ஸிஸத்தையும் எதிர்த்தார். 1850—60-ல் வீட்லிங்கின் நடவடிக்கைகள் உச்சநிலை யடைந்தன. ஏராளமான ஜெர்மன் தொழிலாளர்களை தன் பக்கம் திரட்டுவதில் வெற்றியடைந்தார். எனினும், தனக்கென ஒரு கொள்கை ஸ்தாபிக்க வேண்டுமென்ற அவர் முயற்சியும் அவருடைய தத்துவக் குழப்பமும் அவரை மார்க்ஸிடமிருந்து மாத்திரம் பிரிக்கவில்லை; அவரைப் பல வருஷங்களாக பின்பற்றி வந்த தொழிலாளர்களிட மிருந்தும் பிரித்து விட்டது. 1877, அக்டோபர் 19-ம் தேதி ஸோர்ஜுக்கு (Sorge)க்கு எழுதிய கடிதத்தில், கற்பனை சோஷியலிஸத்தையும் கற்பனை கம்யூனிஸத்தையும் மார்க்ஸ் பின்வருமாறு சித்தரிக்கிருர்:—

"எதிர்கால சமூக அமைப்பைப்பற்றிய மானசீக சித்திரமான கற்பனை சோஷியலிஸம் நமது உழைப்பாலும், முயற்சியாலும் பலவருஷங்கள் முன்னரே தொழிலாளர்கள் மத்தியிலிருந்து ஒழிக்கப்பட்ட கற்பனை சோஷியலிஸம் இன்னும் தாழ்ந்த ரகத்தில் மீண்டும் பரவியிருக்கிறது. இந்த வீட்லிங் கற்பனை சோஷியலிஸத்தை மகத்தான பிரிட்டிஷ் பிரெஞ்சு கற்பனைவாதிகளுடன் ஒப்பிடமுடியாது. விமர்சனகர மெட்டீரியலிஸ்ட் சோஷியலிஸத்தைத் தன்னகத்தே கொண்டிருந்த கற்பனை சோஷியலிஸம் (விமர்சனகர மெட்டீரியலிஸ்ட் சோஷியலிஸித்தின் கரு கற்பனை சோஷியலிஸத்தில் இருந்தது) இன்று காலம் தாழ்ந்து, புத்துயிர்பெற்று வரும்போது, அது அர்த்தமற்றதாக விருக்கிறது."

விஞ்ஞான சோஷியலிஸத்துக்கும் கற்பனை சோஷியலிஸத்துக்குமுள்ள உறவை மார்க்ஸ் ஸ்தாபிப்பதைப் பார்க்கிறோம். கிழவயதில் குழந்தையின் ஆடைகளை அணிவதைப்போல, கற்பனை சோஷியலிஸத்தை காலம் தாழ்ந்தபின்னர் கட்டியழுகின்றவர்களை, அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தை பின்னுக்கிழுக்க முயற்சிப்பவர்களை, மார்க்ஸ் கண்டிப்பதையும் நாம் பார்க்கிறோம்.

அமெரிக்காவில் குடியேறினவர்களில் முக்கியமானவர்கள் ஜர்மானியர்கள்: ஆகவே சோஷியலிஸம் ஜெர்மனியிலிருந்து இறக்குமதியாயிற்று. ஜெர்மன் பூமியில், மார்க்ஸிஸத்திற்குமுன் சோஷியலிஸம் தத்தளித்து நின்றதால், அந்த சோஷியலிஸம்

அமெரிக்காவில் வேர்விட்டு நிலைக்கமுடியவில்லை. ஐரோப்பாவிலிருந்து குடியேறினவர்கள் கற்பனாவாதக் கருத்துகளை மாத்திரம் கொண்டுவரவில்லை. அக்காலத்திய ஐரோப்பிய ஸ்தாபனமுறைகளையும்கூடக் கொண்டுவந்தார்கள். அமெரிக்க தொழிலாளி வர்க்கத்தின் அமைப்பு நூதனமாகவும் பலரகப்பட்டதாகவும் இருந்தது; இன்னும் அப்படியே இருக்கிறது; தொழிலாளி பொது மக்களிடையே சோஷியலிஸ்ட் கருத்துகளை பரப்புவதை இது கடினமாக்கியது. அக்காலத்திய தொழிலாளி வர்க்க தத்துவத்தை உருவாக்குவதில் இரு விஷயங்கள் பெரும் பங்கெடுத்தன—அடிமைமுறை; குடியேற்றம்; "மூலதனம்" என்ற பிரசித்திபெற்ற புத்தகத்தின் முதல்பாகத்தில் மார்க்ஸ் எழுதுகிறார்.

"அடிமை முறை குடியரசின் ஒரு பாகத்தை விகாரப்படுத்தி வந்தவரையில், அமெரிக்காவில் தொழிலாளர்களின் சுயேச்சையான இயக்கம் கட்டுண்டு கிடந்தது. கருந்தோல் அடிமைப்பட்டுக் கிடக்கும்போது வெள்ளைத் தோலிலுள்ள தொழிலாளிவர்க்கம் விடுதலையடையமுடியாது." (அமெரிக்காவில் நீக்ரோக்கள் அடிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததை மார்க்ஸ் குறிப்பிடுகிறார். இன்றும் நீக்ரோக்களை நீசர்களாக பாவித்து நடத்துகிறது, அமெரிக்க முதலாளித்துவம். மொ-ர்.)

இந்த நீக்ரோக்களைத்தவிற, அமெரிக்காவுக்கு குடியேறவருபவர்களை சேர்த்துக்கொண்டால் அக்காலத்திய அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தின் விசேஷ குணத்தின் காரணத்தை நாம் பார்க்கலாம். ஒரு துண்டு ரொட்டிக்குக்கூட வேலை செய்ய புதிதாகக் குடியேறும் ஜனங்கள் தயாராயிருந்தனர். குடியேற்றம், அமெரிக்க தொழிலாளி வர்க்கத்திடையே தேசீய இனவாரியாக, இங்கிலீஷ் மொழி அறிவுக்கேற்றபடி பல்வேறு கோஷ்டிகள் உண்டாயின. 1893-ல் எங்கல்ஸ் ஸோர்ஜுக்கு (Sorge) எழுதினார்:

"குடியேற்றம்......தொழிலாளிகளை இருபகுதியாகப் பிரிக்கிறது:—சுதேசிகள், அயல்நாட்டினர். அயல்நாட்டினரிலே பல பகுதிகள்: (1) ஐரிஷ்காரர்கள்; (2) ஜெர்மானியர்கள்; (3) ஸெக்குகள், போலிஷ்காரர்கள், இத்தாலியர்கள், ஸ்காண்டிநேவியர்கள் முதலிய சிறு கோஷ்டிகள். இவர்கள் தங்கள் மொழியினருடனேயே பேசிப் புரிந்துகொள்ளமுடியும். இத்துடன் நீக்ரோக்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவற்றிலிருந்து, ஒரு கட்சியை உருவாக்க விசேஷமான அனுகூலங்களையுடைய சூழ்நிலைவேண்டும். சில சமயங்களில் அத்தகைய நிலைமை ஏற்படுகிறது. ஆனால் பூர்ஷ்வாக்கள் பேசாமல் உட்கார்ந்திருந்தால் போதும். தொழி

லாளிவர்க்கத்திலுள்ள பல்வேறு பகுதிகளும் மீண்டும் பிரிந்து விடும்."

அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தின் விசேஷ குணங்களைப் பற்றிய பிரச்னையை 1895-ல் எங்கல்ஸ் மீண்டும் ஆராய்கிறார். 19-ம் நூற்றாண்டில், மாபெரும் பொருளாதாரப் போராட்டங்கள் அமெரிக்காவில் நிகழ்ந்தன. ஆனால் புராலிடேரியட்டின் அரசியல் இயக்கம் ஒரே மட்டத்தில் வளைந்து வளைந்து சென்றதே யொழிய தீவிரம் நிரம்பிய உச்சநிலையை எட்டவில்லை. அதனால் அமெரிக்க தொழிலாளர் இயக்கம் அரசியல் ரீதியிலும், தத்துவ ரீதியிலும் பின்தங்கிவிட்டது. இதை எங்கல்ஸ் பின்வருமாறு விளக்குகிறார். 1895, ஜனவரி 16-ல் ஸோர்ஜுக்கு எழுதிய கடிதத்தில் எங்கல்ஸ் கூறுகிறார் :—

"உலகத்திலேயே அமெரிக்காதான் இளையநாடு; அதுவே வயதுமுதிர்ந்தநாடுகூட. உங்கள் தாய்நாட்டில் நீங்கள் சிருஷ்டித்த நூதனப் பொருள்களுடன் பழைய, புராதனகால சாமான்களும் இருப்பதுபோல, 1838ல் நான் கடைசிபாகப் பார்த்த வாகனங்கள் இன்றும் பாஸ்டனில் இருப்பதுபோல (பாஸ்டன் அமெரிக்க டவுன்) மலைப்பிரதேசத்தில் 17-ம் நூற்றாண்டு குதிரை வாகனங்கள் நவீன வாகனங்களுடன் சேர்ந்திருப்பதுபோல, ஐரோப்பா களைந்தெறிந்துவிட்ட ஆடைகளனைத்தையும் நீங்கள் போற்றிப் பாதுகாக்கின்றீர்கள். இங்கு (ஐரோப்பாவில்) ஒழிந்துவிட்டவையெல்லாம் அமெரிக்காவில் இன்னும் இரு தலைமுறைகள் உயிர் வாழும். அதனால்தான், உங்கள் தேசத்தில் (அமெரிக்காவில்) லாஸ்ஸலியன்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றனர். இன்றைக்கு பிரான்ஸில் கர்னடகமானவரென்று கருதப்படக்கூடியவர்கள் உங்கள் தேச வாழ்வில் ஒரு பங்குபெறமுடியும். இதற்கு காரணமென்ன? ஒருபுறத்தில் பொருளுற்பத்திக்கும் செல்வம் சேர்ப்பதற்கும் கவலை எடுத்துக்கொண்டபின் இப்பொழுதுதான் தனிப்பட்டமுறையில் தத்துவ நடவடிக்கையில் ஈடுபடவும் அதற்கு தேவையான கல்விபெறவும் நேரம் கிடைத்திருக்கிறது; மறுபுறத்தில், அமெரிக்காவின் வளர்ச்சியின் இரட்டைக் குணத்தால் இந்த நிலைமை ஏற்படுகிறது. (இரட்டைக்குண மென்னவென்றால்) பரந்த பிரதேசங்களை, புதிய பிரதேசங்களை பண்படுத்தவேண்டியிருக்கிறது. இன்னும் இந்த வேலை முடியவில்லை. இரண்டாவதாக, தொழில் உற்பத்தி ஆதிக்கத்திற்காக (இதர நாடுகளுடன்) போட்டிபோடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

சாதாரணமாக தொழிலாளி ஆதிக்கம் வகிக்கிறனா அல்லது புதிய நிலத்தைப் பண்படுத்தும் விவசாயி ஆதிக்கம் வகிக்கிறனா என்பதைப் பொறுத்து, இயக்கத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக மார்க்ஸ் சகாப்தத்தில், அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தின் தனித்தன்மையை எங்கல்ஸ் கடிதம் விளக்குகிறது.

அமெரிக்க தொழிலாளர்களுக்கும் மார்க்ஸிஸத்துக்கும், அவர்களுக்கும் மார்க்ஸிஸத்தின் பிரபல ஸ்தாபகரான மார்க்ஸுக்கும் ஜெர்மனியிலிருந்து குடியேறிய தொழிலாளர்களால் தொடர்பு ஏற்பட்டது. அமெரிக்க தொழிலாளர் இயக்க சரித்திராசிரியரான ஜான் ஆர். காமன்ஸ் எழுதுகிறார் :—

"மார்க்ஸின் முதல் ஜெர்மன் முன்னோடி நியூயார்க்கிலிருந்த கம்யூனிஸ்ட் கிளப்பாகும். கம்யூனிஸ்ட் அறிக்கை அடிப்படையில இந்த ஸ்தாபனம் 1857 அக்டோபர் 25ல் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் அங்கத்தினர் தொகை அதிகமாயில்லை. பின்னர் அமெரிக்கன் இண்டர்நாஷனலில் பிரபலமாயிருந்த ஸோர்ஜ், கான்ராட்கார்ல் முதலியோர் இந்த கிளப்பிலிருந்தனர். வெளிநாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் கிளப் தொடர்பு வைத்திருந்தது. கார்ல் மார்க்ஸ், பிலிப்பெக்கர் (ஜினீவா), வெடிமேயர் முதலியோருடன் அது கடிதப்போக்குவரத்து நடத்தியது......"

அமெரிக்காவில், மார்க்ஸிஸ்ட் கிளப்கள் ஸ்தாபிக்கப்படும் போதே, பல லாஸ்ஸாலியன் ஸ்தாபனங்களும் தோன்றின. 1865 அக்டோபரில் 14 லாஸ்ஸாலியன்களால் நியூயார்க்கில் ஸ்தாபிக்கப்பட்ட ஜெர்மன் தொழிலாளர்களின் ஜெனரல் யூனியன் அவற்றில் பெரிது. அவர்கள் (லாஸ்ஸாலியன்கள்) குழப்பமான கருத்துக்களை ஐரோப்பாவிலிருந்து கொண்டுவந்தனர். உதாரணமாக, அந்த ஸ்தாபனத்தில் விதிகளிலொன்று கூறுவதாவது :

"ஐரோப்பாவில் ஒரு புரட்சிதான் தொழிலாளி மக்களை விடுதலை செய்யமுடியும்; ஆனல் அமெரிக்காவில், பொதுமக்களுக்கு கல்வியறிவு அளிப்பதன் மூலம், தங்கள் வோட்டை திறமையாகவும் சாமர்த்தியமாயும் உபயோகிப்பதற்கு அவசியமான தன்னம்பிக்கையை ஊட்டமுடியும்; அதனல், இறுதியாக, முதலாளித்துவத்தின் நுகத்தடியிலிருந்து தொழிலாளி மக்களை விடுதலை செய்ய முடியும்."

அமெரிக்காவின் முக்கியமான நகரங்களில், தொழிலாளர் கிளப்புகள், யூனியன்கள், பலதரப்பட்ட சங்கங்கள் ஸ்தாபிக்கப்

பட்டன; மார்க்ஸும் எங்கல்ஸும் வசித்த லண்டனுடன், அக்காலத்திய தத்துவ-அரசியல் கேந்திர ஸ்தானமான லண்டனுடன் இந்த ஸ்தாபனங்கள் தொடர்பு வைத்துக்கொள்ள பிரயத்தனப் பட்டன. குடியேறிய தொழிலாளர் ஸ்தாபனங்கள் மார்க்ஸீய புத்தகங்களை தீர்க்கமாக படித்தறிந்தன; பிரதானமாக மார்க்ஸ் எழுதிய புத்தகங்களை நன்கு கற்றறிந்தன. ஜெர்மன் தொழிலாளிகள மார்க்ஸிஸ்ட் இலக்கியத்தை எவ்வளவு சிரத்தையுடன் படித்துவருகின்றனர் என்பது ஸோர்ன் தத்ரூபமாகச் சித்தரிக்கிருர். ஸோர்ன் எழுதுகிருர்:—

"இந்த தொழிலாளிகள் பொருளாதாரப் பிரச்னைகளையும் தத்துவ பிரச்னைகளையும் பற்றி தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள ஒருவரோடொருவர் போட்டி போடுகிருர்கள். 1869 முதல் 1874வரை, இந்த சங்கத்தில் அங்கத்தினராயிருந்த நூற்றுக் கணக்கானவர்களில், மார்க்ஸ் எழுதிய மூலதனத்தை படிக்காதவர் ஒருவர்கூட இல்லை. அதில் ஒரு டஜன்பேருக்குமேல் மிகக் கடினமான சொற்ருெடர்களையும் சூத்திரங்களையும் நன்கு ஜீரணித்திருந்தனர். பூர்ஷுவாக்களும் நடுத்தர வர்க்கத்தினரும், தீவிரவாதிகளும் சீர்திருத்தவாதிகளும் தொடுக்கும் சகல தாக்குதல்களையும் எதிர்க்கக்கூடிய அளவுக்கு வளர்ச்சியடைந்திருந்தனர். அந்த சங்கத்தின் கூட்டங்களுக்கு செல்வதே மகிழ்ச்சியளிக்கும்."

குடியேறியவர்கள், முக்கியமாக ஜெர்மனியர்களின் யூனியன்கள், கோஷ்டிகள் முதலியவை வளர்ச்சியடைந்த சமயத்திலேயே, 1850—70 ஆண்டுகளில் தொழிற் சங்கங்களும் வளர்ந்தன; குறைந்த வேலைநேரத்துக்காகவும், தொழிலாளர் சட்டத்துக்காகவும், உழைப்பாளி பெண்களுக்கும், சிறுவர் சிறுமிகளுக்கும் பாதுகாப்பளிப்பதற்காகவும், இதர கோரிக்கைகளுக்காகவும், தீவிரமான போராட்டங்கள் நடந்தன. பல ஸ்தாபனங்களும், சர்வதேச ஸ்தாபனங்களும்—உலோகத் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், கப்பல்கட்டும் தொழிலாளர்கள் முதலியோரிடையே தோன்றின. அகில தேச தொழிற்சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று அக்காலத்திய தொழிற்சங்கத் தலைவர்கள் எண்ணம் கொண்டனர். இதில் முன் கை எடுத்து—உழைத்தது வில்லியம் எச். சில்விஸ் என்பவர்தான். இவர் ஒரு வார்ப்படத் தொழிலாளி. சர்வதேச வார்ப்படத் தொழிலாளர் யூனியனுக்கு காரியதரிசியாகவும் பின்னர் தலைவராகவுமிருந்தார். 1863 லேயே,

சர்வதேச என்ஜினியர்கள்—கொல்லர்கள் யூனியன் தேசிய தொழிற்சங்க ஸ்தாபனம் அமைக்கவேண்டுமென்று யோசனை கூறிற்று. 1866 மார்ச் 22ல், பல்வேறு சங்கங்களிலிருந்து பல யூனியன்களின் பிரதிநிதிகள் நியூயார்க்கில் கூடி 1868 ஆகஸ்ட் 20ல் பால்டிமோரில் ஒரு அகில தேச தொழிலாளர் காங்கிரஸை கூட்டவேண்டுமென்று அறைகூவல் விடுத்தது. காங்கிரஸின் நோக்கங்களை அவர்கள் பின்வருமாறு விளக்கினார்கள் :—

"இந்த தேசத் தொழிலாளிவர்க்கம் முதலாளித்துவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமானால், அதற்கு நிகழ்காலத்தின் முதல் தேவை, மிகப்பெரிய தேவை என்னவென்றால், அமெரிக்க ஐக்ய நாடுகளின் சகல மாகாணங்களிலும் ஒரு நாள் வேலை என்பது எட்டு மணி நேரவேலை என்று வரையறுத்து சட்டம் செய்யவேண்டும். இந்த பலனை அடைவதற்கு, நம்மாலியன்றதனைத்தும் செய்வதென நாம் உறுதிகொண்டிருக்கிறோம்"

பால்டிமோர் தொழிலாளர் காங்கிரஸின் தீர்மானத்தை மார்க்ஸ் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். 1866, அக்டோபர் 9-ல் கூகல்மானுக்கு எழுதிய கடிதத்தில், மார்க்ஸ் குறிப்பிடுகிறார்:—

"பால்டிமோரில் நிகழ்ந்த அமெரிக்க தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கைகளைக் கேட்டு மிகவும் திருப்தியடைந்தேன். (பால்டிமோர் காங்கிரஸ் நடந்த சமயத்திலேயே ஜினிவாவில் முதல் இண்டர் நேஷனல் காங்கிரஸ் நடந்தது—ஆர்.) மூலதனத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தவேண்டுமென்பதே அங்கு கோஷமாயிருந்தது. ஆச்சரியம் என்னவென்றால், ஜினிவா (மகாநாட்டில்)வில் நான் வகுத்த கோரிக்கைகளில் பலவற்றை தொழிலாளர்களின் சரியான உணர்வின் காரணமாக, அங்கு வகுக்கப்பட்டன."

ஜினிவா காங்கிரஸுக்கு மார்க்ஸ் வகுத்த கோரிக்கைகள் முற்போக்கான அமெரிக்க தொழிலாளிகளின் கோரிக்கைகளுடன் ஒத்திருந்ததில் வியப்பில்லை. சர்வதேச தொழிலாளர் இயக்கத்தைப்பற்றி யாரையும்விட மார்க்ஸுக்கு தீர்க்கமான பரிச்சயமுண்டு. அவர் வகுத்த கோரிக்கைகளின் திட்டம் சகல முதலாளித்துவ நாடுகளிமுள்ள தொழிலாளர்களுக்கு போதுவானதாகும்; வர்க்க போராட்டங்களில் கிடைத்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். "தொழிலாளர்களின் உண்மையான உணர்வை" கம்யூனிஸ்ட் கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்ததின் விளைவாகும்.

இரண்டு வருஷங்களுக்குப் பின், இந்த காங்கிரஸை மார்க்ஸ் மீண்டும் குறிப்பிடுகிறார்: 1868 டிசம்சர் 12ல் கூகல் மானுக்கு மார்க்ஸ் எழுதுகிறார்:—

"வேடிக்கை ஒருபுறமிருக்கட்டும்; அமெரிக்கன் தொழிலாளர் யூனியனின் போன காங்கிரஸில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டோம்—பெண் தொழிலாளிகளை அது பரிபூரண சமத்துவத்துடன் நடத்தியது. இந்த துறையில், இங்கிலீஷ்காரர்களும், பெண்களிடம் அதிக மரியாதையுள்ள பிரெஞ்சுக்காரர்களும் ஒரு குட்டை மனப்பான்மைக்காளாகி யிருக்கின்றனர். சரித்திரத்தைப்பற்றி யறிந்த யாருக்கும் பெண்கள் பங்கு இல்லாமல், பெரிய சமூக மாறுதல்கள் சாத்தியமில்லை யென்பது தெரியும். பெண்களின் சமூக அந்தஸ்தைக்கொண்டு சமூகத்தின் முன்னேற்றத்தை அணுவளவுகூட பிசகில்லாமல் அளந்துவிடலாம்."

சமூக இயக்கங்களின் பிரச்னைகளில் தன் தேவைகள் என்ன என்பது மார்க்ஸுக்கு தெரியுமென்பதை இக்கடிதம் நிரூபிக்கிறது. தொழிலாளிவர்க்க ஸ்தாபனங்களில் தொழிலாளி ஸ்திரீகளின் உரிமைகளை கட்டுப்படுத்துவதென்றால் தொழிலாளிவர்க்கம் தன் அரசியல் சக்தியை தானே கட்டுப்படுத்திக்கொள்வதென்று அர்த்தம் என்பது மார்க்ஸ் கருத்திலூன்றியிருக்கிறது.

எட்டுமணிநேர வேலைப் போராட்டத்தைப்பற்றி இந்த காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தை மார்க்ஸ் மூலதனம், முதல் பாகத்தில் குறிப்பிட்டு வற்புறுத்துகிறார் :—

"அடிமைமுறை இறந்தது; அதிலிருந்து உடனே உதயமாயிற்று ஒரு புதிய வாழ்வு: உள்நாட்டு யுத்தத்தின்* முதல் பலன் 8 மணிநேர வேலைக் கிளர்ச்சி; இந்தக் கிளர்ச்சி புதிய இங்கிலாந்து முதல் கலிபோர்னியாவரை நாலுகால் பாய்ச்சலில் தாவித் தாவி பரவியது.

ஸில்விஸ் ஆரம்பித்து, தலைமை வகித்த இந்த தேசிய லேபர் யூனியன் 1867, 1868, 1869, 1870, 1871ல் பல காங்கிரஸ்களை நடத்திற்று; முதல் இண்டர்நேஷனலுடன் தொடர்பேற்படுத்திக் கொண்டது. ஸில்விஸ் போன்ற தலைசிறந்த தலைவர்கள்கூட சோஷியலிஸ்ட் திட்டங்களிலும் தந்திரமுறைகளிலும் குறிப்பான

---

* அமெரிக்க உள்நாட்டு யுத்தம்: அமெரிக்க ஐக்கிய நாடுகளில், அடிமைமுறையை எதிர்த்து, நீக்ரோக்களை அடிமைகளாக நடத்தும்முறையை எதிர்த்து நடந்த யுத்தம்.

உறுதியும் பிடிப்பும் இல்லாதவர்களாயிருந்தபோதிலும், மார்க்ஸ் இந்த இயக்கத்தை உன்னிப்பாக கவனித்துவந்தார்; குறைந்த வேலைநேரம், அதிக சம்பளம் முதலிய கோரிக்கைகளுக்காக அது நடத்திய போராட்டங்களைப் பாராட்டினர்.

1869ல் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும், உறவுகளில் பகைமை முற்றியபோது, இண்டர்நேஷனலின் ஜெனரல் கவுன்ஸில் தேசிய லேபர் யூனியனுக்கு ஒரு அறைகூவல் விடுத்தது. அமெரிக்க தொழிலாளர்களுக்கும் ஐரோப்பிய தொழிலாளர்களுக்கும் நாசத்தைத் தவிர வேறொரு பலனையும் கொடுக்கமுடியாத, யுத்தத்தை எதிர்த்து அமெரிக்க தொழிலாளிகளை உறுதியாகப் போராடும்படி அது அறைகூவியது. மார்க்ஸால் எழுதப்பட்ட இந்த பிரகடனம், முதல் இண்டர்நேஷனல் கொள்கையையும் மார்க்ஸின் கொள்கையையும் தத்ரூபமாக சித்தரிப்பதால், அதன் முக்கியமான பகுதிகளைக் கீழே தருகிறோம்:—

"நமது ஸ்தாபனத்தின் ஆரம்ப கட்டத்தில் நாம் கூறினோம்: "அட்லாண்டிக் சமுத்திரத்தின் மறுபுறத்தில் (அமெரிக்காவில் மொ-ர்.) அடிமைமுறையை நிலைநிறுத்தி நீடிக்கச் செய்வதற்காக ஒரு அக்கிரமமான யுத்தத்தில் மேற்கு ஐரோப்பா தலைக்குமேல் முழுகுவதிலிருந்து பாதுகாத்தது ஆளும் வர்க்கங்களின் புத்திசாலித்தனமல்ல, இங்கிலாந்தின் தொழிலாளிவர்க்கம் அந்த குற்றத்தை, தவறை எதிர்த்து நடத்திய வீரப்போராட்டம்தான். அட்லாண்டிக் கடலுக்கு இருபுறங்களிலும் (அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும்-மொ-ர்.) வளர்ந்துவரும் இயக்கத்தை பல வருஷங்களுக்கு பின்தள்ளச் செய்யக்கூடிய ஒரு யுத்தத்தை (வராதபடி தடுத்து) நிறுத்தவேண்டிய பொறுப்பு உங்கள்மீது விழுந்திருக்கிறது.

"இந்த சர்க்காரின் குறிப்பான நலன்களும், அந்த சர்க்காரின் விசேஷ நலன்களும் ஒருபுறமிருக்கட்டும். நம்மிடையே வேகமாக வளர்ந்துவரும் சர்வதேச ஒத்துழைப்பை நமக்குள்ளே யுத்தத்தை மூட்டிவிட்டு சகோதரச் சண்டையில் திருப்பிவிடுவது நமது பொது விரோதிகளின் பொதுநலன்களல்லா? . . . . . லின்கான் மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, நாம் கொடுத்த வாழ்த்துப்பத்திரத்தில் கூறினோம்—அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தால் நடுத்தரவர்க்கம் முன்னேறியதைப்போல, அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தால் தொழிலாளிவர்க்கம் முன்னேறுமென்ற நம் நம்பிக்கையை தெரிவித்தோம். உண்மையில்,

அடிமை-எதிர்ப்பு யுத்தத்தின் வெற்றிகரமான முடிவு தொழிலாளி வர்க்கத்தின் சரிதையில் ஒரு புது சகாப்தத்தை ஆரம்பித்துவைத்திருக்கிறது. உங்களுடைய மூத்த கட்சிகளும், முதிர்ந்த அரசியல் வாதிகளும் (ஐரோப்பிய நாடுகளை குறிப்பிடுகிறார் மொ-ர்.) பொருமைப்படும் அளவுக்கு, ஒரு சுயேச்சையான தொழிலாளிவர்க்கம் அந்த நாளிலிருந்து அமெரிக்காவில் தோன்றி வளர்ந்துவருகிறது. இது பலன்தர, பல வருஷங்கள் சமாதான வாழ்வு நிலைத்திருக்க வேண்டும். இந்த இயக்கத்தை அழிக்க, இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போர்நடத்துவது தேவையாகிறது.

"உள்நாட்டு யுத்தத்தின் உடனடிபலனைக, யதார்த்த விளைவாக, அமெரிக்க தொழிலாளியின் நிலைமை மிக மோசமாகிவிட்டதென்பது நிச்சயம். யுத்தம் சிருஷ்டித்த சோம்பேறிகளும், பண மூட்டைகளும் நடத்தும் டாம்பீக வாழ்க்கையும் ஆடம்பர திருவிளையாடல்களும் தொழிலாளர்களின் துன்ப துயரங்கள் அதிகரிப்பதைப்போல அதிகரித்துவருகின்றன. எனினும், இவற்றுக்கு ஈடுசெய்யும்விதத்தில், அடிமைகளை விடுவித்த உள்நாட்டு யுத்தம் நம் வர்க்க இயக்கத்துக்கு தார்மீக ஊக்கம் அளித்தது. இன்னொரு யுத்தம், சமூக வளர்ச்சிக்கு அவசியமல்லாத யுத்தம், புனிதமான லட்சியத்துக்காக நடக்காத யுத்தம்—பழைய உலக முறையில் நடக்கும் யுத்தம் (அமெரிக்காவை புது உலகமென்றும் இதர கண்டங்களை பழைய உலகம் என்றும் கூறுவதுண்டு. அந்த அர்த்தத்திலேயே இந்த பழைய உலகம் என்ற பதம் பிரயோகிக்கப்படுகிறது) அடிமைகளின் தளைகளை அறுத்தெறிவதற்கு பதிலாக தொழிலாளிக்கு புதிய விலங்குகளிடும். தொழிலாளி வர்க்கத்தை அதன் நியாயமான தீரம்மிகுந்த அபிலாஷைகளிலிருந்து தனிமைப்படுத்துவதற்கு, நிரந்தர சைனியம் என்ற உணர்ச்சியற்ற வாள் மூலம் தனிமைப்படுத்த, யுத்தத்தின் விளைவாக ஏற்படும் துன்ப துயரங்கள் முதலாளிகளுக்கு சந்தர்ப்பமளிக்கும்.

"ஆகவே, கடைசியாக இப்பொழுது ஏவலாட்களென்ற முறையில் இல்லாமல், தங்கள் சொந்த பொறுப்பை உணர்ந்த சுதந்திர சக்திகளென்றமுறையில், தொழிலாளிவர்க்கம் சரித்திர அரங்கத்தில் நடமாடுவதையும் எஜமானர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் யுத்தம் யுத்தம் என்று கூப்பாடு போடும்போது சமாதானத்தை பாதுகாக்கும் சக்திபெற்றவர்கள் என்பதையும் உலகத்துக்கு ருசுப்பிக்கும் மகத்தான கடமை உங்களைச் சார்ந்திருக்கிறது".

இந்த பிரகடனம் பல முக்கியமான பிரச்னைகளை எழுப்புகிறது. யுத்தத்தைப்பற்றி தொழிலாளிவர்க்க ஸ்தாபனங்கள், குறிப்பாக தொழிற்சங்கங்கள் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கை இதிலெழும் பிரச்னைகளில் முதன்மையானது. மார்க்ஸ் "பொதுப் படையாக" யுத்தத்தை எதிர்க்கவில்லை. அவர் யதார்த்த உண்மைகளின் அடிப்படையில் பிரச்னையை விளக்குகிறார். உள்நாட்டு யுத்தத்தில் தொழிலாளிவர்க்கத்துக்கு ஏற்பட்ட நல்விளைவுகளை வற்புறுத்துகிறார்; வரவிருக்கும் ஆங்கில-அமெரிக்க யுத்தத்தின் பிரதிகூலங்களையும் வலியுறுத்துகிறார். இதற்கு தேசிய லேபர் யூனியன் தலைவர் ஸில்விஸ் பதில் அளிக்காமல் இல்லை. பேஸல் காங்கிரஸுக்கு சமர்ப்பித்த ரிப்போர்ட்டில் மார்க்ஸ் கூறுகிறார் :—

"நமது லட்சியத்திற்காக போராடிய தீரன் ஸில்விஸ் திடீரென்று காலமாகிவிட்டார். அவர் ஞாபகார்த்தமாக நமது கடிதத்துக்கு அவர் அளித்த பதிலுடன் இந்த ரிப்போர்ட்டை முடிப்பதுதான் சரி :—

"பிரகடனமும் உங்கள் 12ம் தேதி கடிதமும் எனக்கு நேற்று கிடைத்தது. கடல்கடந்த நாடுகளிலுள்ள நமது சகோதரத் தொழிலாளர்களிடமிருந்து இத்தகைய அன்பான வார்த்தைகளைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்; நமது லட்சியம் பொதுவானது. இது ஏழ்மைக்கும் செல்வத்துக்கும் நடக்கும் போராட்டம்: உலகத்தின் சகல பாகங்களிலும் முதலாளிகள் ஒரேமாதிரியாக, கொடுமைப்படுத்துகிறார்கள்; தொழிலாளிகள் தாழ்வுற்றிருக்கின்றனர். ஆகவே, நமது லட்சியம் பொதுவானதென்று நான் கூறுகிறேன். அமெரிக்க தொழிலாளி மக்களின் சார்பில், உங்களுக்கும், நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சகலருக்கும், ஐரோப்பாவில் மிதிபட்டு ஒடுக்கப்பட்டுக்கிடக்கும் உழைப்பாளிகளாகிய ஆண், பெண்கள் அனைவருக்கும் எனது நட்புக்கரத்தை, வலதுகரத்தை அளிக்கின்றேன். மகிமையும் பெருமையும் பொருந்திய வெற்றி உங்கள் முயற்சிகளுக்கு முத்தாய்ப்பு வைக்கும்வரை, நீங்கள் மேற்கொண்டுள்ள நற்பணியை தொடர்ந்து நடத்துங்கள், முன்னேறுங்கள். அதுவே நமது உறுதி. போன யுத்தம் உலகத்தின் இதர நாடுகளைவிட கேவலமான பணமூட்டை கூட்டத்தை கட்டி வளர்த்தது. இந்த பணமூட்டைகள் மக்களை தின்று கொழுக்கின்றன. நாங்கள் அதன்மீது போர் தொடுத்து விட்டோம். வெற்றியடைவதென்று சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறோம். முடியுமானால், தேர்தல்மூலம் ஜெயிப்போம்.

முடியாவிட்டால், இன்னும் தீவிரமான முறைகளை கடைப்பிடிப் போம். அபாயகரமான சமயங்களில், கொஞ்சம் ரத்தம் சிந்துவதும் சில சமயம் அவசியமாகிறது".

இளம் பருவத்திலுள்ள அமெரிக்க தொழிற்சங்க இயக்கத்தின் தலைவன் தன்மையை கடிதம் நன்கு பிரதிபலிக்கிறது. ஸில்விஸை "தீரமாகப் போராடக்கூடியவர்" என்று மார்க்ஸ் ரிப்போர்ட்டில் குறிப்பிடுவது தற்செயலாகவல்ல.

முதல் இண்டர்நேஷனல் பொதுக்கவுன்ஸிலின் நிகழ்ச்சி குறிப்பைப் பார்த்தால், அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தின் பிரச்னைகள் அடிக்கடி அதன் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றது தெரியவரும்.

1869 ஏப்ரல் 8-ம் தேதி நிகழ்ச்சிக் குறிப்பு கூறுகிறது:—

"வேலைநிறுத்தம் செய்திருக்கும் தொழிலாளர்களை தோற்கடிப்பதற்காக தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்க, கவுன்ஸில் தன் செல்வாக்கை உபயோகிக்க வேண்டுமென்று, நியூயார்க் பத்திரிகைகளின் அச்சுத் தொழிலாளர்கள் எழுதியகடிதம் படிக்கப்பட்டது. முதல் இண்டர்நேஷனலின் தலைமையிலுள்ள சகல பத்திரிகைகளுக்கும் எழுதும்படி காரியதரிசிக்கு அறிவிக்கப்பட்டது."

குடியேற்ற பிரச்னைகளை கவனிக்கும் கமிட்டியை அமைப்பதுபற்றி அதே கமிட்டி கூட்டத்தில், ஒரு ரிப்போர்ட் தரப்பட்டது. பின்னர் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது:—

(1) தேசீய லேபர் யூனியன் ஒத்துழைப்புடன் குடியேற்ற கமிட்டி அமைப்பது.

(2) வேலைநிறுத்த காலங்களில், ஐரோப்பாவிலிருந்து அமெரிக்க முதலாளிகள் தொழிலாளிகளைத் திரட்டுவதை தடுக்க கவுன்ஸில் சகல பிரயத்தனங்களும் செய்யவேண்டும்.

தவிர, பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களுக்கு செய்ததுபோல, மார்க்ஸ் தலைமையிலிருந்த ஜெனரல் கவுன்ஸில் பொருளாதாரப் போராட்ட பிரச்னைகளை (கருங்காலிகளை எதிர்த்துப் போராடுவது முதலியன) எழுப்பியது; அமெரிக்க தொழிற்சங்கங்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள இது பயன்பட்டது. 1870ம் வருஷத்திய ஏப்ரல் 19ம் தேதியின் நிகழ்ச்சிக் குறிப்பு இதற்கு ஒரு உதாரணம்:—

"அமெரிக்காவில் தொழிற்சங்கங்கள் ரகசிய ஸ்தாபனங்களின் உருவத்தை மேற்கொள்ளுவதை நியூயார்க் நிருபர்

ஹூயூம் தன் கடிதத்தில் எடுத்துக்காட்டினார். நியூயார்க்கிலிருந்த ஜெர்மன் நிருபர்களுடைய கடிதங்கள் இதை ஊர்ஜிதம் செய்தன; ஹூயூமும் ஜீஸப்பும் இதில் பங்கு எடுக்காமலிருக்கும்படி செய்வதன் மூலம் இதில் கவுன்ஸில் தலையிடவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டனர். தற்போதய நிலைமையில் பிரச்னையைப் பற்றி தீர்மானிக்க முடியாதென்று கவுன்ஸில் முடிவுசெய்தது. அமெரிக்காவில் ரகசிய கழகங்களுக்கு அவசியமென்னவென்று காரியதரிசி கடிதமெழுதி விசாரிக்கவேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது"!

நியூயார்க்கிலிருந்துவந்த கடிதங்களும் ஜெனரல் கவுன்ஸிலின் முடிவுகளும் மார்க்ஸூம் முதல் இண்டர்நேஷனலும் அமெரிக்க இயக்கத்தின் சகல விவரங்களைப்பற்றியும் அறிந்துவந்ததையும், உடனுக்குடன் தீர்மானிக்கமுடியாதபோது, அவசியமான விஷயங்களை சேகரித்து வந்ததையும், தம் பகுதிகளுடனும் ஆதரவாளர்களுடனும் நிரந்தர தொடர்பு வைத்திருந்ததையும் காட்டுகின்றன. இண்டர்நேஷனலின் பகுதிகள் நியூயார்க்கிலும் மறறும் பல நகரங்களிலும் ஏற்பட்டபொழுது, அவற்றிற்குள்ளே அரசியல், ஸ்தாபன அபிப்ராய பேதங்கள் தோன்றியபோது, மார்க்ஸூம் எங்கல்ஸூம் ஸோர்ஜ் முதலியோருடன் நடத்திய கடிதப்போக்குவரத்துகள் இந்த நிரந்தர தொடர்புகளுக்கும், அமெரிக்க இயக்கத்துக்கு அளித்த அரசியல் உதவிக்கும் சான்றுகளாய் விளங்குகின்றன.

1870 வருடம் செப்டம்பர் 1ம் தேதி ஸோர்ஜூக்கு கடிதத்தில், ஜெனரல் கவுன்ஸிலின் வேலைகளின் பாகுபாடுபற்றி மார்க்ஸ் பிரஸ்தாபிக்கிறார்; அமெரிக்க விவகாரங்களை கவனிக்கும் காரியதரிசி பொறுப்பை எக்கேரியன் நிர்வகிப்பாரென்று எழுதுகிறார். செப்டம்பர் 21ம் தேதி எழுதிய கடிதத்தில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமையை 'மத்திய கமிட்டிக்கு' பதிலாக 'மத்திய கவுன்ஸில்' என்றழைக்குமாறு கூறுகிறார்; அமெரிக்காவுக்கு என்னென்ன பிரசுரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவென்று தெரிவிக்குமாறு கோருகிறார். 1871 செப்டம்பர் 12ம் தேதி எழுதிய கடிதத்தில், ஸோர்ஜூக்கு அனுப்பப்பட்ட இண்டர்நேஷனலின் சுற்றறிக்கைகளைப்பற்றியும் சட்டதிட்டங்களைப்பற்றியும் மார்க்ஸ் பிரஸ்தாபிக்கிறார். 1871 நவம்பர் 6ம் தேதி, மார்க்ஸ் மீண்டும் பிரசுரங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கிறார்; அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தின் தலைமையை பிடிக்கவேண்டுமென்று

முயலும் 12வது பகுதி, (நியூயார்க்கிலுள்ளது), அறிவாளிகளும் பத்திரிகையாளர்களும் அடங்கிய 12வது பகுதியைப்பற்றியும் அதே கடிதத்தில் பிரஸ்தாபிக்கிறார், நவம்பர் 9ம் தேதி கடிதத்தில் முன்னேற்பாடாகச் செய்யவேண்டிய அரசியல், ஸ்தாபனவேலைகள் முடிவுற்றபின், ஒரு காங்கிரஸைக் கூட்டி, ஒரு சமஷ்டி கமிட்டியை தேர்ந்தெடுக்குமாறு ஸோர்ஜுக்கு யோசனை கூறுகிறார்; கமிட்டியிலிருந்து விலகாமலிருக்கும்படி ஸோர்ஜை வற்புறுத்தினார். 1871 நவம்பர் 10ம் தேதி, மத்திய கமிட்டி அங்கத்தினர் ஸ்பேயர் என்பவருக்கு மார்க்ஸ் எழுதுகிறார்:—

(1) சட்டதிட்டங்களின் பிரகாரம், அமெரிக்காவிலுள்ள ஜெனரல் கவுன்ஸிலின் முதற்கடமை. அமெரிக்கர்களைப்பற்றி கண்ணும் கருத்துமாயிருப்பதாகும்.

(2) எப்பாடுபட்டாவது தொழிற்சங்களை நம் செல்வாக்கில் கொண்டுவர முயற்சிக்கவேண்டும்.

இதே கடிதத்தில் ஜெனரல் கவுன்ஸிலைப்பற்றிய பல சந்தேகங்களுக்கும் புகார்களுக்கும் விவரமாக பதிலளிக்கிறார் மார்க்ஸ்; ஜெனரல் கவுன்ஸில் அங்கத்தினர்கள் தனிப்பட்டமுறையில் கடிதப்போக்குவரத்து நடத்துவதை கவுன்ஸில் தடுக்க முடியாதென்று அவருக்கு எடுத்துக்கூறுகிறார்,

போல்ட் என்பருக்கு எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் கூறுகிறார்:

"சோஷியலிஸ்ட், அரைகுறை சோஷியலிஸ்ட் தனிகோஷ்டிகளுக்கு பதிலாக, தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான போராட்ட ஸ்காபனத்தை உருவாக்குவதற்காகவே இண்டர்நேஷனல் ஸ்தாபிக்கப்பட்டது. இண்டர்நேஷனலின் மூல விதிகளும் ஆரம்ப விழா பிரசங்கமும் இதைத் தெளிவுபடுத்தும். சரித்திரத்தின் போக்கிலேயே ஸெக்டேரியனிஸம் ஏற்பட்டிருக்காவிட்டால், இண்டர்நேஷலின் ஆதரவாளர்கள் தங்கள் கோட்பாடுகளை நிலைநிறுத்தமுடியாது. ஸோஷியலிஸ்ட் ஸெக்டேரியனிஸத்தின் வளர்ச்சியும் உண்மையான தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தலைகீழ் விதாச்சாரத்திலிருக்கின்றன. (ஸெக்டேரியனிஸம் வளர்ச்சியடையும் கட்டத்தில், தொழிலாளி வர்க்கத்தின் பொதுஜன இயக்கம் சாத்தியமில்லை. தொழிலாளி வர்க்க இயக்கம் வளரவளர ஸெக்டேரியனிஸம் தேய்பிறைச் சந்திரனைப்போல தேய்ந்துபோய் விடுகிறது—மொ-ர்.) தனி கோஷ்டிகள் (ஸெக்டேரியனிஸத்தை தழுவியுள்ள கோஷ்டிகள்) வாழ்வதற்கு சரித்திர பூர்வமான சூழ்நிலையுள்ள வரையில், ஒரு

சுதந்திர பூர்வமான இயக்கத்தை வளர்க்க தொழிலாளிவர்க்கம் இன்னும் போதிய வளர்ச்சிபெறவில்லை என்பதே பொருள். இந்த தனி கோஷ்டிகள் அடிப்படையில் பிற்போக்கு சக்திகளாகிவிடுகின்றன. இண்டர்நேஷனலைச் சேர்ந்தவர்களின் சரித்திரம் இதர இடங்களில் சரித்திரம் எடுத்துக்காட்டிய உண்மையை நிரூபித்தது. பழமை தன்னை புதுப்பித்துக்கொண்டு புதிதாக உருவாயுள்ள உருவங்களிலும் தன்னை பாதுகாத்துக்கொள்ளப் பார்க்கிறது".

மார்க்ஸ் கடிதத்தின் இந்த அபூர்வமான பகுதி, தொழிற் சங்கங்களைப்பற்றியும், சோஷியலிஸ்ட், அரைகுறை சோஷியலிஸ்ட் ஸ்தாபனங்களைப்பற்றியும் மார்க்ஸ் கடைப்பிடித்த தந்திரங்களை விளக்குகிறது; ஸெக்டேரியனிஸத்தைப்பற்றிய அவர் நடைமுறையின் அடிப்படையான கொள்கைகளையும், சரியான கம்யூனிஸ்ட் கொள்கைக்காக அவர் போராடிய முறைகளையும் விளக்குகிறது.

அதே சமயத்தில், *அமெரிக்காவிலுள்ள இண்டர்நேஷனலின் ஆதரவாளர்களுக்குள் ஒரு போராட்டம் மூண்டது. தகராறைத் தீர்க்கும்படி லண்டனிலுள்ள ஜெனரல் கவுன்ஸிலுக்கு சமஷ்டி கவுன்ஸில் நியூயார்க்கிலுள்ள 2வது செக்ஷனும் இன்னும் சில கிளைகளும் அங்கம் வகித்தன. நடுத்தரவர்க்க அரசியல்வாதிகள் ஆதிக்கம் வகிக்கும் 12வது செக்ஷனை எதிர்த்து, தொழிலாளர்கள் திரண்டு நிற்கும் சமஷ்டி கவுன்ஸிலை மார்க்ஸ் தலைமையிலுள்ள ஜெனரல் கவுன்ஸில் ஆதரித்தது. 1872 மார்ச் 8ந் தேதி, ஸோர்ஜுக்கு மார்க்ஸ் எழுதினார் :—

"அமெரிக்கப் பிளவைப்பற்றி ரிப்போர்ட் செய்யும்படி ஜெனரல் கவுன்ஸில் எனக்கு அறிவித்தது. (ஐரோப்பிய நாடுகளின் கிளைகளிலேயே மோதுதல்கள் இருந்தபடியால், இது கூட்டத்துக்குக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.) நியூயார்க்கிலிருந்துவந்த சகல கடிதங்களையும் ரிப்போர்ட்களையும், இந்த விஷயத்தைப்பற்றி பத்திரிகைகளில் பிரசுரமான சகல செய்திகளையும் நான் ஜாக்கிரதையாக பரிசீலனை செய்தேன். பிளவுக்கு காரணமாயிருந்தவர்களைப்பற்றியும் காலாகாலத்தில் எங்களுக்கு ஒன்றுமே தெரிவிக்கவில்லை யென்ற முடிவுக்கு வந்தேன். நான்

---

* அமெரிக்கன் இண்டர்நேஷனல்: ஹேக் காங்கிரஸுக்கு பிறகு முதல் இண்டர்நேஷனலின் தலைமைக் காரியாலயம் அமெரிக்காவுக்கு மாற்றப்பட்டது. அதன்பின், முதல் இண்டர்நேஷனலையே அமெரிக்கன் இண்டர்நேஷனல் என்றழைப்பதுண்டு.

சமர்ப்பித்த நகல் தீர்மானத்தின் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டது; மீதி பகுதி அடுத்த செவ்வாய்க்கிழமை நிறைவேறும்; அதன் பின் இறுதியான முடிவு நியூயார்க்குக்கு அனுப்பப்படும்."

மார்க்ஸ் தயாரித்து, ஜெனரல் கவுன்ஸிலால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை மார்க்ஸ் 1872 மார்ச் 15ல் ஸோர்ஜுக்கு அனுப்பினர். மார்க்ஸ் கொள்கையையும், இண்டர்நேஷனலின் கொள்கையையும் அது தத்ரூபமாக சித்தரிப்பதால், அதை அப்படியே தருகிறோம்:—

I. (அ) இரண்டு கவுன்ஸில்களும் ஒன்று சேர்ந்து, தற்காலிக சமஷ்டி கவுன்ஸிலாக இயங்கவேண்டும்.

(ஆ) புதிய பகுதிகளும் சிறிய பகுதிகளும்கூட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பவேண்டும்.

(இ) இண்டர்நேஷனலின் அமெரிக்க அங்கத்தினர்களுடைய காங்கிரஸ் ஜூலை மாதம் முதல் தேதியன்று கூட வேண்டும்.

II. (அ) இந்த காங்கிரஸ் ஒரு சமஷ்டி கவுன்ஸிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும்: புதிய அங்கத்தினர்களைக் கவுன்ஸிலில் சேர்த்து விஸ்தரித்துக்கொள்ளும் உரிமை சமஷ்டி கவுன்ஸிலுக்களிக்கப்படவேண்டும்.

(ஆ) சமஷ்டி கவுன்ஸில் விதிகளையும் சட்டதிட்டங்களையும் காங்கிரஸ் தயாரிக்கவேண்டும்.

III. (அ) அடுத்த காங்கிரஸ்வரை 12வது கிளையை சஸ்பெண்டு செய்துவைக்கவேண்டும். (அதன் தவருன மனேபாவமும் பாசாங்குமே இதற்குக் காரணம்.)

(ஆ) ஒவ்வொரு கிளையிலும் குறைந்தபட்சம் மூன்றில் இரு பகுதியாவது கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளிகளாயிருக்கவேண்டும்."

முதல் இண்டர்நேஷனலின் ஹேக் காங்கிரஸ், அதன் தலைமைக் காரியாலயத்தை அமெரிக்காவுக்கு மாற்றுவதென்று முடிவு செய்தது. பாக்குனினிஸ்ட்களின் தாக்குதல் இந்த முடிவின் மூலம் தோற்கடிக்கப்பட்டது. எனினும், சர்வதேச தொழிலாளி வர்க்க ஸ்தாபனம் என்ற முறையில் முதல் இண்டர்நேஷனல் அதிலிருந்தே வீழ்ச்சியடையத் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளின் இயக்கம் இதன் மூலம் பின்வாங்கியபோதிலும், இந்த

முடிவு அமெரிக்காவுக்கு புது உத்வேகத்தை அளித்தது; ஜெனரல் கவுன்ஸிலின்கீழ் சகல மார்க்ஸிஸ்ட்களேயும் ஒன்று திரட்டும் முயற்சிக்கு ஊக்கமளித்தது. மறுபுறத்தில் மார்க்ஸிஸ்ட் எதிரிகளும் ஒன்றுபட்டனர். நியூயார்க் ஜெனரல் கவுன்ஸிலும் இண்டர்நேஷனலும், லண்டன் ஜெனரல் கவுன்ஸிலும் ஒரேமாதிரியானவையல்ல என்பதை மார்க்ஸூம், எங்கல்ஸூம் நன்கறிவர். ஜெனரல் கவுன்ஸிலே ஆதரித்து அவர்கள் அரசியல்ரீதியிலும், ஸ்தாபனரீதியிலும் தங்களால் இயன்றதனைத்தும் செய்தனர். எனினும் போராட்டம் தீவிரப்பட்டது; பிளவுகள் ஏற்பட்டன. ஜோர்ஜ் முதலியவர்கள் ஜெனரல் கவுன்ஸிலே மார்க்ஸ்-எங்கல்ஸ் கொள்கைப்படி நடத்த முயன்றனர். ஆனால் தொழிற்சங்கங்களைப்பற்றி இண்டர்நேஷனலின் கிளைகள் கொண்டிருந்த போக்கில் ஒரு பெரிய குறைபாடிருந்தது. 1874 ஜூன் 3ம் தேதி, சிகாகோவிலுள்ள கிளை நம்பர் 3க்கு ஜெனரல் கவுன்ஸில் கீழ்க்கண்ட கடிதத்தை அனுப்பியது :—

"தொழிற்சங்கத்தின் உபயோகத்தையும் அசாதாரணமான முக்கியத்துவத்தையும்பற்றி இண்டர்நேஷனலின் கிளைக்குக் கூட எடுத்துச் சொல்லவேண்டியிருப்பது நூதனமாயிருக்கிறது. எனினும் முதல் இண்டர்நேஷனலின் ஒவ்வொரு காங்கிரஸூம் முதல் காங்கிரஸ் முதல் கடைசி காங்கிரஸ்வரை, தொழிற்சங்க இயக்குக்கு முழு கவனம் செலுத்தி, அதை வளர்க்கும் வழிகளைக் காண முயற்சித்ததென்பதை 3-வது செக்ஷனுக்கு நாம் நினைவூட்டுகிறோம். தொழிற்சங்கம் தொழிலாளிவர்க்கத்தின் தொட்டில். (தொழிலாளர் இயக்கம் தோன்றியவுடன் தொழிற்சங்க மூலமே வளர்கிறது—மொ-ர்.) ஏனென்றால், தங்கள் தினசரி வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயங்களில்தான் முதன்முதலில், தொழிலாளிகள் தம் கவனத்தை செலுத்துவார்கள்; அதற்காக தங்கள் தொழிலிலுள்ள சகோதர தொழிலாளிகளுடன் ஒன்று சேருவார்கள். அதனால், இண்டர்நேஷனலின் அங்கத்தினர்களின் கடமை உள்ள தொழிற்சங்கங்களுக்கு உதவுவதுடன், அதற்கு மேலாக, அவற்றை சரியான பாதையில் தலைமைவகித்து நடத்திச் செல்ல வேண்டும்—அதாவது அவற்றிற்கு சர்வதேசீய போதம் புகட்ட வேண்டும்; அம்மட்டுமல்ல, சாத்தியமான இடங்களிலெல்லாம் புதிய தொழிற்சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டும். சொத்து படைத்த வர்க்கத்தை எதிர்த்து பொருளாதாரப் போராட்டம் நடத்துவதிலிருந்து அரசியல் போராட்டமும் நடத்தும்படி பொருளாதார சூழ்நிலை தொழிற்சங்கங்களை உந்தித் தள்ளுகின்றன—திறந்த

கண்களுடன் தொழிலாளர் இயக்கத்தை நோக்குபவர்கள் அறிந்த உண்மை இது."

ஆனால், சரியான சித்தாந்தத்தை யுடைய இந்த உண்மையான மார்க்ஸிஸ்ட் கொள்கையுடன் வேறு பல போக்குகள் கலந்துகொண்டன; அமெரிக்கன் ஜெனரல் கவுன்ஸில் மார்க்ஸிஸ்ட் கொள்கையிலிருந்து மேலும் மேலும் நழுவியது.

1876ல் ஜெனரல் கவுன்ஸிலே ஆதரித்து கடைசி வரை உறுதியாய் நின்ற சிலரே இண்டர்நேஷனலையே கலைக்க வேண்டியதாயிற்று. மார்க்ஸின் அரசியல் சிருஷ்டி, ஸ்தாபன சிருஷ்டி—முதல் இண்டர்நேஷனல் மறைந்தது. சர்வதேச தொழிலாளர் இயக்கம் புதிய பாதையில் திரும்பியது.

அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தின் பல்வேறு கட்டங்களை எல்லோரையும்விட உன்னிப்பாக கவனித்து வந்தார் கார்ல் மார்க்ஸ். அதன் விசேஷ குணங்களையும் அதன் பல்வேறு குறைபாடுகளையும் அதை எதிர்நோக்கிய கஷ்டங்களையும் அவர் உணர்ந்தார். அப்படியானால் தன்னை பின்பற்றும் அமெரிக்கர்களுக்கு மார்க்ஸ் போதித்தது என்ன? தொழிற் சங்கங்களில் அதிகபட்ச கவனம் செலுத்தும்படியும், தொழிலாளி வர்க்கத்துடன் இரண்டறக் கலந்து ஐக்யமாகும்படியும் மார்க்ஸ் அவர்களுக்கு போதித்தார். "அந்த ஸ்தாபனங்களிலுள்ள குறுகிய, பாசிபடர்ந்த, செக்டேரியன் போக்குகளை" அறவே ஒழிக்கும்படி போதித்தார். செக்டேரியனிஸத்தையும் சந்தர்ப்ப வாதத்தையும் தடுப்பதற்கு தலைசிறந்த உத்திரவாதமாக பொதுஜன இயக்கத்துடன் சங்கமமாகும்படி மார்க்ஸ் அவர்களை கேட்டுக்கொண்டார். ஆனால் அவருடைய கோரிக்கைகள் நிறைவேறவில்லை. அமெரிக்க தொழிலாளர் இயக்கமும், தொழிற் சங்க இயக்கமும், ஒரு பிரத்தியேக பாதையை கடைப்பிடித்தன. அமெரிக்க முதலாளித்வம் வளர்ச்சி யடைந்தது; அந்த அசாதாரண வளர்ச்சியுடன் அமெரிக்க தொழிற் சங்க இயக்கத்திலும் 'பூர்ஷ்வா' தன்மை வளர்ந்தது. இந்த போக்குக்கு பல வருஷகாலம் தலைவனாகவும், தத்துவ கர்த்தாவாகவும் விளங்கிய சாமுவேல் காம்பர்ஸ் சோஷியலிஸத்தின் விரோதியாக இருந்தார். பொருளீட்டுவதிலேயே குறியாக இருந்தார். அவர் ஒரு சர்வசாதாரண அரசியல் வாதி. ஏகாதிபத்திய முதலாளிவர்க்கம் தொழிலாளிவர்க்கத்தின் ஒரு பகுதிக்கு அதிக சலுகைகள் அளித்துக்கொடுத்தது. இந்தக் கொள்கையினாலும் மனச் சோர்வினாலும் பல வருஷ காலம் 'காம்பர்ஸிஸத்தால்'

(காம்பர்ஸின் கொள்கை) மார்க்ஸிஸத்தை பின்னுக்குத் தள்ள முடிந்தது. லாபக் கணக்கிலேயே குறியாக இருக்கும் வியாபார நோக்கம் படைத்தவர்கள், தொழிற் சங்கங்களுக்கு தலைமை தாங்க ஆரம்பித்தார்கள். அவர்களுடைய கோஷம் தொழிலாளர் கொள்கை அல்ல. லாபத்தையே குறிக்கோளாகக் கொண்ட முதலாளித்துவ கொள்கை.

இந்த பிற்போக்கான தொழிற் சங்க வாதத்தை தத்ரூபமாக சித்தரிக்கும் பொருட்டு 1883-ல் (மார்க்ஸ் அந்த வருடம்தான் இறந்தார்) 'காம்பர்ஸை' காரியதரிசியாக கொண்ட சர்வதேச சுருட்டுத் தொழிலாளர் யூனியன் தலைவர் ஸ்டாரஸர் செனேட் கமிஷன் முன் (அமெரிக்க அரசாங்கத்தின் மேல் சபை செனேட் என்று அழைக்கப்படுகிறது) அளித்த சாட்சியத்தின் ஒரு பகுதியைக் கீழே தருகிறோம்:—

**கேள்வி:** "நீங்கள் முதலில் உங்கள் சொந்தப் பிரச்னையில் அபிவிருத்தி காண விரும்புகிறீர்களா?

**பதில்:** ஆம், நான் பிரதிநிதியா யிருக்கும் சுருட்டு தொழிலை முதலில் கவனிக்கிறேன். தங்களது நலனைப்பற்றி எடுத்துக்கூறுவதற்கு என்னை நியமித்தவர்களின் நலன்களைத்தான் முதலில் கவனிக்கிறேன்.

**கேள்வி:** உங்கள் இறுதி லட்சியங்களைப்பற்றி நான் கேட்கிறேன்.

**பதில்:** எங்களுக்கு இறுதி லட்சியங்கள் ஒன்றும் கிடையாது. அன்றாடம் எழும் பிரச்னைகளைத்தான் நாங்கள் கவனிக்கிறோம். உடனடியான கோரிக்கைகளுக்காகத்தான், ஒரு சில வருடங்களில் பெறக்கூடிய கோரிக்கைகளுக்காகத்தான், நாங்கள் போராடுகிறோம்.

**கேள்வி:** உண்ணவும், உடுக்கவும். வசிக்கவும் இன்றுள்ளதைவிட மேலான வசதிகளை விரும்புகிறீர்களா?

**பதில்:** ஆம், நாங்கள் இன்றுள்ளதைவிட நல்ல உடை உடுத்த விரும்புகிறோம். சிறந்த குடியிருப்பு வசதிகளை விரும்புகிறோம். பொதுவாக இன்றைவிட அதிகமான வசதிகள் படைத்த பிரஜைகளாக வாழ விரும்புகிறோம்.

**கமிஷன் தலைவர்:** வெறும் சித்தாந்தங்களை ஒப்பிப்பவன் என்று நாங்கள் உங்களைப்பற்றி நினைப்போமென நீங்கள் கூச்

சப்படுவதாக தெரிகிறது. நான் உங்களைப்பற்றி அப்படி நினைக்க வில்லை.

**சாட்சி:** எங்கள் ஸ்தாபனத்தின் சட்டத்திலேயே நாம் தத்துவம் பேசுபவர்களை எதிர்ப்பவர்கள் என்று சொல்லியிருக்கிறோம். நான் இங்கு அந்த ஸ்தாபனத்தின் சார்பில் பேசுகின்றேன். நாங்கள் எல்லோரும் அனுபவவாதிகள்."

**ஸ்டாரஸர்:** சொல்லாமல் விட்டவற்றை காம்பர்ஸும் இதரரும் சொல்லிலும் செய்கையிலும் எடுத்துக் கூறிவிட்டனர். கொள்கையிலும் நடைமுறையிலும் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களை காட்டிக் கொடுத்தனர். தொழிற் சங்கங்களை பெரு முதலாளித்வத்திற்கு தத்துவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும், ஸ்தாபன ரீதியிலும் அடிமைப்படுத்தி விட்டனர்.

சரித்திரரீதியில் தற்காலிகமாக மார்க்ஸிஸம் காம்பர்ஸிஸத்தின் முன், பின் வாங்கவேண்டியதேற்பட்டதற்கு காரணம் என்ன? அமெரிக்க முதலாளித்துவத்தின் வெற்றிகரமான வளர்ச்சியின் காரணமாய் நல்ல சம்பளம் வாங்கும் தொழிலாளிகளின் சில பகுதிகளை சலுகைகளின் மூலம் 'பூர்ஷவா'க்களால் கொடுக்க முடிந்தது. பலதரப்பட்ட பெருவாரியான தொழிலாளிகளின் வாழ்க்கைத்தரம் குறைந்தபட்ச நிலைமையைவிட மோசமாயிருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட முறையில் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியை கெடுக்க முடிந்ததுதான் காம்பர்ஸிஸத்தின் தற்காலிக வெற்றிக்குக் காரணம்.

சமீப காலத்தில், அடிமைப் புத்தி நிறைந்த பிற்போக்கான காம்பர்ஸிஸம் முதலாளித்துவத்துடன் மலையுச்சியிலிருந்து சரிந்து உருண்டு விழுவது பிரத்யட்ச உண்மை. ஆர்ப்பாட்டங்களிலும், ரத்தம் சிந்தப்படும் வேலை நிறுத்தங்களிலும், வேலையில்லாமல் திண்டாடும் பட்டினி பட்டாளங்களிலும், மார்க்ஸிஸ்ட் வேகத்தை உணர முடியும். புரட்சிகரமான மார்க்ஸிஸம் வெற்றிமேல் வெற்றியடைந்து வருகிறது.

தேசியப் பொருளாதாரம் சீரழிந்து, சின்னா பின்னமாவதை அமெரிக்க பூர்ஷ்வாக்களால் தடுக்க முடியவில்லை. அவர்களுடைய கையாட்களான காம்பர்ஸின் தொழிற் சங்க வாரிசுகளாலும் முடியவில்லை. அப்படியானால் யாருடைய கொள்கை சரியென்று சரித்திரம் நிரூபித்திருக்கிறது? சரித்திரம் யாருக்கு சாதகமாக வேலை செய்கிறது? காம்பர்ஸிஸத்திற்கு அல்ல; புரட்சிகரமான மார்க்ஸிஸத்திற்கு சாதகமாகத்தான் என்பது வெளிப்படை.

## ஏழாவது அத்தியாயம்

# தொழிலாளிவர்க்கத்தின் பொருளாதார கோரிக்கைப் போராட்டங்களும் மார்க்ஸுமும்

குறைந்த வேலை நேரத்திற்காகவும் அதிக சம்பளத்திற்காகவும் இதர கோரிக்கைகளுக்காகவும், போராடுவதில் ஏதேனும் அர்த்தம் உண்டா? பல வருடகாலம் இந்தப் பிரச்னைதான் தத்துவரீதியிலும், அரசியல்ரீதியிலும், மார்க்ஸுடைய விஞ்ஞான அரசியல் போராட்டத்தில் பிரதானமாக இருந்தது. இன்றைக்கு இம்மாதிரி யாராவது கேள்வி கேட்டால் நமக்கு சிரிப்பு வரும். நமது கவனத்திற்கு அருகதை அற்றது என்று ஒதுக்கிவிடுவோம். இந்த துறையில் மார்க்ஸ் பிரம்மாண்டமான விஞ்ஞான அரசியல் சாதனைகளை செய்து முடித்திருப்பதால்தான் இது சுலபமாகியிருக்கிறது. தொழிற்சங்கங்களினுடைய உபயோகம் ஸ்ட்ரைக்களினால் ஏற்படும் பயன்கள், சம்பளம், விலை, லாபம் ஆகிய பிரச்னைகள் முதலியவற்றைப்பற்றியெல்லாம் பிரெஞ்சு, ஜெர்மனி, பிரிட்டிஷ், நடுத்தரவர்க்க சோஷியலிஸத்தின் பிரதிநிதிகளான பிரௌதான், லஸ்ஸால், பேஸ்டன் ஆகியோரை எதிர்த்து மார்க்ஸ் நடத்திய போராட்டத்தை நாம் பார்த்தோம். தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு தொழிற்சங்கங்கள் போராடுவதால் பிரயோஜனமில்லை. அத்தகைய போராட்டங்கள் ஆண்டவன் வகுத்த விதியையும், மனிதன் வகுத்த சட்டத்தையும் மீறுவதாகும் என்று விஞ்ஞானத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும், பிரிட்டிஷ் முதலாளித்துவ பொருளாதாரவாதிகள் "நிரூபித்தார்கள்". பிரௌதான், லஸ்ஸால், பேஸ்டன் ஆகியோர் இந்த பூர்ஷுவா நிபுணர்களின் சித்தாந்தங்களையே கையாண்டனர்.

'மூலதனம்' என்ற புத்தகத்தின் முதல் பாகத்தில் ஆடம்ஸ்மித், ஜான் ஸ்டுவேர்ட் மில், மக்லோச், (Mcculloch) யூர் முதலிய

பூர்ஷுவா பொருளாதார நிபுணர்களின் விஞ்ஞான பதப்பிரயோகங்களை, தொழிலாளிவர்க்க எதிர்ப்புவாதங்களை மார்க்ஸ் ஒன்று திரட்டியிருக்கிருர். விஞ்ஞானரீதியான வாதங்கள் என்று சொல்லப்படும் இவற்றில் எவ்வளவுதூரம் முதலாளி மனப்பான்மை ஊறிக்கிடக்கின்றது என்பதை எடுத்துக்காட்ட ஒரு சில மேற்கோள்களைக் கீழே கொடுக்கிறேன் :—

"எந்த குறிப்பிட்ட நேரத்திலும், தொழிலாளியினுடைய கூலிக்காக ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இந்தத் தொகையின் அளவு நிலையானதாக கருதப்படுவதில்லை. ஏனெனில் மூலதன சேர்மானத்தின் மூலம் இந்தத் தொகையும் அதிகரிக்கிறது. சமூகத்தின் வளர்ச்சியின் மூலமும் அந்தத் தொகை அதிகரிக்கிறது. ஆனல், எந்தக் குறிப்பிட்ட நேரத்திலும் இதை முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையாகக் கருதி வாதிக்கப்படுகிறது. கூலி பெரும் வர்க்கம் அந்த வர்க்கத்தினருக்குள்ளே பங்கிட்டுக்கொள்வதற்கு இதைவிட அதிகமான தொகை கிடைப்பது சாத்தியமில்லை என்று அனுமானிக்கப்படுகிறது. அதனல் அவர்கள் அந்தத் தொகையைப் பெற்றுத்தானகவேண்டும். ஆகவே, வகுக்கப்படும் தொகை நிர்ணயமாயிருப்பதால் ஒவ்வொரு தொழிலாளியினுடைய கூலி, வகுக்கும் எண்ணை (அதாவது வேலை செய்யும் தொழிலாளிகளின் எண்ணிக்கையைத்தான்) பொறுத்திருக்கிறது."—(ஜான் ஸ்டுவர்ட் மில்)

"ஒவ்வொரு தேசத்திலும், யதார்த்தத்தில் சேமித்துவைக்கப்பட்டிருக்கும் முதலின் ஒரு குறிப்பிட்ட பகுதியே தொழிலாளிகளுக்கு சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. சர்க்கார் விரும்பி தலையிடுவதாலோ, பொதுஜன அபிப்பிராயத்தின் செல்வாக்கினலோ தொழிலாளிகளே ஒன்று சேர்ந்து நிற்பதினலோ இந்தத் தொகையை அதிகரிக்க முடியாது. ஒவ்வொரு தேசத்திலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை உடைய தொழிலாளிகளும் இருக்கின்றனர். சர்க்கார் விரும்பும் நடவடிக்கையாலோ, பொதுஜன அபிப்பிராயத்தாலோ, தொழிலாளரின் கூட்டு சக்தியாலோ இந்த எண்ணிக்கையை குறைக்க முடியாது. இப்பொழுது இந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் யதார்த்தத்தில் உள்ள முதலின் ஒரு குறிப்பிட்ட பகுதியை பங்கிட்டுக்கொடுக்கவேண்டும்."—(பொரி.)

"ஒரு குறிப்பிட்ட தொழிலில் போட்டியை தடுத்து அதன் மூலம் சம்பளத்தை இயற்கைக்கு விரோதமாக உயர்த்துவதிலும்

லாபத்தை குறைப்பதிலும், ஒரு யூனியன் வெற்றியடையுமானல், பழைய இயற்கையான சமநிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு இரண்டு போக்குகள் உதவுகின்றன. ஜனத்தொகை அதிகரிப்ப தன் மூலம் வேலைசெய்ய முன்வரும் தொழிலாளர்கள் தொகை பெருகும். சம்பளத்தை பட்டுவாடா செய்யக்கூடிய சம்பள நிதி குறைவதன்மூலம் உழைப்பாளிகளுக்கிருந்த கிராக்கி குறையும். இந்த இரண்டு கொள்கைகளின் கூட்டு நடவடிக்கை உடனடியாகவோ கொஞ்சகாலம் கழிந்த பின்னரோ ஒரு தலைப்பட்சமான முறையில் நிலைமையை மாற்றியமைத்த சக்தியை முறியடித்து, கூலியையும் லாபத்தையும் அவைகளின் இயற்கையான அளவிற்கு கொண்டுவரும்"—(ஸ்டர்லிங்).

"இந்தத் தடைகள் மீது தொழிற்சங்கங்கள் மோதிப் பயனில்லை. எத்தகைய அசாதாரணமான ஸ்தாபன பலத்தாலும் அந்தத் தடைகளை உடைத்தெறிய முடியாது. ஏமாற்றவும் முடியாது. ஏனெனில் அவைகள் இயற்கையால் ஏற்படுத்தப்பட்டவை." (கேர்ன்ஸ்)

"தொழிற்சங்க வாதத்தை ஒரு சங்கடமான நிலைமை எதிர்நோக்குகிறது. அதன் உடனடி நோக்கத்தில் அது தோற்றாலும் அல்லது ஜெயித்தாலும், விளைவு தொழிலாளர்களுக்கும் பாதகமாகத்தானிருக்கும். முதலாளியிடமிருந்து அதிகச் சம்பளம் வேண்டுமென்ற கோரிக்கை தோற்றால், ஸ்தாபனத்தை அமைப்பதற்கு எடுத்த முயற்சிகள், பணச்சிலவு, கஷ்டங்கள் எல்லாம் வியர்த்தமாகும்.........ஜெயித்தால் தற்காலீகமாக மேலெழுந்தவாரியில் அது வெற்றியாகத் தோன்றியபோதிலும், முடிவான பலன் இன்னும் மோசமானதாயிருக்கும்.

"மீறப்பட்ட இயற்கைச் சட்டங்கள் தங்களுக்குள் அடங்கி இருக்கும் சக்தியின் மூலமாக தங்கள் ஆதிக்கத்தை மீண்டும் ஏற்படுத்தும். தெய்வ விதிக்கு எதிராக தன் சொந்த வைராக்கியத்திற்காக போராட துணிவுகொண்ட மமதை பிடித்த மனிதன் (தெய்வ) தண்டனையிலிருந்து தப்பமுடியாது. அவனுடைய தற்காலிக சுபிட்சம் மறைந்து, இடைக்காலத்தில் அனுபவித்த வெற்றிக்காக அவன் நீண்டகாலம் கஷ்டப்படவேண்டும்."

—(ஜேம்ஸ் ஸ்டர்லிங்)

சுருக்கமாகக் கூறப்போனல், இப்பேராசிரியர்களின் அபூர்வமான கணிப்புகள் இவைதான் :—" கூலிக்கமர்த்தப்பட்ட

தொழிலாளர்களின் வர்க்கத்துக்கு தொழிற்சங்கங்களாலும் ஸ்ட்ரைக்குகளாலும் எந்தவிதமான பிரயோஜனமுமில்லை" (வால்க்கர்) "முதலாளிகள் லாபம் சம்பாதிப்பதாகவே விஞ்ஞானம் அறியவில்லை" (டெலிட்ஷ்ச்).

இந்த "விஞ்ஞானபூர்வமான" வாதங்களெல்லாம் நமக்கு கோமாளித்தனமாகத் தோன்றுகின்றன. எனினும், இந்த கொள்கைகளின் கர்த்தாக்கள் அக்காலத்திய பொருளாதார விஞ்ஞானத்தில் நிபுணர்களாயிருந்தார்கள்; அவர்களுக்கு பிரமாதமான செல்வாக்கு இருந்தது. முதல் இண்டர்நேஷனலின் ஜெனரல் கவுன்ஸில் ஏற்பாடுசெய்த விவாதங்களில்கூட இக்கொள்கைகள் பிரதிபலித்தது. வெஸ்டனை எதிர்த்துப் பேசுங்கால், இத்த விஞ்ஞானபூர்வமான வாதங்களின் அரசியல் அர்த்தத்தை மார்க்ஸ் சுருக்கமாக விளக்கினார்:

"தற்காலிக சம்பள உயர்வை நிர்ப்பந்தம்மூலம் பெறுவதில் தொழிலாளிகள் முட்டாள்தனமாக நடந்துகொள்கின்றனரென்றால், சம்பளத்தை தற்காலிகமாக குறைக்கும் முதலாளிகள் அதைவிடக் குறைவாக முட்டாள்களல்ல"

இந்த தத்துவாசிரியர்களால் தொழிலாளர் இயக்கத்துக்கு உள்ள அபாயத்தை மார்க்ஸ் உணர்ந்தார். ஆகவே, முழுமூச்சுடன், தன் புரட்சிகரமான ஆர்வத்துடன், தன் மூளையின் சக்தி முழுவதையும் கொண்டு, பூர்ஷுவா பொருளாதாரவாதிகளையும் அவர்களை ஆதரிக்கும் சோஷியலிஸ்டுகளையும் தாக்கினார். மூலதனம் முதல் பாகம் பூர்ஷுவா நிபுணர்களை ஓங்கி அடிக்கிறது. சம்பள நிதிக் கொள்கையின் தவறை மார்க்ஸ் நிரூபித்தார்; உபரி மதிப்பின் புதிரை அவர் கண்டுபிடித்தார். பூர்வாங்க சேகரத்தின்*

---

* பூர்வாங்க சேகரம்: நிலப்பிரபுத்துவ பொருளாதார அமைப்பின் அழிவின்மேல் முதலாளித்துவம் எழுகிறது. ஆனால் முதலாளித்துவம் தோன்ற, முதலாளிகளிடம் செல்வம் குவியவேண்டுமே? இது எப்படி? சுமார் 300, 400 வருஷங்களுக்குமுன், ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகள் திரைகடல் கடந்து ஏராளமாய் வர்த்தகம் செய்தன. அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது. செல்வம் கொழிக்கும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் புதிய மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஐரோப்

புதிரைக் கண்டுபிடித்தார். மறுக்கமுடியாத புள்ளி விவரங்களை ஏராளமாக உபயோகித்து, கூலி நிர்ணயிக்கப்படுவதெப்படி,

---

பியர்கள் வெடிமருந்து கண்டு பிடித்திருந்ததால், இந்த நாடுகளின் சுதேசி மக்களை சுலபமாய் தோற்கடிக்கமுடிந்தது. முதலாளித்துவ தொழில் வளர்ச்சிக்கு பூர்வாங்க தேவையான செல்வ சேகரம் இதன்மூலம் கிடைத்தது.

ஐரோப்பிய நாடுகளுக்குள்ளே நடந்த யுத்தங்களின் விளைவாக தோற்கடிக்கப்பட்ட நாடுகள் சூறையாடப்பட்டன. அதுவும் பூர்வாங்க சேகரத்துக்கு ஒரு வழியாயிற்று.

இறுதியாக, லேவாதேவிமூலம், அயல்நாட்டு சரக்குகளை சுதேசி மக்களிடம் உயர்ந்த விலைக்கு விற்பதன்மூலம், கடலிலே வரும் கப்பல்களை கொள்ளையடிப்பதன்மூலம் (இங்கிலாந்தின் ராணியாக அரசுபுரிந்த எலிஸபெத்துக்கே இந்த கடற்கொள்ளையில் பங்கு உண்டு என்பது சரித்திர உண்மை) முதல் சேகரமாயிற்று.

ஆனல் செல்வசேகரம், பிரச்னையை தீர்த்துவிடாது. யந்திரத்தொழில் புரட்சியால், தோன்றிய தொழில்களை அமைக்க செல்வம் பயன்படும். ஆனல் ஆளில்லாமல், யந்திரம் ஓடுமா? தானே சுதந்திரமாக வேலைசெய்யமுடிகிறவரையில் எந்த மனிதனும் ஸ்ரீமான் மூலதனத்திடம் வேலைக்கு போகமாட்டான். ஆகவே, உழைப்பை விற்பதைத்தவிர, வேறு ஜீவனேபாயமில்லாத வர்க்கத்தை சிருஷ்டிக்கவேண்டும். விவசாயிகள் நிலத்துக்கு கட்டுப்பட்டுக்கிடந்த பண்ணையடிமைத்தனம் உள்ளளவும், இந்த தேவையை பூர்த்தி செய்யமுடியாது. கைத்தொழில்கள் யந்திரத்துடன் போட்டி போடமுடியாமல் நசித்ததால் கைத்தொழிலில் வேலைசெய்தவர்கள் பாக்டரிக்கு வருவார்களென்பது வாஸ்தவம்; ஆனல் அவர்கள் போதாது. ஆகவே, முதலாளித்துவம் பண்ணை அடிமைத்தனத்தை ஒழிக்கிறது; நிலத்திலிருந்து விவசாயியை 'விடுதலை' செய்கிறது. விவசாயி நகரத்துக்கு வருகிருன்; வேலை தேடுகிருன். அதாவது, முதலாளித்துவ பொருளுற்பத்திக்கு முதல் தேவையான--உற்பத்தி சாதனங்களிலிருந்து உற்பத்திசெய்யும் உழைப்பாளிகளை பிரித்துவிடுவது--நடக்கிறது. ஆக, பூர்வாங்க சேகரம் என்பது, சமூகத்தில் ஒருசிலர் கொள்ளை, லேவாதேவி, பலாத்காரம், கொலை (இந்தியாவை கும்பெனியார் 'நாகரிகப்படுத்தியதை' நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்) மூலம் செல்வத்தை சேகரித்துக்கொள்வதும், உற்பத்தியாளனை உற்பத்தி சாதனங்களிலிருந்து துண்டிப்பதுமாகும். இந்த உண்மைகளை புட்டுப் புட்டுக் காட்டினர் கார்ல் மார்க்ஸ் (மொ-ர்.)

[1]மதிப்புகளும் [2]உபரி மதிப்புகளும் சிருஷ்டிக்கப்படுவதெப்படி, [3]உழைப்புக்கும், [4]உழைப்பு சக்திக்குமுள்ள வித்தியாசம் என்ன முதலியவற்றை நிரூபித்துக் காட்டினார். தொழிலாளி விற்பது எதை—அவன் உழைப்பையா, உழைப்பு சக்தியையா? என்பது பற்றியும் ஒரு கொள்கை தகராறு எழுந்தது.

மார்க்ஸ் [5]கூலியின் புதிரையும், உபரி மதிப்பின் புதிரையும் புட்டுப்புட்டுக் காட்டினார். "காரல் மார்க்ஸின் பொருளாதார

---

[1] **மதிப்பு,** [2] **உபரிமதிப்பு:** சந்தையில் சரக்குகள் விற்கப்படுகின்றன- இது முதலாளித்துவ பொருளாதாரத்தின் விசேஷ குணம் [புராதனகாலத்தில் சுயதேவைகளை பூர்த்திசெய்யும் உற்பத்திமுறை அமுலில் இருந்தது; முதலாளித்துவம் தோன்றுவதற்குமுன்னால், சாதாரண பொருளுற்பத்திமுறையில், உற்பத்தி சாதனத்தின் உரிமைக்காரனான உழைப்பாளி தன் பண்டங்களை பரிவர்த்தனை செய்து, தேவைப் பொருள்களை வாங்கினான்; முதலாளித்துவத்தில், உற்பத்தியே லாபத்துக்காக நடைபெறுகிறது.]

இந்த சரக்குகளின் மதிப்பு எப்படி நிர்ணயக்கப்படுகிறது? உபயோகமுள்ள சரக்குகளையே வாங்குவோம். ஆனால்உபயோகமான சரக்கின் விலையை நிர்ணயக்கப்படுகிறது? காற்றில்லாமல் உயிர் வாழ முடியாது; ஆனால் காற்றுக்கு விலையே கிடையாது. மோட்டார் காரை விட உப்பு அத்தியாவசியம்; ஆனால் உப்பு விலை குறைவு. ஏன்?

மதிப்பு, சாமான்களின் கிராக்கியையும் பிரதானமாக பொறுத்திருக்கவில்லை. நெருப்புப்பெட்டி மார்க்கெட்டில் இல்லாவிட்டாலும், கள்ளமார்க்கெட்டில் 4 அணா தான் விற்கும்; மோட்டார்கார் மார்க்கெட்டில் அகப்பட்டாலும் ரூ. 2000; ஏன் நெருப்புப்பெட்டிக்கு ரூ. 2000 கேட்பதில்லை? மதிப்பு, சாமான் கிராக்கியை பொறுத்ததல்ல. ஒரு பொருளின் மதிப்பு அதில் பொதிந்திருக்கும் உழைப்பையே பொறுத்திருக்கிறது என்ற உண்மையை மார்க்ஸ் அரங்கேற்றினார். ஒரு பொருளை உற்பத்திசெய்வதற்கு தேவையான சராசரி உழைப்பே அதன் மதிப்பை நிர்ணயிக்கிறது.

உபரி மதிப்பு, தொழிலாளி தன் உழைப்புசக்தியை கூலிக்கு விற்கிறான். உழைப்புசக்தியின் மதிப்பு என்ன? இந்த சக்தியை உற்பத்திசெய்வதற்கு, தேவையான பண்டங்களை உற்பத்திசெய்யும்

அமைப்பு முழுமைக்கும் இது அஸ்திவாரக்கல்" என்று கூறுகிறார் லெனின்.

இந்த மூலமந்திரம் அம்பலமானபின்கூட, இந்த பிரச்சினையைப்பற்றிய போராட்டம் ஒரு கணம்கூட நிற்கவில்லை என்பதை குறிப்பிடுவது அவசியம். ஏனெனில் "முதலாளித்துவ உற்பத்தி

---

உழைப்பு. அவன் உயிருடன் வாழ, வேலைசெய்யும் தெம்புடனிருக்க, தேவையான பண்டங்களை உற்பத்திசெய்யும் உழைப்பு. ஆனால் உழைப்புசக்தி அதன் மதிப்பை சிருஷ்டிக்கும் உழைப்பைவிட அதிகமாக உழைக்கமுடியும். அதாவது தொழிலாளியின் குறைந்தபட்ச வாழ்க்கைக்கு 4 மணி நேர உழைப்பு அவசியமென்றால், தொழிலாளி 8, 9, 10 மணிநேரம் வேலைசெய்வதன் மூலம் உபரிமதிப்பை சிருஷ்டிக்கிறான். முதலாளி 4 மணிநேர உழைப்பின் பலனையே கூலியாகக் கொடுக்கிறான்; இதையே குறைக்கப் பார்க்கிறான். தொழிலாளி சிருஷ்டிக்கும் உபரி மதிப்பு மூலதனத்தைப் பெருக்குகிறது. முதலாளித்துவ சுரண்டலின் ரகசியமான உபரிமதிப்பை கண்டுபிடித்தார் கார்ல் மார்க்ஸ்.

[3] உழைப்பு, [4] உழைப்புசக்தி: பண்டைக் காலத்தின் மனிதன் உழைப்பை விற்றான்; தறிகாரன் தன் உழைப்பை--துணியை, கொல்லன் தன் உழைப்பை--கோடரியை, தச்சன் தன் உழைப்பை--கலப்பையை உழவனிடம் தானியத்துக்கு பரிவர்த்தனை செய்தான். ஆனால் முதலாளித்துவ உற்பத்தியில், பாட்டாளி உழைப்பை விற்கவில்லை, உழைப்பதற்கு முன்னரேயே உழைக்கும் சக்தியை--உழைக்கக்கூடிய திறமையை விற்கிறான். உழைக்கும்சக்தி--உழைப்புசக்தி உழைப்பாகாது. உழைப்பு சக்தி உற்பத்திசாதனத்துடன் வேலைசெய்வதைத்தான் உழைப்பு என்கிறோம். உழைப்புசக்தி எப்பொழுதுமே விற்பனைச் சரக்காயிருந்ததில்லை என்பதை முதலிலேயே குறிப்பிட்டேன். உழைப்பாளி உற்பத்தி சாதனங்களிலிருந்து பிரிக்கப்பட்டபிறகே உழைப்புசக்தி விற்பனை சரக்காகிறது.

[5] கூலி: [உபரிமதிப்பு குறிப்பு பார்க்கவும்.] உழைப்புசக்தியுடைய மதிப்பு பண ரூபத்தில் கூறும்போது, அதை கூலி என்கிறோம். உபரிமதிப்பை, முதலாளித்துவ சுரண்டலை மறைப்பதற்காக கூலி வேலைமுழுவதுக்கும் கிடைப்பதாக பாவனை செய்யப்படுகிறது. உண்மையில் கூலிமுறை முதலாளித்துவ லாபத்தின் ஆதாரம். (மொ-ர்.)

யின் நேரடியான லட்சியம் உபரி மதிப்பு; அதுவே உற்பத்தியை நிர்ணயிக்கும் மூல நோக்கமாயிருக்கிறது" என்று மார்க்ஸ் கூறினாலல்லவா? அது வர்க்க நலன்களைப் பாதித்தது. "வடிவ கணிதத்தின் வெள்ளிடை உண்மைகள் தமது நலன்களை பாதித் தால், அவற்றைக்கூட நிச்சயமாய் மறுப்பார்கள்" என்று லெனின் கூறியதைப்போல மார்க்ஸ் கண்ட உண்மைகள் மறுக்க முடியாதவையாயிருந்தாலும், அவற்றால் பாதிக்கப்பட்ட வர்க்கம் (பூர்ஷுவா வர்க்கம்) அவற்றை எதிர்த்தது. உபரிமதிப்பு உண் மையை எதிர்க்காத பூர்ஷுவா பொருளாதாரவாதி ஒருவர்கூட இல்லையென்றால் அதிலிருந்து இதற்குவந்த எதிர்ப்பின் அளவை புரிந்துகொள்ளலாம்; ஆனால் எதிர்க்கும்போது, சிலர் தெரிந்தும், சிலர் தெரியாமலும், பிரச்னையை குழப்பினார்கள்.

பூர்ஷுவா பொருளாதார விஞ்ஞானத்தை எதிர்த்து மார்க்ஸ் கலகக்கொடி உயர்த்தியபோது, முக்கியமான பிரச்னையை சமா ளிக்கிறோமென்பதை மார்க்ஸ் நன்கறிந்திருந்தார். கொள்கை ரீதியிலும், அதன் விளைவாக அரசியல் ரீதியிலும் தொழிலாளி வர்க்கம் பூர்ஷுவா அரசியல் பொருளாதாரத்தையும் பூர்ஷுவா அரசியலையும் பின்பற்றுமா அல்லது முதலாளிவர்க்கத்தின் தத்து வத்தையும் கொள்கையையும் எதிர்த்து, தன்னுடைய சொந்த கொள்கை ஆயுதத்தை சிருஷ்டித்துக்கொள்ளுமா?—என்பதே பிரச்சினை. அதாவது சூக்ஷ்மமான சித்தாந்த பிரச்னை முக்கிய மான நடைமுறை பிரச்னையாகிவிட்டது—தொழிற்சங்கங்களை அமைப்பது அவசியமா, குறைந்த வேலைநேரத்துக்காகப் போராடு வதில் பயனுண்டா? பாக்டரி சட்டங்களால் தொழிலாளிவர்க் கத்துக்கு நன்மையுண்டா?—ஒரு வாக்கியத்தில் சொல்லப் போனால், புராலிடேரியட்டின் பொதுவான வர்க்கப் போராட்டத் தில் பொருளாதாரக் கோரிக்கைகளின் முக்கியத்துவம் என்ன என்ற பிரச்னை எழுந்தது. கொள்கையைத் தவிர, பொதுமக்க ளின் போராட்டங்களில் கிடைத்த அனுபவங்களும் பிரச்னைக்கு பதிலளித்தன. அதனால்தான், "மூலதனம்" என்ற புத்தகத்தில் போராட்டத்தின் யதார்த்த அனுபவங்களை மார்க்ஸ் இடைவிடா மல் பிரஸ்தாபிக்கிறார். மார்க்ஸ் கூறுகிறார்:—

"முதன்முதலில், முதலாளித்துவத்தின் சித்தாந்தத்துக்கு சவால் விட்டவர்கள் பிரிட்டிஷ் தொழிலாளிவர்க்க கொள்கை கர்த்தாக்கள்; ஆகவே, இங்கிலீஷ் பாக்டரி தொழிலாளிகள் நவீன தொழிலாளி வர்க்கத்துக்கே முன்னோடிகளாக விளங்கினார்கள்".

பூர்ஷுவா விஞ்ஞானிகளின் வாதங்களை அந்த சமயத்தில் அதிகமாக வளர்ச்சியடைந்திருந்த தேசத்தின் தொழிலாளர்கள் பிடிவாதமான போராட்டங்கள்மூலம் முறியடித்தார்கள். அனுபவத்தையும் புரட்சிகரமான கொள்கையையும் ஆதாரமாகக் கொண்டு, மூலதனத்துக்கு பரிந்துபேசுபவர்களையெல்லாம் மார்க்ஸ் பொருளாதார விஞ்ஞானத்தின் சிகரங்களிலிருந்து விரட்டியடித்தார்.

குறைந்த வேலைநேரம், உயர்ந்த சம்பளம், பெண் தொழிலாளிகளுக்கும் வேலை செய்யும் சிறுவர் சிறுமிகளுக்கும் பாதுகாப்பு, விரிவான பாக்டரி சட்டங்கள் முதலியவையே வர்க்கத் தொழிற் சங்க கொள்கைக்கு ஆரம்ப பிரச்னைகளாயிருக்க வேண்டும். எனினும், இந்த கோரிக்கைகளுக்காக நடக்கும் போராட்டங்கள் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய, புராலிடேரியட்டின் பொதுவான வர்க்கப் போராட்டத்தில், அவைகளுக்குள்ள பங்கையும் முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். சமூக பாதுகாப்பு சட்டங்கள் ஏற்படுவதற்கு காரணங்களை தெரிந்துகொள்ளவேண்டும். இந்த துறையில், மார்க்ஸின் வேலை அற்புதமானது. இங்கிலீஷ் பாக்டரி இன்ஸ்பெக்டர்களின் ரிப்போர்ட்களை—ஏராளமான ரிப்போர்ட்களை—மார்க்ஸ் பரிசீலனை செய்தார். இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலுள்ள தொழிலாளர் எதிர்ப்பு சட்டங்களை பகுத்தாராய்ந்தார். எட்டு மணி நேர வேலை தினப் பிரச்சினையை பெரிய பிரச்சினையாக்கினார். பாக்டரி சட்டங்கள்பற்றி நாம் அனுஷ்டிக்கவேண்டிய கொள்கையின் அடிப்படைக் கருத்துக்களை போதித்தார். மார்க்ஸின் முக்கியமான புத்தகமாகிய "மூலதன"த்தின் முதல் பாகத்தைப் பார்த்தால் போதும். உழைப்பு சக்தியின் விற்பனை, வாங்குதல் பிரச்சினை, உழைப்பு சக்தியின் மதிப்பு, உழைப்பு சக்தி சுரண்டப்படும் அளவு; அந்த சுரண்டலின் ரூபங்கள் அனைத்துக்கும் நிறைய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பூர்ஷுவா பொருளாதாரவாதிகளுடன் கொள்கைப் போராட்டம் நடத்துவதில் மாத்திரம் மார்க்ஸ் தன் 'மூலதன'த்தின் முதல் பாகத்தில் பெரும் பகுதியை செலவழிக்கவில்லை. தங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக போராடுவதைப்பற்றி தொழிலாளர்கள் என்ன கொள்கை அனுஷ்டிக்கவேண்டுமென்பதற்கு அதே புத்தகத்தில், அரசியல் ரீதியில் பதில் அளிக்கிறார். பாக்டரி சட்டம் ஏற்படக் காரணமென்னவென்ற கேள்விக்கு மார்க்ஸ் பதிலளிக்கிறார் :—

"500 வருடங்களுக்கு மேலாக, தொழிலாளிகளை எதிர்க்கும் முதலாளிகளின் நிரந்தரமான தொழிற்சங்கமாக, மானங்கெட்ட மமதையுடனிருந்துவந்த அதே இங்கிலீஷ் பார்லிமெண்ட், தன் அபிப்பிராயத்துக்கு விரோதமாக, பொதுஜன நிர்ப்பந்தத்தின் மூலமாகவே, ஸ்ட்ரைக் எதிர்ப்பு சட்டங்களையும் தொழிற்சங்க எதிர்ப்பு சட்டங்களையும் கைவிட்டதை நாம் பார்க்கிறோம்."—('மூலதனம்')

தொழிலாளிகளை சுரண்டவும், தொழிற்சங்கத்தையும், ஸ்ட்ரைக்குகளையும் தடை செய்யவும் முதலாளித்துவம் வெறி பிடித்தலைவதை மாத்திரம் மார்க்ஸ் அம்பலப்படுத்தவில்லை. அரசியல் அரங்கத்தில் தோன்றியகாலம் தொட்டே, மார்க்ஸ் யூனியன் உரிமைக்காகவும், ஸ்ட்ரைக் உரிமைக்காகவும் இதர கோரிக்கைகளுக்காகவும் போராட்டம் நடத்திவந்திருக்கிறார். முதல் இண்டர்நேஷனல் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னரே, மூலதனம் என்ற புத்தகத்தை பிரசுரிப்பதற்கு முன்னரே, அவர் எழுதிய புத்தகங்களும், பிரசுரங்களும், பேசிய சொற்பொழிவுகளும் இதை நிரூபிக்கும். இண்டர்நேஷனலின் ஆரம்பவிழா பிரசங்கம் (மார்க்ஸ் கைப்பட எழுதியது) கீழ்க்கண்ட வாக்கியத்துடன் ஆரம்பித்தது :—

"சகோதரத் தொழிலாளிகளே! 1848லிருந்து 1864க்குள் தொழிலாளி மக்களின் துயரங்கள் குறையவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை"

பிறகு, பாக்டரி சட்டங்கள் ஏற்படக் காரணமாயிருந்ததென்ன, பாக்டரி சட்டங்களின் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றி மார்க்ஸ் கூறுகிறார் :—

"போற்றத்தக்க விடாமுயற்சியுடன், முப்பது வருஷகாலம் போராடியபிறகு, நிலப்பிரபுக்களுக்கும், பணப் பிரபுக்களுக்குமுள்ள பிளவை விஸ்தரித்து, இங்கிலீஷ் தொழிலாளிவர்க்கம் 10 மணி மசோதாவை நிறைவேற்றுவதில் வெற்றிபெற்றது. (ஒரு நாள் வேலை 10 மணிக்கு மேலிருக்கக்கூடாது என்று நிர்ணயித்த மசோதா) பாக்டரி தொழிலாளர்களின் உபதேச நலனுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் தார்மீக வளர்ச்சிக்கும் இந்த மசோதா பயக்கும் நன்மைகள்- பாக்டரி இன்ஸ்பெக்டர்களின் அரை வருஷ ரிப்போர்ட்டுகளில் பதிவாயிருக்கின்றன; அவைகளை இன்று சகலரும் ஒப்புக்கொள்கிறார்கள். பல ஐரோப்பிய நாடுகளின் சர்க்கார்கள் இங்கிலீஷ் பாக்டரி சட்டத்தை அப்படியே அல்லாவிட்டாலும், கொஞ்சம் மாற்றி யமைத்தாவது ஒப்புக்

கொள்ளவேண்டி யிருக்கிறது; இங்கிலீஷ் பார்லிமெண்டும் வருஷா வருஷம் அச்சட்டத்தின் பலனை விஸ்தரித்துக்கொண்டு போகவேண்டி யிருக்கிறது..........ஆகவே, 10 மணி வேலைநேர மசோதா ஒரு பெரிய நடைமுறை வெற்றி மாத்திரமல்ல; அது ஒரு கொள்கையின் வெற்றி; முதன் முதலாக பட்டப் பகலில், நடுத்தரவர்க்கத்தின் அரசியல் பொருளாதாரம் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரத்தின் முன் மண் கவ்வியது."

குறைந்த வேலைநேரத்துக்காக தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்களையும், இதர சாதனைகளையும் மார்க்ஸ் எவ்வளவு தூரம் மதித்தார் என்பதைப் பார்த்தோம். பாக்டரி சட்டத்துக்கு அளவுக்கு மீறி மதிப்பு அளிக்கவில்லை: அதாவது பாக்டரி சட்டங்களை சர்வரோக நிவாரணியாக அவர் கருதவில்லை. ஆனால் உடனடிக் கோரிக்கைகளுக்காக தொழிலாளி மக்கள் நடத்தும் போராட்டங்களை குறைவாக மதிப்பிடுவதை, எதிர்த்து உறுதியாகப் போராடுவது அவசியமென்று கருதினார். உதாரணமாக, 1865 ஜூலை 21ல் நடந்த முதல் இண்டர்நேஷனல் பொது கவுன்ஸில் கூட்டம் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தது:—

1. மூலதனத்துக்கும் தொழிலுக்கும் பல தேசங்களில் போராட்டம் நடத்த முயற்சிகள் செய்யப்படுவதை இண்டர்நேஷனல் உதவியுடன் உறுதிப்படுத்துதல். 2. தொழிற்சங்கங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம். 3. கூட்டுறவுத் தொழில் 4. நேரடியானவரிகளும் மறைமுக வரிகளும் 5. குறைந்த வேலை நேரம் 6. பெண் தொழிலாளர்; உழைக்கும் சிறுவர் சிறுமிகள் 7. ஐரோப்பா மீது மாஸ்கோ படையெடுப்பு, சுதந்திர போலந்து உருவாக்கும் பிரச்னை 8. நிரந்தர ராணுவங்கள், அவை தொழிலாளிவர்க்க நலன்களை பாதிக்கும் முறை.

தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார நிலைமைகளைப் பற்றிய பிரச்னைகளே நிகழ்ச்சி நிரலில் பெரும்பான்மையாயிருப்பதை நாம் பார்க்கிறோம். தொழிலாளிவர்க்கத்தின் வாழ்க்கை நிலைமையைப்பற்றி இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்க காரணமென்ன? 'தொழிலாளி வர்க்கத்தின் யதார்த்த நிலைமை தான் இன்றைய சமூக இயக்கங்கள் அனைத்துக்கும் ஆரம்ப பீடம்' என்று குறிப்பிட்டாரே, அதுதான் காரணம்.

ஜெனரல் கவுன்ஸிலின் அடுத்த கூட்டத்தில், ஜினிவாவில் கூடும் காங்கிரஸ் தொழிலாளிவர்க்கத்தின் நிலைமையைப் பற்றிய முடிவு செய்ய வேண்டுமென்று சிபார்சு செய்யும் தீர்மானத்தை

மார்க்ஸ் ஒரு விசேஷ கவுன்ஸில் சார்பில் கொண்டுவந்தார். விசாரணை கீழ்க்கண்ட அடிப்படைகளின் பேரில் நடக்க வேண்டு மென்றார் :—

(1) வேலை (2) தொழிலாளியின் வயது, ஆணா? பெண்ணா? (3) மொத்த தொழிலாளிகளின் எண்ணிக்கை (4) சம்பளமும் கூலியும்,

(அ) வேலைக்குத் தேர்ச்சி பெறுவதற்காக உழைப்பவர் கள் தொகை.

(ஆ) வேலை நேரத்துக்கு தக்க கூலியா? வேலை அளவுக் குத் தக்க கூலியா? கூலி பட்டுவாடா செய்வது இடைத்தட்டுக் காரர்களா? ஒரு வாரத்தின் சராசரி சம்பளம், ஒரு வருஷத்தின் சராசரி சம்பளம்.

5. வேலைநேரம்: பாக்டரியில் வேலைசெய்யும் நேரம்; சிறு முதலாளிகளிடம் மூலப்பொருளை வாங்கிக்கொண்டு, வீட்டில் வேலை செய்யும் முறையானால், வீட்டில் எத்தனை மணி நேரம் வேலை—பகல்வேலை, ராத்திரி வேலை.

6. சாப்பாட்டு நேரம்; வசதிகள்

7. வேலை ஸ்தலங்களின் நிலைமைகள்—போதிய இட முண்டா? காற்றோட்டம், சூரிய வெளிச்சம், விளக்கு வசதி முத லியவை; சுத்தம்.

8. எம்மாதிரி வேலை

9. வேலையால் தேகம் எவ்விதம் பாதிக்கப்படுகிறது?

10. ஒழுக்க நிலைமை; அறிவு வளர்ச்சி, கல்வி வசதிகள்.

11. தொழிலின் தன்மை—வருஷம் முழுவதுக்கும் வேலையா? வருஷத்துக்கு சில மாதங்கள் வேலையா? உற்பத்தியாகும் பொருள் சொந்த நாட்டு தேவையை பூர்த்தி செய்கிறதா? அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?"

இந்த கேள்வி அட்டவணை வெகு விஸ்தாரமானதாயிருந்தது. பாக்குனிஸ்டுகளையும் பிரௌதனிஸ்டுகளையும் போல் வெறும் படாடோப பேச்சுகளில் குறியாக நில்லாமல், உண்மைகளையும் புள்ளி விபரங்களையும் தெரிந்துகொள்ள மார்க்ஸ் முயன்றாரென்ப தற்கும், தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமையைப்பற்றி உணர இடைவிடாது உழைத்தாரென்பதற்கும் இந்த கேள்வி அட்டவணையே சான்றாகும்.

முதல் இண்டர் நாஷனலின் ஜினீவா காங்கிரஸுக்காக மார்க்ஸ் தயாரித்த பொருளாதாரக் கோரிக்கைத் திட்டம் நமது விசேஷ கவனத்துக்குரியது.

"தொழிற் சங்கங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம்" என்ற பகுதியுடன் முடியும் (விபரத்துக்கு 1-வது அத்தியாயத்தை பார்க்கவும்) இந்த கோரிக்கைத் திட்டத்தில் முதல் இண்டர் நாஷனவின் ஸ்தாபன அமைப்பு விபரங்களுடன் கீழ்க் காணும் விஷயங்களும் அடங்கியிருக்கின்றன :—

"பரஸ்பர உதவி கழகங்கள் அமைத்தல்; சகல தேசங்களிலும் தொழிலாளர்களே தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைபற்றி விசாரணை நடத்தி புள்ளி விவரங்கள் சேகரித்தல்; இந்த புள்ளி விவரங்களை தயாரிப்பதற்கு ஒத்தாசை புரியக்கூடிய கேள்வி அட்டவணையை தயாரித்தல்; வேலை நேரத்தை குறைப்பதும் எட்டு மணி நேர வேலை தினத்தை ஸ்தாபிப்பதும் பற்றிய விவரங்கள்; பெண்களை ராத்திரி வேலைகளில் வேலை செய்யச் சொல்வதை தடுப்பது; சிறுவர்கள் வேலை செய்தால், அவர்கள் வயதுக்கேற்றபடி, 2 மணி, 4 மணி, 6 மணி நேரமாக நிர்ணயித்தல்; சிறுவர்களுக்கு உடல் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் அறிவு வளர்ச்சி பயிற்சியும் அளித்தல்; சிறுவர்களும் பையன்களும்சம்பளத்துக்கு உற்பத்தி செய்யும்போதே, அறிவு பயிற்சியும் உடல் பயிற்சியும் தொழில் நுணுக்க கல்வியும் பெறுதல்".

கூட்டுறவு ஸ்தாபனங்களை சிருஷ்டிப்பதுபற்றி இதே ரிப்போர்டில் ஒரு விசேஷ அத்தியாயம் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது.

"வேலை நிறுத்த காலத்திலும் கதவடைப்பு காலத்திலும், அயல் தேசத்தைச் சேர்ந்த தொழிலாளிகளை உபயோகித்து சுதேசித் தொழிலாளிகளின் நியாயமான கோரிக்கைகளை தூள் தூளாக்குவதற்கு எப்பொழுதும் தயாராயுள்ள முதலாளிகளின் சூழ்ச்சிகளை" முறியடிப்பது முதல் இண்டர் நாஷனலின் நோக்கமென்று ரிப்போர்ட் வற்புறுத்துகிறது. "தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காக பல்வேறு தேசங்களில் சிந்திச் சிதறின முறையில், தனித்தனியாக, செய்யப்படும் முயற்சிகளை ஒன்று சேர்த்து, ஐக்கியப்படுத்தி, பரஸ்பரம் தொடர்பேற்படுத்துவதும், பல்வேறு தேசங்களிலுள்ள தொழிலாளர்களின் தோழமை உணர்ச்சியை வளர்ப்பதுடன், அந்த உணர்ச்சியை செயலில் காண்பிக்கும்படி செய்து, தொழிலாளி வர்க்கத்தின் விடுதலை

ராணுவத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு அவர்களிடையில் ஒற்றுமையை உருவாக்குவதும்" முதல் இண்டர் நாஷனலின் நோக்கமென்பதை ரிப்போர்ட் வலியுறுத்தியது. இதைத்தவிற, தொழிலாளி வர்க்கத்தின்மீது நேரடியாகவும், மறைமுகமாகவும் விதிக்கப்படும் வரிகளைப்பற்றி ரிப்போர்டில் ஒரு பகுதி விபரமாய் எடுத்துரைத்தது; "ஐரோப்பாவில் (ஜாரிஸ்ட்) ரஷ்ய செல்வாக்கை ஒழிப்பதின் அவசியம் பற்றியும், தேசீய இனங்களின் சுய நிர்ணய உரிமையை ஸ்தாபிப்பது பற்றியும், ஜனநாயக, சமூக அடிப்படையில் போலந்தை மீண்டும் ஸ்தாபிப்பது பற்றியும்" ஒரு பகுதி விளக்கியது. ஒரு பகுதி "நிரந்தர ராணுவங்களால் விளையும் பாதகங்களை"ப்பற்றி விவரித்தது; "உழைக்காதவனுக்கு உணவு கிடையாது" என்ற பிரசித்தி பெற்ற கோஷமும் இந்த ரிப்போர்ட்டில் அடங்கி யிருந்தது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இந்த தஸ்தாவேஜியின் தன்மை நமக்கு விளங்கும். இதைப் பின்பற்றியே, சகல முதலாளித்துவ நாடுகளிலும், உருப்படியான கோரிக்கைகளடங்கிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த ரிப்போர்ட் அவை அனைத்திற்கும் உதாரணமாகவும் வழிகாட்டியாகவும் விளங்கியது.

ஜினிவா காங்கிரஸுக்கு மார்க்ஸ் ஏன் இவ்வளவு விவரமான திட்டம் தயாரித்தார்? பிரோலி டேரியட்டின் பொருளாதார கோரிக்கைகளை ஏன் பிரதான பிரச்னையாக எழுப்பினார்? கூகல்மனுக்கு 1866, அக்டோபர் 8-ம் தேதி எழுதிய கடிதத்தில் மார்க்ஸே பின்வருமாறு விளக்குகிறார் :—

"நான் வேண்டுமென்றே இக்கோரிக்கைகளை மட்டும் கொண்டதாக திட்டம் தயாரித்தேன். உடனடியாக ஒப்புக்கொண்டு தொழிலாளர்கள் ஒன்றுபட்ட நடவடிக்கைகளில் இறங்கி, வர்க்கப் போராட்டத்தின் தேவைகளுக்கும் தொழிலாளிகளை ஒரு வர்க்கமாக ஸ்தாபனத்தில் திரட்டுவதற்கும் நேரடியான ஊக்கமும் உற்சாகமும் அளிக்கக்கூடிய கோரிக்கைகள் இவை".

மீண்டும், மார்க்ஸ் ராஜதந்திரத்திலும் போர் தந்திரத்திலும் வல்லவராக காட்சியளிக்கிறார். "தொழிலாளர்களை ஒரு வர்க்கமாக ஸ்தாபனத்தில் திரட்ட" கூட்டு நடவடிக்கை அவசியமென சரியாகக் கண்டார்; அந்த கூட்டு நடவடிக்கைக்கு தொழிலாளர்கள் அனைவரையும் சம்மதிக்கச்செய்வதே அவர் நோக்கம். போர் தந்திரி என்ற முறையில் மார்க்ஸின் மேதை நம் மனத்தில்

பதிகிறது. குறிப்பிட்ட சமயத்தில், குறிப்பிட்ட சூழ் நிலையில், பொது மக்களை ஒன்று திரட்டி, போராட்டத்தில் தலைமை வகிப்பதற்கு எந்த, விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்பதை அவர் நன்கறிவார். மார்க்ஸின் இந்த அற்புதமான போர்த்தந்திர கலையை நமது கம்யூனிஸ்ட் கட்சிகளும் புரட்சிகரமான தொழிற் சங்கங்களும் இன்னும் நன்ருக கற்றுக்கொள்ள வேண்டும்.

முதல் இண்டர்நேஷனலின் ஜினீவா காங்கிரஸ் கீழ்க்கண்டவாறு தீர்மானித்தது :—

"வேலை நேர தினத்தை கட்டுப்படுத்துவது முதலில் செய்ய வேண்டிய காரியமாகும். இதைச் செய்யாமல், அபிவிருத்தி செய்வதற்காகவும் விமோசனம் தேடுவதற்காகவும் செய்யப்படும் முயற்சிகள் வியர்த்தமாகித்தான் தீரும். வேலை செய்யும் நாளின் சட்டபூர்வமான எல்லை, எட்டு மணியா யிருக்கவேண்டுமென்று நாம் கூறுகிறோம்".

இங்கிலாந்தைத் தவிர, இதர முதலாளித்துவ நாடுகளிலெல்லாம், தொழிலாளிகள் தினசரி 14 மணி நேரம் வேலை செய்து வந்த காலத்தில் எட்டு மணி நேர வேலை தினம் என்ற கோஷம் கொடுக்கப்பட்டது. இது பின்னுல் சர்வதேச புராலிடேரியட் முழுவதற்கும் பொதுவான கோஷமாயிற்று. அக்காலத்திய அன்றுட பிரச்னைகளின்மீது சுலோகங்களை உருவாக்குவதுடன், தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியடையும் போக்கின் குறிகளை ஆதாரமாகக் கொண்டும் முதல் இண்டர்நேஷனல் கோஷங்கள் எழுப்புவதை நாம் பார்க்கிறோம்.

வேலை நேர தினத்தை குறைக்கும் சட்டங்களுக்கும் பாக்டரி சட்டங்களுக்கும் மார்க்ஸ் அசாதாரணமான முக்கியத்துவம் அளித்தார். பாக்டரி சட்டங்களால் பயனில்லை என்று வாதித்த பாக்குனிஸ்டுகளை எதிர்த்துப் போராடினர்.

மார்க்ஸ் எழுதுகிருர்:

முதலாளி வர்க்கத்தையும் தொழிலாளி வர்க்கத்தையும் தனித்தனியே பிரித்த நீண்டகால உள்நாட்டு யுத்தத்தின் மூலமாகவே இன்றைய வேலைநிர்ணயம் ஏற்பட்டது.

தொழிலாளிகள் (வேறு வழியில்லாமல்) தாங்களாகவே செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் மூலமாக தங்களையும் தங்கள் குடும்பங்களையும் சாவுக்கும் அடிமைத் தனத்துக்கும் விற்கிருர்கள். இந்த விபத்திலிருந்து இந்த தொழிலாளிகளை காப்பாற்றும் சமு

தாய தடையாக விளங்கக்கூடிய சட்டத்தை ஏற்படுத்தும்படி நிர்ப்பந்தம் செய்ய, தங்கள் துன்ப துயரங்களுக்கு காரணமான சர்ப்பங்களிடமிருந்து பாதுகாப்புபெற, தொழிலாளிகள் ஒன்றுபட வேண்டும்; ஒரு வர்க்கமாக நின்று கட்டாயப்படுத்தவேண்டும்."

தொழிலாளர் சட்டங்களால் பிரயோசனமில்லை என்று மிடுக்காகப் பேசும் பாக்குனிஸ்டுகளின் படாடோபத்துக்கும், தொழிலாளர் சட்டங்களைப்பற்றிய மார்க்ஸ் கண்ணோட்டத்துக்கும் எவ்வளவு தூரம்!

நடைமுறைக் கோரிக்கைகளுக்காக கம்யூனிஸ்ட்கள் நடத்திய போராட்டத்தையும், அதிகாரத்தைக் கைப்பற்றியபின் அமுலுக்குக் கொண்டுவர வகுத்த வேலைத் திட்டத்தையும் சுட்டிக்காட்டி, மார்க்ஸும், மார்க்ஸிஸ்ட்களும் பூர்ஷுவா வர்க்கத்தின் குட்டை மனப்பான்மைக்கு பலியாகி யிருப்பதாகவும், புரட்சியை கைவிட்டுவிட்டதாகவும், அனார்கிஸ்டுகள் குற்றம் சாட்டினார்கள். மார்க்ஸை கண்டிப்பவர்களையும் மார்க்ஸையும் ஒன்றுகச்சேர்த்து வேண்டுமென்றே குழப்பம் செய்தார்கள். மார்க்ஸிஸத்தைத் திருத்தவேண்டுமென்று கிளம்பியவர்களின் வாதங்களையே மார்க்ஸிஸமாகக்கொண்டு, வேண்டுமென்று குழப்பம் செய்தார்கள். அரசாங்க அமைப்பை ஒழிக்கவேண்டுமென்ற தங்கள் கனவை பிரதானமாக வைத்து, மார்க்ஸையும், மார்க்ஸிஸத்தையும் தூற்றினார்கள். தொழிலாளர்கள் புரட்சி வெற்றியடைந்தபின், தொழிலாளி வர்க்கம் ஆளும் வர்க்கமானவுடன், என்ன செய்யவேண்டுமென்று மார்க்ஸ்–எங்கல்ஸ் கம்யூனிஸ்ட் அறிக்கையில் பத்து அம்சங்களை வகுத்திருக்கின்றனர். இதை அனார்க்கிஸ்டுவாதி செர்க்கிளோவ் 'கண்டித்துள்ளதை கவனிப்பது ருசிகரமாயிருக்கும்:—

| மார்க்ஸ்-எங்கல்ஸ் | செர்க்கிளோவ் |
|---|---|
| 1. நிலச் சொத்தை பறிமுதல் செய்ய வேண்டும்; நில வரி முழுவதையும் பொதுச் செலவுக்கு பயன்படுத்த வேண்டும். | 1. நிலமெல்லாம் அரசாங்கத்துக்கு சொந்தமா! துருக்கியில் கூட, நிலமெல்லாம் அரசாங்கத்துக்கு அதாவது சுல்தானுக்குத் தான் சொந்தம்! தன்னிடம் விசுவாசமுள்ள பிரஜைகளுக்கு அவர் அதில் ஒரு பகுதியைத் தருகிறார். |

| மார்க்ஸ்-எங்கல்ஸ் | செர்க்கிளோவ் |
| --- | --- |
| 4. தேசாந்திரிகளின் சொத்துக்களையும் கலகக்காரர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்யவேண்டும். | 4. கொடுங்கோலர்களும் சர்வாதிகாரிகளும் அனுஷ்டித்த பழைய முறை. |
| 8. எல்லோரும் கட்டாயமாக உழைக்கவேண்டும். | 8. திடுக்கிட வைக்கும் கோரிக்கை; புராதனகால கிரிஸ்துவ பாதிரிகளிடம் கடன் வாங்கிய கோரிக்கை. |

கம்யூனிஸ்ட் அறிக்கை முழுவதிலும், மற்றவர்கள் சொல்லியதைத் திருடியதுதான் அடங்கியிருக்கிறது என்று நிரூபிப்பதற்காக செர்க்கிளோவ் குறிப்பிடும் இதர அபூர்வ விமர்சனங்களை நான் இங்கு குறிப்பிடவில்லை. தேசாந்திரிகள், எதிர் புரட்சிக்காரர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்வது கொடுங்கோன்மை என்றுகூறும், இந்த ருஷ்ய அனார்கிஸ்ட் தலைவர்களின் 'புரட்சித் தன்மைக்கு கம்யூனிஸ்ட் அறிக்கையை அவர்கள் மதிப்பிடும் விதமே சான்று. சித்திரம் பூர்ணத்துவம்பெற, இன்னொரு விஷயத்தையும் குறிப்பிடவேண்டும். இதே செர்க்கிளோவ் தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகள் என்றால் எரிந்துவிழுகிறார். எட்டுமணிநேர வேலைதினம், சம்பளத்தை பொருளாகக் கொடுப்பதைத் தடுப்பது, (பணமாகக் கொடுக்கவேண்டும்) தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால் முதலாளிகள் நஷ்டஈடு தரவேண்டும் முதலிய கோரிக்கைகளெல்லாம் "பூர்ஷ்வா அரசாங்கத்தில் சில்லரை (தொழிலாளர்) சீர்திருத்தங்கள்; அவைகளுக்கும் உண்மையான சோஷலிஸத்துக்கும் சம்பந்தமேயில்லை" என்று வாதிக்கிறார்.

மார்க்ஸும் அவருடைய பிரௌதனிஸ்ட், பாக்குனிஸ்ட் எதிரிகளும் தொழிலாளரின் உடனடிக்கோரிக்கைகளுக்கான போராட்டங்களைப்பற்றி கொண்டிருந்த கண்ணோட்ட வித்தியாசம் அவர்களுடைய விஞ்ஞான நடவடிக்கைகளிலும் நடைமுறை வேலைகளிலும் நன்கு பிரதிபலித்தது. மார்க்ஸ் தனக்கு வேண்டிய விஷய விவரங்களை விடாமுயற்சியுடன் சேகரித்தார்; யதார்த்த உண்மைகளை ஆதாரமாகக்கொண்டே, அவர் முடிவுகளுக்கு வந்தார். முடிவுகளுக்கு வருமுன், மார்க்ஸ் உள்ள நிலைமையையும் அதைப்

பற்றிய சகல புள்ளி விபரங்களையும் பகுத்தாராய்வார். அனர்க்கோ—ஸிண்டிகலிஸ்ட் சித்தாந்த கர்த்தாக்களிடம் இது பூஜ்யம்.

தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளைத் தெரிந்து கொள்வது வெகு முக்கியமானதென மார்க்ஸ் கருதினர். 1880-ல் அவர் தொழிலாளர்களுக்காகத் தயாரித்த கேள்வி அட்டவணை (1881 ல் பிரசுரிக்கப்பட்டது) அதற்கு ஒரு சான்று. இந்த கேள்வி அட்டவணையைப்பற்றி மார்க்ஸ் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:—

"பிரெஞ்சு தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமையைப்பற்றி உண்மையான விசாரணை நடத்த, எந்த சர்க்காரும், முடியாட்சியாயிருந்தாலும் சரி, பூர்ஷுவா குடியரசாயிருந்தாலும் சரி—துணிவுகொண்டதில்லை. எனினும் விவசாய நெருக்கடி, பண நெருக்கடி, தொழில் நெருக்கடி, வர்த்தக நெருக்கடி, அரசியல் நெருக்கடி ஆகியவற்றைப்பற்றி எத்தனை விசாரணைகள் நடந்திருக்கின்றன.

"பிரிட்டிஷ் சர்க்காரால் நியமிக்கப்பட்ட அதிகாரபூர்வமான விசாரணைகள் அம்பலப்படுத்திய முதலாளித்துவ சுரண்டலின் கேடுகள்; இதன் விளைவாக, 10 மணி நேர வேலைதினம், பெண் தொழிலாளர்களுக்கும், வேலை செய்யும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பு முதலிய சட்டங்கள் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பிரிட்டனுக்கு ஏற்பட்டது—இவையெல்லாம் பாரபட்சமில்லாத, திட்டமிட்ட விசாரணையினால் வரக்கூடிய அபாயங்களைக் கண்டு பிரஞ்சு பூர்ஷுவாக்களை அதிகமாக நடுங்கும்படி செய்துவிட்டன.

"பிரிட்டிஷ் முடியாட்சி உதாரணத்தை பின்பற்றவும், முதலாளித்துவ சுரண்டலின் தீமைகளைப்பற்றி விஸ்தாரமான விசாரணை நடத்தவும், பிரெஞ்சு குடியரசு சர்க்காரை ஒருவேளை தூண்டலாமென்ற நம்பிக்கையுடன், நம்மிடமுள்ள குறைந்த நிதியைக் கொண்டு, ஒரு கேள்வி அட்டவணையுடன் விசாரணையைத் துவக்க முயற்சிக்கப் போகிறோம். இதில் நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் உள்ள சகல தொழிலாளிகளின் ஆதரவையும் பெறுவோமென்று நாங்கள் நம்புகிறோம். தங்கள் லட்சியத்தைப்பற்றி நன்றாகப் புரிந்துகொண்டு, தாங்கள் சகிக்கும் கஷ்டங்களைத் தங்களால்தான் வர்ணிக்கமுடியுமென்று உணரும் தொழிலாளிகள் நம்முடன் ஒத்துழைப்பார்கள். தொழிலாளிகள்தான் தாங்கள் எந்த சமூக வியாதிகளால் கஷ்டப்படுகிறார்களோ, அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியுமே ஒழிய, ஆண்டவன் தூதன் வந்து அவர்கள்

துயரங்களை நிவர்த்திக்கப்போவதில்லை என்பதை உணரும் தொழிலாளிகள் நம்முடன் ஒத்துழைப்பார்கள். சமூக சீர்திருத்தங்களை விரும்புபவர்கள் எதிர்காலத்தின் சொந்தக்காரர்களான தொழிலாளிவர்க்கம் எந்த நிலைமையில் இயங்குகிறது என்பதை சரியானமுறையில் (அணுவளவுகூட பிசகாமல்) திட்டவட்டமாக கருராக அறிந்துகொள்ளவேண்டும்; சமூக சீர்திருத்தங்களை விரும்பும் பலதரப்பட்ட சோஷியலிஸ்ட்களும் நம்முடன் ஒத்துழைப்பார்களென்று நம்புகிறோம்.

"சமூகப் புரட்சிக்கு ஆயத்தமாகும்பொருட்டு, இந்த தொழிலாளர் புள்ளி விவரங்களை சேகரிப்பது ஸோஷியலிஸ்ட் ஜனநாயகத்தின் முதல் வேலை".

இக் கேள்வி அட்டவணையே மிக ஜாக்கிரதையாகவும் விரிவாகவும் தயாரிக்கப்பட்ட தஸ்தாவேஜு. எந்த கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும், அதை சிரத்தையுடன் படித்தறிவதின் அவசியம் புரியும். 1865 லும் 1866 லும் தான் தயாரித்த கேள்வித்தாள்களையே மார்க்ஸ் இக்கேள்வி அட்டவணைக்கும் ஆதாரமாக எடுத்துக்கொண்டார். பிரெஞ்சு சோஷியலிஸ்ட்களுக்கும் தொழிலாளிகளுக்கும், அரசியலுக்கும் பொருளாதாரத்துக்குமிடையேயுள்ள ஜீவ தொடர்புகளை விளக்குவதை அவர் நோக்கமாகக் கொண்டிருந்ததால் (பிரான்ஸில் புரட்சிகரமான தொழிலாளர் இயக்கத்தின் முக்கிய குறைபாடு இந்த தொடர்பை உணராமலிருந்ததுதான்) புதிய கேள்விகளை, பதிலும் கேள்விக்குள்ளேயே பொதிந்துகிடக்கும் வினாக்களை சேர்த்துக்கொண்டார். சம்பள முறைகள், வேலைநேரம், தொழில்ாளர் பாதுகாப்பு, வாழ்க்கைச் செலவு, தொழிற் தகாறுகளைத் தீர்க்கும் சமரஸ முறைகள், பரஸ்பர உதவி ஏற்பாடுகள், முதலுக்கும் தொழிலுக்கும் நடக்கும் போராட்டத்தில் அரசாங்கம் தலையிடும் விதங்கள்; கட்டாய பரஸ்பர உதவி சங்கங்களும் தன்னிச்சையால் சேரக்கூடிய பரஸ்பர உதவிச் சங்கங்களும்; எதிர்ப்புக் கழகங்களின் எண்ணிக்கையும் தன்மையும், ஸ்ட்ரைக்குகள் எவ்வளவுகாலம் நடந்தன? எப்படிப் பட்டவை? முதலிய பிரச்சினைகளைப்பற்றி கேள்வி அட்டவணையில் 100 கேள்விகளுக்குமேல் இருந்தது. தொழிலாளர் பாதுகாப்பு சட்டங்களைப்பற்றி எழுப்பும் இக்கேள்வி அட்டவணை, பொருளாதாரத்துக்கும் அரசியலுக்குமுள்ள பிணைப்பை எழுப்பும் கேள்வி அட்டவணை, பிரௌதனிஸ்ட்—பிளான்குவிஸ்ட் பரம்பரையில் ஊறியுள்ள பிரெஞ்சு தொழிலாளர் இயக்கத்துக்கு மிக

முக்கியமானதாக இருந்தது. ஒருசில பாக்டரிகளிலாவது இந்த கேள்வி அட்டவணை அடிப்படையில் வாழ்க்கை நிலைமைபற்றி உண்மையான விசாரணை நடத்தியிருந்தால், அக்காலத்திய புரட்சிகரமான இயக்கத்தின் போர்த்தந்திரங்களை உருப்படியாக்க, மதிப்பிட முடியாத ஆதாரங்களும் புள்ளி விவரங்களும் கிடைத்திருக்கும். எனினும், அந்தக் கேள்விப் பத்திரம் 25000 பிரதிகள் விற்கும் ஒரு சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது; பின்னர் அது மறக்கப்பட்டது.

தொழிலாளி மக்களின் மத்தியில் நடப்பதையெல்லாம் உன்னிப்பாக கவனித்து வந்தார் மார்க்ஸ். அதன் அடிப்படையில் தன் போர் தந்திரங்களை சோதித்துப் பார்ப்பார். பிலிடிரிக்தலஸ்னர் என்பவர் தன் ஞாபகார்த்தங்களில் எழுதுகிறார் :—

"மார்க்ஸ் எப்பொழுதுமே தொழிலாளர்களிடம் தொடர்பு வைத்துக்கொண்டு, அவர்களுடன் சம்பாஷிக்க முயற்சிப்பார். சாதாரண தொழிலாளிகளின் அபிப்பிராயங்களில் அவருக்கு அதிக சிரத்தையுண்டு".

தொழிலாளர்கள் என்ன சொல்கிறார்களென்பதைக் கேட்டு, அவர்களுடைய சிந்தனைகளை கிரஹிப்பார்; தம் சூழ் நிலையைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை தெரிந்து கொள்வார். சாதாரண தொழிலாளி தான் எழுதும் எல்லா புத்தகங்களையும் புரிந்துகொள்ள முடியாதென்பது அவருக்கு தெரியும். தொழிலாளி வர்க்கம் தன் சக்தியை உணரவில்லை; சரித்திர பூர்வமான நிகழ்ச்சியில் தான் செய்து முடிக்கும் பங்கை உணரவில்லை. அதை உணர்ந்து, தன் போதனைகளில் பிரதிபலிக்கிறோமென்பதை மார்க்ஸ் உரைப்பார். தொழிலாளர்களிடம் தொடர்பு ஏற்படும்பொழுது, மார்க்ஸ் தன்னையே, தனது கொள்கைகளை பரீட்சித்துப் பார்ப்பார். தொழிலாளி தானாக உணர்வதை அப்படியே தன் மேதையின் மூலம் கணிப்பார். தொழிலாளர்களின் பொருளாதார கோரிக்கைகளுக்காகப் போராடும்பொழுதே, பிரோலிடேரியட்டின் பொதுவான வர்க்கப் போராட்டத்தில், அவற்றுக்குள்ள முக்கியத்துவத்தை அவர் உணர்வார். இதைப்பற்றி நாம் கம்யூனிஸ்ட் அறிக்கையில் படிக்கிறோம் :—

"உடனடி நோக்கங்களைப் பெறுவதற்காக, தொழிலாளி வர்க்கத்தின் தற்காலிக நலன்களை காப்பாற்றுவதற்காக, கம்யூனிஸ்ட்கள் போராடுகிறார்கள். ஆனால் இந்த நிகழ்காலத்தின்

இயக்கத்திலேயே வருங்கால இயக்கத்தையும் அவர்கள் பிரதி பலிக்கிறார்கள், வருங்கால இயக்கத்தை பாதுகாக்கின்றார்கள் ".

மார்க்ஸ் அவர் காலத்திய இயக்கத்துடன் ஒத்து நின்று, அந்தக் காலத்துக்கேற்ற கோஷங்களை கொடுத்து வந்ததின் காரணத்தை இது விளக்குகிறது.

# எட்டாவது அத்தியாயம்

# மார்க்ஸும் ஸ்ட்ரைக் இயக்கமும்

பொருளாதாரப் போராட்டங்களின் முக்கியத்துவத்தையும் தொழிற்சங்கங்களின் முக்கியத்துவத்தையும் மிகைப்படுத்தி வந்தவர்களையும் குறைவுபடுத்திவந்தவர்களையும் எதிர்த்துப் போராடும்போதே, மார்க்ஸும் எங்கல்ஸும் ஸ்ட்ரைக்குகளிலும் புரோலிடேரியட்டின் பொருளாதாரப் போராட்டங்களிலும் அதிகப்பட்ச கவனம் செலுத்தினர்கள். தொழிலாளிவர்க்கத்தின் உடனடி லட்சியமும் இறுதி லட்சியமும் நிறைவேற, ஸ்ட்ரைக் ஒரு மகத்தான போராட்ட ஆயுதமென்று மார்க்ஸும் எங்கல்ஸும் கருதினர்கள். சிந்திச்சிதறிக்கிடக்கும் தொழிலாளிகள் மூர்த்தண்யமான போராட்டங்கள்மூலம் ஒரே வர்க்கமாக திரட்டி உருவாக்கப்படுவதை, உலக கம்யூனிஸத்தின் அழியா சாசனமான கம்யூனிஸ்ட் அறிக்கை தத்ரூபமாக சித்தரிக்கிறது. பூர்ஷுவா வர்க்கத்தின் பிறப்பையும், அதற்கு சவக்குழி தோண்டப்போகும் நவீன தொழிலாளிவர்க்கத்தின் பிறப்பையும் ஒப்புயர்வற்ற முறையில் வரைகிறது அறிக்கை; "நவீன தொழிலாளிவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் உழைப்பை விற்பதின்மூலமே உயிர்வாழ முடியும்; மூலதனத்தை இவர்கள் உழைப்பின்மூலம் அதிகரிக்க முடிகிறவரையில்தான் இவர்களுக்கு வேலைகிடைக்கும்" என்று கம்யூனின் அறிக்கை சுருங்கச் சொல்லி விளங்கவைக்கிறது.

தொழிலாளி வர்க்கத்தை ஒரு வர்க்கமாகத் திரட்டும் முறைகளைப்பற்றி கம்யூனிஸ்ட் அறிக்கையில் நாம் பின்வருமாறு படிக்கிருேம்:—

"தொழிலாளி வர்க்கம் பல கட்டங்கள் வழியாக வளர்ச்சியடைகின்றன. அது பிறந்தவுடனே, பூர்ஷுவா வர்க்கத்தை எதிர்த்து அது நடத்தும் போராட்டமும் ஆரம்பமாகிறது. முதன் முதலில் தனிப்பட்ட தொழிலாளிகள் போராடுகின்றனர்; அதன் பிறகு ஒரு பாக்டரி தொழிலாளர்கள்; அதன் பிறகு ஒரு ஸ்தலத்தில் ஒரு தொழிலிலுள்ள தொழிலாளிகள் அனைவரும் தங்களை நேரடியாகச் சுரண்டும் தனிப்பட்ட முதலாளியை எதிர்த்துப்

போராடுகிருர்கள். பூர்ஷுவா உற்பத்தி முறையைத் தாக்குவதற்கு பதிலாக உற்பத்தி சாதனங்களையே தாக்குகின்றனர்; தங்கள் உழைப்புடன் போட்டியிடும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள் களை நாசம் செய்கின்றனர், யந்திரங்களை தூள் தூளாக உடைத் தெறிகின்றனர். பாக்டரிகளில் நெருப்பு வைக்கின்றனர். பலாத் காரத்தின் மூலம், மறைந்து போன மத்தியகாலத் தொழி லாளியின் நிலைமையை மீண்டும் ஏற்படுத்த முயல்கின்றனர்.

"இந்த கட்டத்தில், தொழிலாளர்கள் தேசம் முழுவதும் சிந்திக்கிடக்கின்றனர்; அவர்களிடம் ஒற்றுமையோ, கட்டுப் பாடோ கிடையாது. பரஸ்பர போட்டியின் விளைவாக பிளவு பட்டுக் கிடக்கின்றனர்.............

"ஆனல் யந்திரத் தொழில் வளர வளர, பிரோலிடேரியட் எண்ணிக்கையில் அதிகரிப்பது மாத்திரமல்ல, ஏராளமான தொழிலாளர்கள் ஒரே இடத்தில் குவிக்கப்படுகின்றனர்; அவர் கள் பலம் அதிகரிக்கிறது; அவர்கள் தங்கள் சக்தியை அதிகமாக உணர்கின்றனர்!.......... தனிப்பட்ட முதலாளிக்கும் அவனிடம் வேலை செய்த தொழிலாளிகளுக்கும் ஏற்பட்ட மோதுதல்கள் இரு வர்க்கங்களுக் கிடையில் நடக்கும் மோதுதல்களாக மாறு கிறது. ஆகவே, முதலாளியை எதிர்த்து தொழிலாளர்கள் (தொழிற் சங்கம்) ஸ்தாபனம் அமைக்கத் தொடங்குகிருர்கள். இதைப்போன்ற போராட்டங்களை நடத்துவதற்கு முன்னேற் பாடாக நிரந்தர ஸ்தாபனங்களை அமைக்கிருர்கள். இங்கும் அங்கும் போராட்டம் கலகமாக மாறுகிறது.

"சில சமயங்களில் தொழிலாளிகள் வெற்றியடைகிருர்கள்; ஆனல் அதுவும் கொஞ்சகாலத்துக்குத்தான். அவர்கள் போராட் டத்தின் உண்மையான பலன் உடனடியான விளைவில் இல்லை, சதா விரிவடைந்து கொண்டிருக்கும் தொழிலாளர் ஒற்றுமையி லடங்கியிருக்கிறது. நவீன யந்திரத் தொழில் சிருஷ்டிக்கும் போக்கு வரத்து வசதிகள் இந்த ஒற்றுமைக்கு உதவுகின்றன; பல்வேறு ஸ்தலங்களிலுள்ள தொழிலாளிகள் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக்கொள்ள விருத்தியடைந்த போக்குவரத்து வசதிகள் உதவுகின்றன. பல்வேறு ஸ்தலங்களில் நிகழும் போராட்டங்களை, ஒரே தன்மையுடைய போராட்டங்களை ஒன்று படுத்தி, இரு வர்க்கங்களுக்கிடையில் நடக்கும் தேசியப் போராட்டமாக மாற்றுவதற்கு இந்த தொடர்பே அவசியமா

யிருந்தது. ஆனால் ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஒரு அரசியல் போராட்டமாயிருக்கிறது.

ஒரே வர்க்கமாக தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியில் திரட்டுவதும், அதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தை ஒரு அரசியல் கட்சியாக உருவாக்குவதும், தொழிலாளர்களுக்கிடையே யுள்ள போட்டியால் இடைவிடாமல் தடைப்படுகிறது. ஆனால் அது (தொழிலாளர்களின் வர்க்க ஸ்தாபனமும் வர்க்க அரசியல் கட்சியும்) முன்னைவிட பலமிக்கதாக, வலுவுள்ளதாக, உறுதி பெற்றதாக, மீண்டும் எழுகிறது."

"1844-ல் இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கத்துடைய நிலைமை" என்ற புத்தகத்தில், தங்கள் வாழ்க்கை நிலைமையை விருத்தி செய்வதற்காக பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் நடத்திய இடைவிடா போராட்டத்துக்கு எங்கல்ஸ் அதிக இடம் தருகிறார். ஸ்ட்ரைக்குகளை ஒரு போராட்ட பள்ளிக்கூடமாக, போர்க் கலையை கற்றுத்தரும் பள்ளியாக தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டத்தின் அவசியமான ஆயுதமாக, கட்டாய கருவியாக, எங்கல்ஸ் கருதுகிறார். பிரிட்டிஷ் தொழில்ாளர்கள் திடீர் திடீரென்று தாங்களாக எழுந்து போராடிய காலத்தில், நிலையான ஸ்தாபனமோ, ஒற்றுமையோ, கட்டுப்பாடோ பெறாதிருந்த நாட்களில், 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், அவர்கள் வாழ்க்கை நிலைமையையும் போராட்டத்தையும் எங்கல்ஸ் பரிசீலித்தறிந்தார். "பட்சபாத மில்லாதவர்கள்" என்று சொல்லிக்கொள்ளும் பூர்ஷுவா விஞ்ஞானிகள் தொழிலாளர்களை தங்களால் முடிந்த அளவு தூற்றிவந்த சமயத்தில், அக்காலத்தில் நிகழ்ந்த ஏராளமான சம்பவங்களிடையே புகுந்து, சரியான பாதையைக்கண்டு, ஸ்ட்ரைக் இயக்கத்தின் உண்மையான தன்மையை பிசகில்லாமல் புரிந்து கொள்வதற்கு சக்திமிக்க புரட்சி போதம் தேவை,

எங்கல்ஸ் எழுதுகிறார் :

"யுத்தத்தில், ஒரு கட்சிக்கு ஏற்படும் சேதம் எதிர்க்கட்சிக்கு சாதகமாகிறது. தொழிலாளர்கள் தங்களுடைய முதலாளிகளை எதிர்த்து யுத்தத்தி லீடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, ஒருவர் தொண்டையை இன்னொருவர் பிடித்துக்கொள்ளும்போது, சண்டையிட்டுக்கொள்ளும் பீமன்கள்கூட என்ன செய்வார்களோ, அதையேதான் தொழிலாளி வர்க்கமும் செய்கிறது.......

"இங்கிலாந்து முழுவதிலும் சமூகயுத்தம் எவ்வளவு விஸ்தார மான அளவில் தொடங்கிவிட்ட தென்பதை அடிக்கடி நிகழும் வேலை நிறுத்தங்கள், மற்றெல்லாவற்றையும்விட நன்கு நிரூபிக்கின்றன. முதலில், இந்த ஸ்ட்ரைக்குகள் சின்னஞ் சிறியவையா யிருந்தபோதிலும், சிலசமயங்களில் பெரிய போராட்டங்களாக முடிகின்றன. அவைகளால் ஒன்றும் நிர்ணய மாகவில்லை என்பது உண்மையே, ஆனால் பூர்ஷுவா வர்க்கத் துக்கும் பிரோலிடேரியட்டுக்கும் பிர்மாண்டமான போராட்டம் சமீபித்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு அவைகள் சிறந்த ருஜுக்கள். தவிர்க்க முடியாத போராட்டத்துக்கு, நெருங்கி வந்து கொண்டிருக்கும் போராட்டத்துக்கு தொழிலாளர்கள் பயிற்சி பெறும் போராட்ட பள்ளிக்கூடங்கள ஸ்ட்ரைக்குகள்; தொழிலாளர் இயக்கத்தில் தாங்கள் சேர்ந்து விட்டோமென்று யந்திரத் தொழிலின் ஒவ்வொரு கிளையும் ஸ்ட்ரைக்குகள் மூலம் பிரகடனப்படுத்துகின்றன. போராட்ட பள்ளிகள் என்ற முறையில் அவைகளுக்கு ஈடு இணையில்லை. இங்கிலீஷ்காரர்களின் பிரமிக்கத்தக்க வீரம் ஸ்ட்ரைக்குகள் மூலம் வளர்ச்சியடை கிறது.........

"அனுபவத்திலிருந்து வறுமையை உணர்ந்த தொழிலா ளிக்கு தன் மனைவியுடனும், குழந்தைகளுடனும் அதை சமா ளிப்பதும், மாதக்கணக்கில் பசியையும் துயரத்தையும் சகித்துக் கொள்வதும், இவ்வளவிற்குமிடையே அசைந்துகொடுக்காமல் உறுதியாக நிற்பதும், சாமானியமானதல்ல என்பது உண்மையே. படிப்படியே பட்டினி கிடப்பதன்முன்னே, பட்டினி கிடக்கும் குடும்பத்தை நாள்தோறும் பார்த்துக்கொண்டிருப்பதன் முன்னே, பூர்ஷுவா வர்க்கம் எதிர்காலத்தில் கண்டிப்பாய் பழிவாங்கு மென்ற நிச்சயத்தின் முன்னே, சாவு எம்மாத்திரம்; பிரெஞ்சுப் புரட்சிக்காரனுக்கு காத்திருக்கும் நரகவேதனை எம்மாத்திரம்? சொத்து படைத்த வர்க்கத்தின் நுகத்தடியின்கீழ் அடிமைப்பட் டிருப்பதைவிட சிறந்ததாக, இவற்றையெல்லாம் (பசி, பட்டினி, துயரம் முதலிய கஷ்டங்களை, ஸ்ட்ரைக்குகளால் சம்பவிக்கும் கஷ்டங்களை—மொ-ர்) இங்கிலீஷ் தொழிலாளி ஏற்றுக்கொள்ளுகி றான்......ஒரு தொழிலாளியை பணியவைப்பதற்காக இவ்வளவை யும் சகிக்கக்கூடியவர்களால் பூர்ஷுவ வர்க்கம் முழுவதின் அதிகா ரத்தையுமே பணியவைக்கமுடியும் (முறியடிக்க முடியும்—மொ-ர்) ('1844-ல் இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கத்துடைய நிலைமை.)

சமூக யுத்தத்தின் பலமுறைகளில் ஒன்று ஸ்ட்ரைக்; ஸ்ட்ரைக்குகள் போராட்ட பயிற்சி ஸ்தலங்களாயிருப்பதால் அத்தியாவசியமானவை என்று எங்கல்ஸ் வற்புறுத்துவதை நாம் பார்க்கிறோம். ஸ்ட்ரைக்குகளை குறைவாக மதிப்பிடுவதை எதிர்த்து, பேச்சில்மாத்திரம் புரட்சி பேசும் போக்கை எதிர்த்து, தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டங்களை ஏளனம் செய்யும் மமதை நிறைந்த போக்கை எதிர்த்து எங்கல்ஸ் போராடுகிறார். ஸ்ட்ரைக்குகளில் ஈடுபடுவதற்கு, மகத்தான தீரமும், தன்னலமற்ற தியாகமும், கொள்கைப்பிடிப்பும், உறுதியும் அவசியமென்றும், இத்தகைய ஆரம்பப் போராட்டங்கள் மூலமே தொழிலாளி வர்க்கத்தின் ராணுவம் சிருஷ்டிக்கப்பட்டு புடம்போடப்படுகிறதென்றும் எங்கல்ஸ் வற்புறுத்துகிறார். இதே அபிப்பிராயத்தை மார்க்ஸும் கொண்டிருந்தார்.

ஸ்ட்ரைக் இயக்கத்துக்கும் ஸ்ட்ரைக்கர்களிடையே ஒற்றுமையை உருவாக்கும் ஸ்தாபனத்துக்கும், அயல் நாடுகளிலிருந்து கருங்காலிகள் இறக்குமதி செய்யப்படுவதை எதிர்த்து நடத்த வேண்டிய போராட்டத்துக்கும், மார்க்ஸ் பெரிய முக்கியத்துவம் அளித்தாரென்பதை முதல் இண்டர் நாஷனலின் பொதுகவுன்ஸிலின் நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்தே பார்க்கலாம். மார்க்ஸும் அவர் ஸ்தாபித்த முதல் இண்டர் நாஷனலும் தொழிற்சங்கங்களை திரட்டி, ஸ்ட்ரைக்கர்களுக்கு அவைகளை உதவும்படி செய்ய வேண்டிய கடமையில் எவ்வளவு கவனம் செலுத்தினார்களென்பதையும், இந்த நிகழ்ச்சிக் குறிப்புகள், சுருக்கமாயிருந்தபோதிலும் தெளிவாகக் காண்பிக்கின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை கீழே தருகிறோம்.

"1865, ஏப்ரல் 25-ல் லீப்ஸிக் அச்சுத் தொழிலாளர்களிடமிருந்து வந்த கடிதம் வாசிக்கப்பட்டது. தங்கள் வேலை நிறுத்தத்தைப் பிரஸ்தாபித்து, லண்டன் அச்சுத் தொழிலாளிகள் தங்களுக்கு ஒத்தாசை செய்வார்களென்று நம்புவதாக அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. லண்டன் அச்சுத் தொழிலாளர் கூட்டத்துக்குப் போய், இந்த கடித விவரத்தை தெரிவிக்குமாறு பாக்ஸ், மார்க்ஸ், கிரீமர் மூவரடங்கிய தூதுகோஷ்டியை பொதுக்கவுன்ஸில் அனுப்பியது. தூதுகோஷ்டி தொழிலாளர்களை சந்தித்ததாகவும், ஆனால் மூன்று மாதத்துக்கு பண உதவி அளிப்பது சாத்தியமில்லையென்று லண்டன் தொழிலாளிகள் கூறிவிட்டதாகவும், ஆகவே தங்கள் முயற்சி தோற்றுவிட்டதாகவும், மே மாதம் 9-ந்

தேதி கூட்டத்தில் மார்க்ஸ் ரிப்போர்ட் செய்தார். 1865, மே 23ம் தேதி, லயான்ஸிலிருந்து வந்த கடிதம் வாசிக்கப்பட்டது. தங்கள் கூலியை வெட்டியிருப்பதைப்பற்றி அந்நகர நெசவாலைத் தொழிலாளர்கள் எழுதியிருந்தனர். 1865 ஜூன் 20-ம் தேதி, லயான்ஸிலிருந்துவந்த ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. லில்லி நெசவாளர் கழகம் முதல் இண்டர் நேஷனலில் அநேகமாக சேர லாமென்று அது கூறியது. உயிர்வாழ வசதிகள் இல்லாததால் தாக்கு பிடிக்க முடியாததால், தொழிலாளிகள் பின்வாங்க வேண்டி ஏற்பட்டதென்று கூறும் லயான்ஸிலிருந்து வந்த கடிதமும் வாசிக்கப்பட்டது. 1866 ஜனவரி மாதம் 30 ந் தேதி, லண்டன் தொழிற்சங்கம் மத்தியஸ்த போர்டுகளைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் விஷயம் பொதுக்கவுன்ஸில் கவனத்துக்கு வந்தது. மார்க்ஸ் 27 ந் தேதி, லண்டன் தையற்காரர்கள் ஸ்ட்ரைக் செய்திருப்பது பற்றியும், ஐரோப்பாவிலிருந்து ஆட்களைக் கொண்டுவரும் நோக்கம் முதலாளிகளுக்கு இருப்பதுபற்றியும் ரிப்போர்ட் தரப்பட்டது. போராட்டகாலத்தில் ஐரோப்பிய தொழிலாளிகள் லண்டனுக்கு வருவதை தடுக்கும்பொருட்டு, ஐரோப்பிய நாடுகளின் காரியதரிசிகளுக்கு சேதி அனுப்புவதென்று கவுன்ஸில் தீர்மானித்தது. 1866, ஏப்ரல் 4-ந் தேதி, கம்பி செய்யும் தொழிலாளிகள் பிரதிநிதி, தங்கள் போராட்ட காலத்தில் ஐரோப்பாவிலிருந்து முதலாளிகள் தொழிலாளிகளைக் கொண்டுவருவதை தடுப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக, கவுன்ஸிலுக்கு நன்றி கூறினர். மே மாதம் 22 ந் தேதி ஜீனிவா பூட்ஸ் தைக்கும் தொழிலாளிகள் ஸ்ட்ரைக் தொடங்கி விட்டதென்றும், சகல தொழிலாளர்களுக்கும் தெரிவிக்கும்படியும் கூறிய ஜீனிவா கடிதம் படிக்கப்பட்டது. இதைப்பற்றி சகல தேசங்களுக்கும் தகவல் அனுப்ப வேண்டுமென்று ஜீனிவா ஸ்ட்ரைக்கர்கள் கமிட்டி கேட்டுக்கொண்டது. ஸ்ட்ராட்போர்ட் லாட்ஜ் என்ற இடத்திலுள்ள கொத்தனர்களிடமும் பெட்டி செய்பவர்களிடமும் தொடர்புகள் ஏற்படுத்த ஒரு தூதுகோஷ்டி நியமிக்கப்பட்டது. அவர்கள் சங்கத்தில் சேருவதாக வாக்களித்தார்கள்" சொல்லில் மாத்திரமல்ல, செயலிலும் நிறைவேற்றுவோமென்று கூறினர்கள். 1869 ஸெப்டம்பர் 28-ம் தேதி, நியூயார்க் வர்ணக் காகிதம் செய்யும் தொழிலாளிகளிடமிருந்து வந்த கடிதம் படிக்கப்பட்டது. வேலைநிறுத்தம் செய்திருக்கும் தொழிலாளிகளை தோற்கடிப்பதற்கு ஆட்கள் இறக்குமதி செய்யப்படுவதை தடுக்க கவுன்ஸில் தன் செல்வாக்கை உபயோகிக்கவேண்டு

மென்று அக்கடிதம் கோரியது. அதே சமயத்தில் ஸ்ட்ரைக் செய்திருப்பதால் உதவி வேண்டுமென்று கோரி, ஹில்டன் சில்க் பிரிண்டர்களும் பிளாக் செய்பவர்களும் எழுதிய கடிதம் வாசிக்கப்பட்டது. கதவடைப்பினால் கஷ்டப்படும் கூடை கட்டும் தொழிலாளிகளின் கடிதமும் படிக்கப்பட்டது. பணவுதவி அளிப்பது சாத்தியமில்லை யென்று எழுதும்படி காரியதரிசிக்கு உத்திரவிடப்பட்டது.

1869 அக்டோபர் 12-ல் எல்போப் என்ற இடத்திலிருந்து ஸ்ட்ரைக் செய்திருக்கும் கம்பளி நெசவுத் தொழிலாளிகள் சகாயம் கோரி எழுதிய கடிதம் படிக்கப்பட்டது. விலை ஜாப்தாவை நிர்ணயிக்க வேண்டுமென்பது அவர்கள் கோரிக்கை. வேலை நேரத்தை அதிகரிக்கவும், கூலியை குறைக்கவும் செய்யப்பட்ட முயற்சிகளை எதிர்த்து ஆறுவாரங்களாக ஸ்ட்ரைக் செய்திருக்கும் ஹனோவர் எஞ்ஜினியர்களிடமிருந்து தனக்கு கடிதம் வந்திருப்பதாக, 1869 நவம்பர் 26-ம் தேதி கூட்டத்தில் மார்க்ஸ் தெரிவித்தார். வால்டன்பர்க் சுரங்கத் தொழிலாளிகளின் ஸ்ட்ரைக்குக்கு உதவ கடன் தரும்படி சமூக ஜனநாயக கட்சியின் காரியக்கமிட்டி கேட்டுக்கொண்டதற்கு, "லண்டனிலிருந்து உதவி கிடைப்பது சாத்தியமில்லை" என்று பதிலெழுதும்படியாய் 1870 ஜனவரி 4 ம் தேதி கூட்டம் காரியதரிசிக்கு உத்திரவிட்டது, ஸ்ட்ரைக் செய்திருக்கும் பஞ்சாடைமீது அச்சிடும் தொழிலாளிகளுக்கு சகாயம்கோரி நீவில்சர்ஸானிலிருந்து வந்த கடிதம் 1870 ஜனவரி 11 ல் படிக்கப்பட்டது. முதல் இண்டர் நாஷனல் ஆதரவில், இரு தொழிற்சங்க ஸ்தாபனத்தை ஆரம்பித்துவைக்க வில்லிக்கு சென்று திரும்பியதாக வார்லினிடமிருந்து வந்த கடிதம் 1870 ஏப்ரல் 18ல் வாசிக்கப்பட்டது. அதேசமயத்தில் ஸ்ட்ரைக் செய்ததற்காக சுரங்கத் தொழிலாளிகளுக்கு கடுந்தண்டனை விதிக்கப்படுவதை டூபண்ட் சுட்டிக்காண்பித்தார். ஒரு விசேஷ வேண்டுகோளைத் தயாரிக்க மார்க்ஸூம் டூபண்டும் நியமிக்கப்பட்டனர். 1870 மே 31-ம் தேதி பொதுக் கவுன்ஸில் ஸ்ட்ரைக் செய்திருக்கும் பாரிஸ் இரும்பு வார்படத் தொழிலாளர்களின் தூதுகோஷ்டியை வரவேற்றது. 1870 ஜூன் 14 ல் ஒன்றுபட்ட எஞ்சினியர்கள் ஸதாபனத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் ஆளுக்கு 2 பென்ஸ் பாரிஸ் இரும்பு வார்படத் தொழிலாளர் சகாயத்துக்காக நன்கொடை அளிக்க திட்டமிட்டிருப்பதாக காரியதரிசி கூறினர். 1870 ஜூன் 21ம் தேதி பொதுக்கவுன்ஸில் ஜினிவா கதவடைப்பை விவாதித்தது. ஸ்ட்ரைக்கர்களுக்கு உதவும்படி அமெரிக்காவிலும் ஐரோப்பா

விலுமுள்ள இண்டர் நாஷனலின் கிளைகளுக்கும் சகல தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கும் அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு மார்க்ஸ் நியமிக்கப்பட்டார். 1870 ஜூன் 23 ல் வந்த செய்தி, ஒன்றுபட்ட தனி நபர்கள் ஸ்தாபனம் பாரிஸ் இரும்பு வார்படத் தொழிலாளிகளுக்கு கடன் உதவத் தீர்மானித்திருப்பதாகக் கூறியது. எஞ்ஜினியர் ஸ்தாபனத்தின் காரியதரிசியே பணத்தை எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்று கவுன்ஸில் தீர்மானித்தது. பணம் நிச்சயமாய் போய் சேர்வதற்காக மாத்திரமல்ல· காரியதரிசியே விஜயம் செய்வது தொழிலாளர்களின் உணர்ச்சியை ஊக்குவிக்கும் என்பதற்காகவும்".

பொது கவுன்ஸில் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கும் இந்த பகுதி, முதல் இண்டர்நேஷனலின் நடவடிக்கைகளில் ஸ்ட்ரைக்குகள், கருங்காலி எதிர்ப்பு இயக்கம் முதலிய பிரச்னைகள் வகித்த ஸ்தானத்துக்கு, அத்தாட்சியாக விளங்குகின்றன. பொது கவுன்ஸில் இந்த பிரச்னைகளில் மாத்திரமேகவனம் செலுத்தியதென்று இதற்கு அர்த்தமல்ல. பெரிய அரசியல் பிரச்னைகளிலும் கவுன்ஸில் அதிக கவனம் செலுத்தியது. ஆனால் முதல் இண்டர்நேஷனலின் விசேஷ அம்சம் என்னவென்றால்—இது மார்க்ஸின் விசேஷ அம்சமும்கூட—பொது கவுன்ஸில் கூட்டங்களில் ஸ்ட்ரைக் போராட்ட பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் இடையே இயற்கைக்கு விரோதமான பிரிவினைக்கோடு கிடையாது. இரண்டும் விவாதிப்பட்டன. இரு பிரச்னைகளைப்பற்றியும் (அரசியல், பொருளாதாரம்) முடிவுகள் எடுக்கப்பட்டன; அடிக்கடி, ஒரு தொழிற்சங்கக் கூட்டத்துக்கு போகும்படி "டாக்டர் மார்க்ஸுக்கு" அறிவிப்பு வரும்; ஒரு ஸ்ட்ரைக்பற்றி அறிக்கை எழுதும்படி அவருக்கு கட்டளை பிறக்கும், ஒரு குறிப்பிட்ட தேசத்துக்கு எழுதி அங்கிருந்து கருங்காலிகள் ஏற்றுமதி செய்யப்படுவதை தடுப்பதற்கு இயக்கம் நடத்தும்படி சேதி அனுப்பும் வேலை அவருக்கு கொடுக்கப்படும். இத்தகைய வேலைகளையெல்லாம் தனது பொதுவான அரசியல் நடவடிக்கையின் பிரிக்கமுடியாத பகுதி என்பதை மார்க்ஸ் நன்கு உணர்ந்திருந்தார்.

இந்த பிரச்னைகளுக்கு மார்க்ஸ் அளித்த முக்கியத்துவம் கீழ்க்கண்ட உதாரணத்தின்மூலம் விளங்கும். 1866 ஏப்ரல் 23-ல் மார்க்ஸ் எங்கல்ஸுக்கு எழுதினர் :—

"இண்டர்நேஷனலின் நிலைமை பின்வருமாறு: நான் திரும்பியதிலிருந்து, கட்டுப்பாடு மீண்டும் பூரணமாக ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. தவிர, தையற்காரர்கள் வேலைநிறுத்தத்தில் (பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய நாடுகளின் காரியதரிசிகளுக்கு கடிதங்கள் எழுதியதன்மூலம்) இண்டர்நேஷனல் வெற்றிகரமாக தலையிட்டதானது ஸ்தல தொழிற்சங்கங்களிடையே ஒரு கிளர்ச்சியை தூண்டிவிட்டிருக்கிறது".

வேலைநிறுத்தங்களில் தலையிட்டதன்மூலம், இண்டர்நேஷனலின் செல்வாக்கு பெருகியது. தங்களுக்கு கஷ்டங்களிருப்பதை உணர்ந்தபோதெல்லாம், சகல தேசங்களிலிருந்தும் தொழிலாளர்கள் இண்டர்நேஷனலுக்கு எழுதினார்கள். 1867, மே 22ல் மார்க்ஸ் மகிழ்ச்சியுடன் எங்கல்ஸுக்கு எழுதுகிறார்:—

"நமது இண்டர்நேஷனல் ஒரு பெரிய வெற்றியைக் கொண்டாடியது. வேலைநிறுத்தம் செய்திருக்கும் பாரிஸ் வெண்கலத் தொழிலாளிகளுக்கு பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களிடமிருந்து பண உதவி கிடைக்கும்படி செய்தோம். இதைப் பார்த்தவுடனே, முதலாளிகள் பணிந்தார்கள். இந்த சம்பவம் பிரெஞ்சு பத்திரிகைகளில் ஏகப்பட்ட கூச்சலை கிளப்பிவிட்டுவிட்டது. நாம் இன்று பிரான்ஸில் ஒரு நிலையான சக்தியாகிவிட்டோம்".

முதலாளிவர்க்கத்தின் சில பகுதிகளிடம் முதல் இண்டர்நேஷனலின் சக்தியைப்பற்றி அதிசயமான வதந்திகள் பல பரவின. முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடும் தொழிலாளிகளுக்கு உருப்படியான உதவி அளிப்பதை மார்க்ஸ் முக்கியமானதாகக் கருதினார். 1866ல் நடந்த இண்டர்நேஷனலின் ஜினீவா காங்கிரஸில், அவர் கீழ்க்கண்ட தீர்மானத்தை பிரேரித்தார்:—

"வேலைநிறுத்தமோ, கதவடைப்போ நிகழும்போது, சுதேசித் தொழிலாளிகளின் கோரிக்கைகளை மறுப்பதற்கு அயல்தேசத் தொழிலாளிகளை கருவிகளாக உபயோகிக்க (ஸ்ட்ரைக் உடைப்பு கருங்காலிகளாக) எப்பொழுமே தயாராயிருக்கும் முதலாளிகளின் சூழ்ச்சிகளை எதிர்ப்பது இண்டர்நேஷனலின் விசேஷ கடமைகளில் ஒன்று. இதற்குள்ளேயே இந்தக் கடமையை பல தடவைகளில் வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறது...... இது இண்டர்நேஷனலின் பிரதான நோக்கங்களிலொன்று......பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளிகளிடையே சகோதர உணர்ச்சி ஏற்படுவதுடன் விடுதலை ராணுவத்தின் ஐக்கியப்பட்ட பகுதிகளாக அவர்கள் நடந்துகொள்ளத் தெரிந்துகொள்ளவேண்

டும்" (முதலாளித்துவத்தை எதிர்த்து தொழிலாளிவர்க்கம் நடத்தும் போராட்டத்தில், சர்வதேச ரீதியில், பரஸ்பர உதவி அளிப்பதுபற்றிய தீர்மானம்).

ஸ்ட்ரைக்குகளுக்கும், ஸ்ட்ரைக்கர்களுக்கும் உருப்படியான உதவி அளிப்பதற்கும் மார்க்ஸ் எவ்வளவு முக்கியத்துவம் அளித்தாரென்பது 1869 ஆகஸ்ட் 18-ம் தேதி அவர் எங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தின் மூலமும் விளங்கும். பாரிஸ் வெங்கலத் தொழிலாளிகள் 45 பவுன்கள் கடனை திருப்பிக்கொடுத்துவிட்டதற்கு தன் சந்தோஷத்தை தெரிவிக்கிறார் மார்க்ஸ். மேலும் அவர் எழுதுகிறார்:—

"போஸனில் போலிஷ் தொழிலாளிகள் (தச்சர்கள் முதலியோர்) பெர்லின் சகோதரத் தொழிலாளர்கள் அளித்த உதவியினால் ஸ்ட்ரைக்கில் வெற்றியடைந்துவிட்டனர். ஸ்ரீமான் மூலதனத்தை எதிர்த்துநடந்த இந்தப் போராட்டம்—சர்வசாதாரணமான ஸ்ட்ரைக் ரூபத்தில்கூட—பூர்ஷுவா வர்க்கத்தின் சமாதானக் கூச்சலுக்கு வித்தியாசமானமுறையில் தேசிய விரோதங்களை போக்குகிறது".

அக்காலத்திய பெரிய வேலைநிறுத்தங்களைப்பற்றி, பொதுக் கவுன்ஸிலின் தீர்மானத்துக்கிணங்க, மார்க்ஸ் எழுதிய பல வேண்டுகோள்களை நாம் படித்திருக்கிறோம். உதாரணமாக, 1869ல் செயின்ட் ஈடீனிலும் ப்ரிமீரிஸிலும் (பெல்ஜியம்) சுரங்கத் தொழிலாளிகள் ஸ்ட்ரைக் நடந்த சமயத்தில் ஏராளமான பேர் படுகொலை செய்யப்பட்டபோது, அமெரிக்க, ஐரோப்பிய தொழிலாளிகளுக்கு அவர் ஒரு அறைகூவல் விடுத்தார். ஸெயிண்ட் ஈட்டினில், பெல்ஜியன் குதிரைப் படையின் "மிருகத்தனத்தையும்" ப்ரீமிரிஸில் பெல்ஜியன் காலாட்படையின் பிடிவாத வெறியையும் கண்டிக்கிறார் மார்க்ஸ். "சில அரசியல்வாதிகள் இந்த நம்பமுடியாத கொடுமைகள் கம்பீரமான தேசபக்தி நோக்கத்தில் செய்யப்பட்டவை" என்று கூறுவதாக மார்க்ஸ் எழுதுகிறார். "தனி நபர்களின் உயிரையும் உடைமையையும் தாக்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் அங்கத்தினர்களாயிருப்பதற்காக" இண்டர்நேஷனலின் அங்கத்தினர்கள் பெல்ஜியத்தில் கைதுசெய்யப்பட்டிருப்பதை மார்க்ஸ் பரிகசிக்கிறார். பெல்ஜியன் சட்டப்பற்றுவாதிகளை [அரசாங்க சட்டதிட்டங்களை இம்மி வழுவாமல் கடைப்பிடிக்கவேண்டுமென்று கூறுபவர்களையே சட்டப்பற்றுவாதிகளென்கிறோம். சட்டப்பற்றுவாதம் என்பது அரசாங்க சட்ட

திட்டங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்க வேண்டுமென்று கூறும் கொள்கை] மார்க்ஸ் பின்வருமாறு சித்தரிக்கிறார் :—

"நாகரீக உலகத்திலேயே, ஒரே ஒரு சிறு தேசத்தில்தான், யுத்த யந்திரம் ஸ்ட்ரைக் செய்யும் தொழிலாளரைக் கொன்று குவிப்பதற்கு மாத்திரம் உபயோகப்படுகிறது. ஒவ்வொரு வேலை நிறுத்தமும் தொழிலாளர்களைக் கொன்று குவிப்பதற்கு ஒரு சாக்காக, உற்சாகத்துடன், பகைமையினாலுண்டாகும் பூரிப்புடன் உபயோகப்படுகிறது. இந்த தேவானுக்கிரஹம் பெற்ற ஒரே நாடுதான் பெல்ஜியம். ஐரோப்பிய சட்டப்பற்று வாதத்தின் லட்சிய அரசு, ஆதர்ச அரசாங்கம் அது. நிலப் பிரபுவுக்கும் முதலாளிக்கும், பாதிரிக்கும் சௌகரியமாய் அமைந்துள்ள நன்கு பாதுகாக்கப்படும் சுவர்க்கம் அது.

"பெல்ஜியன் சர்க்காருடைய வருடாந்திர தொழிலாளர் படுகொலையைவிட நிச்சயமாக பூமிகூட சுற்றாது. (பூமி சூரியனை வருடத்திற்கொரு தடவை சுற்றிவருகிறது. அது நின்றாலும் நிற்கலாம், ஆனால் வருடத்திற்கொரு தடவை தொழிலாளர்களை கொலை செய்யும் விதியை மாத்திரம் பெல்ஜிய சர்க்கார் மறக்காது. அதில் தயங்காது; தாமதிக்காது—மொ-ர்) போன வருட படுகொலைக்கும் இந்த வருடத்திய படுகொலைக்குமுள்ள வித்தியாசமெல்லாம் இதுதான். பரிபூர்ணமாக அழிந்தவர்களின் எண்ணிக்கை பயங்கரமாயிருக்கிறது; பரிகசிக்கப்படவேண்டிய இராணுவம் இங்கு அதிக பயங்கரமான கொடுமைகளை நடத்தியிருக்கிறது; பாதிரிமார்களின் பத்திரிகைகளும், முதலாளிமார்களின் பத்திரிகைகளும் (போன வருடத்தைவிட) அதிகமாக ஆனந்தக் கூத்தாடுகின்றன. சர்க்காரின் கொலைகாரர்களுக்கு ஆதரவாக, (போன வருடத்தைவிட) அதிக இறுமாப்புடன், அற்பத்தனமான நொண்டிச் சாக்குகள் கூறப்படுகின்றன,"

ஸ்ட்ரைக்கர்களின் குடும்பங்களுக்கு உதவவும், "கைது செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கும், பிரஸல்ஸ் கமிட்டி நடத்தும் விசாரணைக்கு ஆகும் செலவுகளை" கொடுக்கவும், நிதி திரட்டும்படி அறைகூவி அழைப்பதுடன் இந்த அற்புதமான பிரசுரம் முடிகிறது.

மார்க்ஸ் இந்த ஒரு பிரசுரத்தை மாத்திரம் எழுதவில்லை. ஜினிவாவில், 1870ல் வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு கதவடைப்பு ஏற்பட்டபோது, மார்க்ஸ் ஒரு அறிக்கையை எழுதி

னர். "முதலாளித்துவ சர்வாதிகாரத்தை எதிர்த்து அவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு தார்மீக உதவியும், பொருளுதவியும் அளிக்குமாறு" சகல தேசங்களிலுமுள்ள வீடு கட்டும் தொழிலாளர்களை அழைத்தார். கருங்காலித்தனத்தை அனுமதிக்காமலிருக்கும்படி சகல தொழிலாளிகளையும் உற்சாகப்படுத்தினர்; "தொழிலாளர் பிரச்சினை ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தின் பிரச்சினையல்ல, தற்காலிக பிரச்சினையல்ல; உலக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை" என்ற உண்மையை உணரும்படி எடுத்துக் கூறினர்.

ஜெனரல் கவுன்ஸில் ஆக்ஞைக்கிணங்க, லண்டனிலுள்ள ஜெர்மன் தையற்காரர்களின் ஸ்ட்ரைக்கைப்பற்றி, ஜெர்மனியில் உள்ள அவர்கள் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் பிரசுரமொன்றை மார்க்ஸ் எழுதினர். இந்த பிரசுரத்தில், மார்க்ஸ் "கூட்டு சமரசம்" என்பதை விளக்குகிறார். பொருளாதாரப் போராட்ட பிரச்சினைகளைப்பற்றிய மார்க்ஸின் கொள்கையை சுட்டிக் காட்டும் விளக்கம் அது. "முதலாளிகள் சிபார்சு செய்த சமரசத்தை தொழிலாளிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த சமரசத்தை ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தமாகவே கருத முடியும்" என்று எழுதுகிறார் மார்க்ஸ்.

ஸ்ட்ரைக் இயக்கத்தைப்பற்றிய மார்க்ஸின் கணிப்புக்கு 1869ல் பேஸலில் நிகழ்ந்த முதல் இண்டர்நேஷனலின் 4வது காங்கிரஸுக்கு அவர் எழுதிய ரிப்போர்ட் ஒரு நல்ல உதாரணம்:- "உங்கள் பொது கவுன்ஸில் ரிப்போர்ட், பிரதானமாக, மூலதனத்துக்கும் தொழிலுக்கும் நடந்த கொரில்லா போராட்டங்களையே விவரிக்கும்—ஐரோப்பாக் கண்டத்தை, கடந்த வருடத்தில் குலுக்கிய ஸ்ட்ரைக்குகளையே நாம் கூறுகிறோம். இந்த ஸ்ட்ரைக்குகள் முதலாளித்துவத்தின் சர்வாதிகாரத்தாலோ, தொழிலாளிகளின் துயர வாழ்வாலோ தூண்டிவிடப்படவில்லையாம்; நமது ஸ்தாபனத்தின் இரகசிய சூழ்ச்சிகளால் அவை தூண்டிவிடப்பட்டதாம்!"

அதன் பின், பேஸல் தொழிலாளிகளின் "பொருளாதாரக் கலகத்தை"ப்பற்றி மார்க்ஸ் குறிப்பிடுகிறார்; ஸ்தாபனமில்லாமலிருந்தபோதிலும் "மூலதனத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நார்மன் நெசவாளர்கள் (பிரான்ஸ்) எழுந்தனர்" என்பதை பிரஸ்தாபிக்கிறார். இண்டர்நேஷனல் தலையிட்டதால், இந்த ஸ்ட்ரைக்குக்கு லண்டன் தொழிலாளர்கள் ஒத்தாசை செய்தனர்.

"ரூவன், எல்பூப். துரைடால் ஆகிய இடங்களிலும், அவற்றின் சுற்றுவட்டாரங்களிலும், இதன் விளைவாக, தொழிற்சங்கங்கள் உதித்தன; இங்கிலீஷ் தொழிலாளிவர்க்கத்துக்கும், பிரெஞ்சு தொழிலாளிவர்க்கத்துக்குமிடையேயுள்ள சகோதர உறவை மீண்டும் இறுகப் பிணைத்தது."

மேலும் மார்க்ஸ் கூறுகிறார் :—

"பொருளாதாரக் கலகமென்ற நடனத்தை ஆரம்பித்து வைத்தது லயான்ஸிலுள்ள ஸில்க் தொழிலாளிகள். அவர்களில் அநேகர் ஸ்திரீகள், கஷ்டப்படும்போது, அவர்கள் இண்டர்நேஷனலின் உதவியைக் கோரினார்கள். அதன் அங்கத்தினர்களின் சகாயத்துடன், இண்டர்நேஷனல் அவர்கள் வெற்றியடைய உதவியது......ரூவனைப்போல லயான்ஸிலும் பெண்கள் இயக்கத்தின் பிரபல பங்கெடுத்தனர்; உன்னத ஸ்தானம் வகித்தனர் ......லயான்ஸின் இதர தொழிலாளிகள் ஸில்க் தொழிலாளிகளின் பாதையைப் பின்பற்றுகின்றனர். "வாழ உழைப்போம் அல்லது போராடி மடிவோம்" என்ற நவீன தொழிலாளிவர்க்கத்தின் குறிக்கோளை முப்பது வருடங்களுக்கு முன்னதாகவே, தன் கொடியில் பொறித்த இந்த வீர ஜனங்களிடமிருந்து, ஒரு சில வாரங்களில் பத்தாயிரம் புதிய அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள்." மேலும், ஆஸ்திரியா, பிரஷ்யா, ஹங்கேரி முதலிய நாடுகளில் தொழிலாளர்கள் போராடுவதையும கொடுமைப்படுத்தப்படுவதையும் மார்க்ஸ் அந்த ரிப்போர்ட்டில் வர்ணிக்கிறார். ஒரு ருசிகரமான உதாரணமும் தருகிறார். ஒரு 'கிளப்' (கழகம், வாசகசாலை போன்ற பொதுஸ்தாபனம்) ஆரம்பிப்பதற்கு அனுமதி பெறுவதற்காக, தன்னை பேட்டிகாண வந்த தொழிலாளர் தூதுகோஷ்டியை ஹங்கேரி தேசத்தின் உள்நாட்டு மந்திரி வான்வென்க்ஹீம் 'சுருட்டை ஊதிக்கொண்டே, புகைபிடித்துக்கொண்டே', கீழ்க்கண்டவாறு கேள்விகளைத் தொடுத்தார் :—

"நீ ஒரு தொழிலாளியா ? சிரமப்பட்டு வேலை செய்கிறாயா? நீ வேறொன்றைப்பற்றியும் கவலைப்படவேண்டாம். உங்களுக்கு பொது கிளப் தேவையில்லை. நீங்கள் அரசியலில் காலை விட்டால் உங்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று எங்களுக்கு தெரியும். உங்களுக்கு நான் ஒன்றும் செய்யமாட்டேன். தொழிலாளிகள் தங்கள் மனம் திருப்தியடையும்வரை முணுமுணுக்கட்டும்."

இங்கிலாந்தைப்பற்றி, மார்க்ஸ் எழுதினார் :—

"இங்கிலாந்தும் இந்த வருடம் ஒரு தொழிலாளர் படுகொலையை நடத்தியிருப்பதாக மதித்துக்கொள்ள முடிந்ததில் வியப்பில்லை. (வேல்ஸ் மாகாண நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்—ஆ-ர்) வேல்ஸ் பஞ்சாயத்து ஒரு குட்டை மனப்பான்மையுடன் கூடிய, தரமிமானமுடைய, வர்க்க பஞ்சாயத்து, கொலை நியாயமானதென்று தீர்ப்பளித்தது."

பேஸல் காங்கிரஸ் ரிப்போர்ட்டில், அக்காலத்திய ஸ்ட்ரைக் இயக்க புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டிருப்பதுடன், இன்டர்நேஷனல் அங்கத்தினர்கள்மீது சம்பவித்த அடக்குமுறைகளையும் அதில் மார்க்ஸ் பிரஸ்தாபிப்பதால், அது முக்கியமானது.

ஸ்ட்ரைக் இயக்கத்தில் முதல் இண்டர் நேஷனல் தலையிட்டது சர்வதேச பூர்ஷுவாக்களிடையே திகில் உண்டாக்கிற்று. லண்டனிலிருந்து வரும் கட்டளைகளுக்குப் பணிவதன் மூலம் ஸ்தலத்திலுள்ள இண்டர் நேஷனல் அங்கத்தினர்கள் ஜீனிவா மாகாணத்தை நாசம் செய்வதாக ஜீனிவா முதலாளிகள் கூறுகிறார்கள். பேஸலில், முதலாளிகள் தங்கள் தொழிலாளிகளிடம் தங்களுக்குள்ள தகராறை, (முதல்) இண்டர் நேஷனலை எதிர்த்து அரசாங்கம் நடத்தும் (அ)தர்மயுத்தமாக மாற்றினார்கள்" அவர்கள் இண்டர்நேஷனலின் "கஜானாப்பெட்டியுடைய விஸ்தீரணத்தை அறிந்துவரும்படி ஒரு விசேஷ தூதனை அனுப்பினார்கள்! ஒரு ரகசியமான இடத்தில், ஒரு வலுவான பெட்டியில் இண்டர்நேஷலின் பணம் ஒளித்து வைக்கப்பட்டிருப்பதாக, பெல்ஜிய சர்க்காரின் விசாரணை அதிகாரி நினைத்தாரென்பதை அதே ரிப்போர்ட்டில் படிக்கிறோம். அந்த பெட்டி அந்த அதிகாரிக்கு கிடைத்தது; அதை உடைத்து திறந்தார்; என்ன ஆச்சரியம்! அதில் சில நிலக்கரி துண்டுகளே கிடந்தன! "இண்டர்நேஷனலின் பரிசுத்தமான பொன்மீது போலீஸ் கைபட்டதும், ஒரு வேளை, அது உடனடியாக நிலக்கரியாக மாறி விட்டது போலும்" என்று மார்க்ஸ் இதைப்பற்றி நையாண்டி செய்கிறார்.

"ரம்மியமில்லாத யதார்த்த உண்மைகளை திரித்துக்கூறி திரித்து அர்த்தம் செய்வதற்காகவே கூலிபெறும்" பிரெஞ்சு சர்க்கார் பத்திரிகைகள், மத்திய கவுன்ஸிலுடைய உத்திரவுகள் மூலமே, அதன் ஒற்றர்களுடைய ரகசிய உத்திரவுகள் மூலமே ஸ்ட்ரைக்குகள் தூண்டப்படுகின்றன என்று கூறின. இண்டர் நேஷனல் ஒரு அன்னிய நாட்டு சர்க்காரின் கையாளாயிருப்ப

தாகவும், இந்த சர்வசக்தி வாய்ந்த ஸ்தாபனத்தின் நன் மதிப்பைப் பெறும் சக்தி படைத்த ஒரு அயல் நாட்டு சாணக்கியனுலேயே ஸ்ட்ரைக் ஏற்படுகிறதென்றும் அவை அனுமானமாகக் கூறின.

பாரிஸ் கம்யூனுக்கு பிறகு, கம்யூனை ஆதரித்து இண்டர்நேஷனல் விடுத்த பிரசித்திபெற்ற பிரகடனத்துக்கு பிறகு, அவதூறுகள் பெருகின. இண்டர்நேஷனலிடம் உள்ள கோபத்தையும் பகைமையையும் எடுத்துக்காட்ட, 1872-ல் நடந்த ஹேக் காங்கிரஸ் வாக்களித்த ரிப்போர்ட்டில், மார்க்ஸ் டஜன் கணக்கான யதார்த்த உண்மைகளை மேற்கோள் காட்டுகிருர். பாரிஸ் கம்யூன் நசுக்கப்பட்ட உடனேயே, இண்டர்நேஷனலை எதிர்த்து கூட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஜூல்ஸ் பேப்ர் சகல சர்க்கார்களுக்கும் எழுதினுர். [ஜர்மனியின் அரசாங்கத் தலைவனை பிஸ்மார்க்கும் (Bismark) ரோமாபுரியின் போப் பாண்டவரும் உடனடியாக ஆதரவளித்தனர். இண்டர்நேஷனல் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட ஆஸ்டிரியாவின் சக்கரவர்த்தியும் ஜெர்மனியின் சக்கரவர்த்தியும் போல்ஸ்பர்க்கில் சந்தித்தனர்.

ஹேக் காங்கிரஸுக்கு சமர்ப்பித்த ரிப்போர்ட்டில் மார்க்ஸ் கூறுகிருர் :—

" எனினும், பல்வேறு ஐரோப்பிய சர்க்கார்களின் சாமர்த்தியத்தால் வகுக்கக்கூடிய அடக்குமுறை நடவடிக்கைகளெல்லாம் நாகரிக உலகத்தின் பொய்க்களஞ்சியம் (பத்திரிகை, பிரசாரம் முதலியவை) தொடங்கிய அவதூறு இயக்கத்தின் முன் நிற்க முடியவில்லை. [அடக்கு முறையைவிட அவதூறு இயக்கம் அதிக வலுவுள்ளதாக இருந்தது. மொ-ர்.) இண்டர்நேஷனலைப்பற்றிய போலிக்கதைகள், ரகசியங்கள் ; மானம்கெட்ட முறையில் மோசடியாக, போலி தஸ்தாவேஜுகளையும் பொய்க் கடிதங்களையும் தயாரித்தல் ; மயிர்க் கூச்செறியும் தந்திகள் முதலியவை ஒன்றன்பின் ஒன்ருய் தொடர்ந்தன. பூர்ஷுவா வர்க்கத்தின் கூலிப் பத்திரிகைகள், கடல்மடை திறந்துவிட்டதுபோல, நிந்தனைகளையும் அவதூறுகளையும் அவிழ்த்துவிட்டன. அவர்களால் வெறுக்கப்பட்ட பகைவனை மடக்கி மூழ்கடிப்பதற்காக அவதூறு மகாப்பிரளயத்தை கட்டவிழ்த்துவிட்டன. இந்த அபவாதத்துக்கு—உண்மையான சர்வதேச அரங்கத்தில் நடிக்கப்பட்ட இதற்கு, இதை நடத்தும் ஆளும் வர்க்கங்களின் பல்வேறு கட்சிகளுடைய பத்திரிகைகள் பரிபூர்ணமாக ஒருமுகப்பட்டு நின்று

நடத்திய இந்த அபவாத இயக்கத்துக்கு, சரித்திரத்திலேயே இணை கிடையாது. சிகாகோவில் தீ விபத்து ஏற்பட்டபோது, இண்டர்நேஷனலே இந்த தீ விபத்துக்கு ஜவாப்தாரி என்று உலகம் முழுவதும் தந்தி மூலம் சேதி அனுப்பப்பட்டது. மேற்கு இந்திய தீவுகளில் பெரும் நாசம் விளைவித்த சூராவளிக்காற்றும் இதே பேய்க்குணமுள்ள செல்வாக்கினால் (இண்டர்நேஷனலால் மொ-ர்) தான் ஏற்பட்டது என்று சொல்லாமலிருப்பதைக் கண்டு உண்மையிலேயே அதிசயப்பட வேண்டியதுதான்".

லண்டனிலிருந்து "உத்திரவுகள்" ரகசிய தூதர்கள், பொறு குவியல், பொய் தஸ்தாவேஜுகளை தயாரித்தல், தொடர்ச்சியாக தொடுக்கப்படும் அவதூறு அம்புகள், நிந்தனைகள்—பூர்ஷுவா வர்க்கத்தின் இந்த முறைகளெல்லாம் எவ்வளவு நவீனமாயிருக்கின்றன; இன்னும் விரிவான அடிப்படையில், இன்று உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தை எதிர்த்து சர்வதேச பூர்ஷுவாக்கள் இதே போராட்டத்தைத் தானே நடத்துகின்றனர்! சர்வதேச முதலாளித்துவமும் அதன் ரகசிய ஸ்தாபன இலாகாக்களின் நிருபர்களும் அவர்களுடைய உளவாளிகளும் பிதற்றிய இந்த பிதற்றலுக்கு மார்க்ஸ் பதிலளித்தார்:—"தொழிலாளர்களை வேலை நிறுத்தங்கள் செய்யும்படி இண்டர்நேஷனல் தூண்டவில்லை! அதற்கு மாறாக, வேலை நிறுத்தங்கள்தான் தொழிலாளர்களை இண்டர்நேஷனலின் புஜங்களுக்குள் கொண்டு சேர்க்கின்றன."

பிரௌதனிஸ்டுகளும் பாக்குனினிஸ்ட்களும் முதலில் தொழிற் சங்கங்களையும் ஸ்ட்ரைக்குகளையும் எதிர்த்தனரென்பது நாம் அறிந்த விஷயம். ஆனால், பின்னால் அவர்கள் பரிபூர்ண பல்டி அடித்தார்கள். தொழிற்சங்கங்களை உற்சாகமாக ஆதரித்தார்கள்; தொழிற்சங்கம்தான் தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஒரே உருவமென்று கருதினார்கள்; ஸ்ட்ரைக்குகள்தான் போராட்டத்தின் ஒரே ரூபம் என்றனர். ஸ்ட்ரைக்குகளை பொறுத்தவரை, "பொருளாதார கோரிக்கைகளே இண்டர்நேஷனலின் கருப்பொருள்" என்றும் "பாதுகாப்பு நிதிகளும் தொழிற்சங்கங்களும்தான், இன்றைய நிலையில் பூர்ஷுவா வர்க்கத்தை எதிர்ப்பதற்கு தொழிலாளி வர்க்கத்திடமுள்ள பயன்தரத்தக்க போராட்ட ஆயுதங்கள்" என்றும் பாக்குனின் கருதினார். இந்த ஆதி மூலக்கருத்தின் அடிப்படையில், பாக்குனின் ஸ்ட்ரைக் இயக்கத்தின் வளர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் கணித்தார். பாக்குனின் எழுதுவதாவது:—

"பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் நடக்கும் சமூக யுத்தத்தின் தொடக்கமே ஸ்ட்ரைக். இதுவரை

(இந்த மோதுதல்) இது சட்டவரம்புக்கு உட்பட்டிருந்தது. இரு கண்ணோட்டங்களில் பார்த்தால், ஸ்ட்ரைக்குகள் ஒரு மகத்தான போராட்ட முறையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன :—முதன் முதலாக, ஸ்ட்ரைக்குகள் ஜனங்களுக்கு உத்வேகமளிக்கின்றன; அவர்களுடைய தார்மீக சக்தியை எஃகுபோல் உறுதியுள்ள தாக்குகின்றன. தங்கள் நலன்களுக்கும் பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களுக்குமுள்ள ஆயுமான விரோதத்தைப்பற்றிய உணர்வை, போதத்தை அவர்களிடம் ஏற்படுத்துகிறது; தங்கள் வர்க்கத்தை இந்த (பூர்ஷ்வா) வர்க்கத்திடமிருந்து பிரிக்கும் செங்குத்தான சரிவை ஒவ்வொரு நாளும் மேன்மேலும் தெளிவாகப் பார்க்கின்றனர். மேலும், இரண்டாவதாக சகல தொழில்களிலும், சகல தேசங்களிலுமுள்ள தொழிலாளர்களுக்குள்ளே ஒற்றுமை உணர்வைத் தட்டியெழுப்பி, ஒற்றுமையை ஸ்தாபிப்பதற்கும் அவைகள் பெரிதும் பயன்படுகின்றன—பூர்ஷ்வா உலகத்திற்கு நேர் எதிரிடையாக ஒரு புதிய தொழிலாளர் உலகத்தை சிருஷ்டிப்பதற்கு உதவக்கூடிய மேற்கண்ட இரு பலன்களும் ஸ்ட்ரைக்குகளால் ஏற்படுகின்றன.

"ஒவ்வொரு வேலை நிறுத்தத்திலும் தொழிலாளர்கள் நிறைய கஷ்டப்படவேண்டியிருக்கிறது, தியாகம் செய்யவேண்டி ஏற்படுகிறது என்பது யாருக்குத்தான் தெரியாது? எனினும் ஸ்ட்ரைக்குகள் அவசியமானவை. அத்தியாவசியமானவை. சமூகப் போராட்டத்திற்கு பொதுமக்களைத் தட்டியெழுப்புவதோ அவர்களை ஸ்தாபனரீதியாக திரட்டுவதோ ஸ்ட்ரைக்குகள் இல்லாவிட்டால் சாத்தியமில்லை. ஸ்ட்ரைக் என்பது ஓர் யுத்தம். ஒவ்வொரு தொழிலாளியையும் அவனுக்கு சகஜமான அர்த்தமில்லாத பாழான தனிமையிலிருந்து விடுவிக்கும் யுத்தத்தின் மூலமாகத்தான், யுத்தகாலத்தில்தான் பொதுமக்கள்—ஸ்தாபனரீதியாகத் திரட்டப்படுகிறார்கள். ஒரே ஆர்வத்தின் பெயரால் ஒரே லட்சியத்திற்காக தொழிலாளர்கள் அனைவரையும் யுத்தம் திடீரென்று ஒன்றுபடுத்துகின்றது. வெற்றியடையவேண்டுமானல் திடமான அடிப்படையில் ஸ்தாபன ரீதியான ஒன்றுபடவேண்டும் என்ற அவசியத்தை உருப்படியான தத்ரூபமான அடிப்படையில் அவர்களுக்கு புரியவைக்கிறது. வெஞ்சினம்கொண்ட பொதுமக்களை உருக்கப்பட்ட உலோகத்திற்கு ஒப்பிடலாம். ஒரு குறிப்பிட்ட உலோகத்தின் விதிகளுக்கும், குணசியங்களுக்கும் தக்கபடி அதை ஐக்கியப்படுத்தக்கூடிய நல்ல எஜமானர்கள் இருந்தால், தொழிலாளி மக்களின் கோரிக்கைகளுக்கும், உள்ளத் துடிப்புகளுக்கும்

தக்கபடி இந்த உருக்கப்பட்ட உலோகத்தை நல்ல எஜமானர்களால் ஒரே திட பதார்த்தமாக (ஒரே கட்டுக்கோப்புக்குள்) ஐக்யப்படுத்த முடியும். (சாதாரணமாக உலோகத்தை சேர்ப்பதற்கு பதிலாக உருகிய உலோகத்தை ஐக்கியப்படுத்துவது சுலபம். அதைப்போல ஸ்ட்ரைக் செய்திருக்கும் தொழிலாளியை ஒன்றுபடுத்துவது சுலபம். ஆனால் குறிப்பிட்ட உலோகத்தின் குண நிசயங்களையும், விதிகளையும் நன்கு அறிந்த நிபுணர்களுக்குத்தான் உருகிய உலோகத்தை கெட்டிப்படுத்தும் விதம் தெரியும். அதைப்போல தொழிலாளி மக்களின் நாடியை நன்கு தெரிந்துள்ள நிபுணர்களால்தான் தொழிலாளிவர்க்கத்தை ஒன்றுபடுத்த முடியும்—மொ-ர்.) "வேலை நிறுத்தங்கள் ஒவ்வொரு தொழிலாளியிடமும் மறைந்து கிடக்கும் சமூகப் புரட்சியைத் தட்டி யெழுப்புகிறது. உண்மையில் இந்த சமூகப் புரட்சி உணர்ச்சிகள் அவனுடைய மனோதத்துவ அமைப்பிலும் சரித்திரபூர்வமான நிலைமையிலும் சமூக அந்தஸ்திலும் ஐக்கியமாகி இருக்கின்றன. எனினும் சாதாரண காலங்களில் அடக்க ஒடுக்கத்தினாலும், அடிமைப் பழக்கத்தாலும் இந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதேயில்லை. பொருளாதாரப் போராட்டத்தின்மூலம் தொழிலாளி மக்களின் மத்தியில் இந்த உணர்ச்சிகள் தட்டி எழுப்பப்படும்பொழுது சமூகப் புரட்சிக் கருத்துக்களை அவர்களிடையே பிரசாரம் செய்வது மிகவும் சுலபமாகிறது. ஏனென்றால் இந்தக் கருத்துக்கள் ஜனங்களுடைய உணர்ச்சிகளின் உண்மையான பிரதிபலிப்பு, கலப்பில்லாத பரிசுத்தமான பிரதிபலிப்பு.

"பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் பாமர மக்களுக்குமிடையே உள்ள பிளவை விரிவுபடுத்தி ஆழமாக்குவதால் ஸ்ட்ரைக்கின் முக்கியத்துவம் அதிகமாகிறது. தொழிலாளர்களுடைய நலன்களும், முதலாளிகளின் நலன்களும் சமரசப்படுத்தமுடியாதவை என்பதை தெள்ளத் தெளிவாக ஸ்ட்ரைக்குகள் நிரூபிக்கின்றன .........உண்மையில், பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசியல் செல்வாக்கிலிருந்து தொழிலாளர்களை விடுவிப்பதற்கு ஸ்ட்ரைக்கைவிட வேறு சிறந்த மார்க்கம் கிடையாது.

"ஆம், ஸ்ட்ரைக் ஓர் மகத்தான ஆயுதம். பூர்ஷ்வா அரசாங்க ஆயுதத்தை ஜெயிப்பதற்கும், நாசம் செய்வதற்கும் புதிய உலகத்திற்கான சுதந்திர சூழ் நிலையை தயார் செய்வதற்கும் அவசியமான இராணுவத்தை—தொழிலாள இராணுவத்தை சிருஷ்டித்து பெருக்கி ஸ்தாபனரீதியாக திரட்டி உருவாக்கும் ஆயுதம் ஸ்ட்ரைக்.

'மூலதனம்' என்ற புத்தகத்தில் மார்க்ஸ் எழுதியிருப்பதையும் மேலேயுள்ள பாக்குனினின் வாக்கியங்களோடு ஒத்திட்டுப் பார்த்தால் டைலக்டிக்சுக்கும் ஆத்மார்த்தீகவாதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை உடனே பார்க்கலாம். யதார்த்தத்தில் நடந்த வேலை நிறுத்தங்களைப்பற்றி மார்க்ஸ் எழுதுகிறார். தொழிலாளர்களின் பல நடவடிக்கைளிலிருந்து உதாரணங்கள் தருகிறார் மார்க்ஸ்.

இவைகள் வேலை நேரத்தையும், கூலியையும், தொழிலாளர் சட்டம் முதலியவைகளையும் எப்படி பாதித்ததென்று விவரிக்கின்றார். பாக்கினினுக்கோ பாக்டரி சட்டங்களைப்பற்றிக் கவலையில்லை. ஏனெனில் பொருளாதாரக் கோரிக்கைக்கும் இறுதி லட்சியத்திற்கும் உள்ள தொடர்பை அவர் பார்க்கவில்லை. ஒவ்வொரு வேலை நிறுத்தமும் புரட்சியாக மாறலாமென்று அவர் நினைக்கிறார். தொழிற்சங்கம் எந்த அளவுக்கு வேலை செய்ய முடியும், அதனுடைய வரம்புகளென்ன என்பதை மார்க்ஸ் உணர முயற்சிக்கிறார், பாக்குனினுக்கோ இதைப்பற்றிக் கவலையில்லை. அரசாங்கம் என்ற பிரச்சினையை அனார்க்கிஸ்ட்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்தார்களோ அதே கண்ணோட்டத்தோடுதான் பாக்குனின் பரிசீலனை செய்தார். வர்க்கபேதமில்லாத சமூகம், அரசாங்கமில்லாத சமூகம் ஏற்படவேண்டுமென்பது இறுதி லட்சியம். அனார்க்கிஸ்ட் திட்டத்திலுள்ள இந்தப் பிசகில்லாத அம்சங்களை அவர்கள் ஆத்மார்த்தீகவாதத்துடன் கலந்து குழப்பினார்கள். அதன்மூலம் மனிதவர்க்கம் அதன் வளர்ச்சியில் இந்தக் கட்டத்தை அடைவதற்கே தடை செய்தனர். ஸ்ட்ரைக்குகளிலும் இதே நடைமுறையை அவர்கள் அனுஷ்டித்தார்கள். ஸ்ட்ரைக்குகளின் அதிசயமான சக்திகளைப் பற்றிப் பேசினார்கள். ஸ்ட்ரைக்குகளுடைய தன்மை, அவற்றின் வரம்புகள், அவற்றினால் ஏற்படும் விளைவுகள் இதர போராட்டமுறைகளுக்கும் ஸ்ட்ரைக்குகளுக்கும் உள்ள சம்பந்தம் முதலியவற்றை விளக்க முடியாதென்று அவர்கள் கூறினார்கள். அப்படியானால் தொழிற்சங்க நடவடிக்கைகளுடைய, ஸ்ட்ரைக்குகளுடைய வரம்புகள், எல்லைகள் என்ன? இந்தக் கேள்விக்கு மார்க்ஸ் பதில் அளிக்கிறார்.

"கூலி அமைப்பினால் (உற்பத்திச்சாதனங்கள் ஒருசிலரது உடைமையாய் இருப்பதினாலும், வாழ்க்கை நடத்த வேறுவழியில்லாமல் தங்கள் உழைப்புசக்தியை பாட்டாளிகள் கூலிக்கு

விற்பதனாலும் முதலாளித்வ அமைப்பை கூலிஅமைப்பு என்கிறோம்) ஏற்படும் அடிமைத்தனம் ஒருபுறமிருக்கட்டும். இந்த அன்றாடப் போராட்டங்களின் நிகர்பலனைப்பற்றித் தொழிலாளி வர்க்கம் அளவுக்கு மீறி மதிப்பிடக்கூடாது. அவர்கள் விளைவுகளை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறார்களே யல்லாது விளைவுகளின் காரணங்களை எதிர்த்துப் போராடவில்லை என்பதை அவர்கள் மறக்கக்கூடாது. கீழ்நோக்கிவரும் இயக்கத்தின் திசையை மாற்றவில்லை என்பதையும், நோயைத் தணிப்பதற்கு தற்கால சாந்தியான வைத்யமுறைகளை அனுஷ்டிக்கிறார்களே யல்லாது வியாதியை தீர்க்கவில்லையென்பதையும் அவர்கள் மறக்கக்கூடாது. சந்தையில் (விலைவாசிகளில்) ஏற்படும் மாறுதல்களாலும் மூலதனத்தின் இடைவிடாத ஆக்ரமிப்புகளாலும் தொடர்ச்சியாய் எழுகின்ற தவிர்க்கமுடியாத கொரில்லாப் போராட்டங்களில்மாத்திரம் தொழிலாளர்கள் பூர்ணமாக லயித்துவிடக்கூடாது. தற்கால அமைப்பு அவர்களுக்கு ஏராளமான துயரங்களை அளிக்கின்ற அதேசமயத்தில் சமூகப் பொருளாதார புனர்நிர்மாணத்திற்கு அவசியமான லோகாயுத சூழ்நிலையையும் சமூக உருவங்களையும் சிருஷ்டிக்கின்றது என்பதை தொழிலாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். "ஒரு நேர்மையான நாள் வேலைக்கு ஒரு நேர்மையான நாள் சம்பளம்" என்ற பத்தாம் பசலி கோஷத்திற்கு பதிலாக "கூலி அமைப்பை ஒழிப்போம்" என்ற புரட்சிகரமான குறிக்கோளை தொழிலாளர்கள் அவர்களுடைய கொடியில் பொறித்துக்கொள்ளவேண்டும்."

வேலைநிறுத்தங்களைப்பற்றிய மார்க்ஸின் போதனைகளில் பிரதானமானது இது. ஸ்ட்ரைக்குகளை சமூக யுத்தமென்றும், பொருளாதார கலகமென்றும் கொரில்லா யுத்தமென்றும் போராட்ட பயிற்சி ஸ்தலமென்றும், முன்னணிப் படைகளின் மோதுதல் என்றும் ஸ்ட்ரைக்குகளால் ஆளும் வர்க்கத்திற்கு அபாயம் ஏற்படுகிறதென்றும் மார்க்ஸும், எங்கல்ஸும் குறிப்பிட்டிருப்பதை முன்னால் பார்த்திருக்கிறோம். இப்பொழுது, பொருளாதார வேலைநிறுத்தம், விளைவுகளை எதிர்த்து நடத்தும் போராட்டம் காரணங்களை எதிர்த்தல்ல என்று மார்க்ஸ் கூறுகின்றார். வியாதியின் வேகத்தை தற்காலிகமாக தணிப்பதற்கான போராட்டமேயல்லாமல் வியாதியைப் போக்கும் போராட்டம் அல்ல என்கிறார். இதில் முரண்பாடு இல்லையா, அல்லது ஒருவேளை மார்க்ஸ் தன்னுடைய பழைய அபிப்ராயத்தை மாற்றிக்கொண்டுவிட்டாரா? இல்லை. உண்மை என்னவென்றால் ஸ்ட்ரைக் பிரச்னையில் வலதுசாரி

னரையும் இடதுசாரியினரையும் மார்க்ஸ் தாக்கி முறியடிக்க வேண்டியிருந்தது. ஸ்ட்ரைக்குகளால் தொழிலாளர்களுக்கு பாதகமே விளையுமென்ற அபிப்ராயம் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களுக்கிடையே உறுதிப்பட்டது. "ஸ்ட்ரைக்குகளால் தொழிலாளர்களுக்கு மாத்திரமல்ல முதலாளிகளுக்கும் பரிஹசிக்கத்தக்கமுறையில் அர்த்தமில்லாமல் பணம் விரையமாகிறது" என்று 1867 ராயல் கமிஷன் முன்னால் (பிரிட்டிஷ் மன்னர் சர்க்காரால் தொழிலாளர்களின் நிலைமையை பரிசீலனைசெய்ய நியமிக்கப்பட்ட கமிஷன்) தொழிற்சங்கங்கள் தலைவரான ஆலன் என்பவர் கூறினார்.

தொழிலாளிவர்க்கத்தை ஒரே வர்க்கமாக ஐக்யப்படுத்துவதற்கு வேலைநிறுத்தங்கள் பேருதவிசெய்வதை நிரூபித்து ஸ்ட்ரைக்குளின் சக்திகள் வீண்விரயமாக்கப்படுகிறதென்ற பூர்ஷுவா கொள்கை (வலதுசாரிக் கொள்கையை) எதிர்த்து தீவிரமாகப் போராடினார் மார்க்ஸ். அதேசமயத்தில் பொருளாதார ஸ்ட்ரைக்கைத் தவிர வேறு போராட்டமுறையே கிடையாது என்ற அனார்க்கோ ஸின்டிகலிஸ்ட் கருத்துக்கள் முதல் இண்டர்நேஷனல் அங்கத்தினர்களிடையே பரவ ஆரம்பித்தன. ஆகவே, சுரண்டலின் விளைவுகளை எதிர்த்து போராட்டம் நடத்த வேண்டியதின் அவசியத்தை ஏற்றுக்கொண்டபோதிலும் அதே சமயத்தில் சுரண்டலின் காரணங்களை எதிர்த்துப் போராடுவதற்கு தொழிலாளி மக்களை திரட்டவேண்டுமென்ற பிரச்னையை மார்க்ஸ் எழுப்பினார். தொழிலாளர்களின் தனித்தனி பொருளாதாரக் கோரிக்கைப் போராட்டங்கள் எப்படி அரசியல் இயக்கங்களாக அதாவது வர்க்கத்தின் இயக்கமாக வளர்ச்சியடைகின்றன என்பதை மார்க்ஸ் சுட்டிக்காட்டியிருக்கிறார். இங்கு எப்பொழுதும் இருந்ததைவிட வேகமாக, அளவில் ஏற்படுகிற மாறுதல்களால் குணத்திலேயே மோதுதல்களுக்கு மகத்தான அரசியல் முக்யத்வம் உண்டு என்று மார்க்ஸ்-எங்கல்ஸின் போதனைகள் நமக்குக் கற்றுக்கொடுக்கின்றன. எனினும் இந்த முக்யத்வத்தின் அளவே நம் முன்னிற்கும் பிரச்னை. ஒரு பொருளாதார வேலைநிறுத்தம் சுயேச்சையாக திடுதிப்பென்று வெடித்தபோதிலும் அது அதன் அரசியல் முக்யத்வத்தை இழந்துவிடாது. ஏனெனில் லெனின் கூறுவதுபோல அந்த "சுயேச்சைத்தன்மை உணர்வின் ஆரம்ப ரூபம்." இந்த வேலைநிறுத்தத்தின் அரசியல் முக்யத்வம் அந்த இயக்கத்தின் பரிமாணத்தைப் பொறுத்திருக்கிறது. வேலைநிறுத்தம் விரிவான அளவில் நடந்தபோதிலும், ஆரப்பத்திலிருந்தே, தலைவர்கள் அதை குறுகியமுறையில் நடத்தினால் (தம்

தொழிலுண்டு, தாமுண்டு என்ற கண்ணேட்டத்தில் நடத்திஞல் ஸ்ட்ரைக் அரசியல் மூளை மழுங்கிவிடுகிறது; அதன் சாராம் சத்தை ஸ்ட்ரைக் இழந்துவிடுகிறது—அதாவது, முதலில் அதஞ லேற்பட்டிருக்கக்கூடிய அரசியல் விளைவுகளை இனிப் பெறமுடி யாது. கலப்பில்லாத பொருளாதாரக் கோரிக்கைகளுடனேயே ஸ்ட்ரைக் துவங்கியபோதிலும், ஆரம்பத்திலிருந்தே, அரசியல் போராட்டத்துடன் இணைக்கும் பாஜதயில் அதை உணர்வுடன் நடத்திஞல், அதஞல் அதிகபட்ச பலன்கள் ஏற்படும். முதலாளி களைத் தாக்கும் ஒவ்வொரு 'அடி'யும் முதலாளித்துவ அமைப் பையே தாக்குகிறபடியால், பூர்ஷுவா வர்க்கத்தை எதிர்ப்பதற்கு, புராலிடேரியட்டின் கொள்கையில், பொருளாதார வேலைநிறுத் தம் முக்கியமான ஆயுதமாக விளங்குவதை மார்க்ஸ் அறிந்திருந் தார். வரம்புக்குட்பட்ட, குறுகிய பொருளாதாரப் போராட்டம் "முதலாளித்துவ வளர்ச்சி திசையை மாற்றமுடியாது" என் பதை வற்புறுத்துவது அவசியமென்றும் முக்கியமென்றும் மார்க்ஸ் கருதிஞர்.

கலப்பில்லாத பொருளாதாரப் போராட்டம் விளைவை எதிர்த்து நடக்கும் போராட்டம், காரணத்தை எதிர்த்தல்ல என்ற மார்க்ஸின் கொள்கையிலிருந்து சிலர் ஒரு கொள்கையை சிருஷ் டித்தனர். அதாவது முதல் உலக யுத்தத்துக்கு முன்நடந்த பொருளாதார ஸ்ட்ரைக்குகளெல்லாம் தற்காப்பு ஸ்ட்ரைக்குக ளாகவே இருந்தனவென்றும், முதலாளித்துவத்தின் பொதுநெருக் கடி தொடங்கியதிலிருந்துதான் (1914க்குப்பின், உலக முதலா ளித்துவம் கிட்டத்தட்ட நிரந்தரமாக நெருக்கடியில் சிக்கிவிட்டது. இதையே ஆசிரியர் குறிப்பிடுகிருர்.) சகல ஸ்ட்ரைக்குகளும் தாக்குதல் போராட்டங்களாக இருப்பதாகவும், அவர்கள் கூறிஞர் கள். * சீர்திருத்தவாதத்தின் சூனியம் என்ற பிரிட்ஸ்டேவிட் புத்த

---

* சீர்திருத்தவாதி தொழிலாளி வர்க்கத்தை வர்க்கப் போராட்டத்தி லிருந்தும், அதன் இறுதி லட்சியமான சோஷியலிஸத்திலிருந்தும் திருப்பிவிடும் கொள்கையை அனுஷ்டிப்பவன். மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு பதிலாக, சீர்திருத்தங்கள் மூலம் தொழிலாளர் பிரச்சினைகளை பைசல் செய்யப்பார்ப்பவன். சீர் திருத்த வாதத்தின் சித்தாந்தத்துக்கு பெயர், வர்க்க சமரஸம் (வர்க்க ஒத்துழைப்பு) முதலுக்கும் தொழிலுக்குமுள்ள சமரஸப் படுத்தமுடியாத, விரோதமான நலன்களை சமரஸப்படுத்த முயற் சிப்பது. (உதாரணம் காந்தீயத்தின் தர்மகர்த்த சித்தாந்தம்).

கத்தில் இக்கருத்தைக் காணலாம். இப்புத்தகத்தில் ஏராளமான யதார்த்த உண்மைகளும் புள்ளி விவரங்களும் இருந்தபோதிலும் அதில் பல சூத்திரங்கள் பிழையுள்ளவையா யிருக்கின்றன. பொருளாதார ஸ்ட்ரைக்குகளை தற்காப்பு ஸ்ட்ரைக்குகளென்றும் தாக்குதல் ஸ்ட்ரைக்குகளென்றும் பிரிப்பது தவறு. அரசியல் ரீதியில், கெடுதலை குளேவிக்கும். ஏனென்றால் அந்த பிரிவினை யதார்த்த வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டதல்ல. முதல் உலக யுத்தத்துக்கு முன்னால் தாக்குதல் ஸ்ட்ரைக்குகள் [உயர்ந்த கூலிக்காக, குறைந்த வேலை நேரத்துக்காக] நிகழ்ந்தன வென்பதை யதார்த்த வாழ்க்கை நமக்கு படித்துக் காட்டுகிறது. இன்றும் தற்காப்பு ஸ்ட்ரைக் போராட்டங்கள் நடக்கின்றன. கால கட்டங்களுக்குத் தக்கபடி, தற்காப்பு இயக்கத்தையும், தாக்குதல் இயக்கத்தையும் பிரிப்பது தவறு. ஒவ்வொரு ஸ்ட்ரைக்கின் உண்மைகளையும் பரிசீலனை செய்து, அதில் தொழிற்சங்கத்தின் நடவடிக்கையையும் தொழிலாளர்கள் எடுத்த பங்கையும், பரிசீலனை செய்து, ஸ்ட்ரைக்குகளை பாகுபடுத்தவேண்டும். முதலாளித்து

---

முதலாளித்துவ சமூகத்திலேயே சீர்திருத்தங்கள் பெறலாமென்றும், "மெள்ள மெள்ள" சோஷியலிஸத்தை அடையலாமென்றும் அவர்கள் பிரமைகளை பிரசாரம் செய்கின்றனர்.

சீர்திருத்தவாதமும் சந்தர்ப்பவாதமும் இரட்டைப் பிள்ளைகள் மாதிரி. பூர்ஷுவா வர்க்கத்தின் நலனக்கு தக்கபடி, தொழிலாளர் இயக்கத்தை பின்னுக்கிழுப்பது இவற்றின் குணம்.

சீர்திருத்தவாதமும் சந்தர்ப்பவாதமும் ஏகாதிபத்திய நாடுகளில் பலம் பெற்றுள்ளன. உ-ம் பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைமை பெவின், அட்லி, கிரிப்ஸ் கோஷ்டி, காலனிகளிலிருந்து வரும் கொள்ளை லாபத்தில்--ஏகாதிபத்திய சுரண்டலில், ஒரு பகுதியைக் கொண்டே ஒரு சிறு பகுதியை தொழிலாளர்களுக்கு சலுகை யளிக்கிறது பிரிட்டிஷ் முதலாளித்துவம். தொழிலாளரிடையே ஒரு மேல் ஜாதியைச் சிருஷ்டிக்கிறது. இதுதான் சீர்திருத்தவாதத்தின் பொருளாதார அடிப்படை.

கம்யூனிஸ்ட்களும் சில்லரை கோரிக்கைகளுக்காகப் போராடுகிறார்கள். ஆனால் சில்லரை சீர்திருத்தங்களே சீர்திருத்தவாதிகளின் லட்சியம்; கம்யூனிஸ்டுகளுக்கு இந்த சில்லரைக் கோரிக்கைப் போராட்டம் ஸோஷியலிஸ்ட் இயக்கத்தை கட்டிவளர்ப்பதில் உதவுகிறது. (மொ-ர்)

வத்தின் விளைவுகளை எதிர்த்து தற்காப்பு முறைகளிலும், தாக்கு தல் முறைகளிலும் போராடுவது சாத்தியம்.

மார்க்ஸின் கருத்தை தத்துவத்தின் வறுமை என்ற புத்தகத்தில் அவர் எழுதியதுடன் சேர்த்துவைத்து சிந்திக்கவேண்டும். அதில் மார்க்ஸ் கூறுகிறார்:—

"நிஜமான உள்நாட்டு யுத்தமாகிய இந்தப் போராட்டத்தில் எதிர்கால போராட்டத்துக்கவசியமான சகல அம்சங்களும் வளர்க்கப்படுகின்றன், ஒன்றுபடுத்தப்படுகின்றன; இந்த நிலையை அடைந்துவிட்டால் ஸ்தாபனம் அரசியல் தன்மையைப் பெறுகிறது.

இதை மேற்கோள் காட்டிவிட்டு, லெனின் கூறுகிறார்:— **வரப்போகும் பல வருஷங்களுக்கு எதிர்காலப் போராட்டத்துக்கு தொழிலாளர்கள் தயார் செய்யும் நீண்டகாலம் முழுவதற்கும், தொழிற்சங்க இயக்கத்துக்கும் பொருளாதாரப் போராட்டத்துக்கும் திட்டமும் போர்த் தந்திரமும் இந்த வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது.**

தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் அதன் அரசியல் போராட்டத்தை சார்ந்ததாக, அரசியல் போராட்டத்துக்கு உட்பட்டதாக மார்க்ஸ் கருதினார். இந்த மூல கருத்தை ஆதாரமாகக்கொண்டு, ஸ்ட்ரைக் ஒரு முக்கியமான நல்ல பயன்தரத் தக்க போராட்ட முறை என்ற முடிவுக்கு அவர் வந்தார். அரசியலை நிராகரிக்கும் கொள்கையை அஸ்திவாரமாகக் கொண்டார் பாக்குனின்; பொருளாதார ஸ்ட்ரைக் ஒன்று தான் போராட்ட முறை என்ற முடிவுக்கு வந்தார். பாக்குனின் கொள்கையை அவருக்குப் பின்வந்த அவருடைய ஆதரவாளர்கள் ஒரு குழப்பம் நிறைந்த கொள்கையாக்கினார்கள். இதன் விபரீத விளைவுகள் ஸ்பெயின் தேசத்து தொழிலாளர் இயக்கத்தையும் தென் அமெரிக்க நாடுகளின் தொழிலாளர் இயக்கத்தையும் பாதித்தது. கொள்கைக்கும் நடைமுறைக்கும் மார்க்ஸிடம் பரிபூரண ஒற்றுமையிருந்தது. ஸ்ட்ரைக் இயக்கம் உள்பட சகல துறைகளிலும், பாக்குனினிடமும் அவருடைய ஆதரவாளர்களிடமும், கொள்கை வேறு, நடைமுறை வேறாகவே இருந்தன. "**பாக்குனிஸ்டுகளின் நடைமுறை**" என்ற எங்கல்ஸ் பிரசுரம் இந்த உண்மையை ருசிகரமான முறையில் எடுத்துக்காட்டுகிறது.

1873ம் வருஷ ஸ்பானிஷ் புரட்சியில் பாக்குனிஸ்டுகள் கடைப்பிடித்த போர்த் தந்திரங்களைப்பற்றி எங்கல்ஸ் விவாதிக்கிறார். பாக்குனிஸ்டுகள் பொதுவேலைநிறுத்த கோஷத்தைக் கொடுத்தனர்;

*ஸ்பானிஷ் புரட்சியில் பாக்குனிஸ்டுகள் அனுஷ்டித்த முறைகளை ஆராயும்போது, எங்கல்ஸ் கீழ்க்கண்ட உண்மைகளைக் கண்டார்:—

1. புரட்சிக் கலகம் செய்வதைத் தடுக்கும்பொருட்டு, பாக்குனிஸ்டுகள் பார்ஸிலோனுவில் (ஸ்பெயினில் ஒரு மாகாணம்) பொதுவேலை நிறுத்தம் செய்தார்கள்.

2. அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு பதிலாக, பல சிறு அரசுகளை ஸ்தாபிக்க முயன்றுர்கள்.

---

* 1873-ம் வருஷ ஸ்பானிஷ் புரட்சியில், பெருவாரியான தொழிலாளர்கள் அனுர்கோஸிண்டிகலிஸ்ட் தலைமையிலிருந்தனர். அனுர்க்கோஸிண்டிகலிஸத்தின் சக்தியை உணர ஸ்பானிஷ் புரட்சி தக்க படிப்பினை.

அனுர்க்கோஸிண்டிகலிஸ்டுகள் அரசியலை நிராகரிப்பவர்களல்லவா? பாக்டரிகள் ஸ்ட்ரைக் செய்தபின், அடுத்த நடவடிக்கையை எடுக்கவில்லை. தேசியரீதியில், தொழிலாளரை ஒன்றுபடுத்தி, தொழிலாளர்களுடன் விவசாயிகளையும் தட்டியெழுப்பி திரட்டி, அரசாங்க அமைப்பை தாக்கவில்லை.

விவசாயிகளிடம் அணுகாமல், அவர்களை பூர்ஷுவாக்களிடமே விட்டு வைத்தார்கள். தொழிலாளர் ஸ்ட்ரைக் செய்துவிட்டதால் தானுகவே அரசாங்கம் ஒடிந்துவிடுமென்று உட்கார்ந்திருந்தார்கள். அகில தேச ரீதியில் தங்கள் சக்திகளை ஒருமுகப்படுத்துவதற்கு பதில் ஒவ்வொரு பாக்டரியைச் சுற்றி சிறுசிறு அரசுகளை ஸ்தாபித்தார்கள். புரட்சி அடக்கப்படுவதை, இந்த விதத்தில், சுலபமாக்கினுர்கள்.

புரட்சி சர்க்காரை ஸ்தாபிக்கக் கூடாதென்ற குருட்டுத் தனமான கொள்கையை பின்பற்றி, புரட்சிப் படையை சிதறவிட்டு, அடக்குவதற்கு அனுமதித்தவர்கள், இந்த பாதையின் தவிர்க்க முடியாத விளைவாக, பழைய அரசாங்கத்துடன் பேரம் பேசப் போனுர்கள்; எந்த சர்க்காரை கவிழ்க்கவேண்டுமோ, அத்துடன் கூட்டு கமிட்டி அமைத்தார்கள்! இந்த விதத்தில், அனுர்க்கோஸிண்டிகலிஸ்டுகள் சொல்லில் அரசியலை எதிர்த்த போதிலும், செயலில் பூர்ஷுவா கட்சிகளுக்கு உடந்தையானுர்கள். பூர்ஷுவா கட்சிகள் தொழிலாளர்களை தங்கள் அரசியல் கருவியாக்குவதும், தங்கள் இஷ்டப்படி ஆட்டிவைப்பதும் சுலபமாயிற்று. இதைத்தான் எங்கல்ஸ் தொகுத்துத் தருகிறுர். -(மொ-ர்.)

3. தொழிலாளிவர்க்கத்தின் பரிபூரண விடுதலையை உடனடியாகபெறுவதை நோக்கமாகக் கொண்டிராத எந்தப் புரட்சியிலும் கலந்துகொள்வதில்லை என்ற கொள்கையை நிராகரித்தார்கள்.

4. பல்வேறு நகரங்களில் உருவான சர்க்கார் கமிட்டிகள் சேருவதன்மூலம், புரட்சி சர்க்காரில் சேருவது துரோகம் என்ற தங்கள் பிடிவாதமான கொள்கையை மீறினர்கள்.

5. சொல்லளவில் அரசியலை எதிர்த்தவர்கள், செயலில் பூர்ஷுவா கட்சியை ஆதரித்தார்கள். பூர்ஷுவா கட்சி தொழிலாளர்களை அரசியல் ரீதியில் சுரண்டியது; தங்கள் போதத்தில் தங்கள் இஷ்டப்படி ஆட்டிவைத்தது.

"ஒரு வார்த்தையில் சொல்லப்போனல், புரட்சிகளை எம்மாதிரி நடத்தக்கூடாதென்பதற்கு பாக்குனினிஸ்டுகள் ஒரு சிறந்த உதாரணத்தை அமைத்துவிட்டனர் என்று எங்கல்ஸ் முடிக்கிருர்.

1874-ல் எங்கல்ஸ் எழுதியது, 1931–32 ல் நிகழ்ந்த ஸ்பானிஷ் புரட்சியில் இன்னும் விரிவான அடிப்படையில் மீண்டும் நிகழ்ந்தது. ஸ்பானிஷ் புரட்சியின் வளர்ச்சிக்கு பாக்குனினிஸம் தடைசெய்துவருகிறது; முட்டுக்கட்டை போட்டுவருகிறது.

மார்க்ஸ்—பாக்குனின் இருவருடைய சிந்தாந்தத்திலிருந்தும் கொள்கையிலிருந்தும், போர்த் தந்திரத்திலிருந்தும், நாம் கற்றுக் கொள்வதென்ன? வேலைநிறுத்த போர்த்தந்திரங்களை பொதுவான கொள்கைகளிலிருந்து தனிமைப்படுத்த முடியாது. அதாவது புரட்சிகரமான மார்க்ஸிஸ்ட்களுக்கு அவர்களுக்கு சொந்தமான ஸ்ட்ரைக் போர்த்தந்திரங்கள் இருக்கின்றன—அனர்க்கிஸ்டுகள், சீர்திருத்தவாதிகள் ஆகியோரின் ஸ்ட்ரைக் போர்த் தந்திரங்களுக்கு மாறுபட்டது அது. இந்த பிரதான வித்தியாசத்தை, நிகழ்காலத்தில், முதலாளித்துவ நாடுகளில் வளர்ந்துவரும் போராட்டங்கள்—அரசியல் பொருளாதாரப் போராட்டங்கள் ஊர்ஜிதம் செய்கின்றன, மேலும் தெளிவுபடுத்துகின்றன. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரப் போராட்டங்களிடையேயுள்ள பின்னலை, ஜீவ தொடர்பைப்பற்றிய மார்க்ஸிஸ்டுக் கருத்து சரியானதென்பதை வாழ்க்கையும் போராட்டமும் ஊர்ஜிதம் செய்துவிட்டன.

தொழிலாளர்களின் கோரிக்கைப் போராட்டத்தையும் ஒன்ரேடொன்று இணைக்காதவர்கள், அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டத்தைக் குலைக்கின்றனர்; பூர்ஷுவா வர்க்கத்தின் வலையில் விழுகின்றனர்—வாழ்க்கை கற்றுக்கொடுக்கும் படிப்பினை இது.

## ஒன்பதாவது அத்தியாயம்

# மார்க்ஸின் தொழிற்சங்க விமர்சகர்களும் போலி மார்க்ஸிஸ்டுகளும்

மார்க்ஸிஸத்துக்கும் அதற்கு முந்திய சித்தாந்தங்களுக்கும், மார்க்ஸிஸத்துக்கும் அரைகுறை மார்க்ஸிஸ்ட் சித்தாந்தங்களுக்கும் பிரதான வித்தியாசம் என்ன? மார்க்ஸிஸத்துக்கும் போலி மார்க்ஸிஸத்துக்குமுள்ள பிரதான வித்தியாசம் என்ன? லெனின் "அரசாங்கமும் புரட்சியும்" என்ற பிரசித்திபெற்ற புத்தகத்தில் இந்த வித்தியாசத்துக்கு இலக்கணங் கூறுகிருர். லெனின் எழுதுவதாவது:—

"வர்க்கப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளும்பொழுது தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்ற கொள்கையையும் ஏற்றுக்கொள்ளுபவனே மார்க்ஸிஸ்ட். இங்குதான் ஒரு மார்க்ஸிஸ்டுக்கும் சாமானியமான நடுத்தர வர்க்கத்தினருக்கும் (மார்க்ஸிஸ்டுக்கும் பூர்ஷுவாவுக்கும்கூட இதுதான் முக்கியமான வித்தியாசம்.) உள்ள ஆழமான வித்தியாசம் அடங்கியிருக்கிறது. மார்க்ஸிஸத்தை உண்மையாக புரிந்துகொண்டிருப்பதற்கும், ஒப்புக்கொண்டிருப்பதற்கும், இந்த உரைக் கல்லில் சோதித்துப் பார்க்கவேண்டும்.

தொழிற்சங்க முகாமிலிருந்து மார்க்ஸை விமர்சனம் செய்தவர்களை இந்த கண்ணேட்டத்தில் பார்த்தோமானல், தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கொளகைதான், புரட்சிகரமான மார்க்ஸிஸத்தின் பகிரங்க விரோதிகளுக்கும் மறைமுகமான விரோதிகளுக்கும் பிரதான முட்டுக்கட்டையாக இருந்தது. மார்க்ஸின் போதனைகளுக்கு அஸ்திவாரக் கல்லாக விளங்கும் இந்தக் கொள்கையை—தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை—அவர்கள் யதார்த்த உண்மைகளின் அடிப்படையில் மறுப்பதற்கு தீவிரமாக முயற்சித்தார்களென்று இதற்கு அர்த்தமில்லை. மார்க்ஸின் தொழிற்சங்க விமர்சனக்காரர்கள் இந்தப் பிரச்சினையை

முதலில் புறக்கணித்தனர்—அதை அரசியல் வாதிகளுக்கு விட்டு விட்டனர். *சோஷியல்-பாஸிஸத்தின் உண்மையான சிந்தாந்த கர்த்தாவான எட்வேர்ட் பேர்ன்ஸ்டீன் இந்த தொழிற்சங்க வாதிகளின் கருத்தைக் கணித்துக் கூறினார். 1899 லேயே, அவர் "ஸோஷியலிஸத்தின் முன் தேவைகள்" என்ற புத்தகத்தை எழுதினார். இதை நவீன சோஷியல் டெமாக்ரஸியின் வேத புத்தகமாகக் கருதவேண்டும். இந்தப் புத்தகத்தில் தொழில் ஜனநாயகத்தைப்பற்றியும், சமூக சீர்திருத்தங்கள்மூலம் சோஷியலிஸத்தை அடைவதுபற்றியும், தொழிற்சங்கங்கள்மூலம் தொழிலை ஜனநாயகப்படுத்துவதுபற்றியும் பெர்ன்ஸ்டீன் தன் 'அபூர்வ' கருத்துக்களை எடுத்துரைக்கிறார். தன் புத்தகத்தை எழுதுவதில், பென்ஸ்டீன் தொழிற்சங்கங்களின் உதவியை நாடினார்; மார்க்ஸிஸத்திடமிருந்து மேலும் பிரிந்துகொண்டிருந்த தொழிற்சங்கங்கள் உற்சாகமடைந்தன, பெர்ன்ஸ்டீனை தங்கள் தலைவராகவும் தத்துவ கர்த்தாவாகவும் பகிரங்கமாக அங்கீகரித்தன.

பெர்ஸ்டீன் இப்புத்தகத்தை பிரசுரிப்பதற்கு முன், தொழிற்சங்க போலி மார்க்ஸிஸ்டுகள் மார்க்ஸிஸத்திடம் தங்களுக்குள்ள கொள்கை வித்தியாசங்களை ரகசியமாய் வைத்திருந்தனர். ஆனால் இப்புத்தகம் பிரசுரமானபின் "மார்க்ஸை குணதோஷ விமர்சனம் செய்வது" ஜெர்மன் தொழிற்சங்க தலைவர்களிடம் நாகரிக

---

* **சோஷியல் - பாஸிஸம் :** பேச்சில் சோஷியலிஸம்; செய்லில் பாஸிஸத்துக்கு உதவுவது. பாட்டாளி மக்களின் விமோசனத்தைப் பற்றிப் பேசுவது, முதலாளித்துவத்தின்மீது தீ கக்குவது ஆனால் காரியத்தில், பணமூட்டைகளின் பயங்கர சர்வாதிகார பேயாட்சியான பாஸிஸத்துக்கு உடந்தையா யிருப்பது. ஐரோப்பிய சோஷ்யல்-டெமோக்ரடிக் கட்சிகளின் தலைமைகள் இக் கொள்கையை அனுஷ்டித்தன.

(உ-ம்.) அபிஸீனியாவை முஸோலினி அடிமைப்படுத்தினன்; ஸ்பானிஷ் குடியரசை பிராங்கோ கொன்று குவித்தான். "தலையிடா கொள்கை" என்று பேசிக்கொண்டு, இந்த தலைவர்கள் இவற்றிக்கு உடந்தையாயிருந்தனர்.

1940-ல் ஹிட்லரின் நாஜி சூராவளி படைகள் பிரெஞ்சு மண்ணில் முன்னேறியபோது, பிரெஞ்சு சோஷ்யலிஸ்ட் தலைவர்கள் ஹிட்லரின் ஐந்தாம் படையான பெட்டெயினை உதவி பிரதம மந்திரியாக்கினர்கள்; கம்யூனிஸ்ட்களை நரவேட்டை ஆடினர்கள். (மொ-ர்.)

மாயிற்று. தொழிற்சங்கங்கள் கொள்கை அடிப்படையில் வாதிப் பதில்லை' அவர்களுடைய அன்றாட வேலைகளில் மார்க்ஸைத் திருத்தினார்கள். அவருடைய போதனைகளை நடைமுறையில் திரித்தார்கள். முதலாளித்துவ அரசாங்கத்தின்கீழ், தொழிற் சங்கங்களின் பங்கைப்பற்றிய மார்க்ஸின் மூலபோதனைகளை தலை கீழாகப் புரட்டினார்கள். தொழிற்சங்கவாதிகளின் மார்க்ஸிஸ்ட்—விரோத கருத்துக்கள் வளர்ச்சியடைந்ததை சரித்திரபூர்வமாக ஆராய்ந்தால், கீழ்க்கண்ட விஷயங்கள் புலனாகும்.

1. வர்க்கப் போராட்ட தத்துவம், சரிதான்; ஆனால் தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடைந்தபின், ஜனநாயகம் ஸ்தாபிக் கப்பட்டபின், வர்க்கப் போராட்டத் தத்துவம் அதன் முக்கியத் துவத்தை இழந்துவிடுகிறது.

2. புரட்சி என்பது இன்றைய நிலைக்கு ஒவ்வாத ஒரு கர்னாடக கருத்து: சமூக வளர்ச்சியின் ஒரு தாழ்ந்த மட்டத்துக்கு அது ஒத்துவரும்; ஜனநாயக அரசாங்கம் புரட்சிகளையும் புரட்சிகர மான போராட்டத்தையும் விலக்கிவிடுகிறது.

3. தொழிலாளிவர்க்கம் சமாதானமாகவே, சாத்வீக முறை யிலேயே, முதலாளித்துவத்திலிருந்து சோஷியலிஸத்தை அடைய ஜனநாயகம் உத்திரவாதம் தருகிறது; ஆகவே தொழிலாளிவர்க்க சர்வாதிகாரம் என்பது இன்றைய கோஷமாயில்லை; இன்றைய கோஷமாய் இருக்கவும் முடியாது.

4. முதலாளித்வ சமூகத்தில் வறுமை புதிய புதிய பகுதி களைப் பிடிக்கின்றதென்ற சித்தாந்தம் ஒருகாலத்தில் அனுபவத் துக்கு ஒத்திருந்தது. இன்று அதுவும் பழமையாகிவிட்டது.

5. கட்சி (தொழிலாளிவர்க்கத்தின் அரசியல் கட்சி மொ-ர்) தொழிற்சங்கங்களுக்கு தலைமைதாங்கி நடத்தவேண்டுமென்பது ஒருவேளை மார்க்ஸ் சகாப்தத்தில் உண்மையாயிருந்திருக்கலாம். ஆனால் இன்று தொழிற்சங்கங்கள் பயன்படத் தக்கமுறையில் வளர்ச்சியடைய, தொழிற்சங்கம் கட்சி அரசியலைப்பற்றி நடு நிலைமை வகிப்பதே தக்க உத்திரவாதம். (அதன்மூலமே தொழிற் சங்கங்கள் வளரமுடியும்).

6. மார்க்ஸ் சகாப்தத்தில், வேலைநிறுத்தங்கள் போராட்டத் தின் விசேஷ ஆயுதங்களில் ஒன்றாக, ஒரு வேளை, கருதப்பட்டிருக் கலாம்; ஆனால் இப்பொழுது தொழிற்சங்கங்கள் அந்த கட்டத் தைத் தாண்டி வளர்ந்துவிட்டன. இத்தியாதி.........

மார்க்ஸிஸம் காலத்துக்கொவ்வாத பழசாகிவிட்டது, அதை புனராலோசனை செய்யவேண்டும், பிழைதிருத்தவேண்டும், அதை விஸ்தரிக்கவேண்டும் என்ற முடிவுக்கே, ஒவ்வொரு அம்சத்திலும், அவர்கள் வந்தனர். மார்க்ஸிஸத்தை 'பிழைதிருத்தும்' வேலையை சோஷியல் டெமாக்ரட்களும் தொழிற்சங்கங்களும் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டன. "யுத்தத்துக்கு முன்னால், மார்க்ஸ் சித்தாந்தங்களின் அடிப்படையில் மார்க்ஸிஸத்தை வளர்ப்பதும் செழிப்பாக்குவதும்" அவசியம் என்று கோஷமிட்டுக்கொண்டு, இந்த 'பிழைதிருத்தும்' வேலையில் இறங்கினார்கள்.

ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலுமுள்ள தொழிற்சங்கங்கள் மார்க்ஸிஸத்துக்கு நெருங்கிய தொடர்புடையவை என்று கருதப் பட்டன. பல வருஷகாலம் அவர்கள் மார்க்ஸின் பெயரை உப யோகப்படுத்தினார்கள். எனினும், மார்க்ஸிஸத்துக்கு ஜெர்மன் சோஷியல் டெமாக்ரஸி செய்ததையே இவைகளும் செய்தன. இதைப்பற்றி லெனின் அற்புதமாக எழுதுகிறார் :—

"சரித்திரத்தில், விடுதலைக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் தலைவர்களுடைய கொள்கைகளுக்கும், (அந்த வர்க்கங்களின்) புரட்சிகரமான சிந்தனையாளர்களுடைய கொள் கைகளுக்கும், இன்று மார்க்ஸின் கொள்கைக்கு சம்பவித்திருப் பதே, அடிக்கடி சம்பவித்திருக்கிறது. அந்த மகத்தான புரட்சி வீரர்களின் வாழ்நாட்களில், அடக்கும் வர்க்கம் அவர்களை தயவு தாட்சண்யமில்லாமல் தண்டிக்கிறது; அவர்களுடைய போதனை களுக்கு கொடிய விரோதம் பாராட்டுகிறது; ஆத்திரம் நிறைந்த துவேஷத்தை கக்குகிறது; ஈவிரக்கமில்லாத முறையில் பொய்ப் பிரசாரம் செய்கிறது; அவதூறு இயக்கம் நடத்துகிறது. ஒடுக் கப்பட்ட வர்க்கங்களுக்கு 'திருப்தி' யளிக்கும்பொருட்டு, ஒடுக்கப் பட்டுள்ளவர்களை ஏமாற்றும்பொருட்டு, இந்த புரட்சிவீரர்கள் இறந்தபிற்பாடு அவர்களை பூஜிக்கத்தக்க விக்கிரஹங்களாக்கி, அவர்கள் பெயர்களில் 'ஒளி' வீசும்படி செய்ய, முயற்சிகள் செய் யப்படுகின்றன. அதே சமயத்தில், அவர்களுடைய புரட்சிகர மான சித்தாந்தங்களின் உண்மையான சாராம்சத்தின் ஆண் மையை அழித்து, கொச்சைப்படுத்துகின்றனர். அவற்றின் புரட்சி கரமான கூர்முனையை மழுங்கவடிக்கின்றனர். நிகழ்காலத்தில், மார்க்ஸிஸத்தை களங்கப்படுத்தி இழிவுபடுத்தும்வேலையில் பூர் ஷுவா வர்க்கமும் தொழிலாளி இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதி களும் சேர்ந்து முனைந்திருக்கின்றனர். மார்க்ஸிஸ்ட் போதனை

களின் புரட்சிகரமான அம்சத்தையும் புரட்சிகரமான ஜீவனையும் அவர்கள் புறக்கணிக்கின்றனர்; திடைக்கின்றனர்; திரித்துவிடுகின்றனர். பூர்ஷுவாவர்க்கம் ஒப்புக்கொள்ளக்கூடியதாயிருப்பதை அல்லது ஒப்புக்கொள்ளக்கூடியதாய் தோன்றுவதை அவர்கள் முன்னணிக்கு கொண்டுவந்து போற்றிப் புகழ்கின்றனர். சோஷியல்-ஷாவினிஸ்டு*கள் அனைவரும் மார்க்ஸிஸ்டுகள்! (ஹாஸ்யம் எப்படி!) மார்க்ஸை ஒழிக்கவேண்டுமென்று முனைந்து நின்ற விசேஷ நிபுணர்களான ஜெர்மன் பூர்ஷுவா பேராசிரியர்கள் இப்பொழுது "தேசிய ஜெர்மன்" மார்க்ஸைப்பற்றி மேலும் மேலும் பேசுகிறார்கள். ஒரு கொள்ளைக்கார யுத்தத்தை நடத்துவதற்கு உயர்ந்த ரீதியில் ஸ்தாபனரீதியாகத் திரண்டிருக்கும் தொழிற்சங்கங்களை மார்க்ஸ் கட்டி வளர்த்தாரென்று அவர்கள் சத்தியம்செய்து கூறுகிறார்கள்". ("அரசாங்கமும் புரட்சியும்" லெனின்.)

மார்க்ஸின் சித்தாந்தத்துக்கும் நடைமுறைக்கும் நேர்மாறாக ஜெர்மன் தொழிற்சங்க இயக்கத்தின் சித்தாந்தமும் நடைமுறையும் இருந்தபோது, ஜெர்மன் தொழிற்சங்கவாதிகள், மேலுக்கு, மார்க்ஸை வணங்கினார்கள். ஜெர்மன் முதலாளித்துவத்தின் வலிமை ஓங்க ஓங்க, புதிய புதிய மார்க்கட்டுகளில் அதன் செல்வாக்கு மேன்மேலும் வேகமாய் பரவப்பரவ, ஜெர்மன் முதலாளிகளுக்கும் ஜெர்மன் தொழிற்சங்க இயக்க தலைவர்களுக்கும் மேலும் வேகமாக தத்துவரீதியில் புனர் ஐக்கியம் ஏற்பட்டது. 1905ல் ஜெர்மன் தொழிற்சங்கங்கள் மே தின வேலைநிறுத்தத்தை எதிர்த்ததையும், அரசியல் வேலைநிறுத்தங்களை எதிர்த்ததையும்,

---

* **சோஷியல் - ஷாவினிஸ்டு**: பிற இனத்தினர்மீதும், பிற வர்ணத்தினர்மீதும், பிற நாட்டார்மீதும் துவேஷப் பிரசாரம் செய்தல் ஷாவினிஸம். தேசீயத்தின் பெயரால், அயல் தேசத்தினர், வேற்றினத்தவர்மீது விரோதப் பிரசாரம் செய்து, அந்த தேசத்தினரை, இனத்தினரை ஆக்கிரமிக்க முதலாளி வர்க்கத்தின் பிரசார பீரங்கியாக விளங்குவது. அதாவது, தன்னின முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய வெறிக்கு சாதகமாக, இனத்துவேஷ பிரசாரம் நடத்துவது ஷாவினிஸம்.

சோஷ்யல் ஷாவினிஸ்ட் சோஷ்யலிஸம் பேசுவான்; சோஷ்யலிஸத்தைப்பற்றி, பாட்டாளி மக்களைப்பற்றி, பேசிவிட்டு, ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துக்கு சாதகமாக ஷாவினிஸ்ட் பிரசாரம் செய்பவன். (மொ-ர்.)

தொழிற்சங்கங்கள் அரசியலில் நடுநிலைமை வகிக்கவேண்டுமென்றதையும், பல வருஷகாலம், யுத்த எதிர்ப்பு பிரச்னையை எழுப்பும் முயற்சிகள் அனைத்தையும் எதிர்த்ததையும் ஞாபகப்படுத்திக் கொண்டால் போதும். முதல் உலக யுத்தத்துக்கு முன்னாலேயே ஜெர்மன் சோஷியல் டெமாக்ரடிக் கட்சியிலும் தொழிற்சங்கங்களிலும் ஏகாதிபத்ய போக்குகள் பிரதிபலித்ததை நினைவூட்டிக் கொண்டால், ஜெர்மன் தொழிற்சங்கங்களுக்கு மார்க்ஸிஸம் ஒரு விலாசப் பலகையாகவே இருந்ததென்ற முடிவுக்குவர அதுவே போதுமானது.

போலி மார்க்ஸிஸ்டுகள் எதை ஒளித்துவைக்க முயற்சித்தார்களோ அதையே முதல் உலக யுத்தம் அம்பலப்படுத்தியது. ஏகாதிபத்திய ஜெர்மனியை தங்கள் தாய்நாடாகக் கருதினார்கள் அவர்கள். ஏகாதிபத்திய தாய்நாட்டின் வெற்றியை துரிதப்படுத்தும் பொருட்டு, தொழிலாளி மக்களிடையே கிளர்ச்சிசெய்தார்கள், ஸ்தாபனரீதியாகத் திரட்டினார்கள். போர்முனைக்கு பீரங்கித் தீனிகொண்டுபோகும் பிரசார வாகனங்களாக விளங்கினார்கள்.

மார்க்ஸ் வர்க்கப்போராட்டத்தைப்பற்றிப் பேசினார், எழுதினார். தொழிலாளி வர்க்கத்தை தனக்கென வாழும் வர்க்கமாக மாற்ற, அதை பூர்ஷுவாக்களின் செல்வாக்கிலிருந்தும் பிடிப்பிலிருந்தும் விடுவிக்க தன் வாழ்நாட்களை அர்ப்பணித்தார் மார்க்ஸ். வர்க்கப்போராட்டத்துக்கு பதிலாக வர்க்க ஒத்துழைப்பை மேற்கொண்டார்கள் ஜெர்மன் போலி மார்க்ஸிஸ்டுகள். "முதலாளித்துவ பொருளாதாரத்தின் நிர்வாகத்தில் கலந்துகொள்வதை"ப் பற்றி ஒரு முழு சித்தாந்தத்தையே உருவாக்கினார்கள். ஜெர்மன் சீர்திருத்தவாத தொழிற்சங்க இயக்கத்துக்கு பரிந்துபேசும் நீஸ்டிரீப்க் என்பவர் எழுதுகிறார் :—

"தொழிலில் வேலைசெய்யும் பாக்டரி தொழிலாளிகளுக்கும் ஆபீஸ் சிப்பந்திகளுக்கும், தொழிலாளிகளை வேலைக்கெடுத்துக் கொள்ளும் பிரச்னையையும், வேலையிலிருந்து விலக்கும் பிரச்னையையும் தீர்மானிக்க, உரிமை யளிக்க வேண்டுமென்று, கொள்கைரீதியில், தொழிற்சங்கங்கள் கோரவேண்டும்...... அதே சமயத்தில், தொழிலின் லாபம் அளிக்கும் சக்தியை பாதிக்கும் முறையிலோ, தொழிலின் உண்மையான பணிக்கு குந்தகம் விளைவிக்கும் முறையிலோ இந்த நிர்வாகத்தில் கலந்துகொள்ளும் உரிமை தவறாக உபயோகிக்கப்படாமல், தொழிற்சங்கங்கள் உஷாராயிருக்கவேண்டும்".

"தொழிலின் பொருளாதார நிர்வாகத்திலும் யந்திர நுணுக்க நிர்வாகத்திலும் தொழிலாளர்கள் கலந்துகொள்கிறார்கள்" என்ற சாக்கில், முதலாளித்துவ உபரிமதிப்பின் பாதுகாவலர்களாக தொழிற்சங்கங்கள் ஆக்கப்படுகின்றன.

வர்க்கப்போராட்டத்தைப்பற்றிய மார்க்ஸின் போதனைகளெல்லாம், தொழிற்சங்கங்கள் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்ட கருவிகள் என்ற போதனையெல்லாம், மறைத்துவிட்டு அதற்கு பதிலாக, தொழில் ஜனநாயக சித்தாந்தம், பொருளாதார ஜனநாயக சித்தாந்தம், உற்பத்தி சாதனங்களை முதலாளிகளின் தனிசொத்துக்களாக விட்டுவைத்தபின், முதலும் தொழிலும் சமத்துவமாயிருக்கவேண்டுமென்று பேசும் சித்தாந்தம் அரங்கேற்றப் படுகிறது. தேசீய பொருளாதார அமைப்பில் தொழிலாளிவர்க்கம் 'பங்கெடுத்தால்', முதலாளித்துவ பொருளாதாரத்தை பாது காப்பதிலும், முதலாளித்துவத்துக்கு சாவுமணியடிக்க விரும்பும் சக்திகளிடமிருந்து காப்பாற்றுவதிலும் அதற்கு சிரத்தை இருக்கும். இந்தவிதமாகத்தான், தொழிற்சங்கங்கள் பூர்ஷுவா வர்க்கத்தின் தோழர்களாகின்றன; புரட்சிகரமான தொழிலாளர் இயக்கத்தை நசுக்கவும், முதலாளித்துவ அதிகாரத்தை எதிர்த்து கலகம் செய்பவர்களை அடக்கவும் பூர்ஷுவா வர்க்கத்துக்கு உடந்தையாகின்றன.

தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்ற பிரச்னையை எழுப்பியது மார்க்ஸ்; ஆனால் பலவருஷ காலமாக, பிரோலிடேரியட் சர்வாதிகாரம் என்பது மாஸ்கோவின் சிருஷ்டி என்று நிரூபிக்க ஜெர்மன் 'மார்க்ஸிஸ்டுகள்' முயற்சித்து வருகிறார்கள்; பூர்ஷுவா ஜனநாயகம் ஒன்றுதான் தொழிற்சங்கங்களுக்கு சம்மதமான அரசாங்க உருவம் என்று வாதிக்கிறார்கள். அரசாங்கம் என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கும் கருவி என்று மார்க்ஸ் போதித்தார். ஆனால் ஆஸ்ட்ரியாவிலும் ஜெர்மனியிலும் தொழிற்சங்கங்களுக்கு தலைமை தாங்கிய போலி மார்க்ஸிஸ்டுகள், ஜனநாயக அரசாங்கம் வர்க்க பேதங்களுக்கு அப்பாற்பட்டதென்றும் முதலுக்கும் தொழிலுக்குமிடையேயுள்ள மோதுதல்களை மத்தியஸ்தம் செய்து வைக்கும் கருவியாக எதிர்காலத்தில் விளங்குமென்றும் நிரூபிக்க முயற்சித்து வருகின்றனர்.

பிடிவாதமான போராட்டம் மூலமே சகலவித போராட்டங்களையும், குறிப்பாக ஸ்ட்ரைக்குகளை புதிய புதிய சிகரங்களுக்கு வளர்ப்பதன் மூலமே, பிரோலிடேரியட் பூர்ஷுவா வர்க்கத்திட

மிருந்து எதையும் பறிக்க முடியுமென்று மார்க்ஸ் ருசுப்பித்தார். இந்த கொள்கை காலத்துக்கு ஒவ்வாத பழமையாகி விட்டதாக ஜெர்மன் போலிமார்க்ஸிஸ்டுகள் வாதிக்கிறார்கள்; "ஸ்ட்ரைக்குகள் ஆபத்தானவை" என்றும், "பிர்மாண்டமான தொழில்கள், முதலாளிகள் சங்கம் முதலிய அங்கங்களுடைய நவீனயந்திரத் தொழில் வளர்ச்சியடைந்திருக்கும் தேசத்தில், ஸ்ட்ரைக்குகள் அதிக ஆபத்தானது' (யாருக்கு? ஆ-ர்) என்றும், வளர்ச்சியடைந்த நிகழ்கால பொருளாதார சூழ்நிலையில், நவீன தொழிற் சங்கங் களிடையே (தொழிற்சங்க அதிகார வர்க்கத்திடையே என்பது பொருந்தும்! ஆ-ர்) போராட்ட ஆர்வம் குறைவாகவே இருக்கும் "என்றும்" வளர்ச்சியடைந்த பொருளாதார அமைப்பில், பொருளாதாரப் போராட்டம், முதலில் சமரச சம்பாஷணைகள் மூலம், ஆழம்பார்த்து பேரம் பேசுவதன் மூலம், காத்திருந்து பார்ப்பதன் மூலம் நடத்தப்படுகிறது" என்றும் அவர்கள் கூறு கிறார்கள். இறுதியாக, இந்த முத்துக்களிலே வெண் முத்து இதுதான் :—

"புதிய கோரிக்கைகளைக் கேட்பதில் ஒரு ஸ்தாபனம் எவ்வளவு அதிகமாக ஜாக்கிரதையாயிருக்கிறதோ, இந்த கோரிக் கைகளுக்காக எவ்வளவு அதிகமான உறுதியுடன் போராடுகிறதோ எவ்வளவு அபூர்வமாக ஸ்ட்ரைக் முறையை அனுஷ்டிக்கிறதோ அவ்வளவு சீக்கிரம், போராட்டமில்லாமல் கூட அதிக வெற்றி களைப் பெறமுடியும்."

ஆக, போராட்டமில்லாமல் தொழிலாளி வர்க்கம் ஒன்றும் ஜெயிக்க முடியாது என்று மார்க்ஸ் கருதியது தவறாகத் தோன்று கிறது. ஜெர்மன் தொழிற்சங்க வாதிகள் அதை நிராகரிக்கின் றனர். உஷார்! போராட்டமில்லாமலே வெற்றி பெறுவது அவர்கள் கவலை. "யுத்தத்துக்கு சமானமான தொன்றுமில்லை" என்று பிரசித்தி பெற்ற ராணுவதந்திர எழுத்தாளர் கிளாஸ்விட்ஸ் கூறினார். ஆனால் போராட்டமில்லாமல் வெற்றிகளைப்பெற முயற்சிக்கும் புதிய முறையை ஜெர்மன் தொழிற்சங்க வாதிகள் சிருஷ்டித்து விட்டார்கள்! இந்த தந்திரத்தின் அதிசயிக்கத் தக்க விளைவுகளைப்பற்றி யாராவது சந்தேகப்பட்டால், ஜெர்மன் சரித் திரத்தை படித்து பார்க்கட்டும்! பதினாலு வருஷகாலம் கிடைத்த இத்தகைய வெற்றிகளின் விளைவாக ஹிட்லர் பதவிக்கு வந்திருப் பதைப் பார்த்து சந்தேகத்தை தீர்த்துக்கொள்வார்கள்.

இந்த போலி மார்க்ஸிஸ்ட்கள் எங்கு போய் முடிந்தார் களென்பதற்கு சில உதாரணங்களைப் பார்ப்போம். ஜெர்மன்

தொழிற்சங்கங்களின் ஹாம்பர்க் காங்கிரஸில் (1928) அதன் தலைவர்களில் ஒருவரான ஸப்டாலி என்பவர், "ஏழ்மையை அதிகமாக்கும் முதலாளித்துவப் போக்கை எதிர்த்து முறியடிப்பதில், தொழிற்சங்க இயக்கம் வெற்றியடைந்து விட்டது" என்று பிரகடனம் செய்தார். "இப்பொழுது தொழிலாளிவர்க்கத்தின் எழுச்சியை நாம் பார்க்கிறோம்" என்றார். அகில ஜெர்மன் தொழிற்சங்க சம்மேளனத்தின் தத்துவகர்த்தாவான டார்னவ் கூறினார் :—

"நாம் அனுபவ ராஜதந்திரிகள் (யதார்த்த வாதிகள்—மொ-ர்) தொழிலாளர் இயக்கத்தில் ஒரு காலத்தில் ஆதிக்கம் வகித்த பழைய கண்ணோட்டத்துக்கும் நமது கருத்துக்கும் வித்தியாசமுண்டு. முதலாளித்துவத்தின் போக்கைப் பற்றிய அந்த கண்ணோட்டம், ஒரு காலத்தில் உண்மையாயிருந்த போதிலும், இன்று உயிரிழந்த தத்துவமாகி விட்டது. பழைய கொள்கை (மார்க்ஸிஸம் ஆ-ர்) பொறுப்பை தட்டிக்கழிக்கும் கொள்கையாக யிருந்தது......தொழிலாளர் நிலைமையைப்பற்றி முன்னர் பரவியிருந்த கருத்துகளைவிட அதிக நம்பிக்கையுடைய கருத்துகளை நாம் தொழிலாளி மக்களிடம் புகட்டி வருகிறோம்."

போராடு! அப்பொழுதுதான் ஏதாவது வெற்றியடைய முடியும்! என்பது மார்க்ஸின் பழைய கொள்கை. நவீன கொள்கை சொல்கிறது...போராடாதே, காத்திரு, பொறு, உனக்கு அதிகமாகக் கிடைக்கும், "ஏன் ஏழைகளாயிருக்க வேண்டும்" என்ற டார்னேவ் புத்தகத்திலிருந்து ஒரு அபூர்வ கருத்தை கீழே தருகிறேன் :—

"ஏழ்மை என்பது பொருளாதார ரீதியில் அவசியமில்லை. அது ஒரு சமூக வியாதி. முதலாளித்துவ பொருளாதார அமைப்புக்குள்ளேயே அதை சொஸ்தம் செய்துவிடலாம் என்பதில் சந்தேகமில்லை."

நூற்றுக்கு நூறு உண்மை. பூர்ஷுவா வர்க்கத்தின் முகாமுக்கு போய் உல்லாசமாக வாழலாமென்றால், ஏன் ஏழையாயிருக்கவேண்டும்? டார்னேவின் புத்தகம் அமெரிக்க விளம்பரம் ஒன்றை நினைவூட்டுகிறது. "பாலுண்ணியால் ஏன் கஷ்டப்பட வேண்டும்?" என்று அந்த விளம்பரம் வினா விடுத்து, விடையும் தந்தது. அந்த வியாதியை 50 ஸெண்டுகளில் சொஸ்தம் செய்து விடலாமென்று மகாஜனங்களுக்கு தெரிவித்தது. ஆம். "முதலாளித்துவ அமைப்பின் எல்லைக்குள்ளேயே" அந்த வியாதியை

தீர்க்க முடியுமென்றது. ஜெர்மன் தொழிற்சங்க இயக்கத்தில், இத்தகைய பாலுண்ணி வைத்திய தத்துவாசிரியர்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் ஏழ்மையை தீர்த்துக்கொண்டு விட்டனர்.

ஜெர்மன் தொழிற்சங்க அதிகாரிகளிடையே கூறப்படும் ஒரு சிறுகதை இங்கு ஞாபகத்துக்கு வருகிறது:—டிரீவ்ஸ் என்ற மார்க்ஸின் பிறப்பகத்துக்கு போன ஸ்வீடிஷ் அரசியல் பொருளாதார நிபுணருக்கு, மார்க்ஸின் வீட்டைக் காண்பிக்கக்கூட யாருமில்லை; செங்கொடி பறந்த வீட்டைக் கண்டு இதுவாய்த்தானிருக்கவேண்டுமென்று அவர் நுழைந்தபோது, "இல்லை; இது மார்க்ஸின் வீடு அல்ல; தொழிற்சங்க ஆபீஸ் இது. மார்க்ஸ் பிறந்த குடிசை தொழிற்சங்கங்களுக்கு மிகவும் சிறியது. அது அதோ பக்கத்தில் இருக்கிறது" என்று பதில் வந்தது.

இந்த கதையை ஜெர்மன் மரம்வெட்டும் தொழிலாளர் காங்கிரஸில், பேராசிரியர் நோல்டிங் என்பவர் கூறினர். கூறிவிட்டு அவர் விமர்சனம் செய்தார்:—

"தொழிற்சங்கங்களுக்கும் மார்க்ஸின் போதனைகளுக்கும் இன்றைக்கும் உள்ள அன்னியோன்யத்தை இந்த கதை நன்கு காட்டுகிறது. (குடிசைக்கு பக்கத்தில் சங்கம் இருக்கிறது மொ-ர்) மறுபுறத்தில், தொழிற்சங்கங்களுக்கு மார்க்ஸுக்கு அப்பால் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது......முதலாளித்துவத்துக்கும் சோஷியலிஸத்துக்கும் ஒரு இடைக்காலம் இருக்கிறதென்றும், அந்த இடைக்காலத்துக்கு மூன்று குணதிசயங்கள் உண்டென்றும் நான் நம்புகிறேன். அவைகளாவன: அரசியல் ரீதியில் கூட்டு சர்க்கார்கள் (பூர்ஷுவாக்களுடன் மொ-ர்); சட்ட ரீதியில், தொழிலாளர் உரிமைகள்; பொருளாதார ரீதியில், யந்திரத்தொழில் ஜனநாயகம், பொருளாதார ஜனநாயகம். முதலாளித்துவத்தின் சுவர்கள் வளைந்து நெகிழ்ந்துகொடுக்கக்கூடியவை என்றும், முதலாளித்துவ சூழ்நிலையில், பெரிய அளவு வளர்ச்சி காணமுடியுமென்றும் தொழிற்சங்கங்கள் கருதுகின்றன; இந்த கருத்துகளே அவர்கள் நடவடிக்கைகளை உருவாக்குகின்றன".

இப்பொழுது எல்லாம் தெளிவாகிவிட்டது. அவர்கள் மார்க்ஸுக்கு அப்பால் போய்விட்டார்கள். மார்க்ஸின் வீடு ஜெர்மன் தொழிற்சங்கங்களின் வறட்டு அதிகாரிகளுக்கு குறுகியதாகிவிட்டது. ஆம்! ஹிண்டன்பர்க், ஹிட்லர், ப்ருனிங்

ஆகியோருடைய மாளிகை பெரியவை. அகில ஜெர்மன் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவன் லீபார்ட் இந்த பணக்காரர்கள் மாளிகைகளில் சேவகம் செய்ய முன்வந்தது தற்செயலாய் நேர்ந்ததல்ல; ஜெர்மன் முதலாளிகள் சங்கத் தலைவர் பார்ஸிக் குடைய வீடு மிகப்பெரிய மாளிகை. ஆகவே, பார்ஸிக் இறந்த வுடன், "கண்ணியமான கனவான்" இறந்துவிட்டாரேயென்று துக்கம் விசாரித்து தந்தி அடித்தார் லீபார்ட். இதெல்லாம் மார்க் ஸிஸமானால், மானங்கெட்ட துரோகம் என்பது எது? தொழிலா ளர் இயக்கத்தின் சர்வசாதாரணமான கொள்கைகளைக்கூட துறந்துவிட்டார்களே, இதற்கு காரணம் என்ன? பொதுமக்க ளிடமுள்ள பயம், புரட்சியைக் கண்டு பயம். ஹிட்லர் பதவிக்கு வந்தபிறகு, இந்த வறட்டு அதிகாரிகளிடம் பயம் அதிகமாயிற்று. ஹிட்லர் எதிர்ப்பு ஐக்கிய முன்னணிவேண்டும், கம்யூனிஸ்டுகளு டன் சேர்ந்துநிற்கவேண்டுமென்று சீர்திருத்தவாத தொழிற்சங்க தலைமையிலுள்ள பொதுமக்களே கோரினார்கள். இதற்கு தலைமை என்னசெய்தது. 1933, பிப்ரவரி 20ல், இவர்கள் பீல்ட்மார்ஷல் ஹிண்டன்பர்க்குக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தின் ஒரு பகுதி கூறியதாவது:—

"ஜெர்மன் அரசாங்க ஜனாதிபதி என்றமுறையில், அரசாங்க சட்டத்தை பாதுகாக்க கடமைப்பட்டுள்ளவர் என்ற முறையில், பாதுகாக்க விரும்புபவர் என்ற முறையில், உங்களை வேண்டு கிறோம். யுத்தத்தில் போராடியவர்களில் பெரும்பான்மையோர் ஒன்றுபட்டிருக்கும் ஸ்தாபனத்தின் பெயரால் உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். இந்த லட்சோப லட்சக் கணக்கான வரில் பல்வேறு அரசியல் கட்சிகளை ஆதரிப்பவர்கள் இருக்கின்ற னர். இவர்கள் உலக யுத்தகாலத்தில் போராடி, ஜெர்மனிக்காக ரத்தம் சிந்தியது, அரசாங்கத்தை உருவாக்கும் சக்திகளுடன் சம் பந்தமில்லையென்றும், தேச ஜனங்களின் ஒரு பகுதியாக அங்கீ கரிக்கமாட்டோமென்றும் 15 வருஷங்களுக்குப்பின், பொறுப் புள்ள ஜெர்மன் அதிகாரிகள் சொல்வதை அனுமதிப்பதற்கல்ல. யுத்தவீரர்களை—அவர்கள் எந்த அரசியல் கட்சிகளாயிருந்தா லும் சரி—இரண்டாம் தர ஜெர்மன்கள் என்று சொல்வதற்கு துணிவுடைய அந்தஸ்து ஜெர்மனியில் யாருக்கும் கிடையாது.

ஸ்ரீமான் ஜனாதிபதியே, உலக யுத்தத்தின் ராணுவக் தளபதி யாகிய நீங்கள் போர்முனையில் போராடிய வீரர்களுக்கு இழைக் கப்படும் அகௌரவத்தை எதிர்த்து உங்கள் சக்திக்குட்பட்ட சகலமுறைகளிலும் போராடுவீர்களென்று நாங்கள் நம்புகிறோம்".

ஜெர்மன் சீர்திருத்த தொழிற்சங்கங்களின் பிரகடனங்களில் கூட இதைப்போன்ற மானங்கெட்ட தஸ்தவேஜி வேறொன்றைக் காணமுடியாது- முதலில், ஹிட்லரைப்பற்றி ஹிண்டன்பர்க்கிடம் புகார் கூறுவது, பேயைப்பற்றி அதன் பாட்டியிடம் புகார் செய்வதற்கொப்பாகும். ராணுவ தேசீய சாதனையைக் காட்டி, பாஸிஸ்ட் சூறைகளை எதிர்க்க முற்படுவது பரிதாபகரமாயிருக்கிறது. இந்த விதத்தில்தான், ஜெர்மன் போலி மார்க்ஸிஸ்டுகள் ஒரு சரணாகதியிலிருந்து இன்னொரு சரணாகதிக்கு இறங்கி, இறுதியில் ஜெனரல் ஹிண்டன்பர்க் பாதார விந்தங்களிலேயே விழுந்து தண்டனிட்டார்கள்.

இவற்றிற்கு காரணமென்ன? பொதுமக்களிடம் பயம். புரட்சியைக் கண்டு பயம்.

தற்காலத்திய 'முற்போக்கு கட்சி'யைப்பற்றி லஸ்ஸால் ஒரு தடவை கூறினார்:—"அதன் முக்கியமான அடிப்படை விதி என்னவென்றால் புரட்சியைக் கீழிருந்து கொண்டுவருவதல்ல; அதைவிட மேலேயுள்ள கொடுங்கோன்மையே மேலெனக் கருதியது. இரண்டாவது [1] இண்டர்நாஷனலையும் [2] ஆம்ஸ்டர்டாம் இண்டர்நேஷனலையும் ஆதரித்த போலி மார்க்ஸிஸ்டுகளுடைய கொள்கையும் இதுதான்.

ஜெர்மன் மார்க்ஸிஸ்டுகளும் ஆஸ்டிரிய மார்க்ஸிஸ்டுகளும், பரம்பரைக்கு கட்டுப்பட்டு மார்க்ஸிஸ்ட் உடைகளை டம்பமாக அணிந்துகொண்டு, ரகசிய முறைகளிலிருந்து பகிரங்கமாக தாக்க முன்வந்து, மார்க்ஸின் போதனைகளை நாசம் செய்யும்போதே, அது பெற்றெடுத்த அனார்க்கிஸமும் அனார்க்கோ-ஸிண்டிகலிஸ

---

[1] இரண்டாவது இண்டர்நேஷனல்: 1889-ல் ஸ்தாபிக்கப்பட்டது. முதல் யுத்தத்துக்கு முன், முதலாளித்துவ வளர்ச்சி கட்டத்தில், முதலாளித்துவத்தின் பயங்கரமான முரண்பாடுகள் நிதர்சனமாவதற்கு முன் வளர்ந்தது. முதலாளித்துவத்துக்கு சரணடையும் சந்தர்ப்பவாதமே அதன் தலைமையின் தத்துவம்; 1914-18 ஏகாதிபத்திய யுத்தத்தில், தொழிலாளருக்கு துரோகம் செய்தது ஏகாதிபத்திய முதலாளிகளின் ஷாவினிஸத்துக்கு பிரசாரக் கருவிகளாக விளங்கியது. பின்னல், சோஷ்யல்-பாஸிஸ்டுகளாக மாறினார்கள் அந்த தலைவர்கள்.

இந்தியர்களையும், இந்தோனேஷ்யர்களையும், மலேய மக்களையும், சீனர்களையும். பர்மியர்களையும், கிரேக்கர்களையும், எகிப்தியர்

மும் மார்க்ஸ்பேரிலும் அவருடைய போதனைகளின்பேரிலும் பகிரங்கப் போர்தொடுத்தது. ஜெர்மன், பிரெஞ்சு சோஷியலிஸ்டுகளுடைய நடவடிக்கைகளும், அவர்களுடைய பாகத்தைச் சேர்ந்த இதர சோஷியலிஸ்டுகளுடைய சந்தர்ப்பவாத நடவடிக்கைகளும் அவர்களுடைய மார்க்ஸிஸ்ட் கண்ணோட்டத்தால் வந்த வினை என்று அனார்க்கிஸ்டுகளும் அனார்க்கோ ஸிண்டிகலிஸ்டுகளும் கூறினார்கள். சந்தர்ப்பவாதமும், மார்க்ஸிஸத்தின் திரிபும் மார்க்ஸிஸமாக பொதுமக்களிடையே பிரசாரம் செய்யப்பட்டன. பிரான்ஸில் ஒருசில அனார்க்கோ-ஸிண்டிகலிஸ்டுகள் மார்க்ஸை அனார்க்கோ ஸிண்டிகலிஸ்டாக மாற்றப்பார்த்தனர். மார்க்ஸை பௌராணதனுக்கப்பார்த்தனர். பார்லிமெண்டரி வாதத்தை மார்க்ஸிஸத்துடன் குழப்பக்கூடாதென்பது உண்மைதான். வர்க்கப் போராட்டத்தையே எதிர்காலம் பொறுத்திருக்கிறது என்று மார்க்ஸிஸம் போதிப்பதும் உண்மைதான். ஆனால் அனார்க்கிஸ்டுகள் தொழிற்சங்கங்களில் சேருவதும், அனார்க்கோ ஸிண்டிகலிஸ்ட் தத்துவமும் நடைமுறையும் உருவாவதும் மார்க்ஸிஸத்துக்கு கீர்த்தியளிக்காது. அதிகாரத்தை கைப்பற்றவேண்டுமென்றும், புராலிடேரியட்டின் சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்றும் மார்க்ஸ் கூறுகிறார். ஆனால் இந்த உண்மையை, மார்க்ஸிஸத்தின் புரட்சிகரமான கருப்பொருளை, அனார்க்கிஸ்டுகளும் அனார்க்கோ-ஸிண்டிகலிஸ்டுகளும் தெரிந்தும் தெரியாமலும் மறந்துவிட்டனர். மார்க்ஸிஸத்தின் ரத்தக்குழாய்களில் அனார்க்கோ-ஸிண்டிகலிஸ்ட் ரத்தத்தை ஏற்றுவதில் அவர்கள் முயற்சி தோற்றுவிட்டது.

---

களையும், யூதர்களையும், அரபுகளையும், வியத்நாமியர்களையும், சுட்டுக்கொல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட, ஈடுபட்டுவரும் பெவின்-அட்லி கோஷ்டியும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களே. (மொ-ர்.)

2 **ஆம்ஸ்டர்டாம் இண்டர்நேஷனல்:** இரண்டாவது இண்டர்நேஷனலின் தலைமைக் காரியாலயம் ஆம்ஸ்டர்டாம் நகரத்திலிருந்ததால், இரண்டாவது இண்டர்நேஷனலை ஆம்ஸ்டர்டாம் இண்டர்நேஷனல் என்றும அழைப்பதுண்டு. இரண்டாவது இண்டர்நேஷனலை சோஷ்யலிஸ்ட் இண்டர்நேஷனல் என்றும் சோஷ்யல் டெமோக்ரடிக் இண்டர்நேஷனல் என்றும் அழைப்ப துண்டு. (மொ-ர்.)

புரட்சிகரமான ஸிண்டிகலிஸத்துக்கும் புரட்சிகரமான மார்க்ஸிஸத்துக்குமுள்ள உறவு என்ன? பூர்ஷுவா வர்க்கத்துடன் ஒத்துழைப்பதை, சட்டசபை மூலம் சாபல்யமடையலாமென்ற பார்லிமெண்டரி வாதத்தை, இரண்டும் கண்டித்தன. ஆனால் இதிலிருந்து புரட்சிகரமான ஸிண்டிகலிஸம் என்ன முடிவுக்கு வந்தது? அரசாங்கத்திலும் சட்டசபை தேர்தல்களிலுமே தீமை அடங்கியிருப்பதால், சட்டசபை தேர்தல்களை பகிஷ்கரித்தோமானால், எல்லா சர்வாதிகாரங்களையும் நிராகரித்தோமானால், பிரச்னை தீர்ந்துவிடும் என்றது. புரட்சிகரமான மார்க்ஸிஸம் என்ன முடிவுக்கு வந்தது? சட்டசபையையும் சட்டசபை தேர்தல்களையும் புரட்சிகரமான முறையில், பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதியது; பூர்ஷுவா அரசாங்கத்தை நாசம் செய்துவிட்டு, தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை இடைக்காலத்தில் (எதிர்ப்புரட்சி சக்திகளை ஒழித்து வர்க்கபேதமில்லாத சமூகத்தை, அரசாங்கமில்லாத சமூகத்தை உருவாக்கும் இடைக்காலத்தில்) பெயர் அமைக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தது. அரசியல் நடவடிக்கையை நிராகரிப்பதன் மூலம், புரட்சிகரமான ஸிண்டிகலிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியே அவசியமில்லை யென்றனர்; தொழிற்சங்கம் மாத்திரம் போதுமென்ற அனார்க்கோஸிண்டிகலிஸ்ட் முடிவுக்கு வந்தனர். அரசாங்கமே கூடாது, தொழிலாளி வர்க்கம் ஆயுதம் தாங்கி, அடக்கும் வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதையும் வேண்டாமென்றனர். அதற்கு பதிலாக, வேலைநிறுத்தம் செய்துவிட்டு கைகட்டி சும்மாயிருக்குமாறு கூறினார்கள். முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை தெரிந்துகொள்ளாமல் "சமூக அமைதி" என்ற கொள்கையை சிருஷ்டித்தார் **ஸோரல்** (பிரெஞ்சு அனார்க்கோஸிண்டிகலிஸ்ட் தத்துவாசிரியர்) பலாத்காரமே அவசியமில்லை என்றார். அவர் தோழர்களும் சிஷ்யர்களும் புரட்சிப் பதங்களை திரையாக உபயோகித்துக்கொண்டு, சீர்திருத்தவாதக் கருத்துகளை உபதேசித்தனர். **எட்வேர்ட்பர்ட்** என்பவர் மார்க்ஸைப் போல, பிரௌதனும் அனார்க்கோஸிண்டிகலிஸ்ட் தத்துவத்தின் "முன்னோடியாக" விளங்கியதாகக் கூறினார். மார்க்ஸின் தொழிலாளிவர்க்க கொள்கையையும் பிரௌதனின் நடுத்தர வர்க்க கொள்கையையும் ஒன்று சேர்த்தால், தத்துவரீதியில் குழப்பமே மலியும், அரசியல் கொள்கை தவறாகத்தானிருக்கும். முதல் உலக யுத்தத்துக்கு முன்பிருந்த பிரெஞ்சு அனார்க்கோஸிண்டிகலிஸமே இதற்குசான்று. "பரஸ்பரமான இடதுசாரி"

உடை அணிந்து நின்ற அனார்க்கோஸிண்டிகலிஸம், ஏகாதிபத்திய யுத்தத்தில், ஸோஷியலிஸ்ட் இண்டர்நேஷனலை பின்பற்றியது; ஏகாதிபத்திய யுத்தத்தை பின்பற்றியது. மார்க்ஸிஸத்தின் வலதுசாரி திரிபுகளும் இடதுசாரி திரிபுகளும் தத்துவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஐக்கியப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டது. மார்க்ஸிஸத்தின் கௌரவமும், சர்வதேச தொழிலாளர் இயக்கத்தின் கௌரவமும், தம் புரட்சித் தன்மையைப்பற்றி ஜம்பம் பேசிய அனார்க்கோஸிண்டிகலிஸ்டுகளால் பாதுகாக்கப்படவில்லை; "மார்க்ஸிஸம் என்ற கருங்கல்மேல் எழுப்பப்பட்ட" (லெனின்) போல்ஷிவிஸத்தால் (ரஷ்ய கம்யூனிஸத்தால்) பெயர் காப்பாற்றப்பட்டது.

புரட்சிகரமான அனுபவம் என்ற உலையில் புரட்சிகரமான மார்க்ஸிஸத்தையும் (ஸோவியத் யூனியன்), சீர்திருத்த வாதத்தையும் (ஜெர்மனி), அனார்க்கோஸிண்டிகலிஸத்தையும் (ஸ்பெயின்) பரீட்சை செய்வதை சரித்திரம் சாத்தியமாக்கிவிட்டது. அனுபவத்தின் அடிப்படையில் அவைகளின் சித்தாந்தங்களையும் கொள்கைகளையும் சோதிக்க மூன்று புரட்சிகள் இருக்கின்றன. ஸோவியத் யூனியனில், ஐந்து வருடத் திட்டம், புரட்சிகரமான மார்க்ஸிஸ்ட் கொள்கையின் அனுஷ்டானத்தால், வெற்றிகரமாக முடிந்து விட்டது. ஜெர்மனியில், 14 வருஷ சோஷியல்—டெமாகிரடிக் கொள்கையின் விளைவாக, தொழிலாள வர்க்கம் பாஸிஸ்ட் அதிகாரக்கோலின் ரத்தவெறி பிடித்த ஆட்சியில், பயங்கரமான தாக்குதலுக்குட்பட்டு, துன்பதுயரங்களில் அழுந்திக் கிடக்கிறது. இறுதியாக, பெருவாரியான ஸ்பானிஷ் தொழிலாளி மக்களுக்கு வழி காட்டிய அனார்க்கோஸிண்டிகலிஸ்டுகள், தொழிலாளி வர்க்கத்துக்கு தோல்வி பெற்றுத் தருகின்றனர். அவர்களில் ஒரு பகுதி பகிரங்கமாக பூர்ஷுவா குடியரசை ஆதரிக்கிறது, மறுபகுதி தன் கொள்கையின் மூலம் தொழிலாளி வர்க்கத்தை பிளவுபடுத்தி, தொழிலாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் அடக்குவதற்கு முதலாளி வர்க்கத்துக்கு வசதி செய்கிறது. (இது 1939-ம் வருஷ நிலைமையைக் குறிக்கிறது மொ-ர்.) இவை யதார்த்த உண்மைகள், மறுக்க முடியாத உண்மைகள். இதன்பின், அனார்க்கோஸிண்டிகலிஸ்ட் தலைமையிலுள்ள ஸ்பானிஷ் தொழிலாளர் சம்மேளனம் மார்க்ஸிஸத்தைப்பற்றி பிரலாபிப்பதில் பயனென்ன? இந்த பத்திரிகை எழுதுவதாவது:—

"சோஷியல் டெமாக்ரஸி என்பது மார்க்ஸிஸத்தின் சிருஷ்டி. அதன் கம்யூனிஸ்ட் புத்திரர்கள் அதை சோஷியல் பாஸிஸம் என்று அழைக்கின்றனர். கம்யூனிஸம், அது விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சோஷியல் பாஸிஸத்தின் உண்மையான புத்திரனே."

இந்த அனார்க்கிஸ்ட் புத்திசாலித்தனத்தைப் பாருங்கள்! சோஷியல்டெமோக்கிரட்டுகள் மார்க்ஸிஸ்டுகள்; கம்யூனிஸ்டுகள் மார்க்ஸிஸ்டுகள்; அதனால் ஸோஷியல் டெமாக்ரட்டுகளும் கம்யூனிஸ்ட்களும் ஒன்றுதான். இந்த வாதம் ஒரு பிரபல எண் கணித சூத்திரத்தை நினைவூட்டுகிறது. "அரைவாசி உயிரிழந்திருந்தால், அது அரைவாசி உயிருடனிருப்பதற்கு சமம்; அதனால் இறந்தவர்களும் உயிருடனிருப்பவர்களும் ஒன்றே" என்ற சரித்திரம்! போலி மார்க்ஸிஸ்டுகளையும் மார்க்ஸிஸ்டுகளையும் "ஒரு கூடை செங்கல் அத்தனையும் பிடாரி" என்று கூறுகிறார்!

இதே பத்திரிகையில் மாக்ஸிம்லிபர்ட் என்ற அனார்க்கோ ஸிண்டிகலிஸ்ட், "போல்ஷிவிக் போலி புரட்சிக்காரர்களால் சிருஷ்டிக்கப்பட்ட சிவப்பு ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கை"ப் பற்றி எழுதுகிறார். ஸோவியத் சர்வாதிகாரி (லெனின்)க்கும் தொழிலாளர்களை சுட்டுக்கொன்ற பழைய கொடுங்கோல் மன்னர்களுக்கும் வித்தியாசமில்லை யென்கிறார்.

இந்த அவதூறுபற்றி என்ன சொல்வது? ஜமீன்தார்களையும் முதலாளிகளையும் சுட்டுக்கொல்லும் சர்வாதிகாரத்துக்கும் தொழிலாளிகளை சுட்டுக்கொல்லும் சர்வாதிகாரத்துக்கும், அனார்க்கிஸ்டுகள் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை.

கம்யூனிஸ்டு இயக்கத்தை தாக்கும்பொழுது, அனார்க்கோ ஸிண்டிகலிஸ்டுகள், முக்கியமாக தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை தாக்குகின்றனர். ஆகவே நாம் மீண்டும் கேட்கிறோம்:— ஸ்பானிஷ் தொழிலாளி வர்க்கம் அபூர்வமான வீரத்துடன் போராடியும், தன்னலமற்ற தியாகம் செய்தும், அசாதாரணமான போர்க்குணத்தை வெளிப்படுத்தியும், ஏன் புரட்சிக்காரர்களென்று கூறிக்கொள்ளும் அனார்கோஸிண்டிகலிஸ்டுகளால் பூர்ஷுவா வர்க்கத்துக்கு ஒரு அடிகூட கொடுக்கமுடியவில்லை! பொழுது விடிந்ததுமுதல் பொழுதுபோகும் வரையில், மார்க்ஸிஸத்தைப்பற்றி, வாயாடுவதால் பயனில்லை. ஸ்பானிஷ் தொழிலாளி வர்க்கம் முன்னேற முடியாததற்கு காரணம் நமக்கு தெரி

யும். சீர்திருத்தவாதிகள் மாத்திரமல்ல, அனார்க்கோ ஸிண்டிக லிஸ்டுகளும் இதற்கு ஜவாப்தாரி.

தத்துவ சாஸ்திரிகள் என்று சொல்லிக்கொள்ளுபவர் அனை வரும் மார்க்ஸிஸத்தை கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் கம்யூனிஸ்ட் தலைமையிலுள்ள புரட்சிகரமான தொழிற்சங்கங்களுக்கும் எதி ராக உபயோகிக்கப் பார்த்தனர். அவர்கள் மார்க்ஸிஸத்தைத் 'திரித்தார்கள்', 'வடிகட்டினார்கள்', சீர்திருத்த நீரைக்கொண்டு அனார்க்கிஸ்டு ஆத்மார்த்திக வாதத்தைக்கொண்டு அதை நீர்க்கச் செய்தார்கள். ஆனால் மார்க்ஸிஸம் எந்த அயல்பொருள்களுடனும் கலவாது; மார்க்ஸ் வாழ்நாட்களிலேயே, நூற்றுக் கணக்கானவர் கள் அவர் கொள்கைகளை முறியடிக்கப் பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சிகள் 14 மணிநேரம்கூட உயிர்வாழவில்லை. ஒவ்வொரு முயற்சியும் மார்க்ஸிஸத்தை உயர்த்துவதில்தான் முடிந்தது. மார்க்ஸ் இறந்து 50 வருடங்களாகவிட்டன. (இப் பொழுது 64 வருஷங்களாகின்றன—மொ-ர்) ஆனால் மார்க்ஸிஸம் வெல்லமுடியாத சக்தியாக வளர்கிறது. அதன்மீது மோதியவர் களை எல்லாம் சரித்திர வெள்ளம் எங்கோ ஒதுக்கிவிட்டது.

மார்க்ஸிஸத்தை நேரடியான தாக்குதல்மூலம் பூர்ஷுவாவர்க் கத்தால் தோற்கடிக்க முடியவில்லை. அதனால் தொழிலாளர் இயக் கத்துக்குள்ளிருந்தே தாக்கினார்கள். இந்த தாக்குதல் சர்வதேச தொழிலாளர் இயக்கத்தை பலஹீனப்படுத்தியது என்பது உண் மைதான். எனினும் மார்க்ஸிஸத்தைத் திரித்துக் கூறுபவர்களை எதிர்த்து நடத்திய போராட்டத்தில், புரட்சிகரமான மார்க்ஸிஸம் பிரிக்கமுடியாத புரட்சிகரமான கொள்கை—வலுவடைந்தது; வைரம் பாயப்பெற்றது.

மார்க்ஸின் மகத்தான லட்சியத்தின் உரிமையாளர் யார், தொடர்ந்து அதற்கு தொண்டாற்றுவது யார் என்ற கேள்வியின் பதிலை பேச்சிலல்ல, காரியத்தில் தீர்மானிக்கவேண்டும். பேச்சை நம்பி தீர்ப்பளிப்பதென்றால், மார்க்ஸின் அடிப்படைசூத்திரமான வர்க்கப் போராட்டத்துக்கு பதிலாக வர்க்க ஒத்துழைப்பு கொள் கையை கடைப்பிடித்தவர்களை மார்க்ஸிஸ்டுகளாகக் கருதவேண் டும்.

மார்க்ஸிஸம் ஒரு பிடிவாதம் பிடிக்கும் சித்தாந்தமல்ல, கண் மூடித்தனமான சிந்தாந்தமுமல்ல; அது நடவடிக்கைக்கு வழி காட்டி. முதலாளித்துவ எதிர்ப்பு, புரட்சிகரமான நடவடிக்கை

யாக தொழிற்சங்கங்களின் கடமைகளும் தந்திரங்களும் வகுக்கப் பட்டிருக்கின்றன.

வர்க்கப் போராட்டத்துக்கு பதில் வர்க்க ஒத்துழைப்பு வேண்டுமென்றால், புராலிடேரியட்டின் சர்வாதிகாரத்துக்கு எதிராக பூர்ஷுவா ஜனநாயகத்தை உபதேசித்தால் பாஸிஸம் கம்யூனிஸத்தைவிட குறைவான தீமை என்றால் அப்பொழுது தொழிற் சங்கங்களின் கடமைகள் வேறு; ஆனல் வர்க்கப் போராட்டமும் தொழிலாளிவர்க்க சர்வாதிகாரமும் நமது நடவடிக்கைக்கு வழிகாட்டி என்றால், தொழிற்சங்க கடமைகள் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். மார்க்ஸ் யாருடன் இருக்கிறார்? சர்வதேச சங்கத்தில் அமர்ந்திருப்பவர்களை தலைவர்களாகப்பெற்ற ஆம்ஸ்டர்டாம் இண்டர்நாஷனலிலா அல்லது முதலாளித்துவ சிறைகளில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் கஷ்டப்படுகிறார்களே, அவர்களுடைய சிவப்பு தொழிற்சங்கங்களின் இண்டர்நாஷனலிலா? மார்க்ஸை தொடர்ந்து செல்வது யார்? முதலாளித்வத்தை சொஸ்தம் செய்யப்போவதாகக்கூறும் சர்வதேச சீர்திருத்த வாதமா? உடைந்துகொண்டிருக்கும் முதலாளித்துவ அமைப்பை காப்பாற்றும் வழியை கண்டுபிடிப்பதில் மூழ்ந்திருக்கும் சர்வதேசீய சீர்திருத்தவாதியா?. அல்லது தண்டிக்கப்படும், அடக்கப்படும், அதே சமயத்தில் வெற்றி சங்கொலிக்கும் கம்யூனிஸமா? ஆகவே பூர்ஷுவாக்களின் சேவகர்களையும், ஏகபோக முதலாளித்வத்தின் கையாட்களையும் பார்த்துச் சொல்ல நமக்கு உரிமையுண்டு; சொல்கிறோம்—“மார்க்ஸ்பேரிலும் மார்க்ஸிஸத்தின் பேரிலும் உங்கள் அழுக்கடைந்த மிருக நகங்கள் படவேண்டாம்!' என்று.

## பத்தாவது அத்தியாயம்

# மார்க்ஸ், தொழிலாளி வர்க்கத்தின் அமைப்பாளர்

யதார்த்த வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி நிற்பவனே விஞ்ஞானி என்பது சம்பிரதாயக் கருத்து. விஞ்ஞானி, புத்தகங்களிலும் சரித்திர பூர்வமான தஸ்தாவேஜிகளிலும் மூழ்கிக் கிடக்கிறான்; தன் சொந்த 'ஆத்மா'விடமிருந்து ஊக்கம் பெறுகிறான்; கற்பனை போன போக்கில் சிந்தனைகளை பறக்கவிடுகிறான். சாரமில்லாத வாழ்க்கையைப்பற்றி அவனுக்குக் கவலையில்லை. இயற்கையின் தவறுகளைத் திருத்தக்கூடிய அமைப்புகளை அவன் சிருஷ்டிக்கிறான். வாழ்க்கையிலிருந்து விலகி நிற்பதால், விஞ்ஞானம் பாரபட்சமற்றதா யிருக்கிறதென்றும், விஞ்ஞானிகள் நடுநிலைநழுவாதவர்களென்றும், அவர்கள் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டவர்களென்றும் கூறப்பட்டது. இந்த கருத்தை—விஞ்ஞானம் வர்க்கங்களுக்கு பட்சபாதம் காண்பிக்கவில்லையென்றும் விஞ்ஞானிகள் நடுநிலைமை வகிப்பவர்களென்றும் சொல்லப்படும் கருத்தை, தன் விஞ்ஞான, அரசியல் சாதனைகள் மூலம் மார்க்ஸ் உடைத்தெறிந்தார். எத்தகைய ஆத்மீக கோபுர உச்சிகளும், எத்தகைய ஆத்மீக சிகரங்களும்—அவை எவ்வளவு அபூர்வமான பதங்களிடையே பதுங்கியிருந்தபோதிலும் நிர்ணயமான சமூக உறவுகளை பிரதிபலிக்கின்றன. வர்க்கப் போராட்டத்தை கைவிடுவது ஒரு கொள்கையென்றும், அது ஒடுக்கப்பட்ட வர்க்கத்துக்கு பாதகமான, ஆளும் வர்க்கத்துக்கு சாதகமான கொள்கையென்றும் மார்க்ஸ் நிரூபித்தார்.

மார்க்ஸ் ஒரு விஞ்ஞானி; அந்த பதத்தின் தலைசிறந்தபொருள், மிக உயர்ந்த பொருள் அவருக்கே பொருந்தும், தான் எழுதுவதைப்பற்றி சிந்திக்காமல் ஒரு வரிகூட எழுதமாட்டார். விஞ்ஞானம் போராட்டத்திலிருந்து மக்களை வேறு பக்கம் திருப்பிவிடக் கூடாது, போராட்டத்துக்கு உதவவேண்டும் என்பது அவர் கொள்கை. தொழிலாளிவர்க்கத்தின் விடுதலைப்பாதையில் நிறு

வப்பட்டிருக்கும் அரசியல் தடைகளையும், தத்துவரீதியான தடைகளையும் விஞ்ஞானம் களைந்தெறியவேண்டுமென்பது அவர் கொள்கை. தன் விஞ்ஞான சாதனையின் சரித்திரபூர்வமான முக்கியத்துவத்தை மார்க்ஸ் நன்கறிவார். ஆனால், முதன்மையாக, அவர் ஒரு புரட்சிக்காரராக விளங்கினார். புரட்சிகரமான செயல்கள் இல்லாமல் விஞ்ஞானம் மரக்கட்டையைப்போல உயிரற்றதாக இருக்குமென்பதை உணர்ந்திருந்தார். தொழிலாளிவர்க்கத்தின் சரித்திரபூர்வமான பணியை கண்டுபிடித்த கார்ல் மார்க்ஸ், தொழிலாளிவர்க்கத்தின் தன்னுணர்வையும் தன்னம்பிக்கையையும் வளர்த்த கார்ல்ஸ் மார்க்ஸ், தன் தத்துவத்தை தொழிலாளிவர்க்கத்துக்கு உருப்படியானமுறையில் விளக்கவேண்டுமென்றும் தொழிலாளர் ஸ்தாபன வேலைகளில் உதவவேண்டுமென்றும் கருதினார், இவைகளை அவசியமெனக் கருதினார். ஆகவே, தொழிலாளிவர்க்கத்தின் சக்திகளை ஒன்றுதிரட்டும் வேலையிலிருந்து சோஷியலிஸத்தின் நலன்களைப்பற்றிய வேலையிலிருந்து அது எவ்வளவு சாமானியமானதாயிருந்தாலும், அன்றாட ஸ்தாபன வேலையாயிருந்தாலும்—அவர் ஒதுங்கிநிற்பதில்லை.

1846ல் "கம்யூனிஸ்ட் கடிதப்போக்குவரத்து கமிட்டி"யை மார்க்ஸ் அமைத்தார். இந்த கமிட்டியின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும்படி அக்காலத்திய பிரபல சோஷியலிஸ்டுகளுக்கு கடிதங்களெழுதினார். இதன்மூலம், ஒரு ஒன்றுபட்ட மத்திய கார்யாலயத்தை சிருஷ்டிக்கலாமென்பது அவர் ஆவல். 1846ம் வருஷ மே மாதம் 5-ம் தேதி, மார்க்ஸ் பிரௌதனுக்கு எழுதினார்:—

"ஜெர்மன் சோஷியலிஸ்டுகளுக்கும் பிரெஞ்சு சோஷியலிஸ்டுகளுக்கும் இங்கிலீஷ் சோஷியலிஸ்டுகளுக்கும் தொடர்பேற்படுத்துவது நமது கடிதப்போக்குவரத்தின் பிரதான நோக்கம். இதன்மூலம், தன் தேசீய தடையிலிருந்து விடுபடும் பாதையில், சமூக இயக்கம் அதன் இலக்கிய பிரதிபலிப்புகளில் ஒரு அடி முன்னேறும்".

பரஸ்பரம் சமாச்சாரங்களை பரிமாறிக்கொள்வதற்காக, இக்கமிட்டி ஏற்பட்டது என்பது பெயரளவில்தான். உண்மையில், அந்த கமிட்டியின் பரிமாணம் இன்னும் அதிகமாக இருந்தது. 19வது நூற்றாண்டுகள் முன்பாதியில் சோஷியலிஸ்டு இயக்கம் இருந்த நிலைமையில், பரஸ்பரம் செய்திகளையும் கருத்துகளையும் பரிமாறிக்கொள்வதென்றால், வளர்ச்சியடைந்த சோஷியலிஸம்,

பின் தங்கிநிற்கும் சோஷியலிஸத்துக்கு ஒத்தாசைபுரியமுடிகிறது. 'தேசிய தடைகளை எதிர்த்துப் போராட்டம்'—இதுதான் மார்க்ஸின் நோக்கம்; கம்யூனிஸ்ட் கடிதப்போக்குவரத்து கமிட்டியின் அரசியல் விசேஷம் இதில் அடங்கியிருக்கிறது. 1845–46ல், பெல்ஜியம் தொழிலாளர்களுக்கு மார்க்ஸ் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்; 1847ல் அவர் கம்யூனிஸ்ட் லீகின் தலைவரானர். லீக் ஆக்ஞைக்கிணங்க, எங்கல்ஸுடன் சேர்ந்து, பிரசித்திபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை தயாரித்தார். இன்றும் அதுதான் சர்வதேச கம்யூனிஸத்தின் அஸ்திவார சாசனமாக இருந்துவருகிறது. கம்யூனிஸ்ட் லீக் வேகமாக வளர்ந்தது; செல்வாக்கு பெற்றது. ஆனல் 1848ம் வருஷ புரட்சியின் தோல்வி, அதை பலவீனப்படுத்தியது. ஸ்தாபனத்தை பாதுகாக்கவும் பலப்படுத்தவும் மார்க்ஸ் சோர்வில்லாமல் உழைத்தார். பல அரசியல், ஸ்தாபன அறிக்கைகளில், பொதுவான கொள்கையை கம்யூனிஸ்ட் லீக் ஸ்தாபனங்களுக்கு வகுத்துத் தந்தார்.

கம்யூனிஸ்ட் லீக் அதன் ஸ்தாபனங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை கடிதங்கள் மிகவும் முக்கியமானவை. நிலைமையை பரிசீலனைசெய்து சீர்தூக்கிப் பார்ப்பதுடன், இக்கடிதங்கள் ஸ்தாபன யோசனைகளும் போர்தந்திர யோசனைகளும் அளிக்கின்றன. 1850 மார்ச்சில், கம்யூனிஸ்ட் லீகின் மத்திய கமிட்டி விடுத்த முதல் பிரகடனம் "லீகின் பழைய ஸ்தாபனம் சின்னபின்னமாகிவிட்டது" என்று கூறியது. நடுத்தரவர்க்கத்தின் ஜனநாயகக் கட்சியுடன் தொழிலாளர் கட்சியை ஒத்திட்டுவிட்டு, "நடுத்தரவர்க்கத்தின் கட்சி அதன் ஸ்தாபனங்களை விரிவுபடுத்தியிருக்கிறது; ஆனல் தொழிலாளர்கட்சி அதன் பலமான அடிப்படையை இழந்திருக்கிறது" என்ற முடிவுக்கு வந்தது. நடுத்தரவர்க்க ஜனநாயகத்திடம் புரட்சிகரமான தொழிலாளர் கட்சி அனுஷ்டிக்கவேண்டிய கொள்கையையும் இந்த முதல் பிரகடனம் விளக்குகிறது:—

"குறிப்பிட்ட சூழ்நிலையில், தான் யாரை கவிழ்க்கவேண்டுமென்று விரும்புகிறதோ, அதை எதிர்க்க, நடுத்தரவர்க்க ஜனநாயக கட்சியுடன் சேர்ந்துநிற்கவேண்டிய நிலைமை புரட்சிகரமான தொழிலாளர் கட்சிக்கு ஏற்படுகிறது. ஆனல் நடுத்தரவர்க்கம் தன் நலன்களையே பாதுகாக்க விரும்பும் பிரச்னைகளில் எல்லாம் தொழிலாளர்களுடைய கட்சி நடுத்தரவர்க்க ஜனநாயகத்தை எதிர்க்கும்"

19ம் நூற்றுண்டின் முற்பகுதிக்கு மாத்திரம் பொருத்தமான

போர்தந்திர விதியல்ல இது. நடுத்தரவர்க்க கட்சிகளிடம் மார்க்ஸிஸம் அனுஷ்டிக்கவேண்டிய கொள்கையை பல வருஷகாலமாக நிர்ணயித்துவரும் விதி இது. இந்த விதியை மார்க்ஸ் விளக்கமாகச் சொல்கிறார் :—

"ஜனநாயக நடுத்தரவர்க்கம் புரட்சியை எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக முடித்துவிட விரும்புகின்றது......புரட்சியை சாசுவதமாக்குவது நமது நலன், நமது கடமையும்கூட......தனி சொத்துரிமையின் உருவத்தை மாற்றும் பிரச்னையல்ல; தனிசொத்துரிமை என்ற ஸ்தாபனத்தையே ஒழிப்பது நம் பிரச்னை. வர்க்க விரோதங்களை மறைப்பதல்ல, வர்க்கங்களையெல்லாம் நீக்குவது நமது பிரச்னை; நிகழ்கால சமூகத்தை அபிவிருத்தி செய்வதல்ல; புதிய சமூகத்தை ஸ்தாபிப்பது நம் பிரச்னை".

அப்படியானால், புரட்சி ஆரம்பித்தால், தொழிலாளர்கள் செய்யவேண்டியதென்ன? சம்பவ போக்கை தொழிலாளர்களுக்கு சாதகமாக மாற்ற, அவர்கள் என்ன கோரிக்கைகளை எழுப்பவேண்டும்? என்னஸ்தாபன நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்? முதலாவதாக, "அளவுக்கு மீறிய செயல்களென்று கண்டிக்கப்படும், பழிக்குபழிவாங்கவேண்டுமென்ற மனோபாவத்தின் பிரதிபலிப்புகளை புரட்சிக்காரர்கள் கண்டிக்கக்கூடாது; அவைகளுக்கு தலைமைதாங்கவேண்டும்" பூர்ஷுவா ஜனநாயகத்தின் கோரிக்கைகளுடன், தொழிலாளிவர்க்கமும் தன் சொந்த கோரிக்கைகளை எழுப்பவேண்டும். தொழிலாளர்கள் உத்திரவாதங்கள் கோரவேண்டும். புதிய அரசாங்கத்தினரை "எத்தனை முடியுமோ அத்தனை சலுகைகளும் வாக்குறுதிகளும்" அளிக்கும்படி செய்யவேண்டும். மார்க்ஸ் எழுதுகிறார் :—

"அதேசமயத்தில், அவர்கள் தங்களுக்கு சொந்தமான, புரட்சிகரமான தொழிலாளர் அரசாங்கத்தை நிறுவவேண்டும்—அது காரியக்கமிட்டி ரூபத்தில் இருக்கலாம், சமூக கவுன்ஸிலாயிருக்கலாம், தொழிலாளர் கிளப்களாயிருக்கலாம், தொழிலாளர் கமிட்டிகளாயிருக்கலாம். ஏனென்றால், (தொழிலாளர் போட்டி சர்க்கார் ஏற்படுவதால்) பூர்ஷுவா ஜனநாயக சர்க்கார் தொழிலாளர்கள்மீதுள்ள கட்டுப்பாட்டை இழக்கிறது; அத்துடன், தொழிலாளர்களின் ஆதரவைப்பெற்ற ஒரு சர்க்கார் தங்களை கண்காணித்துவருவதையும், தங்கள் ஆட்சிக்கே அபாயம் விளைவிக்கக்கூடியதாய் அது இருப்பதையும் புதிய அதிகாரபூர்வமான

சர்க்கார் உணரவேண்டும். ஒரு வார்த்தையில் சொல்லப் போனால், வெற்றிகிடைத்த கணத்திலிருந்து தொழிலாளர்களுடைய அவநம்பிக்கை, ஜெயிக்கப்பட்ட பிற்போக்காளர்மீது திருப்பிவிடப்படக்கூடாது, தங்களுடன் நண்பர்களாக இருந்த நடுத்தரவர்க்க ஜனநாயகவாதிகள்மீது, பொது வெற்றியின் பலனை தங்களுக்குமாத்திரம் பயன்படுத்திக்கொள்ள ஆசைப்படும் நடுத்தர வர்க்க ஜனநாயகவாதிகள்மீது திருப்பிவிடப்படவேண்டும்".

புரட்சிக்காலத்தில் தொழிலாளர் கட்சி அனுஷ்டிக்கவேண்டிய தந்திரத்தை அற்புதமாக விளக்கியிருக்கிறார் மார்க்ஸ். இந்த விதியை ரஷ்ய புரட்சியில் நடைமுறையில் அனுஷ்டிக்கப்பட்டது. ரஷ்ய புரட்சியின் அனுபவங்கள் அதை ருசுப்பித்துவிட்டன. ரஷ்ய புரட்சியில் இரட்டை அரசாங்கங்கள் ஏற்பட்டன; அது தொழிலாளர்-விவசாயிகள் பலத்தை திரட்டி, பூர்ஷுவா, நடுத்தர வர்க்க கட்சிகளின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு இந்த தந்திரம் ஆரம்பமாகவும் தூண்டுகோலாகவும் அமைந்தது.

மேலும், புரட்சிகரமான சம்பவங்கள் உருவாகும்பொழுது, தொழிலாளர் படைகளை அமைப்பதின் அவசியத்தை அந்த பிரகடனம் சுட்டிக்காட்டுகிறது. தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புரட்சிகரமான கவுன்ஸில்களின் யூனியன்களிடம் (சோவியத்துகளிடம்—ஆ-ர்.) இந்த படைகள் ஒப்படைக்கப்படவேண்டும். விவசாயத் தொழிலாளர்களை ஸ்தாபனரீதியாக திரட்டுவதில் விசேஷ கவனம் செலுத்தப்படவேண்டும். எல்லாவற்றையும்விட முக்கியமானது—" கட்சியின் சுதந்திர அந்தஸ்து, தொழிலாளிவர்க்கத்தின் கட்சி சுதந்திர ஸ்தாபனமாக நிற்கவேண்டும்".

80 வருஷங்களுக்குமுன்னால் எழுதப்பட்ட இந்த பிரகடனத்தின் போதனைகள் நம்மை திகைக்கச்செய்கிறது. (இப்பொழுது 93 வஷங்களாகிவிட்டன) ஏனென்றால் அவை இன்றைய நிலைமைக்கும் பொருத்தமாயிருக்கின்றன. மூன்று புரட்சிகளில் (1905, 1917 பிப்ரவரி, 1917 அக்டோபர் புரட்சிகள்) போல்ஷிவிஸம் (ரஷ்ய கம்யூனிஸம்) அனுஷ்டித்த சகல தந்திரங்களின் கருக்களும் இந்த ஸ்தாபன போர்தந்திர போதனைகளில் அடங்கியிருக்கின்றன.

1850ல், கம்யூனிஸ்ட் லீகின் மத்திய கமிட்டி விடுத்த இரண்டாவது பிரகடனம், பெல்ஜியம், ஜெர்மனி, ஸ்விட்ஸர்லந்து, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய தேசங்களில் கம்யூனிஸ்ட் லீகின் நிலைமையைப்பற்றிய தகவல்களை தருகிறது. அத்துடன், பல

ஹீனப்பட்டுகிற்கும் ஸ்தாபனங்கள்முன் பல ஸ்தாபன கடமைகளை மீண்டும் வைக்கிறது. புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்துக்கு பெருவாரியான அங்கத்தினர்களை ஆகர்ஷிப்பதற்காக, எதிரிகள் தலைமையிலுள்ள யந்திரத் தொழிலாளர் ஸ்தாபனங்களிலும் விவசாயத் தொழிலாளர் ஸ்தாபனங்களிலும் வேலைசெய்ய வேண்டுமென்பது அவற்றில் பிரதானமானதாகும். இதே இரண்டாவது பிரகடனத்தில், கட்சிசார்பற்ற ஸ்தாபனங்களை அமைக்கும் பிரச்னையையும் மார்க்ஸ் எடுத்து விவாதிக்கிருர்.

"இந்த விரிவான தொடர்புகளின் உதவியுடன், நமது செல்வாக்கை, குறிப்பாக விவசாயி யூனியன்களிலும் விளையாட்டு கழகங்களிலும், உறுதியாக அமைப்பது சாத்தியம்" என்று கூறுகிருர்.

உழைப்பாளி மக்களிடம் உறுதியான அடிப்படையை துரிதமாக அடைவதே இந்த போதனைகளின் நோக்கம்.

சாசுவத அடக்குமுறை சூழ்நிலையில், வேலைசெய்வது எப்படி? முடிந்த இடங்களிலெல்லாம் சட்டரீதியாய் செய்வது; முடியாத இடங்களில் சட்டவிரோதமாய் செய்வது. இதுதான் மார்க்ஸ் இடைவிடாது அளித்த போதனை. சட்டவிரோதமான கட்சி வேலையை ஆதரித்தபோதிலும், சதிகள் செய்வதை மார்க்ஸ் எதிர்த்தார். இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை மார்க்ஸ் கருராக வரையறுத்தார். (அவசியமானல் சட்டவிரோதமான முறையிலும், ஒடுக்கப்பட்ட மக்களைத் திரட்டுவது மார்க்ஸிஸம். பொது மக்களை புறக்கணித்துவிட்டு, ஒருசிலர் தாங்களே போராட்டத்தை நடத்திவிடலாமென்ற பிரமையில், அந்த ஒருசிலர் மாத்திரம் போராட்ட நடவடிக்கையிலிறங்குவது சதி. பயங்கரவாதம், சதிக்கு உதாரணம்—மொ-ர்). 1850ல் பாரிசில் இரு புஸ்தகங்கள் வெளிவந்தன; அவை ரகசிய சதி வேலையை ஆதரித்தன. "புரட்சிக்கு தேவையான ஆதாரங்கள் இல்லாதபோது புரட்சிகளை சிருஷ்டிக்கும்" இந்த "புரட்சியின் இரசவாதிகளை" கண்டித்தார் மார்க்ஸ். இந்த புரட்சியின் இரசவாதிகள், "தொழிலாளர்கள் தத்துவ விஞ்ஞான அறிவுபெறுவதை இகழ்ச்சி செய்கிருர்கள்; தொழிலாளர்களுக்கு அவர்களின் வர்க்க நலன்களை விளக்க வேண்டிய தேவையையும் நிந்தனைசெய்கின்றனர்" பொதுஜனங்களிடமிருந்து ஒதுங்கிநிற்குமிந்த சூழ்நிலையில், சதிகாரனையிருப்பதிலிருந்து போலீஸின் கூலி உளவாளியாக மாறுவது அடிக்கடி நிகழும் நிகழ்ச்சியாக இருக்கிறது.

1885-ம் வருஷ புரட்சி அடக்கப்பட்டபின், சர்வதேசங்களிலும் பிற்போக்காளர்கள் புரட்சிகரமான இயக்கத்தை அடக்கினார்கள். மார்க்ஸ் தன் ஆதரவாளர்களுடன் இடைவிடாத் தொடர்புவைத்து, சொல்லிலும் செயலிலும் தன்னாலியன்ற உதவியைச் செய்தார். அதே சமயத்தில் பிரிட்டிஷ், அமெரிக்க, ஜெர்மன் பத்திரிகைகளில் அன்றைய அரசியல் பிரச்னைகளைப் பற்றி பல கட்டுரைகளை பிரசுரித்தார்; மூலதனம் என்ற புத்தகத்தை தொடர்ந்து எழுதினார். தொழிலாளர் இயக்கத்தில் மறுமலர்ச்சிக்குறிகள் தோன்றியவுடன், பலதேசங்களிலுள்ள தொழிலாளர்கள் பரஸ்பர தொடர்பு வேண்டுமென்று கூற ஆரம்பித்ததும், மார்க்ஸ் இந்த பிரச்னையில் தீவிரமாக மூனைந்தார். 1864-ல் முதல் இண்டர்நேஷனல் உருவாயிற்று, அதுவே மூன்றாவது இண்டர்நேஷனலின் (கம்யூனிஸ்ட் இண்டர்நேஷனல்) முன்னோடி.

மார்க்ஸ் பிரதான புத்தகங்கள் எழுதுவதில் ஈடுபட்டிருந்த போதும், உலகம் முழுவதும் தினசரி நடப்பதை கவனித்து வந்தார். மார்க்ஸ்—எங்கல்ஸ் கடிதப் போக்குவரத்தில் இந்த சாதாரணமான வேலையை நிரூபிக்கும் அத்தாட்சிகளை ஏராளமாகக் காண்கிறோம். அவர் பிரசுரங்களும் பிரகடனங்களும் எழுதினார். நண்பர்களின் பிழைகளை திருத்தினார்; சகாக்களின் குற்றங் குறைகளை கண்டித்தார். விரோதிகளை வன்மையாகத் தாக்கினார், நிலைமைக்கு தகுந்தபடி, ஒவ்வொரு சமயமும் என்ன செய்ய வேண்டுமென்று யோசனை கூறினார். சில சமயங்கள் வெட்டொன்று துண்டிரண்டாகப் பேசுவார்; இதர சமயங்களில் நேசப்பான்மையுடன் கூடிய கடிதத்தில் தன் அபிப்பிராயங்களை எடுத்துக் கூறுவார். சில சமயங்களில் மூன்று மனுஷர்கள் மூலம் எடுத்துக் கூறுவார். மார்க்ஸ் எப்பொழுதும் ஒரே ஒரு சிந்தனை வயப்பட்டிருந்தார்—ஒரு புரட்சிகரமான திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி ஸ்தாபிப்பது; தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்படையான கட்சியிலாவது, தத்துவார்த்த குழப்பம் அனைத்தையும்—சரித்திரத்தில் வேர்விட்டிருக்கும் இக் குழப்பத்தை, தொழிலாளர் இயக்க வளர்ச்சிக்கு தடையாக நிற்குமிந்த குழப்பத்தை துடைப்பது.

நெடுதூரத்திலுள்ள ஸோஷியலிஸ்ட் இயக்கத்தில் தோன்றும் கபடமும் அயோக்கியத்தனமும்கூட அவருடைய கழுகுப்

பார்வையிலிருந்து தப்பமுடியாது. அவற்றை ஒழிக்கும் வரை, ஓய்வெடுக்கமாட்டார். 1877 அக்டோபர் 19ல் அவர் ஸோர்ஜுக்கு எழுதினார். "ஜெர்மனியில் ஒரு தீய எண்ணம் (அயோக்யத்தனம்) நம் கட்சியில் தோன்றியுள்ளது. சாதாரண ஜனங்களிடம் அவ்வளவில்லை; தலைவர்களிடம் தான் அதிகம்"

சித்தாந்தத்திலும், அரசியலிலும், போர்முறையிலும் அயோக்கியத்தனம் தோன்றினால் மார்க்ஸ் அதை தயவு தாட்சணியமில்லாமல் தோலுரித்து விடுவார். 1879, ஏப்ரல் மத்தியில் மார்க்ஸும் எங்கல்ஸும் பெபல், லீப்க்னெக்ட் முதலியோருக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பினார்கள். பெர்ன்ஸ்டீன் கோஷ்டியைப் பற்றி எழுதப்பட்ட இக்கடிதம் சந்தர்ப்பவாதத்தின் சகல உருவங்களையும் தாக்குகிறது. பெர்ன்ஸ்டீன் கோஷ்டி பூர்ஷுவா வர்க்கத்திடம் விவேகமாகவும் ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்றும் மேல் வர்க்கத்தினரிடையே ஸோஷியல் டெமாக்ரஸி பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் உபதேசித்தனர். இதைப்பற்றி மார்க்ஸ்-எங்கல்ஸ் எழுதுவதாவது:—

"அவர்கள் நடுத்தரவர்க்கத்தின் பிரதிநிதிகள். தன் புரட்சிகரமான நிலைமையால் உந்தப்பட்டு தொழிலாளிவர்க்கம் ரொம்ப தூரம் முன்னேறி விடுமென்ற பயம் அவர்களை பிடுங்கித் தின்கிறது; ஆகவே, அவர்கள் கூறுகிறார்கள்:—உறுதியான அரசியல் எதிர்ப்புக்கு பதில், மத்தியஸ்தம்; சர்க்காரையும் பூர்ஷுவாக்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு பதில் அவர்களிடம் பிரசாரம் செய்து மனமாற்றம் கொண்டுவருவது; மேலிருந்துவரும் கொடுமையை பிடிவாதமாக எதிர்ப்பதற்கு பதில் அடங்கிப்பணிதல்; கொடுத்த தண்டனை சரிதானென்று ஒப்புக்கொள்ளுதல்."

இந்த சரணாகதிக்காரர்கள் யார்? அவர்களுடைய அரசியல் பூர்வோத்திரம் என்ன? அதே கடிதம் பதிலளிக்கிறது:—

"இடைவிடாமல் சுறுசுறுப்பாக வேலை செய்வதாக பாவனை செய்பவர்கள்; இவர்கள் ஒன்றும் செய்யாததுடன், வீண் பேச்சைத் தவிற வேறொன்றும் நடக்காதபடி தடுக்க முயற்சிப்பவர்கள்; 1848லும் 1849லும், சகல நடவடிக்கைகளையும் கண்டு நடுங்கி, ஒவ்வொரு அடியிலும் இயக்கத்தை தடுத்து, இறுதியில் அது தோற்றுப் போகும்படி செய்தவர்கள்; பிற்போக்கின் ஆட்சியில், ஓடுவதற்கோ, எதிர்ப்பதற்கோ வகையில்லாத சந்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு நிற்

பவர்கள்; இவர்களே தோன்றி சரித்திரத்தை தங்கள் குறுகிய கண்ணேக்குக்குள் அடைக்கப் பார்க்கின்றனர்; ஒவ்வொரு தடவையும், அன்றைய பிரச்னேயை நிர்ணயிக்க சரித்திரம் இவர்களே தாண்டிச் செல்கிறது".

ஜெர்மன் சந்தர்ப்ப வாதிகளைப்பற்றிய இந்த அபூர்வமான விளக்கம் இன்றைய நிலைமைக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. ஹிட்லர் காலத்திய ஜெர்மன் சோஷியல் டெமாக்ரடிக் தலைவர் களைப் பற்றியே எழுதப்பட்டதுபோலத் தோன்றுகிறது. மார்க்ஸ் எங்கல்ஸின் கடிதம் கீழ்க்கண்ட வாக்கியங்களுடன் முடிகிறது:—

"வர்க்கப் போராட்டமே சரித்திரத்தை உருவாக்கும் சக்தி யென்பதை—குறிப்பாக, நவீன சமூக மாறுதலுக்கு பூர்ஷுவா வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்குமிடையே நடக்கும் வர்க்கப் போராட்டமே நிர்ணயமான சக்தி என்பதை—40 வருஷ காலமாக நாம் வற்புறுத்தி வருகிறோம். ஆகவே, இயக்கத்தி லிருந்து வர்க்கப்போராட்டத்தை விலக்க விரும்புகிறவர்களுடன் நாம் சேர்ந்து நிற்கமுடியாது. இண்டர் நேஷனல் ஸ்தாபிக்கப் பட்டவுடன், நாம் திட்டவட்டமாக போர்க் கோஷத்தை ஒலித் தோம்:—தொழிலாளிவர்க்கத்தின் விடுதலே தொழிலாளி வர்க்கத் தினுடைய சொந்த முயற்சியாயிருக்கவேண்டும் என்று கோஷித் தோம். ஆகவே, தொழிலாளர்களுக்கு தங்களே விடுதலே செய்து கொள்ளக்கூடிய அறிவில்லை என்றும் தொழிலாளிவர்க்கம் தன் விடுதலேயை, தர்மசிந்தனே படைத்த பூர்ஷுவாக்கள் மூலமே, பரோபகார நோக்கமுள்ள நடுத்தர வர்க்கத்தினர் மூலமே பெற முடியுமென்று பகிரங்கமாகப் பேசுபவர்களுடன் நாம் சேர்ந் திருக்கமுடியாது."

இந்தவிதமாக, விஞ்ஞான கம்யூனிஸத்தின் ஸ்தாபகர்கள் ஜெர்மன் சோஷியல் டெமாக்ரடிக் கட்சி தலைவர்களுக்கு போதித் தார்கள். இந்த கடிதத்தில் மார்க்ஸ் தத்துவம் வாதிப்பதுடன் நிற்கவில்லை; அதன் விளைவாக எழும் அரசியல், ஸ்தாபன முடிவு களையும் எடுத்துரைக்கிறார். இது சர்வதேச கம்யூனிஸத்தின் முக்கியமான அரசியல்—ஸ்தாபன சாசனமாகும். இந்த கடி தத்தில், மார்க்ஸின் போர்த்தந்திர மேதையைக் காண்கிறோம். படிப்படியாக, சந்தர்ப்ப வாதத்தை பகுத்தாராய்கிறார்; அதை எதிர்த்துப் போராடுவதெப்படி என்று எடுத்துக் கூறுகிறார். அதிலிருந்தெழும் ஸ்தாபன முடிவுகளே தீர்க்கமாக வரையறுக்

கிறார். தொழிலாளர் இயக்கத்தின் பல்வேறு பகுதிகளை ஒன்று படுத்துவதற்காக அபாரமான திறமையுடன் முதல் இண்டர்நேஷனலின் ஆரம்ப விழாப் பிரசங்கத்தை (முதல் அத்தியாயம் பார்க்கவும்) தயாரித்த மார்க்ஸ், பிரான்ஸில் தொழிலாளர் கட்சி ஏற்பட்டபொழுது, மார்க்ஸிஸ்ட் அல்லாதவர்களும் கட்சிக்குள் வருவதை அனுமதித்த மார்க்ஸ், காலம் பக்குவமானவுடன், ஒரே ஸ்தாபனத்தில் சேர்ந்திருப்பதால் அரசியல் கொள்கைக்கே ஆபத்து வந்துவிடுமென்று கண்டவுடன், பிளவை ஆதரித்தார்.

"பாதுகாக்க முடிகிறவரை ஒற்றுமை சிரேஷ்டமானது; ஆனால் ஒற்றுமையைவிட முக்கியமானவையும் இருக்கின்றன" என்று எங்கல்ஸ் 1882 அக்டோபர் 28-ல் பெபலுக்கு எழுதினார்.

பூர்ஷுவா கட்சிகளின் நலன்களுக்கு தொழிலாளி வர்க்கத்தின் நலன்களை கட்டுப்படுத்துவதையும், நெளிந்து வளைந்து கொடுப்பதையும், சந்தர்ப்பவாதத்தையும் மார்க்ஸ் கண்டித்தார். ஸோஷியலிஸத்துக்குள் புகுந்துகொண்டிருந்த வேற்றாட்களை தாக்கினார். அதே சமயத்தில், அதே ஆவேசத்துடன், அவர் "இடதுசாரி" வாய்ப்பந்தல் சூரர்களையும் தாக்கினார். அமெரிக்காவிலுள்ள ஜெர்மன் கம்யூனிஸ்ட்கள், இண்டர்நேஷனல் உடைந்த பின்பு, குறுகிய ஸெக்டேரியன் கோஷ்டிகளாக தனிப்பட்டு ஒதுங்கியபோது, பிற்போக்காளர் தலைமை வகிக்கும் ஸ்தாபனங்களில் (அவை பொதுஜனங்கள் உள்ள ஸ்தாபனங்களாயிருந்தாலும்) வேலை செய்வது கௌரவக்குறைவு என்று கருதிய காலத்தில், எங்கல்ஸ் அதை எதிர்த்து எச்சரித்தார். ஸெக்டேரியனிஸத்தை எதிர்த்துப் போராடவேண்டுமென்றார். தொழிலாளர் பொது ஸ்தாபனங்களில் வேலைசெய்ய வேண்டுமென்று விளக்கிக் கூறினார். இந்த ஸ்தாபனங்களிலிருந்து தனிமைப்பட்டு நிற்பது, தொழிலாளி வர்க்கத்திடமிருந்து தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொள்வதாகுமென்று விளக்கினார்.

சர்வதேச கம்யூனிஸத்தின் தலைமை ஸ்தானத்தில் பல வருஷ காலம் அமர்ந்திருந்தார் மார்க்ஸ், முதலாளித்துவத்தின் ஜன்ம சத்துரு; "அவர் காலத்தில் அதிகமாக வெறுக்கப்பட்ட, அதிகமான அபவாதத்துக்குட்பட்ட மனிதன்" என்று மார்க்ஸைப் பற்றி எங்கல்ஸ் கூறுகிறார். ஆனால் இதைப்பற்றி மார்க்ஸ் கவலைப்படவில்லை. தாம் வகுத்த பாதை தொழிலாளி வர்க்கத்தின் தவப் புதல்வர்களுடைய பாதை, கோடிக்கணக்கான மக்களின்

பாதை என்ற தெளிவுடன், அதையே பற்றி நடந்தார். 1881, அக்டோபர் 25 ல், எங்கல்ஸ் பெர்ன்ஸ்டீனுக்கு எழுதுகிறார்:—

" அவர் தத்துவ சாதனையின்மூலம், நடைமுறை சாதனையின் மூலம், பல்வேறு தேசங்களிலுள்ள சகல தொழிலாளர் இயக்கங்களுடைய பூர்ண நம்பிக்கைக்கு பாத்திரமாகும் ஸ்தானத்தைப் பெற்றார். நெருக்கடியான சமயங்களில் அவர்கள் அவரிடம் யோசனை கேட்க வந்தார்கள். அவர் யோசனையே சிறந்த யோசனையா யிருப்பதையும் கண்டனர்......ஆகவே மார்க்ஸ் தன் எண்ணத்தை—ஏன்—அபிப்பிராயத்தைக்கூட ஜனங்கள்மீது திணிக்கவில்லை. ஜனங்களே தாங்களாகவே அவரிடம் வந்தனர். இயக்கத்துக்கு மிக முக்கியமான மார்க்ஸின் செல்வாக்கு இதையே அடிப்படையாகக்கொண்டிருந்தது."

உலகத்தில் ஆறிலொரு பாகத்தில் (சோவியத் யூனியனில்) மார்க்ஸிஸம் வெற்றிக்கொடி நாட்டுவதை மார்க்ஸ் உயிருடனிருந்து பார்க்கமுடியவில்லை. ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி நிச்சயம் வருமென்று அவருக்குத் தெரியும்; பூர்ஷுவா வர்க்கத்தைக் கவிழ்க்க, தொழிலாளி வர்க்கத்தை அரசியல் ரீதியிலும் ஸ்தாபனரீதியிலும் தயார் செய்தார்.

புரட்சிகரமான சித்தாந்தமில்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்கமுடியாது." (லெனின்) என்ற கொள்கையை சர்வதேச கம்யூனிஸத்துக்கு அளித்தவர் மார்க்ஸ். அது மாத்திரமல்ல, "புரட்சிகரமான சித்தாந்தம் பாதையில் ஒளி வீசும்வரையில், நடைமுறை இருளில் திண்டாடுவதைப்போல, புரட்சிகரமான நடைமுறையுடன் தொடர்பில்லாத சித்தாந்தம்—அரைப்பதற்கு தானியம் இல்லாத மில்லாக—இருக்கும் புரட்சிகரமான நடைமுறையால் ருசிப்பிக்கப்படாத செழிப்படையாத சித்தாந்தம் துருப்பிடித்து ஜீவனிழந்துபோகிறது. புரட்சிகரமான சித்தாந்தம் இல்லாத நடைமுறை கண்மூடித்தனமாகவே இருக்கும்.

ஆகவே உலகத் தொழிலாளர் இயக்கத்தின் சரித்திரத்தில் மார்க்ஸ் ஒரு மகத்தான தத்துவஞானியாகவும், தொழிலாளி வர்க்கத் தலைவனாகவும், ஆர்கனைசராகவும் கருதப்படுகிறார். ஆகவே புரட்சிகரமான மார்க்ஸிஸ்ட் சித்தாந்தமில்லாமல், புரட்சிகரமான தொழிற்சங்க இயக்கம் எதுவும் இல்லை. இருக்கவும் முடியாது என்று நாம் உரிமையுடன் கூறுகிறோம்.

## பதினேருவது அத்தியாயம்

# தொழிற் சங்க இயக்கத்தில் மார்க்ஸிஸம்-லெனினிஸம்

மார்க்ஸிஸத்தின் சிருஷ்டி கர்த்தா அவருடைய போதனைகளைப் போலவே ஒரே கல்லில் இழைக்கப்பட்டவர். வயது அதிகமாக அதிகமாக, என்னிடம் பொறுமை அதிகரிப்பதாக நான் மார்க்ஸிடம் ஒரு தடவை கூறினேன். "பொறுமை அதிகரிப்பா" என்று கோபமாக பதிலளித்தார் மார்க்ஸ். அவரிடம் பொறுமை அதிகரிக்கவில்லை யென்பது தெளிவு" என்று பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் ஹிண்டன்மான் கூறுகிருர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முகாமில் சரணடைந்த இந்த ஹிண்டன்மான் மார்க்ஸின் பிரதான குணத்தை குறிப்பாக கவனித்து விட்டார். அதுவே மார்க்ஸிஸத்தின் விசேஷ குணமுங்கூட. புரட்சிகரமான மார்க்ஸிஸம் "வயதாகிவிட்டதனுல்" அதன் தத்துவ எதிரிகளையும் அரசியல் விரோதிகளையும் சகித்துக்கொண்டிருக்காது. அதன் சமரசப்படுத்தமுடியாத தன்மைதான் புரட்சிகரமான மார்க்ஸிஸத்தின் ஜீவசக்தி. இந்த தன்மையே போல்ஷ்விக் கட்சியின் அடிப்படையாயிற்று. லெனினுடைய தத்துவ சாதனைகளுக்கும் அரசியல் நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டியாயிருந்தது.

தொழிற்சங்கங்களைப்பற்றிய கொள்கைக்கு மார்க்ஸ் அஸ்திவாரமிட்டார். முதலாளித்துவ அரசாங்கத்தில் தொழிற்சங்கங்களின் பங்கை வரையறுத்தார். பொருளாதாரப் போராட்டத்துக்கும் அரசியல் போராட்டத்துக்குமுள்ள உறவை பிழையின்றி ஸ்தாபித்தார். அரசியல் போராட்டம் பொருளாதாரப் போராட்டத்தைவிட முதன்மையானதென்று ஸ்தாபித்தார். தொழிலாளர் உடனடிக் கோரிக்கைப் போராட்டத்தையும் இறுதி லட்சியப் போராட்டத்தையும் பிணைத்து, ஜீவ தொடர்பேற்படுத்தி, புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் தொழிற்சங்க போர்த் தந்திரங்களை உருவாக்கினர்; தொழிற்சங்க நடவடிக்கை

களின் வரம்புகளையும் பரிமாணத்தையும் சுட்டிக்காட்டினர். பூர்ஷுவா வர்க்கத்தை எதிர்த்துப் போராடாத தொழிற்சங்கங்கள் தொழிலாளி வர்க்க நலன்களுக்கு விரோதமான பூர்ஷுவா ஆயுதமாக பயன்படுமென்று நிரூபித்தார். முதலாளித்துவ நாடுகளின் தொழிற்சங்கங்களுடைய கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்க்கமாக விளக்கினர்.

தொழிலாளிவர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் தொழிற்சங்கங்கள் செய்யவேண்டியதை மார்க்ஸால் விளக்க முடியவில்லை; தொழிலாளிவர்க்க சர்வாதிகாரத்தில், தொழிற்சங்கங்கள் வகிக்கும் ஸ்தானத்தை அவரால் குறிப்பிடமுடியவில்லை. ரஷ்ய போல்ஷ்விக் கட்சியின் ஸ்தாபகரும் ஆர்கனைஸருமான லெனின், மார்க்ஸின் மகத்தான சீடர், அதைச் செய்தார். மார்க்ஸுடைய சித்தாந்தத்தின் அடிப்படையில்தான் லெனின் செய்தார். உலக தொழிலாளர் இயக்கத்திலும், பல புரட்சிகளிலும் கிடைத்த அனுபவங்களைக்கொண்டு லெனின் மார்க்ஸிஸத்தை வளர்த்தார், செழிப்பாக்கினர். ஆகவேதான், "லெனினிஸம் ஏகாதிபத்திய சகாப்தத்தின் தொழிலாளி வர்க்க புரட்சி சகாப்தத்தின் மார்க்ஸிஸம்" என்று நாம் கூறுகிறோம். இன்னும் சரியாகச் சொல்லவேண்டுமானல், "லெனினிஸம், பொதுவாக தொழிலாளி வர்க்க புரட்சியின் தத்துவமும், போர்த் தந்திரங்களும்; குறிப்பாக தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தத்துவமும் போர்த் தந்திரங்களும் அடங்கியது." (ஸ்டாலின்) தத்துவரீதியிலும், நடைமுறையிலும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பிரச்சினைகள் அனைத்தையும் லெனின் ஆராய்ந்தார். தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பிரதான தூணை தொழிற்சங்கங்களைப்பற்றி அவர் எழுதாமலிருக்கமுடியுமா? தொழிற்சங்கங்களைப்பற்றி லெனின் முக்கியமான கருத்து என்ன? தொழிற்சங்கங்கள் கம்யூனிஸத்தின் பயிற்சி ஸ்தலங்கள் என்பதே. ஆம், மார்க்ஸ் விளக்கிய அதே கருத்துதான். இந்த சூத்திரம் சுருக்கமா யிருந்தபோதிலும் விளக்கப்பெருகும். அதில் நான்கு பிரதான அம்சங்கள் அடங்கியிருக்கின்றன.

1. வர்க்கம் முழுவதையும் தழுவி நிற்கும் ஸ்தாபனங்களால் தொழிற்சங்கங்கள் திகழவேண்டும். 2. தொழிற்சங்கங்கள் கம்யூனிஸத்தைப்பற்றி அரசியல் ரீதியில் தொழிற்சங்கங்களுக்கு அறிவூட்டுகின்றன; தங்கள் பொதுவான கடமைகளை புரிந்துகொள்ளுமளவுக்கு தொழிலாளி வர்க்கத்தின் அறிவை உயர்த்துகின்றன. 3. கட்சியை மக்களுடன் அதாவது முன்னணியை

வர்க்கத்துடன்—பிணைப்பது தொழிற்சங்கங்களே. 4. தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரமான கட்சியின் தலைமையில் தொழிற்சங்கங்கள் மூலதனத்தை எதிர்த்துப் போராடுகின்றன.

தொழிற்சங்கங்கள் கம்யூனிஸத்தின் பயிற்சி ஸ்தலங்கள் என்ற சூத்திரத்தைக் கேட்டு சில தத்துவ சாஸ்திரிகள் மலைத்துப் போகிறார்கள். ஏனென்றால் பயிற்சி ஸ்தலங்கள் என்ற வார்த்தைக்கு, பள்ளிக்கூடங்கள் என்ற வார்த்தைக்கு, சாதாரண அர்த்தத்தை கற்பிக்கின்றனர். சாதாரண பள்ளிக்கூடத்துக்கும் தொழிற்சங்கம் என்ற பள்ளிக்கூடத்துக்குமுள்ள வித்தியாசம் என்ன? தொழிற்சங்கம் ஒரு வர்க்கப் பள்ளிக்கூடம். சிதறிக் கிடக்கும் தொழிலாளிகளை ஒன்று திரட்டி, அவர்களை ஒரு வர்க்கமாக திரட்டுவதற்கான பூர்வாங்க வேலைகளைச் செய்கிறது அந்த பள்ளிக்கூடம். பாட புத்தகங்களிலிருந்து கிடைக்கும் அறிவினுலல்ல, வர்க்கப் போராட்டங்களிலிருந்து கிடைக்கும் அறிவினால், தொழிலாளர்கள் ஒரு வர்க்கமாகத் திரட்டப்படுகின்றனர். முதலாளித்துவ நாடுகளில், மூலதனத்தை எதிர்த்து நடக்கும் போராட்டங்களில்—ஸ்ட்ரைக்குகள் ஆர்ப்பாட்டங்கள், கலகங்கள் முதலியவற்றில்—இந்த அறிவு கிடைக்கிறது. சோவியத் யூனியனில், சோஷியலிஸத்தை நிர்மாணிப்பதில் தொழிற்சங்கங்கள் தீவிரப் பங்கெடுப்பதன்மூலம்—(தேசீய பொருளாதாரத்தின் நிர்வாகத்தில் கலந்துகொள்ளுவது, சோஷியலிஸ்ட் போட்டி, தொழில் கட்டுப்பாடு, புதிய புதிய யந்திர நுணுக்கங்களைக் கண்டுபிடித்து உற்பத்தியை பெருக்குதல், மார்க்ஸின் கலாச்சார, லோகாயுத மட்டத்தை உயர்த்துதல்) இந்த அறிவு பெறப்படுகிறது. இரண்டு இடங்களிலும், இந்தப் பள்ளிக்கூடம் ஒரு விசேஷ முறையில் அமைந்திருக்கிறது. இதை உணர்ந்துகொள்ளாதவன் மார்க்ஸிஸம்—லெனினிஸம் தெரியாத பச்சைப்பிள்ளையாகவே இருக்க வேண்டும்.

தொழிற்சங்க பிரச்சினையில், ட்ராட்ஸ்கி சோஷியல் டெமாக்ரஸியை நோக்கி, பின்னோக்கி ஓடினான் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். "தொழிற்சங்கங்கள் கம்யூனிஸத்தின் பள்ளிக்கூடங்கள்" என்ற சூத்திரம் அவனுக்குப் புரியவேயில்லை. தொழிற்சங்கங்களைப்பற்றி மார்க்ஸ்—லெனின் கூறியவற்றை திரித்துக் கூறியதற்காக, லெனினும் ஸ்டாலினும்—கட்சி முழுவதும் அவனைக் கண்டித்தது. தொழிற்சங்கங்களின் பங்கும் கடமைகளும், என்ற ட்ராட்ஸ்கியின் பிரசுரத்தில், பக்கத்துக்கு பக்கம் லெனின் ஓரங்களில் எழுதியிருக்கிறார். ட்ராட்ஸ்கியின் வாதங்

களை அவர் "பொய்" "தவறு" "அபத்தம்" "ஸிண்டிகலிஸ்ட் கட்டுக்கதை" என்று கூர்மையான வார்த்தைகளால் கண்டித்திருக்கிறார். கட்சி, தொழிற்சங்கங்கள், தொழிலாளிவர்க்கம் ஆகியவற்றைப்பற்றி அவனிடமிருந்த தவறுகள் அவனை எதிர்புரட்சி முகாமில் கொண்டு சேர்த்தன.

தொழிற்சங்கங்களும், மார்க்ஸூம், லெனினும் விவரிக்கும்போது, சகல தேசங்களிலும், சகல கால கட்டங்களிலுமுள்ள சகல தொழிற்சங்கங்களும் கம்யூனிஸத்தின் பள்ளிக்கூடங்களாக இருக்குமென்று நினைக்கவில்லை. முதலாளிகளையும் முதலாளித்துவ அமைப்பையும் எதிர்த்து வர்க்கப் போராட்டம் நடத்தும் யூனியன்களைப்பற்றியே அவர்கள் குறிப்பிட்டார்கள்.

புதிய சூழ்நிலையில் மார்க்ஸின் அடிப்படைக் கொள்கைகளின் வளர்ச்சியே லெனின் போதனைகள். மார்க்ஸின் போதனைகள் மார்க்ஸின் முறையையும் மார்க்ஸிஸத்தின் கருப்பொருளையும், யாரையும்விட நன்றாக, லெனின் அறிந்திருந்தார். ஆகவே தொழிற்சங்க பிரச்சினையில் லெனின் இவ்வளவு கவனம் செலுத்தினார். லெனின் தொழிற்சங்க இயக்க சித்தாந்தத்தை வளர்த்தது மாத்திரமல்ல, தொழிலாளிவர்க்க புரட்சி காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தொழிற்சங்கங்கள் அனுஷ்டிக்கவேண்டிய போர்த் திட்டதையும், போர்த் தந்திரங்களையும் வகுத்தார். லெனினிஸத்தின் போர்த் திட்டமும் போர்த்தந்திரங்களும் என்ன? அவை "தொழிலாளி வர்க்கத்துடைய புரட்சிகரமான போராட்டத்தின் தலைமையுடைய விஞ்ஞான அறிவு" என்று ஸ்டாலின் எழுதுகிறார். லெனின் வர்க்கப் போராட்டத்தின் மிகப் பெரிய திட்ட கர்த்தாவாகவும் போர்த் தந்திரியாகவும் விளங்கினாரென்றால் அவர் மார்க்ஸின் முறையை பரிபூரணமாக ஜீரணித்திருந்ததே காரணம்.

இதற்கு ஒரே ஒரு உதாரணம் தருகிறேன். தொழிலாளி வர்க்கத்தின் போர்தந்திரங்களைப்பற்றிய மார்க்ஸ் அபிப்ராயத்தை விஷயமாகக் கொண்டு லெனின் எழுதுகிறார் :—

"தர்க்கவியல் லோகாயுதவாதக் கண்ணோட்டத்தின் பொதுவான கொள்கைகளுக்கு முற்றிலும் ஒத்தவகையில், மார்க்ஸ் தொழிலாளிவர்க்க தந்திரத்தின் அடிப்படையான கடமையை விளக்கினார். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் விதிவிலக்கு இல்லாமல் சகல வர்க்கங்களுக்கிடையேயுள்ள சகல பரஸ்பர உறவுகளின் மொத்த தொகையுடைய யதார்த்த கணிப்புதான் முன்

னணியில் நிற்கும் வர்க்கத்தின் சரியான போர்த் தந்திரத்துக்கு அடிப்படையாயிருக்கமுடியும். ஆகவே, இந்த சமூகத்தின் வளர்ச்சியில் இன்றுள்ள யதார்த்த கட்டத்தின் கணிப்பும், இதர சமூகங்களுக்கும் இந்த சமூகத்துக்குமுள்ள பரஸ்பர உறவுகளின் நிர்ணயமுமே முன்னணியில் நிற்கும் வர்க்கத்தின் சரியான போர்தந்திரத்துக்கு தக்க அஸ்திவாரமாயிருக்கமுடியும். சகல நாடுகளும் சகல வர்க்கங்களும், ஒரே சமயத்தில் அசையாமலிருப்பதாக வைத்துக்கொண்டு பரிசீலனை செய்யப்படுவதில்லை; இயங்கிக்கொண்டிருக்கும் அடிப்படையிலேயே கணிக்கப்படுகின்றன. (இந்த இயக்கத்தின் விதிகள் ஒவ்வொரு வர்க்கத்துடைய பொருளாதார வாழ்க்கை நிலைமையைப் பொறுத்திருக்கிறது.) இந்த இயக்கமும் கடந்தகால கண்ணோட்டத்திலிருந்து மாத்திரமல்ல, எதிர்கால கண்ணோட்டத்திலிருந்தும் ஆராயப்படுகிறது. மெதுவாக மாறுவதை மாத்திரமல்ல; டைலக்டிக் கண்ணோட்டத்திலிருந்து மாத்திரமல்ல, எதிர்கால கண்ணோட்டத்திலிருந்தும் ஆராயப்படுகிறது. மெதுவாக மாறவதை மாத்திரம் காணும் 'பரிணாமவாதிகளின்' கண்ணோட்டத்தில் மாத்திரமல்ல; டைலக்டிக் கண்ணோட்டத்திலும் துருவி ஆராயப்படுகிறது. "இத்தகைய வளர்ச்சிகளில்—20 வருஷங்கள் ஒரு நாளைக்கு சமமாயிருக்கும்—இருபது வருஷங்களின் மொத்த வளர்ச்சி சில நாட்களில் சம்பவிக்கக்கூடும்" என்று மார்க்ஸ் எங்கல்ஸுக்கு எழுதினார். ஒவ்வொரு வளர்ச்சி கட்டத்திலும், ஒவ்வொரு கணத்திலும், யதார்த்தத்தில் தவிர்க்கமுடியாத, மனிதவர்க்கத்தின் டைலக்டிக்ஸை தொழிலாளி வர்க்க போர்த் தந்திரம் கவனத்திலிருத்திக்கொள்ள வேண்டும். ஒருபுறத்தில், அரசியல் தேக்க கட்டங்களில்—'சமாதான' வளர்ச்சி என்று சொல்லப்படுகிற பாதையில் சம்பவங்கள் ஆமைவேகத்தில் நகரும்போது, முற்போக்கான வர்க்கத்தின் வர்க்கபோதத்தையும் பலத்தையும் போராட்டத் திறமையையும் அதிகரிக்க உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். மறுபுறத்தில் இந்த வர்க்கத்துடைய இறுதி லட்சியப்பாதையில் வேலையை நடத்துவதன்மூலம், 'இருபது வருஷங்களின் மொத்தவளர்ச்சி' குவிரென்று எழும் அந்த சில நாட்களில், மகத்தான தினங்களில், மகத்தான கடமைகளை நடைமுறையில் நிறைவேற்றக்கூடிய திறமையை அந்த வர்க்கத்திடம் வளர்க்கவேண்டும்".

மார்க்ஸின் மிகப்பெரிய சீடரும் தொழிலாளிவர்க்க புரட்சியின் மகத்தான மேதையுமான லெனின்தான் தொழிலாளிவர்க்கத்தின் போர்தந்திரத்தை இவ்வளவு நன்றாக வரையறுத்துக் கூற

முடியும். முக்கியமான தினங்கள் வரும்பொழுது எப்படி செயலாற்றுவதென்று லெனின் நடைமுறையில் காண்பித்தார். (ரஷ்யப் புரட்சி)

ஆனால், மார்க்ஸைப்போல, லெனினாலும் ஒவ்வொரு விஷயத்தையும் முன்கூட்டியே உணரமுடியவில்லை. புனர்நிர்மாண கட்டத்தில், அதாவது சோஷியலிஸ நிர்மாண கட்டத்தில், தொழிற்சங்கங்களுடைய பங்கென்ன, கடமைகளென்ன என்ற கேள்விக்கு லெனின் பதிலளிக்கவில்லை, பதிலளிக்கமுடியவில்லை. இந்த பிரச்னையை மார்க்ஸ்-லெனின் சீடரான ஸ்டாலின் தீர்த்திருக்கிறார். மார்க்ஸிஸமென்பது கண்மூடித்தனமான கொள்கையல்ல; எக்காலத்துக்கும் பொதுவான விலைப் பொருளல்ல என்பதை இது மீண்டும் நிரூபிக்கிறது. மார்க்ஸ் தன் போதனைகளையும் முறையையும் ஆத்மார்த்திகரீதியில் புரிந்துகொள்ளவேயில்லை. மார்க்ஸிஸம் ஜீவசக்தி ததும்பிநிற்கும் புரட்சிகரமான விஞ்ஞானம்; நாம் வாழும் சமூகத்தை புரிந்துகொள்ளவும் அதை மாற்றி அமைக்கவும் உதவும் விஞ்ஞானம். "அது சர்வதேசங்களிலுமுள்ள தொழிலாளர்களுடைய தத்துவமும் திட்டமும்" (லெனின்). சமரச சித்தாந்தத்துக்கும் நடைமுறைக்கும் பரம வைரி மார்க்ஸிஸம். "தொழிலாளி மக்களின் நலன்களுக்கு விரோதமாக, பூர்ஷுவாவர்க்கமும் ஒரு பகுதி தொழிலாளர்களும் அமைக்கும் கூட்டணி" (லெனின்)யான சந்தர்ப்பவாதத்தின் எதிரி. ஆகவே, பூர்ஷுவா வர்க்கத்தையும் அதற்கு பரிந்துபேசும் தத்துவ ஞானிகளையும், அதை ஆதரிக்கும் அரசியல் சகாக்களையும் எதிர்த்த வர்க்கப் போராட்டம் நடத்தும் தொழிற்சங்கங்களுக்கே மார்க்ஸிஸம்—லெனினிஸம் கொடியை உயரப் பிடிக்க உரிமையுண்டு.

* * *

உலகம் முழுவதும் மார்க்ஸிஸப்—லெனினிஸம் இறுதி வெற்றியை, நிரந்தர வெற்றியை முழக்கும்காலம் வருமென்பது நமது உறுதியான, அசைக்கமுடியாத முடிவு; விஞ்ஞானரீதியான முடிவு.

"மார்க்ஸிஸம் சரியாயிருப்பதால், அது சர்வசக்தி வாய்ந்தது" என்று லெனின் கூறினார்; அந்த சூத்திரத்திலிருந்துதான் நமது கொள்கை, திட்டம், தந்திரம் அனைத்தும் எழுகின்றன.

•••••••••••

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 30 | 16 | போராடாமல் | போராடுவதால் |
| 35 | 16 | புருடன் | புருடஸ் |
| 40 | 11 | மத்தியயிலுள்ள இந்த ஏற்றத் தாழ்வு நெடுங்காலத்தில் | மத்தியிலுள்ள ஏறத்தாழ நெடுங்காலத்தில் |
| 40 | 27 | முன்னே போலும் | முன்னேறிய போதிலும் |
| 44 | 26 | மக்கள் | மார்க்ஸ் |
| 44 | 34 | சீவ உயிரோடு | உயிரோடு |
| 46 | 24 | கைகூடாத | கைகூட |
| 50 | 16 | இரைகசியங்களுக்கும் | இது ரகசிய சங்கங்களுக்கும் |
| 61 | 32 | 3300 | 33000 |
| 76 | 12 | ஆரம்பதினத்தை | ஆரம்பத்தை |
| 77 | 1 | தோற்றுவால் | தோற்றுவாய் |
| 80 | 6 | . . . பிரதிபலிக்கின்றன'' மார்க்ஸூம் | பிரதிபலிக்கின்றன''என்று மார்க்ஸூம் |
| 104 | 12 | சமூக அழிவு | சமூக அறிவு |
| 115 | 16 | ஸோர்ன் | ஸோர்ஜ் |
| 130 | 7 | ஸ்டாரஸர்: | ஸ்டாரஸர் |
| 130 | 17 | கொடுக்க | கெடுக்க |
| 136 | 17, 18 | உபயோகமான சரக்கின் விலையை நிர்ணயிக்கப்படுகிறது? | உபயோகமா சரக்கின் விலையை நிர்ணயிக்கிறது? |
| 140 | 31 | உபதேசநலனுக்கும் | தேசு நலனுக்கும் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 152 | 19 | கம்யூனின் | கம்யூனிஸ்ட் |
| 159 | 4 | தனி நபர்கள் | என்ஜினியர்கள் |
| 164 | 7 | கலங்கமென்ற | கலகமென்ற |
| 172 | 27 | .... குணத்திலேயே மோதுதல்களுக்கு | ....குணத்திலேயே பிரதிபலிக்கிறது. பொருளாதார மோதுதல்களுக்கு.... |
| 177 | 4 | கமிட்டிகள் | கமிட்டிகளில் |
| 177 | 33 | கோரிக்கைப் போராட்டத்தையும் | கோரிக்கைப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் |
| 186 | 27 | சொந்தம் | சொஸ்தம் |
| 189 | 13 | தற்காலத்திய | அக்காலத்திய |
| 191 | 31 | பரஸ்பரமான | படாடோபமான |
| 193 | 13 | சரித்திரம் | சூத்திரம் |
| 202 | 1 | 1885 | 1848 |
| 209 | 23 | மார்க்ஸின் | மக்களின் |
| 211 | | 14, 15 வரிகளை | நீக்கிப் படிக்கவும் |

வெளிவருகிறது! வெளிவருகிறது!!

# இன்றைய இந்தியா

★

நாட்டு மக்கள் ஆனந்தப்பள்ளு பாடுகிறார்கள்; மூவர்ணக் கொடி அரசாங்கக் கொடியாகி விட்டது.

ஆனால், இந்தியப் புரட்சி பூர்த்தி அடையவில்லை; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சிருஷ்டித்த பழைய சமூக அமைப்பு ஒழியவேண்டும்; புதிய ஏற்பாடு பூக்கவேண்டும்.

இந்த புனிதமான பணிக்கு வழிகாட்டுகிறது "இன்றைய இந்தியா."

பிரபல உலக கம்யூனிஸ்ட் தலைவர்

**ரஜனி பாமி தத்**

எழுதியது

**எஸ். ராமகிருஷ்ணன்**

மொழிபெயர்ப்பு

★

**ஜனசக்தி பிரசுராலயம்.**

6, டேவிட்ஸன் தெரு, சென்னை.